அகஸ்தியர் 12000

என்னும் பெருநூல் காவியம்

பாகம் -2



தாமரை நூலகம், சென்னை - 600 026.

அகஸ்தியர் 12000

என்னும்

பெருநூல் காவியம்

(இரண்டாம் காண்டம்)

பதிப்பாசிரியர்

ஆர்.சி. மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 112
முதல் பதிப்பு : மார்ச் 1994
இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2009
மூன்றாம் பதிப்பு : ஆகஸ்டு - 2015
நான்காம் பதிப்பு : ஜுன் 2019
ஐந்தாம் பதிப்பு : மார்ச் : 2023

நூலைப்பற்றி

நூலின் பெயர் : அகஸ்தியர் 12000 பாகம்-2

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு மார்ச் : 2023

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : டெமி

அச்சுத்தாள் : 16 கி.வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 256

பிரதிகள் : 1200

நூல் விலை : ரூ. 150/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை -

பதிப்புரை

அகஸ்தியர் பனிரெண்டாயிரம் என்னும் இப்பெருநூல் காவியம் ஒரு மாபெரும் கடல். இதில் இந்த உலகத்தையும் அதன் வரலாற்றையுமே புகுத்தி வைத்திருக்கிறார் அகஸ்தியமாமுனிவர். இந்த நூலில் காணும் அற்புதங்களை வேறெங்குமே காண முடியாது.

அகஸ்திய மாமுனிவர் தமது பொதிகை மலையின்மேல் ஒரு செத்த பிணத்தைக் கொண்டு போனால் அது உயிர் பெற்று எழுந்து விடும் என்கிறார். அத்தகைய மரணம் மாற்றும் மூலிகைகள் பொதிகை மலைமேல் இருக்கின்றன. அது மட்டுமல்ல. ஒருநாள் மூலி, இரண்டு நாள் மூலி, வார மூலி, பட்ச மூலி, திங்கள் மூலி, ஓராண்டு மூலி, ஈராண்டு மூலி என்று இப்படியாக நூறாண்டு காலம் வரை பசி தாகம் சோர்வு தூக்கம் இல்லாமல் செய்து விடத்தக்க மூலிகைகள் இருப்பதாகவும், முனிவர்கள் அதை உண்டு நீண்ட காலம் தவம் செய்வார்கள் என்றும் கூறுகிறார்.

தமது பொதிகை மலைமேல் உள்ள பாறைகளில் வைரம் முதலான நவரத்தினங்களின் விளைவு இருப்பதாகவும் பாறைகளைத் தகர்த்து அவற்றை எடுக்கும் முறையையும் கூறுகிறார்.

மலைமேல் சூதக் கிணறு இருப்பதாகவும் அதிலிருந்து எடுக்கும் பாதரசத்தைக் கொண்டு உலோகங்களைத் தங்க மாக்கும் முறைகளையும் கூறுகிறார்.

கற்ப மருந்துகள், யோகம், ஞானம் முதலியவற்றையும் போலி ஞானிகளைக் கண்டு இல்லறத்தார் ஏமாந்து போய் பொருள் இழந்து துன்பங்களுக்கு ஆளாவதைப் பற்றியும் மிகவும் அழுத்தமாகக் கூறுகிறார்.

நீண்டகாலம் தவம் செய்து வலிமை பெற்ற மாமுனிவர்களின் ஆற்றல் பற்றி பிருங்கி மகாமுனி, சோதி மகாமுனி, ஜெய மகாமுனி முதலியவர்களின் வரலாறுகளால் விளக்கிக் கூறுகிறார்.

இந்த நூல் ஒரு அற்புதமான சுரங்கம். இதிலிருந்து எத்தனையோ அரிய விஷயங்கள் தெரிய வருகின்றன, இந்த நூல் எத்தனையோ ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்குக் கிடைக்காமல் இருந்தது துரதிர்ஷ்டமே! சொல்லி எழுதும் முறையில் வழிவழியாக ஓலைச் சுவடிகளாக இருந்த நூல் கடைசியில் அச்சேற்றப்படும் போதும்

ஏராளமான பிழைகளுக்கு உள்ளாகியிருப்பதை நூலைப் பார்க்கும்போது காண முடிந்தது. முழு தவறுகள் திருத்தி வெளியிட முயற்சி செய்தோம். ஆயினும் தவறுகள் இல்லை என்று சொல்ல முடியவில்லை. எடுத்துக் காட்டாக 230ம் பக்கத்தில்

திறமுடைய சித்தாதிமுனிவ ரெல்லாம்
 திகழுடனே அஞ்சலித்து அடிபணிந்து
குறவள்ளி எங்களுக்கு ஆசீர்மங்கள்
 குவலயத்தில் நெடுங்காலம் இருக்கவென்று

என்று அச்சாகி உள்ளது.

இந்தப் பாட்டில் **'குறவள்ளி'**க்கு என்ன வேலை? அது **'குறைவின்றி'** என்றுதான் இருந்திருக்க வேண்டும். பிழைகளை யெல்லாம் நீக்கி முற்றிலும் சுத்தமான நூல்களைத் தர தமிழறிஞர்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம் முன்வர வேண்டும். அந்த வேலையில் தாமரை நூலகம் ஈடுபட வாய்ப்பில்லை. வசதிகளும் போதாது.

அகஸ்தியர் பனிரெண்டாயிரம் என்ற நூலை வெளியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட போது கீழ்த்திசை சுவடிகள் நூலகத்தில் உள்ள அச்சுப் பிரதி, தஞ்சை சரஸ்வதி மஹாலில் உள்ள அச்சுப் பிரதி, மற்றும் தனியார்கள் ஒன்றிரண்டு பேரிடமிருந்து கிடைத்த அச்சுப் பிரதிகளைப் பார்க்க முடிந்தது. எல்லா இடங்களிலும் ஐந்து காண்டங்கள் மட்டுமே உள்ளன.

பனிரெண்டு காண்டங்களையும் மொத்தமாக வைத்திருப்பவர்கள் பெரிய மனது பண்ணி இந்த நூல் முழுவதும் வெளிவர உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். தன்னலம், குறுகிய மனப்பான்மைகள் காரணமாக இந்தத் தமிழ்ச் செல்வம் அழிந்து போக விட்டு விடக்கூடாது என்று அவர்களின் பாதங்களைச் சிரமேல் சூடிப் பணிந்து வேண்டிக் கொள்கிறோம்.

ஆர்.சி. மோகன்
பதிப்பாசிரியர்

உ

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

பெருநூல் காவியம்

பொருளடக்கம்

உ

கடவுள் துணை

பதினெண் சித்தர்களில் மகாமகத்துவம் பொருந்திய

அகஸ்திய மஹாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய

பெரு நூல் காவியம் - 12000

இரண்டாவது காண்டம்

காப்பு

ஆதிபரா பரத்தினுட முதலே காப்பு
ஆண்டபகி ரண்டமெனுங் கடவுள்காப்பு
சோதியெனு மீஸ்வரியின் சுடரேகாப்பு
சூட்சாதி சூட்சமுட னொளியேகாப்பு
பாதிமதி சடையணிந்த பிரானேகாப்பு
பாருலகில் கீர்த்திபெற்ற மாலேகாப்பு
நீதியெனும் மால்தேவி நிறையேகாப்பு
நீடாழி விநாயகனே காப்புதானே 1

நூல் வரலாறு

தானான புலஸ்தியனே சொல்லக்கேளும்
தன்மையுள்ள காண்டமது பனிரெண்டுமாகும்
வேனான காண்டமது பனிரெண்டுக்குள்
வேண்டியதோர் கருமான மிதிலடக்கம்
கோனாகி பன்னீரா யிரந்தானப்பா
கொற்றவனே ஆயிரத்துக் கொருதாண்டந்தான்
தேனான காவியந்தான் பனிரெண்டுமாகும்
தேற்றமுடன் சொல்லிவைத்த காண்டமிரண்டாமே 2

இரண்டான காண்டமது யின்னூலுக்குள்
யெழிலான பஞ்சபூ தினிலடக்கம்
திரண்டதொரு காவியந்தா னிரண்டுக்குள்ளே
திரளான தத்துவங்கள் தொண்ணூற்றாறும்

முரண்டதொரு சத்துருக்கள் மாண்டமார்க்கம்
        மூதுலகில் நாதாக்கள் மறைப்புமார்க்கம்
விரண்டதொரு செந்தூர பற்பமார்க்கம்
        விருப்பமுடன் பாடிவைத்த கருநூலாமே 3

கருவான நூலிதுதான் ரெண்டாங்காண்டம்
        காசினியில் நாதாக்கள் கூற[illegible] பலை
திருவான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
        தீரமுடன் யானுரைத்தேன் பெருநூல்காண்டம்
உருவான காண்டமது பனிரெண்டுக்குள்ளே
        வுத்தமனே வுலகுபதி மகிமையெல்லாம்
பருவமுடன் யானுரைத்தேன் ரெண்டுக்குள்ளே
        பாரினிலே நாதாக்கள் சொல்லார்தாமே 4

சொல்லார்க ளின்னூல்போல் யாருஞ்சொல்லார்
        சுத்தமுடன் பதினெண்பேர் நூல்கள் தம்மில்
வல்லான நூல்களது வுளவுபார்த்து
        வளமையுடன் திரட்டிவைத்த பெருநூலாகும்
கல்லான சித்துமுனி நாதர்தாமுங்
        காசினியில் திரட்டிவைத்த நூல்களெல்லாம்
புல்லான பெருநூலுக் கிணைவேறுண்டோ
        புலஸ்தியனே யுந்தனுக்குச் சொன்னேன்பாரே. 5

பாரேதா னசுவனியாங் கடாட்சத்தாலே
        பாடிவைத்தேன் பெருநூலாய்க் குருநூலாகும்
நேரேதா னின்னூல்போல் பெருநூல்தன்னை
        நேர்மையுடன் பனிரெண்டு காண்டமாக
சிரேதான் நவகோடி சித்தர் தாமும்
        சிறப்பான நூலொன்றுஞ் சொல்லவில்லை
ஊரேதான் மாண்பர்களும் பிழைப்பதற்கு
        வுத்தமனே பெருநூலாய்ச் சொன்னேன்காணே 6

நூல் கொடுத்தவர்க்கு சாபம்

காணவே புலஸ்தியனே யின்னஞ்சொல்வேன்
        காசினியி லுந்தமக்கு யார்தான்சொல்வார்
வேணவே யுபதேசஞ் செய்தாலுந்தான்
        விட்டகுறை யிருந்தல்லோ லபிக்கவேண்டும்
தோணவே யுந்தமக்கு லபியிருந்து
        தொல்லுலகி லெந்தனுக்குச் சீஷனானாய்

ஆணவங்கள் தானொடுங்கி மதியம்பூண்டு
அப்பனே வுபதேசம் பெறுவாய்தானே 7

பெற்றாலு முபதேசங் கொள்ளவேண்டும்
பேரின்ப வீடதனை யடையவேண்டும்
சற்றாலுங் குறைவின்றி நடக்கவேண்டும்
தாரணியில் சித்தர்முனி நாதர்க்கெல்லாம்
குற்றமறத் தானடந்து வுபதேசங்கள்
கூறபலம் மிகநடத்திக் கொள்ளவேண்டும்
சுற்றம்வர சிவராஜ யோகனாகி
துப்புரவா யிருப்பவனே சித்தனாமே. 8

சித்தனா யிருந்தாலு மிந்தநூலை
தேசத்தில் வெளியிட்டால் பாபமெய்தும்
குத்தமது வாராம விந்தநூலை
குகைதனிலே பாடிவைத்தேன் சித்தர்க்காக
பத்தியுடன் பாடிவைத்த பெருநூலப்பா
பாரினிலே துஷ்டர்களுக் கீயவேண்டாம்
நித்தமுமே சித்தர்களை வணங்கிநின்று
நேர்மையுட னிருந்தவர்க்கு யீவாய்பாரே 9

பாரேதான் விதியாளி வருவானானால்
பாலகனே விதிகேட்டு மதியுங்கேட்டு
சீரேதான் சிவராச யோகங்கேட்டு
சிற்பரனார் தாமிருந்த யிடமுங்கேட்டு
கூரே தான் மனக்கண்ணி லயமும்பார்த்து
கொப்பெனவே நாசிக்கு வுடையோனென்று
நேரேதா நூல்கொடுத்து வதிதஞ்சொல்லி
நேர்மையுடன் மனவுறுதி கூறுவாரே 10

கூறவே பதிகடந்த கருமிட்கு
கொப்பெனவே சாத்திரத்தைக் கொடுப்பாரானால்
மாறவே தலைதெறித்துப்போகுமென்று
மகத்தானே வசுவனியார் தேவர்வாக்கு
சீறியதோர் அரவத்தின் விஷம்போல்தானும்
சித்தர்முனி வாக்கதுவும் மெய்யதாகும்
மீறியே செய்தவர்க்கு யிடிபோல்தேகம்
மேதினியில் நில்லாது மெய்யதாமே 11

மெய்யான வகஸ்தியனார் சொன்னவாக்கு
மேதினியில் பொய்யாது மெய்யேயாகும்

துய்யதொரு காவியமாம் பெருநூல்தன்னை
துப்புரவாய்ச் சிவராச யோகிகண்டால்
பையவே வசிமாற்றஞ் செய்துமல்லோ
பாலகனே யேமாற்றி நூல்தான்கேட்ப்பார்
மையமது மாற்றமது மார்க்கந்தன்னால்
மயக்கியே நூலதனையே கேட்பார்பாரே. 12

பாரேதான் செகவசிய லோகமாண்பர்
பாரினிலே தாமிருப்பார் வதிகவான்கள்
நேரேதான் முகதாவில் நூலைக்கேட்டு
நேயமுட னுந்தமக்கு யிதவுசொல்லி
வேரேதான் சாத்திரங்க ளெடுத்துக்கூறி
வெவ்வேறு வுற்பனத்தை யுண்டுசெய்து
தீரேதான் வாததர்க்க மிகவுங்கூறி
தீரமுட நூலதனைக் கேட்பார்தானே. 13

காணவே நாலுயுக வதிசயங்கள்
கண்மணியே யுந்தனுக்கு சொல்வார்பாரு
தோணவே புலத்தியனே மைந்தாகேளு
தோற்றமுட னுந்தமக்கு யிதவுசொல்வார்
வேணதொரு வஞ்சலிகள் மிகவேசெய்து
விருப்பமுட னாசிரமங் கொண்டுசென்று
பூணவே பஞ்சகர்ண வாதிவேதம்
புகட்டுவார் புலஸ்தியனே மகிழ்ந்திடாதே. 14

மகிழவே புத்தியுள்ள மன்னாகேளு
மயங்காதே புலஸ்தியனே புண்ணியவானே
நெகிழாத முறைப்படியே சித்துதாமும்
நெறிமுறைமை வழுவாது தப்பாவண்ணம்
அகிலமுடன் நாதாந்த சித்துதாமும்
அகமகிழ வுந்தனையும் விதிதான்கேட்பார்
மகிதலத்தில் யார்வந்து நூல்கேட்டாலும்
மன்னவனே கொடுக்காதென் றுரைத்தார்தாமே. 15

தாமான சாத்திரத்தின் தொகுப்பையெல்லாம்
தாரணியில் மானிடர்கள் பிழைக்கவென்று
வேமேதான் பனிரெண்டு காண்டத்துள்ளே
விருப்பமுடன் பாடிவைத்தேன் நூல்கள்யாவும்
சாமான நாதாக்கள் முனிவர்தாமும்
சட்டமுட னுந்தமக்கு சொன்னநீதி

நாமாக சொல்லிவிட்டோ மசுவனியார்வாக்கு
நாயகனே யொருக்காலும் பொய்க்கொண்ணாதே 16

ஒண்ணாது நாதாந்த சித்துதாமும்
உத்தமனே யசுவனியார் சொன்னவாக்கு
எண்ணாது யெண்ணமுட னெண்ணியல்லோ
யெழிலான நாதாந்த சித்துதாமும்
வண்ணமுடன் யான்செய்த பெருநூல் தன்னை
வளமாக லோகத்து மாண்பருக்கு
திண்ணமுடன் கொடுத்தாக்கால் பாவமெய்தும்
திகழான வசுவனியார் வாக்குதானே. 17

தானான வாக்கதுபோ லடியேன்றானும்
தன்மையுள்ள புலத்தியனே சாற்றக்கேளும்
பானான சாபமது யான்கொடுத்தேன்
பாரிலுள்ள நண்பர்கட்குச் சாபமில்லை
ஊனான கர்மிகட்குச் சாபமுண்டு
உத்தமனே யான்சொன்ன வாக்குபோல
தேனான மனோன்மணியாள் தனைநினைந்து
தேற்றமுடன் சதாகால மர்ச்சிப்பாயே. 18

மனோன்மணி தியானம்

அர்ச்சிக்க மனோன்மணியாள் சாபம்நீக்கி
அப்பனே செகந்தனிலே யிருக்கநன்று
துர்ச்சிக்க மறைப்பொருளை வெளியாராய்ந்து
துப்புரவாய் நிற்குணத்தின் வெளியினாலே
பர்ச்சித்து வுலகத்தின் மனுக்களெல்லாம்
பாரினிலே யுந்தனையும் வணங்கவே தான்
நிர்ச்சித்து பவக்கடலை விட்டகற்றி
நிராமயத்தின் நற்குணத்தை மேல்தாக்கே 19

தாக்கியே சிவயோகப் பெருமைநின்று
சதாகாலம் மாய்கைதனக் குட்படாமல்
போக்கியே யென்னாளும் புனிதவானாய்
பூவுலகில் நற்குணனாய்ப் பேர்வகித்து
நோக்கமுடன் சன்மார்க்க நிலையிற்சென்று
நுணுக்கமுடன் தற்பரத்தை வெளியதாக்கி
பாக்கினது பிளவைபோல் மனதகற்றி
பண்பான கேசரத்தின் நிலையில்நில்லே. 20

நிற்கவே மனோன்மணியாள் நிர்த்தஞ்செய்வாள்
நீடூழி காலம்வரை யுந்தனுக்கு
சொற்பமுடன் தரிசனைக்கு முன்னேநிற்பாள்
தொல்லுலகு முந்தனுக்கு அற்பமாகும்
விற்பனங்க ளதிகரித்து மேன்மையாவாய்
விருப்பமுடன் தவநிலைக்கு யோகவானாய்
கற்பமது கொண்டதொரு தேகம்போல
காசினியில் நீயுமொரு சித்தனாமே. 21

சித்தனாய் சதாகால மிருந்துகொண்டு
சிறப்பாக மனோன்மணியை மனதிலுன்னி
பத்தனாய் சின்மயத்தி லிருந்துகொண்டு
பரமமென்ற சொருபநிலை தன்னைநோக்கி
சுத்தமுடன் மெய்ஞ்ஞானக் கடலிலாழ்ந்து
சுடரொளியாம் வெட்டவெளி தன்னைக்கண்டு
முத்திபெற யென்னாளும் புனிதவானாய்
மூதுலகி லாசையற்று யிருப்பீர்காணே. 22

காணவே சடாட்சரத்தின் பொருளைக் கண்டு
கருவான நடுமையந் தன்னைப்பத்தி
தோணவே சிதாகாசப் பொருளகற்றி
தோராமல் மவுனநிலை யறிந்துகொண்டு
புணவே யைங்காய முள்ளடக்கி
புகழான சேதுபந்த மிகவாய்ச்செய்து
வேணவே மவுனமென்ற பிரகாசத்தில்
விருப்பமுட னிற்பதுவே யுண்மையாமே. 23

உண்மையா மிதிகாசப் புராணமெல்லாம்
உற்றதொரு ஞானமென்ற சாகரந்தான்
திண்மையாம் பதினெண்பேர் கைமறைப்பும்
திகழான நவகோடிமுனிவர்தாமும்
வண்மையாய்ச் செய்துவைத்த நூல்கள்தானும்
வகுப்பான கோர்வை முதல் பெருநூல் யாவும்
நன்மையாம் வாசிநிலை யறியுமார்க்கம்
நலமான கும்பகத்தின் மார்க்கம்பாரே. 24

பாரேதான் கும்பகத்தின் மார்க்கமெல்லாம்
பாங்கான நாதாக்கள் முனிவர்தானும்
நேரேதான் பலபலவாஞ் சூத்திரத்தில்
நேர்மையுடன் பாடிவைத்த நூலிற்றானும்

சீரேதான் சித்தர்களின் நிலையாராய்ந்து
சீருடனே கண்டறிந்து யோகவானாய்
வேரேதான் மாயவலை சிக்காமற்றான்
வேரறுத்து வேதாந்த நிலையில்நில்லே. 25

நிற்கையிலே மனோன்மணியாள் நிர்த்தஞ்செய்வாள்
நிஷ்களங்க மாகவல்லோ சமாதிகற்பம்
விற்பனங்கள் மிகுத்ததொரு வேத்சூட்சம்
வெளியரங்க மானதொரு மவுனமோனம்
சிற்பரனார் தானிருககுந் தசாங்கபீடம்
சிறப்பான கைலங்கிரி வொளியேகாண்பாய்
மூற்பிறப்பின் வினையகற்றி முனிவனாக
மூதுலகி லெப்போதும் வாழ்வீர்தாமே. 26

வாழவென்றால் வையகமு மற்பவாழ்வு
வளமான சரிதைகிரி யோகமெல்லாம்
நீழவே யுந்தனுக்கு சொற்பமப்பா
நிட்களங்க சதாநிலையைப் பற்றிநிற்பாய்
ஆழவே கமலமென்ற பீடந்தானும்
அப்பனே யுந்தனுக்குக் காட்சியாகும்
வீழவே துன்பநிலை யகற்றியல்லோ
விட்டகுறை யுந்தனுக்கு வாய்க்குந்தானே. 27

மயேஸ்வர நிஷ்டை

தானான புலத்தியனே மைந்தாகேளு
தன்மையுட னுந்தனுக்கு சாற்றுவேன்யான்
மானான வசுவனியாந் தேவர்தானும்
மகத்தான பாதமது கடாட்சத்தாலே
தேனான கலையமுர்தங் கொண்டுநீயும்
தெளிவான மயேஸ்வரனார் தன்னைத்தானும்
பானான படிகமென்ற மனதிலப்பா
பான்மையுடன் பலகாலு மர்ச்சிப்பாயே 28

அர்ச்சிப்பாய் மயேஸ்வரனார் தன்னைத்தானும்
வன்போடு மதியகற்றி பாவஞ்செய்து
துர்ச்சனையை விட்டகற்றி துய்யபாலா
துப்புரவாய் வெளிகடந்து வொளியின்நின்று
சர்ச்சனனாம் நாதாக்கள் நிலையில்நின்று
சட்டமுடன் பரிபோகந் தன்னைக்கண்டு
அர்ச்சனைகள் மிகப்புரிந்து வன்பாநீயும்
வதிதமென்ற நிலைதனையே நாட்டுவாயே. 29

நாட்டுவாய் சமாதியிட பீடந்தன்னில்
நடுமையம் புலித்தோலி னாசனத்தில்
தீட்டுபுகழ் சக்கரமாம் மதியம்பூண்டு
சின்மயத்தி னட்சரத்தை மேலதாக்கி
வாட்டுருபல் முனிவர்களை யேவலாக்கி
மகத்தான மாண்பர்களை சீடராக்கி
ஆட்டுமந்தை தனிலேநாய்ப் புகுந்தாற்போல
அப்பனே மயேஸ்வரனை யறிந்திடாயே 30

அறியவே புலித்தோலி னாசனத்தில்
அன்பான மயேஸ்வரனார் நிஷ்டைதன்னை
குறியான நாதாந்த சித்துதாமும்
குறிப்பாகத் தானடத்தும் வன்மையோடும்
செறிபுகழு மாசனத்தின் மீதிருந்து
செம்மலுடன் கும்பகத்தைப் போற்றியேதான்
வெறிபூணு மதுபானந் தனையகற்றி
விருப்பமுடன் நிஷ்டைதனில் நின்றிடாயே. 31

நின்றுமே ஒருகாலை மேலதாக்கி
நிலையான ஒருகாலில் மூச்சடக்கி
குன்றியே ஒருகரத்தைச் சிரசில்தாக்கி
கூறான மறுகரத்தைப் பின்னேநோக்கி
வென்றிடவே விழிதனையே சிமிட்டிடாமல்
வீரமுடன் நாசிதனை வுள்ளடக்கி
சென்றுமே கீழ்நோக்கி சுவாசந்தன்னை
செத்தசவம் போலிருந்து செயிப்பீர்காணே. 32

காணவே சதாநிஷ்டை பலிக்கும்போது
சாங்கமுடன் வாசிதனை மேலோடாமல்
ஊணவே யைம்புலனை வுள்ளடக்கி
உற்றதொரு வகாரமொடு சிகாரமிஞ்சி
தோணவே சொரூபமென்ற நிலையைக்கண்டு
சொற்பனை சாத்தியங்கள் முதல்சுழினைதாக்கி
பூணவே அங்கென்று கும்பித்தேதான்
புகழான மவுனநிலை சாதிப்பாயே. 33

சாதிக்கும் வேளையிலே மயேஸ்வரன்றான்
சட்டமுடனே எதிர்முகத்தில் காணலாகும்
சோதிக்கும் மந்திரகிரி சித்தர்தம்மால்
தொல்லுலகி லண்டம்வரைப் பார்க்கலாகும்

வேதித்து யுன்மனது பிரிவாய்நின்று
விட்டகுறை யுந்தனுக்கு லபிக்கும்பாரு
ஆதித்தன் சுடரொளிபோல் காணலாகும்
அருந்ததியு முந்தனுக்குத் தோற்றும்பாரே 34

தோற்றயிலே மயேஸ்வரனார் கிருபையாலே
தொல்லுலகில் சித்தரெல்லா முன்னைமெச்சி
சாற்றலுடன் பவக்கடலை விட்டகன்ற
சதாசார சற்புருஷன் நீதானென்று
போற்றியே யுந்தனுக்கு வுளவுசொல்லி
பொங்கமுடன் கருவிகர ணாதியெல்லாம்
தூற்றியே யுனக்களிப்பார் சித்துதாமும்
துரைராஜ சுந்தரனே துதியாய்நில்லே. 35

துதிக்கையிலே மயேஸ்வரனார் அருளுங்காண்பாய்
துப்புரவாய் பரமமென்ற பொருளேதோற்றும்
மதிபோன்ற வாலையவள் முன்னேநிற்பாள்
மகத்தான புவனைமுதல் காணலாகும்
விதியான முறைப்படியே யுந்தமக்கு
விட்டகுறை யிருந்துமல்லோ லபிகள்கிட்டும்
கதியான நிற்கதியும் பெறுவீர்தானும்
காசினியில் வெகுமகிமை காண்பீர்தாமே 36

அஷ்டஞானம் தத்துவநூற்கூறல்

தாமான புலஸ்தியனே யின்னஞ்சொல்வேன்
தகமையுள்ள நற்பாலா கேளுகேளு
சாமான ஞானமென்ற தத்துவந்தான்
சட்டமுடன் சொல்லுகிறேன் யுந்தமக்காய்
பூமானா மசுவனியாந் தேவர்நீதி
புகழாக யெந்தனுக்கு சொன்னமார்க்கம்
நாமேதான் சிற்றறிவா லறிந்தஞானம்
நாதாக்கள் கூறார்கள் கூறுவேனே 37

கூறுவே னுந்தமக்கு புத்திவானே
குறிப்பாக கோடிவழி யுரைப்பேன்யானும்
மாறுடை யமதியவர்க்கு வுரைப்பேனானால்
வன்கொடுமை யெந்தனுக்குப் புரிவாரப்பா
வீறுபுகழ் தாமறிந்த மாண்பருக்கு
விட்டகுறை யிருந்தாக்கால் சொல்வேன்யானும்

ஆறுதலங் கண்டறிந்த ஞானமார்க்கம்
அடைவாக யுந்தமக்காய் செப்புவேனே 38

செப்பவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
செகதலத்தில் கூறார்கள் ஞானமார்க்கம்
ஒப்பமே. தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
ஓம்காரகோ நாதாக்கள் கூறவில்லை
இப்புவியில் ரிடிமுனிவர் சித்துதாகும்
யெ்லான சாத்திரங்க ளனைத்துஞ்செய்தார்
அப்பெரிய நூல்களிலே யிதவுசொல்லி
அன்பான வழிதனையே மறைத்தார்பாரே 39

மறைத்ததொரு சாத்திரத்தில் அஷ்டஞானம்
மகத்தான தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
கறைப்படியே கண்டறிந்தோ ராறுமில்லை
காசினியில் திருமூல வர்க்கத்தோர்கள்
முறைப்படியே சாத்திரத்தை முன்பின்னாக
மூதுலகில் கற்றோரும் மற்றோருந்தான்
பறையறைந்த கதைபோலக் காதிற்கேட்டு
பாருலகில் மாண்டார்கள் கோடியாமே 40

கோடியாம் வேதமுனி சித்துதாமுங்
குவலயத்தில் முன்பின்னாய் பாடிப்போட்டார்
நீடியே ஞானவழி யென்னைப்போல
நீதியுட னுந்தனுக்குக் கூறவில்லை
வாடியே திரியாதே மதிமயங்காதே
மதிகெட்டு நில்லாதே ஞானமேது
சூடியே பொருளாய்ந்து .... ய்ந்து
சூட்டினே னுந்தனுக்கு வுண்மைதானே 41

உண்மையாம் ஞானமென்ற பொருளையப்பா
உத்தமனே பூட்டிவைத்தேன் புலஸ்தியாகேள்
திண்மையாந் தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
திகழான நூல்களிலே பிரித்தெடுத்து
வண்மையாம் அஷ்டாதி ஞானந்தன்னை
வளமுடனே யுந்தனுக்குச் சொன்னேனப்பா
தன்மையாம் ஞானமென்ற பீடந்தன்னில்
கருவானே வீற்றிருக்க மகிமைகேளே. 42

கேளேதான் ஞானமென்ற சமாதிமீது
கெவனமுட..ன் வீற்றிருக்க விதிதான்சொல்வேன்

நாளேதான் போகாமல் நளினமீது
நாதாந்தத் திறவுகோல் தானறிந்து
மீளேதான் யோகமென்ற நிலையைநாட்டி
மிக்கவே அங்கென்று சிங்குபூட்டி
சூளேதா னட்சரத்தை யவ்வால்மாட்டி
சுழுத்தியிலே கொண்டுமல்லா நிறுத்துவாயே 43

நிறுத்துவாய்ப் புலஸ்தியனே நீதிவானே
நிட்களங்க மானதொரு ஞானவேதம்
மருட்கடலைத் தான்புகட்டும் வேதபோதம்
மகத்தான ஞானமென்ற வாசிஷ்டந்தான்
இருட்கடலை நீக்குகின்ற பஞ்சவேதம்
யெழிலான சசிவர்ண சத்தபோதம்
அருட்கடலைத் தான்கொடுக்கும் பிரபோதந்தான்
அன்பான கைவல்லி யதீதந்தானே 44

நீதமாங் குருசாம்பிர தாயவேதம்
நிலையான தத்துவத்தின் கட்டளையுமாகும்
போதமென்ற பிரபுலிங்க லீலைதானும்
புகழான கருமத்தின் காண்டந்தானும்
தோதமுட பஞ்சீகரண சித்தாந்தந்தான்
தோறாத மகாவாக்கிய வேதந்தானும்
சூதமென்ற சங்கீத பகவத்கீதை
சுத்தமுள்ள பஞ்சமகா வாக்கியமாமே 45

வாக்கியமாம் பஞ்சதசப் பிரகணமுமாகும்
வளமான வாத்மாவின் போதமாகும்
நோக்கமுடன் ஞானபிரண வேதமாகும்
நுணுக்கமுள்ள யிருசமய விளக்கந்தானும்
ஆக்கமுடன் பாடுதுறை வேதமாகும்
அன்பான திருவருட்பா ஞானபீடம்
பாக்கியமாம் ஞான காவியந்தானாகும்
பண்பான சாத்திரத்தின் வண்மைதானே 46

வண்மையாம் வேதாந்த சூடாமணிதான்
வளமான ரிடிகீதை சுவர்ணகீதை
நன்மையாம் தத்துவ சுவர்ண வேதம்
நலமான சிவானந்த தீபிகையுமாகும்
கண்மையாம் பஞ்சகரு வேதமாகும்
கனமான சாரத்தின் விடையுமாகும்

பண்மையாம் பஞ்சரசப் பிரபந்தமாகும்
பாங்கான சித்திரகூட தீபமாமே 47

தீபமாம் ஞானசா மமிர்தமாகும்
திறவான பஞ்சலட்சண கோஜவேதம்
தாபமாம் சன்மார்க்க வேதாந்தநூலும்
தகமையுள தத்வராய கட்டளையுமாகும்
ஆபமாம் சிவப்பிரகாச கட்டளையுமாகும்
அடங்கன்முறை சிவானந்தல கிரியுமாகும்
சாபமுடன் சவுந்திரியாம் அலைகிரியுமாகும்
சாங்கமுடன் சாட்சரமாம் கோவைதானே 48

தானான குருசாம்பிர ரகசியமுமாகும்
தன்மையுள்ள வித்தியா-ண்ணிய வேதமாகும்
கோனான குருமுறையாந் தத்வவேதம்
குணமான ஒழிவிலென்ற ஒடுக்கமாகும்
பானான பராசரிடி ஞானவேதம்
பாங்கான பக்கவிஜய பூரணந்தான்
மானான மகாவாக்கிய வேதமாகும்
மகத்தான சாத்திரங்க ளோதினாரே 49

ஓதவே புலஸ்தியனே யின்னங்கேளு
ஓகோகோ நாதாக்கள் சொல்லவில்லை
நீதமுடன் வுந்தனுக்காய் யானுமல்லோ
நீடாழி வுலகத்தின் மார்க்கமெல்லாம்
போதமுட னுபதேசஞ் செய்துமல்லோ
புகட்டினேன் வுந்தனுக்கு ஞானமார்க்கம்
தோதமுடன் காயாதி கற்பங்கொண்டு
தொல்லுலகில் வெகுகால மிருப்பீர்தானே 50

அகஸ்தியர் புலஸ்தியர்க்குக் காயகற்பஞ் சொல்லுவது

இருக்கவே புலஸ்தியனே யின்னங்கேளு
யெழிலான காயாதி கற்பஞ்சொல்வேன்
பொருக்கவே பூவுலகில் கோடிகாலம்
பொங்கமுடன் யிருப்பதற்கு வுறுதிசொல்வேன்
நிருத்தமுடன் செங்கடுக்காய் சேர்தான்ரெண்டு
நிலையான சூதமது சேர்தானொன்று
திருத்தமுடன் மலைத்தேனி லூறவைத்து
திகழுடனே பூமிதனில் புதைத்திடாயே. 51

புதைக்கவே மண்டலமு மூன்றுசென்றால்
புகழான செங்கடுக்காய் சூதமுண்டு
சிதைத்துமே தேனதுவும் பொசித்துமேதான்
சிறப்பான மெழுகதுபோ லாகும்பாரு
விதையான கடுக்காயுஞ் சூதஞ்சேர்ந்து
வீறான காயகற்பம் மெழுகதாச்சு
சதையான செங்கடுக்காய் கற்பமாகி
தன்மையுள்ள தேகமது கற்றூணாமே. 52

கல்லான தூணதுவுங் கடுக்காய் தன்னால்
காயாதி கற்பமதுக் குறுதியாச்சு
வல்லான காயமது கொண்டபோது
வரைகோடி திறைகோடி யிருக்கலாகும்
புல்லான தேகமது கற்றூண்போலே
புகழான வாசியது கீழ்நோக்காகும்
நல்லதொரு காயமதைக் கொண்டபோது
நரைதிரையும் நாயகனே யில்லைகாணே. 53

காணவே தேகமது அழியாதப்பா
கைலாச சட்டமுனி நாதரைப்போல்
தோணவே தேகமது சட்டைதள்ளி
துப்புரவாய் வெகுகால மிருக்கலாகும்
மாணவே வையகத்தில் தேகந்தன்னை
மார்க்கமுடன் வெகுகால மிருக்கநன்று
பூணவே சமாதிதனி லிருந்துகொண்டு
பொங்கமுடன் வருங்காலம் வருகலாமே. 54

வருகவே தேகமது தங்கம்போலாம்
வண்மையுள்ள செங்கடுக்காய் காயகற்பம்
ஒருவருமே யறியார்க ளிந்தபாகம்
ஒகோகோ சித்துமுனி கண்டதில்லை
திருவருளின் மனோன்மணியின் கடாட்சத்தாலே
திறமான காயகற்பஞ் சொன்னேனப்பா
கருவறிந்து வுளவறிந்து கருத்தாயுண்டு
காசினியில் கோடிவரை யிருக்கலாமே. 55

ஆமேதான் நீயுமொரு சித்தனாவாய்
அவனிதனி லுன்னைப்போல் சித்துமுண்டோ
நாமேதா னசுவனியார் சொன்ன நீதி
நாதாந்த புலஸ்தியனே யுந்தனுக்கு

போமேதா னுந்தனுக்குப் பொய்யுறாமல்
பொங்கமுடன் யானுரைத்தேன் காயகற்பம்
தேமேதான் தேசத்தில் மாண்பருக்கு
தேடினால் கிட்டாது வுண்மைபாரே. 56

பாரேதான் பதினெண்பேர் சித்தர்தாமும்
பாசமுடன் தாம்செய்த நூல்கள் தன்னில்
நேரேதா னிக்கருவை யாருஞ்சொல்லார்
நேரான காயாதி கற்பந்தன்னை
சீரேதான் வரிசையுடன் சித்தர்மாண்பர்
சீராகக் கூறவில்லை உளவுமார்க்கம்
வீரேதான் உந்தனுக்குச் சொன்னேன்பாரு
விருப்பமுடன் புலஸ்தியனே கற்பந்தானே. 57

கற்பமாங் காயாதி கற்பந்தானுங்
காசினியி லெந்தன்போல் யாருஞ்சொல்லார்
அற்பமென்று நினையாதே அருள்மைந்தாகேள்
அப்பனே புலஸ்தியனே யெந்தன்பாதா
சொற்பமென்று நினையாதே துரியாகீதம்
தொல்லுலகி லுந்தனுக்கு யாரும்விள்ளார்
கற்பமுறை கொண்டல்லோ யுகாந்தகாலங்
காசினியி லிருப்பவனே சித்தனாமே. 58

புலஸ்தியர்க்கு உறுதிகூறல்

சித்தனாய் யிருந்துமல்லோ சிலதுகாலம்
சீருடனே வையகத்தி லிருக்கவேண்டும்
தத்துவங்கள் தான்கடந்து சொருபனாக
தகமையுடன் சித்தர்முனிக் கன்பனாகி
முத்தர்மனம் நோகாமல் மனம்வேகாமல்
மூதுலகில் கீர்த்திபெற்ற புனிதவானாய்
சத்தியத்தைத் தவறாம லெந்தநாளும்
சதாகால மிருந்தல்லோ வாழ்வீர்தாமே 59

வாழ்கவென்றா லுந்தனுக்கு பேராம்வாழ்வு
வையகத்தி லுந்தனுக்கல் லார்க்குமில்லை
தாழ்கவே சித்தர்முனி ரிடிகளெல்லாந்
தாரணியி லுந்தனையு மெச்சுவார்கள்
வீழ்கவே படுநரகம் போட்டானப்பா
விண்ணுலகில் நீயுமொரு சித்தனாவாய்

பாழ்படவே பாவமது நேராதப்பா
பாருலகில் பாக்கியனா யிருப்பீர்தானே. 60

இருக்கவென்றால் வெகுகோடி சித்தர்மாண்பர்
யெழிலாக நாலுயுக வதிசயங்கள்
பொருக்கவே யுந்தனுக்குப் புகட்டுவார்கள்
பூவுலகில் நீயுமொரு புனிதவானாய்
திருக்கடலும் பிரளயங்கள் காணலாகும்
திகாந்தவரை யணுவளவும் பார்க்கலாகும்
ஒருத்தருக்கும் விட்டகுறை நேராதப்பா
உத்தமனே யுந்தனுக்கு நேரலாச்சே. 61

அகஸ்தியர் புலஸ்தியருக்கு இரண்டாவது புத்திகூறல்

ஆச்சப்பா புலஸ்தியனே யின்னஞ்சொல்வேன்
அருண்மைந்தா வினோதமணிசொல்லக்கேளும்
மூச்சடங்கிப் போனதொரு சித்துதாமும்
மூதுலகில் பிறவிவந்து ஜெனனமாச்சு
நீச்சுடைய தேகமது பின்னுமல்லோ
நிலையாழி சமாதிதனைக் கடந்தசித்து
ஆச்சரிய மானதொரு நாதாந்தசித்து
அவனிதனில் வெகுபேர்க ளுண்டுபாரே. 62

பாரேதா னவர்களுமே யுந்தன்பக்கல்
பரிவாக நற்சீட னென்றுசொல்லி
நேரேதான் திருமுகத்தின் முன்னேநின்று
நெடிதான வார்த்தையது மிகவுஞ்சொல்வார்
ஆரோதான் போல வொரு சித்துருபம்
அன்புடனே வடிவமது கொண்டுயேகி
நீரோதான் புலஸ்தியரோ வொன்றுகூறி
நிஷ்டூர விடையதுவுங் கூறுவாரே. 63

கூறுவார் தவந்தனிலே மிகுந்தசித்து
குவலயத்தைக் கரைகடந்த ரிடிதானப்பா
மாறுடைய வேஷமது கொண்டுமல்லோ
மகத்தான புலஸ்தியனே உந்தன்முன்னே
சீறுகின்ற அரவத்தைப் போலேதானும்
சினந்துமே யுந்தன்முகம் வார்த்தைசொல்வார்
ஆறுதலை யாகவல்லோ மொழிகள்கூறி
அப்பனே உந்தனிடம் வாதிப்பாரே 64

வாதிக்கும் போதையிலே புலஸ்தியாகேள்
வண்ணமுட னவர்களுக்கு யெதிர்நில்லாதே
சாதிக்க சித்தர்முனி சாபந்தானும்
தட்டாம லுந்தனையும் வாதிக்கும்பார்
சோதிக்க உன்மனதை ரிடியார்தாமும்
சுத்தமுடன் பரிசனங்கள் செய்வார்பாரு
போதிக்க மனங்கலங்கி உண்மைகூற
பிறட்டான பிசகதனைக் கூறுவாரே 65

கூறுவார் உன்மனதை சோதித்தல்லோ
குறிப்புடனே உந்தனையும் வினயங்கேட்பார்
மாறுபட வார்த்தையது மிகவுஞ்சொல்லி
வன்மையுடன் வார்த்தைதனை முன்பின்னாக
தூறுமொழி மிகச்சொல்லி வினயஞ்சொல்லி
துப்புரவாய் மாராட்டஞ் செய்வார்பாரு
தேறுதலை சொல்வதுபோல் பொய்யைக்கூறி
தேற்றமுடன் உன்மனதை சோதிப்பாரே 66

சோதிக்கும் வேளையிலே புலத்தியாகேள்
துப்புரவா யவர்பாதம் வணங்கிநின்று
ஆதித்த னென்குருவே சாமிநாதா
அப்பனே யெந்தனையுங் காணவென்று
நீதிமொழி தவறாத வண்ணத்தோடும்
நிலையான பேரின்ப வழியினோடும்
பாதிமதி சடையணிந்த தம்பிரானே
பரமகுரு நாதரென்று பணிந்திடாயே 67

பணியவே நாதாந்த சித்துதாமும்
பாங்குபெற உன்மீதில் பட்சம்வைத்து
மணியான ஞானோப தேசமெல்லாம்
மார்க்கமுடன் புலத்தியனே யுந்தனுக்கு
துணிவுடனே போதிப்பார் ஞானவேதம்
துரைராச சுந்தரனே வருண்மைந்தாகேள்
கணிதமுடன் சாத்திரத்தின் பிரணவத்தை
கருவாக உந்தனுக்குக் கூறுவாரே 68

கூறுவார் புலத்தியனே யின்னங்கேளு
குருவான சித்தர்முனி மனதுவந்து
மாறுபாடாகவல்லோ உந்தன்மீது
மகத்தான மனந்தனையே சோதித்தேற

தூறுபட வார்த்தைகளை மிகவுங்கூறி
துன்பமென்ற தீவினைக்கு ஆளதாக்கி
தேறுதலை மிகச்சொல்லி பரிசோதித்து
தேற்றமுடன் மனம்வேறாய் சோதிப்பாரே 69

பாரேதான்உந்தனுக்கு பட்சஞ்சொல்லி
பாங்கான கேள்விகளைக் கேட்கும்போது
நேரேதா னவர்தனக்கு உத்தாரங்கள்
நேர்மையுடன் தானெடுத்து யிதவுசொல்லி
தூரேதான் வாராமல் துய்யபாலா
துரைராஜ ரிடிகளிடம் பட்சம்வைத்து
சீரேதா னல்வினைக்கு ஆளதாகி
சிறப்புடனே நற்பதத்தைப் பெறுகுவாளே 70

பெற்றபின்பு மரியாதை உடனேநில்லு
பேரான கெருவமதைக் கொண்டிடாதே
கற்றுணர்ந்த பெரியோர்கள் வாக்குசாபம்
காசினியி லுந்தனுக்கு லபிக்கும்பாரு
நற்றவத்துக் குறுதிகொண்டு நெடுநாளாக
நாணிலத்தி லிருந்துகொண்டு நாதர்தம்மின்
குற்றமது நேராமல் குணமாராய்ந்து
கொற்றவனே சத்தியமாய் நடந்துகொள்ளே 71

கொள்ளவே துரைராசர் கடாட்சத்தாலே
கோடான கோடிதவ முனக்குண்டாகும்
விள்ளவே மனோன்மணியாள் கிருபையாலும்
வேதாந்தத் திரிபுரையின் அருளினாலும்
எள்ளளவு முந்தனுக்குச் சாபந்தானும்
எப்போதும் நேராது புலத்தியாகேள்
கொள்ளைகொள்ளப் போனவர்க்கு திரவியங்கள்
கொப்பெனவே வாய்த்தகதை போலாம்பாரே 72

அகத்தியர் புலத்தியர்க்குத் தவநிலை கூறல்

பாரேதான் புலத்தியனே இன்னங்கேளு
பாங்கான தவநிலைக்கு உறுதிசொல்வேன்
நேரேதான் சோடசமாம் மதியும்பூண்டு
நெடிதான கற்பமுறை தன்னையுண்டு
சீரேதான் சமாதிதனி லிருந்துகொண்டு
சிறப்பான சின்மயத்தை உச்சரித்து
கூரேதா னசுவனியார் தேவர்சொன்ன
குறிப்பான மதிநிலையில் நின்றிடாயே. 73

நிற்கையிலே ரேசக பூரகமுங்கொண்டு
நிகட்சியுடன் வாசியோகந் தன்னில்நின்று
சொற்பனமாம் சாத்தியங்கள் சுழுத்தியிலேகொண்டு
தோறாமல் கலைதனையே இறுக்கிமாட்டி
அற்பமுடன் மதியமுர்தக் கலையில்நின்று
அப்பனே சிராவண பதத்தில்நின்று
துற்பரவாய் மையநிலை மதியங்கொண்டு
துரத்தியே வாசியென்ற கயிறைப்பூட்டே 74

பூட்டியே வாசிநிலை நெகிழமாட்டி
புகழான பஞ்சகலை தன்னிலூட்டி
தாட்டிகமாய் வாசிநிலை மேல்நோக்காமல்
தட்டாமல் கெவுனமது மேற்கொள்ளாமல்
ஆட்டியே யைம்புலனைச் சுட்டறுத்து
அகங்கார மமதைதனை உள்ளடக்கி
மாட்டியே கண்ணிரண்டும் நெகிழ்ந்திடாமல்
மரவானைக் குண்ணதுபோல் நிற்பீர்காணே 75

காணவே மதியநிலை நிற்கும்போது
கருவான மூச்சதுவு மொடுங்கிநிற்கும்
தோணவே பிராணாய நிலையில்நின்று
தோற்றமுட னமுததிலே காணலாகும்
பூணவே சிகாரமதி லகிரிகொண்டு
புகழான ரீங்கார முள்ளடங்கி
வேணவே சிதாபாச நிலையில் நின்று
வெட்டவெளி கண்ணிற்குத் தோற்றுந்தானே 76

தானான மவுனநிலை கலையைப்பத்தி
தகமையுடன் வாசிதனை யோடொட்டாது
தேனான வமுர்தமது கொண்டபோது
தெளிவான மதியொன்றுந் தெரியாதப்பா
பானான வையகத்தி லதிதமானபேர்
பாடுபட்டு யிப்படியே மாண்டார்கோடி
மானான வாசிதனை மாற்றிக்கொண்டு
வழிதடங்கள் காணாமல் மாண்டார்தாமே. 77

மாண்டாரே வாசியோகஞ் செய்தபேர்கள்
மானிலத்தில் கணக்குண்டோ லக்கோயில்லை
தூண்டிமனந் தனைப்பற்றி துய்யமாண்பர்
துரைகோடி முறைகோடி தொந்தங்கோடி

தாண்டியே பதிகெட்டு மதியுங்கெட்டு
தகமையுள்ள விட்டகுறை விதியுங்கேட்டு
வேண்டியபேர் மாண்டார்க ளுலகிலப்பா
வேதாந்த தாய்பதத்தை யடையார்சொல்லே. 78

சொல்லவே தாய்பதத்தைக் காணவல்லோ
துரைராச வேந்தர்முதல் கெட்டாாகோடி
வெல்லவே புவிமாண்பர் கவிமாண்பரெல்லாம்
வெகுபேர்கள் வாசியோகஞ் செய்துமல்லோ
புல்லவே வையகத்தில் மாண்டார்கோடி
புகழுடனே தவமிருந்தோ ராறுமில்லை
அல்லவே யிருந்தாலும் விதியாளிக்குண்டு
அப்பனே மற்றவர்க்கு வாய்க்காதன்றே. 79

அன்றான சிவராச வேடம்பூண்டு
அப்பனே காவி காஷாயம்பூண்டு
குன்றான மலைமீதிற் சென்றேனென்றும்
கோடான கோடிதவஞ் செய்தேனென்றும்
வென்றான தவக்கடலைக் கடந்தேனென்றும்
விருப்பமறச முசாரமற்றே னென்றும்
சென்றுமே காட்டகத்தின் நிலையில்நின்று
சேர்த்தாரே கோடிபொருள் வயற்றுக்காமே. 80

வயிர்பிழைக்க யிவ்வேடங் கொண்டுமல்லோ
வையகத்தில் வெகுமாண்பர் வேடங்கொண்டு
மயிரான சடைதனையே வளர்த்துக்கொண்டு
மகத்தான கலைதகியான மொழியும்பேசி
தயிரான பால்மோரும் பொசிப்பேனென்றும்
தாரணியி லன்னமுத லருந்தேனென்றும்
ஒயிலான நடைபூண்டு சங்கிலியுங்கொண்டு
உத்தமனே லாடகவி பாடுவாரே. 81

பாடியே வெகுகோடி மாண்பரப்பா
பாருலகி லிப்படியே வேடம்பூண்டு
ஓடியே காசிபதி யமுனையென்றும்
உத்தமனே சத்தகடல் கடந்தேனென்றும்
நாடியே தீர்த்தகிரி சென்றேனென்றும்
நாதாக்கள் மலைதனையே கண்டேனென்றும்
பேடிபோ லவர்பாதங் காணாமற்றான்
பேரான முறைசொல்லி பிழைப்பார்தாமே. 82

த..யான கெங்கைக்கு சென்றே(ெனன்றும்
தாக்கான துங்கப்பத்திரி கடந்தேனென்றும்
கோமான்க ளறியாத கோவர்த்னகிரியை
கொற்றவனே மலைசுத்தி வந்தேனென்றும்
பூமான்கள் தானிருக்கும் பாண்டிநாடு
புகழான காவேரி சென்றேனென்றும்
நாமான வைராக்கிய மிகவேபூண்டு
நலமான வார்த்தைதனை யுரைப்பார்தானே. 83

..ரைத்துமே சித்தர்பதி சென்றபோது
ஓகோகோ நாதாக்க ளெந்தனுக்கு
திரைத்துமே பசியில்லா வேறெனக்கு
தீர்க்கமுடன் சித்தரவர் கொடுத்தாரென்றும்
பரைக்கவே பறைசாட்டி லோகமெல்லாம்
பாருலகில் மாந்தர்களை மயக்கங்கொண்டு
கரைக்கடலை சுத்திவந்த சித்தன்போல
காசிபதி சங்கமர்போல் வருவார்பாரே. 84

பாரேதான் பதினெண்பேர் சாத்திரத்தை
பான்மையுட னறியாமல் கையிலேந்தி
தீரேதான் தத்துவநூல் கடந்தோன்போலும்
திரளான வாயாட்ட மிகவுங்கூறி
நேரேதான் ஞானோபம் பெற்றோனென்றும்
நேரான பவக்கடலை மறந்தோனென்றும்
.. ரதான் சிற்றறிவை யுடையசீடன்
சிறப்பான சித்தனென்றுஞ் சொல்வான்தானே. 85

த..ானசித்தரொடு வெகுகோடிகாலம்
தன்மையுடன் வனமெல்லாந் திரிந்துவந்தேன்
கோனான மலைமூலி விடமூலியாவுங்
கொற்றவனார் சித்துமகா புருடர்தானும்
பானான யென்பேரில் பட்சம்வைத்து
பாருலகில் பிழையென்று விடைகொடுத்து
தேனான மைகசக்கு மருந்துதானும்
தேற்றமுட னெந்தனுக்குக் கொடுத்தார்பாரே. 86

கொடுத்துமே சீவனத்துக் குறுதிகேட்டேன்
கொற்றவனே யெந்தனுக்கு வாதஞ்சொல்லி
அடுத்துமே தங்கமுடன் வெள்ளிதானும்
வன்பான யெந்தனுக்குத் தந்தாரென்று

தொடுத்ததொரு சிமிழ்வித்தை சல்லியவித்தை
தோறாமல் யெந்தனுக்கு யாவுந்தந்து
விடுத்துமே யவனிதனில் பிழைக்கவென்று
வீரமுடன் யெந்தனுக்கு வரந்தந்தாரே. 87

வரந்தந்தா ரென்றல்லோ கோடிபொய்யை
வண்மையுடன் தாமுரைப்பார் பொய்யைமெய்யாய்
நிரந்தரமாய் சமுசார வாழ்க்கைவிட்டு
நீடுழி காலம்வரை வனந்திரிந்தேன்
கரமதுவும் நகம்வளர்ந்து சடைவளர்ந்து
காசினியில் சிற்றின்ப வாசைவிட்டு
தரந்தரமாய் வெகுகோடிசித்து தம்மை
தாரணி யில்வணங்கிமிகத் தொழுதிட்டேனே. 88

தொழுதேனே யென்றுமல்லோ மாண்பர்தாமும்
தோற்றமுடன் புலஸ்தியனே சொல்வாரப்பா
பழுதுபடாத் திருமேனி காலவோனே
பாங்குடனே கற்பமதுக் கொண்டபூபா
வழுதுடனே யுந்தனையும் மதிகுலைத்து
வளமான உபசார வார்த்தைகூறி
நழுவலுடன் உந்தனது பொருளையெல்லாம்
நயம்பேசி பயம்பேசி வாங்குவாரே. 89

புலஸ்தியர்க்கு அகஸ்தியர் அதர்ணவேதங்கூறல்

வாங்கவே புலஸ்தியனே யின்னஞ்சொல்வேன்
வளமான திருமந்திர அதரணவேதம்
தூங்கியே திரியாதே மைந்தாகேளு
துரைராச சுந்தரனே பட்சம்வைத்து
ஏங்கியே வாடாம லுந்தனுக்கு
எழிலான மாந்திரிக மார்க்கமெல்லாம்
சாங்கமுட னுந்தமக்குச் சொல்வேனப்பா
தாரணியி லெந்தனைப்போல் சொல்வாருண்டோ 90

உண்டான கருவிகர ணாதியெல்லாம்
உத்தமனே யுந்தனுக்குச் சொல்வேன்கேளு
அண்டர்முனி ராட்சதருங் காணாதசித்து
அவனியிலே யாருந்தான் கண்டதில்லை
கண்டறிந்த அசுவனியார் சொன்னநீதி
கலியுகத்தில் பொய்யாது மெய்யே யாகும்

விண்டவர்கள் யாருந்தான் சொல்லாரப்பா
விருப்பமுட னுந்தனுக்குச் சொன்னேன்பாரே. 91

பாரேதா னஷ்டவி,; கருமஞ்சொல்வேன்
பாங்கான மோகனமும் பேதனமுமாகும்
நேரேதான் உச்சாடனம் ஸ்தம்பனமுமாகும்
நெடிதான வித்வேஷனம் ஆக்குருஷணமாகும்
சீரேதான் வசிய மாரணமுமாகும்
சிறப்பான அஷ்டவித பாவனமேயாகும்
கூரேதான் ஒவ்வொன்றுக் குயிருஞ்சொல்வேன்
கொற்றவனே புலத்தியனே இன்னங்கேளே. 92

வசியம்

கேளேதான் சிவராஜ புலஸ்தியாகேள்
கெவனமுட னுந்தனுக்குக் கூறுவேன்யான்
பாளேதான் செகவசியந் தன்னிலப்பா
பாங்குபெறக் கருமூலிக் காப்புக்கட்டி
நாளேதான் போகாமல் வராகம்தன்னை
நளினமுடன் பட்சமது சென்றபின்பு
வீளேதான் முதனாளில் காப்புகட்டு
விருப்பமுடன் ரெண்டாநாள் காப்பைவாங்கே 93

வாங்கியே வராகமென்ற பலிதான்கொண்டு
வளமுடனே வடக்குவேர் தன்னைவாங்கி
ஆங்குபெற குளிசமது யாடியல்லோ
பட்சமுடன் உருவதுவும்லட்சங்கொண்டு
தீங்கில்லா பஞ்சாட்சர வட்சரத்தை
தீர்க்கமுட னோதியல்லோ உருவுங்கொண்டு
ஏங்கியே திரியாதே மைந்தாகேளு
எளிதான பூரணத்தில் வாசிபூட்டே 94

பூட்டியே நிற்சையிலே அட்சரத்தையோது
புகழான வட்சரத்தின் உயிரைக்கொண்டு
மாட்டியே பிரணவத்தை மாறிமாறி
மகத்தான வசியத்தைக் குறுதிதேடு
தாட்டிகமாய் உறுதியது பூண்டபோது
தன்மையுடன் வசியமது மாற்றந்தோன்றும்
நீட்டியதோர் மூலிதனை உச்சரிக்க
நிலையான கருமூலி வசியமாச்சே. 95

ஆச்சப்பா கருமூலி வசியமானால்
அவனிதனில் ராசரெல்லாம் வசியமாவார்
மாச்சலுடன் துரைத்தனத்து மாண்பரெல்லாம்
மகத்தான வசியமதுக் குள்ளேயாவார்
மூச்சடங்கிப் போனதொரு சித்துதாமும்
மூதுலகில் வசியமதுக் குள்ளாவார்பார்
ஏச்சலுடன் சித்தாதி முனிவரெல்லாம்
யெழிலான கருமூலிக் குள்ளாவாரே 96

ஆவாரே கண்கண்ட மிருகமெல்லாம்
அவனிதனி லுந்தனுக்கு ஒடுக்கம்பாரு
மேவலுடன் செகவசிய முனக்குள்ளானால்
மேதினியில் சித்தர்முனி உனக்கீடுண்டோ
ஏவலது செய்வதற்கு உலகமெல்லாம்
எழிலாக உந்தனுக்குக் கீழேயாவார்
நாவதுவும் பொய்யாது புலத்தியாகேள்
நாகமென்ற விஷம்போலே கூறுவாரே. 97

கூறவே புலஸ்தியா மைந்தாகேளு
கொப்பனவே சகலசித்துங் கைக்குள்ளாகும்
ஆறவே சித்தர்முனி ரிஷிகளெல்லாம்
அன்புடனே உந்தனுக்குப் பணிதிசெய்வார்
சீறலென்ற மிருகமெல்லாங் கைக்குள்ளாகுஞ்
சிறப்பான விருட்சமுத லுன்னடக்கம்
மாறலென்ற வட்சரமு முனக்குள்ளாகும்
மகத்தான வசியமென்ற மாறல்தானே. 98

அகஸ்தியர் புலஸ்தியர்க்கு ஆசன விதி கூறல்

தானான புலஸ்தியனே இன்னங்கேளும்
தன்மையுள்ள வாசனத்தின் விதிதான்சொல்வேன்
கோனான குருக்களுக்கு வாசனங்கள்:
கொற்றவனே பீதாம்பர பட்டுமாகும்
தேனான தங்கமென்ற பாத்திரந்தான்
தெளிவான சந்தனத்தின் பாதரட்சை
பானான ருத்திராட்சம் ஒருமுகமாகும்
பாங்கான தீர்த்தமென்ற பாத்திரமாமே 99

பாத்திரமாஞ் சயனத்துக் குறுதிசொல்வேன்
பாங்கான தாழையிலை முடைச்சலாகும்

நேத்தியுடன் சந்தனமா முருளைக்கட்டை
நெடிதான தலையனையைக் கொள்ளலாகும்
பூர்த்தியுடன் சிவந்ததோர் சந்தனந்தானும்
புகழான நெற்றிக்குத் திலர்தமாகும்
ஆர்த்தியென்ற கற்பூர குங்குமப்பூ
அழகுடனே விதிப்பதுவே குருவுமாமே 100

காவிகாஷாய குருக்கள் விதி

குருவான புலஸ்தியனே இன்னஞ்சொல்வேன்
கொப்பெனவே காவி காஷாயம்பூண்ட
திருவான பண்டார சன்னிதிதானப்பா
திகழான மடாதிபதி என்னலாகும்
உருவான ருத்திராட்சம் பஞ்சமுகமாகும்
உத்தமனே கமண்டலமுந் திருனீற்றுமடலும்
சொரூபமென்ற கவச குண்டலமுமாகும்
சொற்பெரிய காற்செருப்பு தோர்க்குல்லாமே 101

குல்லாவும் ருத்திராட்சர மாலைதானுங்
கூறான எழுத்தாணி திருவோலையாகும்
புல்லான தற்பையுடன் திருஞ்சனமுமாகும்
புகழான திருமவெண்ணீறு திலர்தமாகும்
வல்லதொரு கரியினது தந்தத்தாலே
வாகான பாதத்தின் குறடேயாகும்
செல்லான புத்தகமுங் கைக்குள்ளாகும்
சிறப்பான வீரசடை யொக்கும்பாரே. 102
ஒக்குமே பூனூலும் பிரிநூலாகும்
உத்தமனே பஞ்சலோகப் பவுத்திரமுமாகும்
தக்கதொரு ஞானோப தேசவேதம்
தன்மையுள்ள வாதிப்பின் தர்க்கமாகும்
மிக்கவே ஆசனமு மான்தோலாகும்
மிகுதியுள்ள தலையணையும் பஞ்சணையுமாகும்
தெர்க்கபுகழ் சயனமது மடமேயாகும்
தேறாத மடாதிபதிக் கென்னலாமே 103

சிவவேட சித்தருக்கு ஆசனவிதி

என்னலாம் புலஸ்தியனே மைந்தாகேளு
எனதையர் அசுவனியாஞ் சொன்னநீதி
முன்னமே தானுரைத்த முறைப்பாடான
மூதுலகில் அவரவர்கட் குகந்தமார்க்கம்

சொன்னபடி விதிமுறைகள் தொகுப்புதன்னை
தோறாமல் புலஸ்தியனே மச்சகேந்திரா
வின்னமது நேராமல் விதிப்படிக்கி
விருப்பமுடன் அமைப்பதுவே ஆசனமுமாமே 104

ஆமேதான் சிவவேடம் பூண்டாலுந்தான்
அப்பனே புலித்தோ லாசனமுமாகும்
நாமேதான் சொன்னபடி தாடிவேண்டும்
நலமான சடையதுவும் பின்னல்வேண்டும்
தாமேதா னகமுடனே நிர்வாணந்தான்
தகமையுடன் லக்கோடா கவினமுமேயாகும்
வேமேதான் வெள்ளையென்ற போர்வையுந்தானாகும்
வெளுப்பான செம்மறியின் தோலுமாமே. 105

தோலுடனே வீரவட்ட சங்கிலியுமாகும்
தோறாத லாட சங்கிலியுமாகும்
காலுடனே அரிகண்ட சங்கிலியுமாகும்
கருவான யிடுப்பு சங்கிலியுமாகும்
மாலுடைய கறியதுவும் வடம்போலுமாகும்
மகத்தான ஊசியென்ற குறடுமாகும்
வேலுடைய உருவமது கைத்தடியுமாகும்
வீறான செயகண்டி மணியுமாமே. 106

மணியான கேசரத்தின் வித்தைதன்னை
மார்க்கமுடன் சிவயோகந் தன்னிற்கொண்டு
அணியான தாம்பிர தாம்பாளந்தன்னில்
அன்புடனே திருவெண்ணீர் தான்பொதிந்து
பணிவுடனே மாண்பர்களுங் கொடுக்குந்தர்மம்
பாலிக்கும் விதியிதுவே வேண்டும்பாரு
துணிவுடைய மந்திர பீஜாட்சரந்தான்
துப்புரவாய்க் கொள்ளும்விதி என்னலாமே. 107

காசியாத்திரை சங்கமவிதி கூறல்

என்னவே புலஸ்தியனே இன்னங்கேளு
எழிலான விதிமுறைக ளெடுத்துரைப்பேன்
அன்னமென்ற காவடிகள் தான்சுமந்து
அவனியெலாம் ஓடிவலஞ் சுத்திவந்து
சொன்னமது கரமேந்தி வேஷம்பூண்டு
தோறாமல் வையகமுஞ் சுத்திவந்து
நன்னயமாய்க் காவடிகள் கூண்டமைத்து
நலமான குப்பியது அமைப்பார்பாரே. 108

பாரேதான் குப்பிதனில் தீர்த்தங்கொண்டு
பாங்கான கூண்டதுக்கு ளடக்கஞ்செய்து
நேரேதான் காவடியாந் தோளிலூன்றி
நேர்மையுடன் பூநீரின் மணிதானப்பா
சீரேதான் கழுத்திலிட்டு கரத்திலேந்தி
சிறப்புடனே வனந்திரிந்து ஜங்கனாகி
தீரேதான் சயனமது வஸ்திரமுமாகுந்
திகழான காசியென்ற ஜங்கந்தானே. 109

வேதாந்திக்கு ஆசனவிதி கூறல்

தானான இன்னமொரு மார்க்கங்கேளு
தயவான புலஸ்தியனே மைந்தாபாரு
மானான வேதாந்தி மார்க்கஞ்சொல்வேன்
மகத்தான வையகத்தி னாசைதானும்
தேனான மடமொழியா ராசைதானும்
தேற்றமுடன் மதலையென்ற வாசைதானும்
வேனான மண்ணாசை பொன்னாசைதானும்
விருப்பமுட னொழிப்பதுவே தருமமாமே. 110

தருமமாம் வஸ்திரமும் வெள்ளையாகுந்
தகமையுள்ள திருவெண்ணீர் சதாகாலந்தான்
கருமமென்ற தீவினைக்கு ஆளாகாமல்
காசினியில் நல்வினைக்கு ஆளுமாகி
மருமைக்கும் இம்மைக்கும் மனதுவந்து
மாசற்ற ரஞ்சிதனாய் வளப்பம்பூண்டு
குருமொழியே தவறாம லெந்தநாளுங்
குவலயத்திலிருப்பவன் வேதாந்தியாமே. 111

ஆமேதான் பொய்மொழிகள் கூறாவண்ணம்
அப்பனே சத்தியமாய்நடக்கவேண்டும்
வேமேதான் பொய்சூது கபடுதந்திரம்
விட்டகற்றி நல்வழியி லிருக்கவேண்டும்
போமேதான் பொல்லாங்கு செய்தபேர்க்கு
பொங்கமுடன் நன்மைபெறச் செய்யவேண்டும்
நாமேதான் குருவண்ணம் அதிகவேண்டும்
நாதாந்த சித்தாந்த நாட்டங்காணே. 112

காணவே திரிகால பூசைவேண்டும்
கடுமுச்சி பகர்க்கால வதுவைவேண்டும்

தோணவே சமுசார வாழ்க்கைதானும்
துப்புரவா யிருந்தாலுங் குற்றமில்லை
பூணவே சதாகாலம் மாய்கையாகா
புகழான தத்துவத்தோ டிருக்கவேண்டும்
நீணவே சன்மார்க்க நிலையில்நின்று
நீதியுடன் துன்மார்க்கம் நீக்கநன்றே. *113*

நன்றான ராக்காலம் பழம்-பாலாகும்
நலமான சயனமிது பலகைபீடங்
குன்றான மலையேறி வாசியோகம்
குறிப்புடனே கண்டல்லோ நடத்தல்வேண்டும்
தென்றிசையில் சித்தர்முனி ரிஷிகள்வாக்கு
தெளிவுடனே தாமுரைத்த நூலைக்கண்டு
வென்றிடவே வேதாந்த விதியனைத்தும்
விருப்பமுட னடப்பதுவே தீட்சையாமே. *114*

குறி சொல்வோன் விதி

ஆமேதான் புலஸ்தியனே இன்னஞ்சொல்வேன்
அருண்மைந்தா குறிசொல்வோன் மார்க்கங்கேளு
தாமேதா னஷ்டாங்க யோகங்கற்று
தாரணியில் மாந்திரிக நூலும்பெற்று
போமேதான் குறளியென்ற தந்திரத்தால்
போக்கான அதர்வணத்தை மாறல்செய்து
நாமேதா நினைத்தவண்ணங் கூறுதற்கு
நலமான குறளியென்ற பில்லியாமே . *115*

பில்லியாந் தேவதா பூதமாகும்
பேரான அசுவனா பூதத்தோடு
கொல்லியாம் உதரவென்ற மாடன்தானுங்
கொள்ளிவாய்ப் பூதமென்ற மசானருத்திரன்
சல்லியங்க ளறிந்துமல்லோ வேதங்கற்று
சாங்கமுட னிஷ்டாங்க யோகனாக
வல்லியதோர் பிறப்பங்கோல் கைபிடித்து
மாறியல்லோ வட்சரத்தை மாறுவாயே. *116*

மாறவே வேதாள பூதந்தானும்
மகத்தான குறளியென்ற பூதத்தோடும்
சீறலென்ற பதினாறு ரெட்டிப்பான
சிறப்பான தேவதா பூதத்தோடும்

கூறவே கைமசக்கு செய்துகொண்டு
கொற்றவனே லோகமதில் திரிந்து மல்லோ
ஆறவே நினைத்ததொரு வண்ணந்தன்னை
அப்பனே உந்தனுக்குக் கூறும்பாரே. 117

பாரேதான் நினைத்ததொரு வாக்கியத்தைப்
பாங்குடனே உந்தனுக்குக் கூறும்பாரு
நேரேதான் லாடமதில் திலர்தமப்பா
நேரான முடிமீதில் கச்சைபூண்டு
சீரேதான் வஸ்த்திரமு முழந்தானாறு
சிறப்பான சோடியென்ற மாத்திரைகோற்பிரம்பும்
தீரேதான் பாதமதில் யெட்டிமான்குறடும்
திகழான செந்தூரப் பொட்டுமாமே. 118

பொட்டான தந்தமதில் வாடைவீசும்
புகழான பற்காவி தன்னோடொக்க
சட்டமுடன் இருவிழிக்கு மையுந்தீட்டி
சாங்கமுடன் செம்மறியி னாட்டுத்தோலும்
வட்டமுடன் வையகத்தை மிரளச்செய்து
வண்மையுடன் பொற்காசு பறிப்பார்பாரு
திட்டமுடன் குறிகளது மிகவுரைத்து
திகழான வையகத்தில் திரிவார்பாரே. 119

பொய்ஞ்ஞானி ஆசனவிதி

திரிவாரே புலஸ்தியனே மைந்தாகேளு
திறமான யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
புரிசடையோன் போலாக வேஷம்பூண்டு
புகழான வையகத்தில் சிலதுமாண்பர்
பரிதனிலே மேலேறி வேஷம் பூண்டு
பாங்கான காவி காஷாயங்கொண்டு
சரியான யுசடையுடனே பாதரட்சை
சட்டமுடன் தானணிந்து தயங்குவாரே 120

தயங்கவே வெண்ணீறுந் திருமேனிதன்னில்
தன்மையுடன் மேலெல்லாம் பூசியல்லோ
பயங்கரமாய் பரிதனிலே ஏறிக்கொண்டு
பாங்குபெற மாராட்ட வித்தைகொண்டு
புயங்கமுடன் ஜாலமென்ற வித்தைபூண்டு
புகழான கைமறப்பு வதிதஞ்செய்து

மயங்கவே வயிற்பிழைக்க வேடம்பூண்டு
மார்க்கமுடன் மாண்பர்களை யழைப்பார்தானே 121

தானான சிறுவர்களைக் கண்டபோது
தகமையுள்ள சுந்தரனார் வாவென்பார்கள்
கோனான மந்திரத்தால் யெல்லாவஸ்துங்
கொற்றவனே தருவிப்பே னென்பார்பாரு
தேனான மனோன்மணியாள் கிருபையாலே
தேற்றமுடன் கைமறைப்பு அறிந்துகொண்டு
மானான மண்டலத்தில் மாண்பர் தம்மை
மகத்தான பிறட்டலது செய்வார்காணே 122

காணவே தந்திரங்கள் மிகவுங்கூறி
கையிலுள்ள வாபரண வாடையெல்லாம்
பூணவே தந்திரத்தா லிதவுசொல்லி
புகழான கைமசக்கு மிகவுஞ்செய்து
தோணவே சொக்குபொடி தூளைத்தானும்
துப்புரவாய் மேலெறிந்து தூரேநின்று
வேணவே பொருளையெல்லாம் கொள்ளைகொண்டு
விருப்பமுட னேமாற்றி வினைசெய்வாரே 123

செய்யவே மாண்பரெல்லா மிகமயங்கி
தேசத்தில் பொருளிழந்தோர் கோடாகோடி
உய்யவே சயனமது சத்திரந்தானாகும்
ஓங்கார ரூபமென்ற வட்சரத்தை
வெய்யவே வாய்தனிலே உளறியேதான்
வெட்டவெளி சாவடியி லிருந்துகொண்டு
பையவே காலமதைக் கழித்துமல்லோ
பாங்கான விதிமுறையை நடத்துவாரே. 124

மெய்ஞ்ஞானி ஆசனவிதி

நடத்தவென்றா லின்னமொரு மார்க்கங்கேளு
நலமான புலஸ்தியனே மைந்தாபாரு
திடத்துடனே மெய்ஞ்ஞானி என்றுமேதான்
தீரமுடன் வையகத்தில் பேர்படைத்து
தடமுடனே காவி காஷாயம்பூண்டு
தசாங்கமுடன் யேற்பாடு செய்துகொண்டு
படமான சாத்திரங்க ளதிதங்கற்று
பான்மையுடன் உலகுமெய்ஞ் ஞானியாமே. 125

மெய்ஞ்ஞானி என்றுமல்லோ பேர்படைத்து
மேதினியில் சிவயோக வேடம்பூண்டு
அஞ்ஞான மென்றதொரு கடலைநீக்கி
அகத்தினுள்ள சிவவேடந் தன்னைப்பூண்டு
பொய்ஞ்ஞானி என்றதொரு வலையிற்சிக்கி
பொங்கமுடன் வையகத்தி லுழலாமற்றான்
செய்ஞ்ஞான மென்றதொரு பீடந்தன்னை
சிறப்புடனே ஞானமது நடத்துவாரே. 126

நடத்துவார் ஞானமென்ற பீடந்தன்னில்
நாதாந்த சித்தொளிவாஞ் சித்தனைப்போல்
மடமாத ராசைதனை ஒழித்துவிட்டு
வையகத்தில் சித்தரைப்போல் வேடம்பூண்டு
கடலேழுஞ் சுத்திவந்து கண்ணியவானாய்
காசினியில் மாண்பர்தனிற் சிறந்தயோகன்
படம்வரையும் மாதர்தனைக் கண்ணாற்காணான்
பாரினிலே சித்தனைப்போல் இருப்பான்தானே 127

சித்தனாய் மெய்ஞ்ஞான வேடம்பூண்டு
சிறந்தகன யோகதண்டு கையிலேந்தி
பத்தனைப்போல் சொரூபரென்ற பேர்படைத்து
பாங்கான ருத்திராட்சத் தாவுடங்கன்
சத்தி. 'மொழி தவறாத வாக்கியன்போல்
தாரணியில் மெய்ஞ்ஞான வேதாந்தியாக
நித்தியமுங் கடவுள்தனை விசுவாசித்து
நீதியுட னிருப்பதுவே வேதாந்தமாமே 128

வேதாந்தக் கடல்தனை மிகவேதாண்டி
மிக்கான பவக்கடலை விட்டகற்றி
நாதாந்தத் திறவுகோல் தனைத்துறந்து
நலமான சின்மயத்தி லிருந்துகொண்டு
போதாந்த பிரணவத்தை மாறியல்லோ
பொங்கமுடன் மெய்ஞ்ஞான பொருளறிந்து
தீதாந்த வினையகற்றித் திடவானாக
திரிபவனே வேதாந்த ஞானியாமே. 129

ஆமேதான் வேதாந்திப் பூண்டவேடம்
அப்பனே புலஸ்தியனே சொல்வேன்கேளு
நாமேதான் சொன்னபடி யசுவனியாந்தேவர்
நலமுடனே எந்தன்குரு சொன்னநீதி

போமேதா னவர்மொழியும் பொய்யாகாமல்
புலஸ்தியனே மனதுவர நடக்கவேண்டும்
தாமேதா னுரைத்தபடி வேதாந்தவேஷம்
தன்மையுடன் மனதுவந்து நடத்துவாரே. 130

நடக்கவே திருவெண்ணீர் தேகமெல்லாம்
நலமுடனே தளமாக லாடமிட்டு
திடத்துடனே ருத்திராட்ச மாலைபூண்டு
திறமான புலித்தோலி னாசனந்தான்
குடம்போன்ற கவச குண்டலமுங்கொண்டு
கூறான நெற்றிதனில் வசியமாற்றம்
மடந்தனிலே சமாதியது மிகவேபூண்டு
மார்க்கமுடன் குருபூசை செய்குவாரே. 131

குருபூசை யாண்டுக்கோர் முறைதானப்பா
கொற்றவனே மேதிதனில் கிரியைமெத்த
திருவான தன்குருவாஞ் சாமிநாதர்
சிவலோக மடைந்ததொரு தேகந்தன்னை
உருவது மழியாம லிருக்குதென்று
உத்தமனார் குருபூசை செய்வார்பாரு
கருவறிந்த மாண்பரெல்லாந் தியங்கியேதான்
காசினியில் குருபூசை செய்வார்பாரே. 132

பாரேதான் மெய்ஞ்ஞான வேடத்தாலே
பாருலகம் மனதுவந்து மெய்யென்றெண்ணி
நேரேதான் முன்னிருந்த குருதானப்பா
நேர்மையுட னிறந்ததொரு சமாதிதன்னில்
கூரேதான் குருபூசை எந்தன்நாதர்
கொற்றவனே மிகத்தெளிவாய்ச் செய்தாரென்று
ஊரேதா னுலகுபதி மாண்பரெல்லாம்
ஓகோகோ குருபெருமை சொல்லொண்ணாதே 133

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
துரைராச சுந்தரனார் சமாதிமார்க்கம்
வெல்லவே சமாதிமுக மிருந்துகொண்டு
வேதாந்த சித்தொளிவின் பெயரைச்சொல்லி
அல்லல்படுந் துயரமதை நீக்குதற்கு
ஆண்டவனார் சமாதியிட பீடமப்பா
புல்லறிவு வானசித்து சமாதிதானும்
புகலுதற்கு ஒருவரால் முடியாதன்றே. 134

அன்றான குருபூசை செய்தாலல்லோ
அன்பான மாண்பருக்கு வந்தநோய்கள்
குன்றான ரோகமது வந்திட்டாலுங்
கொற்றவனே சமாதிதன்னால் தீருமென்பார்
தென்றிசையி லிருந்ததொரு சித்துதாமும்
தேற்றமுடன் சமாதிதனி லயிக்கியமானார்
சென்றுமே வெகுகோடி மாண்பரெல்லாம்
சேனைபொருள் திரவியங்கள் பிரார்த்திப்பாரே. 135

பிரார்த்தனைக ளர்ச்சனைகள் மிகவுஞ்செய்து
பேரான சித்தினுட பெருமைதன்னை
நிராமயத்தின் பொருளறியார் நீதிகாணார்
நிஷ்களங்க மானதொரு சீடரெல்லாங்
தராதலங்கள் புகழ்ந்திடவே மதியுமற்று
தாரணியில் வெகுமாண்பர் உரையுங்கேட்டு
சராசரங்கள் தானடுங்க மாண்பரெல்லாஞ்
சதகோடி சூரியர்போல் நினைப்பார்தானே. 136

தானான சித்தினுட வேடத்தாலுந்
தன்மையுடன் வேதாந்த ஞானத்தாலும்
கோனான குருக்களது சமாதியாலும்
குவலயத்தின் மாந்தர்வாய்ப் பிரட்டலாலும்
தேனான சமாதியது பெருமையாலும்
தேசத்தோர் தான்பகட்டும் புதுமையாலும்
மானான சீடவர்க்க வாக்கியத்தால்
மகத்தான மாண்பரெல்லா மருளுவாரே 137

மருண்டுமே வெகுகோடி மாண்பரெல்லாம்
மகத்தான வேதாந்த சமாதிதன்னை
இருளகற்றுஞ் சூரியன்போ லோங்கவேதான்
யெழிலான வாசீர்மம் பெறுவதற்கு
கருணையுடன் தவக்கடலை யடைவதற்கு
காசியினில் வெகுமாண்பர் வினயங்கொண்டு
பொருள்தனையே காணிக்கை கொண்டுசென்று
பொங்கமுடன் போற்றியே துதிசெய்வாரே 138

துதிசெய்வார் மெய்ஞ்ஞான மார்க்கத்தோரை
துகளகற்றி சிவவேடம் பூண்டோரென்பார்
மதிபெரிய சித்துமுனி யிவர்தானென்பார்
மகத்தான நாதாந்த சொரூபரென்பார்

விதிதனையே தான்கடந்த ஞானசித்து
விட்டகுறை தொட்டகுறை யிவர்தானென்பார்
பதியான வையகத்தில் வாழுஞ்சித்து
பரமகுரு நாதரென்று பகருவாரே 139

பகரவே சின்மயத்தைக் கடந்தசித்து
பாரினிலே சமாதியிட மெழுந்தசித்து
சிகரமது யஷ்டகிரி சென்றசித்து
சீருலக நவகண்டங் கடந்தசித்து
மகரமென்ற வட்சரத்தை யோதுஞ்சித்து
மகத்தான காயகற்பங் கொண்டசித்து
தகரவே பதினெண்பேர் வணங்குஞ்சித்து
தாரணியில் மெய்ஞ்ஞான சித்துமாச்சே 140

ஆச்சப்பா நவகோடி சித்துதம்மில்
ஆகாகா மெய்ஞ்ஞான சித்தேயென்பார்
மூச்சடங்கி வெகுகாலஞ் சமாதிதன்னில்
மூதுலகைத் தான்கடந்த விசுவசித்து
பாச்சலுடன் சுவாசமதை அடக்கியல்லோ
பாருலகைத் தான்மறந்த பரமசித்து
மாச்சலுடன் பிரணவத்தின் சித்தேயாகும்
மகத்தான மெய்ஞ்ஞானி யோகியாச்சே 141

யோகமென்றால் யோகமது சொல்லொண்ணாது
உத்தமனே வேள்வியென்ற சமாதியோகம்
போகமது ஞானயோக யிந்திரபோகம்
பொங்கமுடன் கொண்டதொரு சித்தேயென்பார்
யாகமது முடிப்பதற்கு ஞானயோகம்
நாட்டிலே யிவரேனும் யாருமுண்டோ
சாகமது தப்பாத மெய்ஞ்ஞானபோகன்
சாயுச்சிய பதவிதனைக் கண்டசித்தே 142

இல்லறத் தோராசன விதி

கண்டோமே புலத்தியனே இன்னஞ்சொல்வேன்
காசினியி லில்லறத்தோன் விதியின்மார்க்கம்
சண்ட மாருதம்போல் யானுரைப்பேன்
சாங்கமுடன் சமுசாரி யோகவாழ்க்கை
பண்டுளவ மாலையணி கிருஷ்ணன்போல
பாரினிலே வெகுலீலை கொள்ளுமாண்பர்
விண்டிடவே யவர்கொண்ட யோகமார்க்கம்
விருப்பமுடன் யானுரைப்பேன் மைந்தாகேளே 143

கேளப்பா மாட மாளிகைதானுண்டு
கெடியான கோயில்குள மாறுமுண்டு
நாளப்பா அஷ்டவித பாக்கியங்கள்
நலமான தருமமது முப்பத்திரெண்டு
சூளப்பா ராசாதி தேவன்போலும்
சுத்தமுள்ள செங்கோலு மரசுமுண்டு
பாளப்பா போகாமல் பாக்கியவானாய்
பாரினிலே சமுசாரி வாழ்க்கையாமே. 144

வாழ்க்கையாங் கைவல்லிய வாழ்க்கையோடும்
வையகத்தில் கோடிதனம் படைத்துமல்லோ
நீழ்க்கமுடன் நற்பதியைக் கொண்டதபன்
நிட்களங்க மானதொரு துதியின்மாண்பன்
சாழ்க்கமுடன் மதியுடைய வாத்மதீரன்
சாங்கமுடன் வாம்பரியி லேறுஞ்சூரன்
ஆழ்க்க ேவ கனத்ததொரு மரபில்மாண்பன்
வழகான கரிகட்டி வாழுவோனே. 145

வாழுவோன் கலைநிலையி லசையாபாகன்
வண்மையுடன் கவிதனிலே மிகுந்தபோதன்
தாழுவோன் பொற்சிவிகை யேறும்வல்லோன்
தண்மையுடன் பூச்சக்ர குடைக்குள் தீபன்
சூழுடனே கட்டியங்கள் தாளத்தோடும்
சுந்தரன்போல் சாரிவரும் புண்ணியகோலன்
ஆழுகடல் மாய்கைதனி லழுந்தும்போகன்
அப்பனே சமுசாரி வாழ்க்கைபாரே 146

பாரேதான் பொற்புடைய கற்புமாதர்
பாங்கான மோகவலை சிக்குந்தீரன்
நேரேதான் இல்லறத்தில் தானிருந்து
நெடிதான வாசையது மிகுத்தகாலன்
சிரேதா னாணயத்தின் பணிதியெல்லாந்
தீர்க்கமுடன் கொண்டதொரு வச்சிரதேகன்
வீரேதான் பரிமளத்தி லழுந்துந்தீரன்
வீறான சமுசாரி வாழ்க்கை தானே 147

தானான வையகத்தில் பிரபுமகன்
தகமையுள்ள சேனாபதித் தலைவனாவான்
கோனான குருக்களுக்குக் கொடுக்குந்தீரன்
குவலயத்தை ஒருகுடையி லாளவல்லோன்

பானான பரிதனக்கு உகந்தராசன்
பாங்கான வஷ்டதிக் குடையபாலன்
வானான வையகத்தில் வாழ்த்தும்போஜன்
வளமான நிதிதனக்கு உடையோன்பாரே 148

பாரேதான் சொம்பொன்னால் மாளிசெய்வோன்
பரிவுடனே நவரத்ன கிரீடம் பெற்றோன்
சீரேதான் சிம்மாசன மேரும்வல்லோன்
சிறப்பான மனுதர்மம் வழுவாதீரன்
போரேதான் யுத்தத்துக் குறியசீலன்
பொங்கமுடன் வாள்முனைக்கு எதிர்க்கும்வல்லோன்
நேரேதான் சமுசாரிக் கானவல்லோன்
நிகரான புலஸ்தியனே யின்னங்கேளே 149

கேளேதான் பாக்கியங்க ளனுபவித்து
கேண்மையுடன் வையகத்தைத் துறந்துமேதான்
நாளேதான் போகாமல் மாய்கைதன்னில்
நலமுடனே சிலகாலம் ஞானங்கொண்டு
பாளேதான் தேகமதை வெறுத்துமல்லோ
பாங்குபெற சின்மயத்தி லிருந்துகொண்டு
சூளேதான் வையகத்தி னாசைவிட்டு
துப்புறவாய் யிருப்பவனே யில்லறத்தானாமே 150

வாதிக்கு ஆசன விதி

ஆமேதான் புலஸ்தியனே அருண்மைந்தாகேள்
அன்பான கண்மணியே இன்னஞ்சொல்வேன்
நாமேதான் சொல்லாம லுந்தனுக்கு
நாட்டிலே யாரேனுஞ் சொல்வாருண்டோ
தாமேதான் சித்தாதி பதினெண்பேர்கள்
தயவுவைத்து வுந்தமக்குச் சொல்வதேது
போமேதான் மெய்ஞ்ஞானம் வீண்போகாமல்
பொங்கமுட னஞ்ஞானம் நீக்குவாயே 151

நீக்கவே யுந்தனுக்கு நீதிசொல்வேன்
நிலையான விசுவாச மருளும்வேண்டும்
போக்கவே அறிவுஜெபம் மிகவேவேண்டும்
பொங்கமுட னாசையின்மை கொள்ளவேண்டும்
தாக்கவே கற்புநிலை அறியவேண்டும்
தண்மையுட னிரக்கமுதல் நண்ணவேண்டும்

தூக்கமுடன் மெய்ஞ்ஞானப் பாலேவேண்டும்
துப்புறவாய் மற்றதெல்லா மகற்றிப்போடே 152

போடவே அகற்றுவது என்னவென்றால்
பொங்கமுடன் பொய்சூது கபடுதந்திரம்
நாடவே சோரபஞ்சங் கபடுதுன்மை
நண்ணாம லிருப்பதுவு மெத்தநன்று
நீடவே பவக்கடலை விட்டகற்றி
நிட்களங்க கர்மமதை நீக்கநன்று
சாடவே இத்தனையு மாகாக்கர்மம்
சண்ணுவது உலகத்தில் தருமங்காணே. 153

காணவே புலஸ்தியனே பொன்மைந்தாகேள்
கருவான யெந்தனுக்கு வுகந்தசீடா
நீணவே வாதியிட மார்க்கஞ்சொல்வேன்
நிலையான சிவபூசைக் குறுதிவல்லோன்
தோணவே பொருளெல்லா மாயவல்லோன்
தோற்றமுடன் பரிபாஷை அறியும்வல்லோன்
பாணமுடன் பதினெண்பேர் பரிபாஷையெல்லாம்
பாரினிலே யறிபவனே வாதியாமே. 154

வாதியாம் பலபலவாம் நூலைக்கண்டு
வன்மையுடன் பலவழியுஞ் செல்லல்வேண்டும்
நீதியாம் நவகோடி ரிடிகள்தானும்
நிலமையுடன் தானுரைத்த நூல்களெல்லாம்
ஆதியுடன் அந்தம்வரைக் காணல்வேண்டும்
அப்பாழு முப்பாழும் பொய்யேயாகா
சோதிமணி நாதாந்த சித்துதாமும்
சொன்னதொரு நூல்களெல்லாம் பொய்யாதன்றே 155

பொய்யாது நூலனைத்து மறியவேண்டும்
பொங்கமுட னாதாரக் கருவைத்தானும்
மெய்யான பெருநூலில் சிறுநூலிலப்பா
விட்டகுறை தொட்டகுறை யறியவேண்டும்
துய்யவே பலபேத சாத்திரவண்ணம்
துப்புரவாய்த் துகளகற்றி யறிதல்வேண்டும்
செய்வினைகள் கருமமது தானகற்றி
செப்பமுடன் சாபமதை தவிர்க்கநன்றே. 156

நன்றான வுடல்பொருளோ டாதியந்தம்
நலமான கருவிகர ணாதியெல்லாம்

குன்றான தேகமென்ற கோட்டைக்குள்ளே
குறிப்பான நரம்புமுதல் ரத்தம்மச்சை
சென்றுமே கலைதனையே நிகழ்த்தியல்லோ
தேற்றமுடன் பஞ்ச பூதங்கள் தன்னை
நின்றுமே நிலைநிறுத்தி வழியுங்கொண்டு
நிற்பவனே யோகியென்ற வாதியாமே. 157

வாதியென்ற நாமமது படைத்தபோது
வளமான நன்னடக்கை யடைதல்வேண்டும்
சோதியென்ற மனோன்மணியை நினைக்கவேண்டும்
தோறாமல் தத்துவத்தை யடைதல்வேண்டும்
நீதியுடன் காயகற்பம் நிலையறிந்து
நிலையான சாத்திரத்தை யறியவேண்டும்
பாதிமதி சடையணிந்த தம்பிரான்போல்
பாருலகில் இருப்பவனே வாதியாமே. 158

ஆமேதா னனாகதத்தை கண்ணலொப்பாய்
அருந்தவத்தி லிருப்பவனே சித்தனாவான்
நாமேதான் சொன்னபடி கர்மகாண்டம்
நலமுடனே தாமறிய புத்திவேண்டும்
வேமேதான் கர்மகாண்ட மறிதல்வேண்டும்
விருப்பமுடன் பவமகற்றி நடக்கல்வேண்டும்
போமேதான் பூவுலகில் நடைகளெல்லாம்
பொங்கமுட னறிபவனே வாதியாமே. 159

வாதியென்ற பேர்களுக்கு மெய்ஞ்ஞானம்வேண்டும்
மார்க்கமுடன் பொய்ஞ்ஞானங் கொள்ளலாகா
நீதியாய் நடக்குகின்ற வாதிகட்கு
நிலையான சாத்திரத்தின் முறையேவேண்டும்
சாதிவழி முறைபாடு தவறித்தானும்
தகமையுடன் நடக்குகின்ற சண்டாளர்க்கு
பாதிமதி சடையணியும் விஷவாக்காலே
பலியாது வொன்றுந்தான் பலியாதன்றே 160

அன்றான வம்மிஷ பதியுள்ளோனாய்
அவனிதனில் கன்னியென்ற ராசிக்கல்லோ
நின்றதொரு கர்க்கடக சிம்மந்தானும்
நேர்மையுள்ள ராசியுட மாண்பருக்கு
குன்றான பருவதம்போல் பலிக்கும்பாரு
குவலயத்தில் மற்றோரு ராசிகட்கே

அன்றெரித்த பரமசிவன் தன்னினாணை
அப்பனே பலிப்பதுவும் உண்மையாமே. 161

உண்மையாய் வாதமது பலித்திட்டாலும்
ஓகோகோ புலஸ்தியனே இன்னஞ்சொல்வேன்
நண்மையாம் நாதாக்கள் கிருபைவேண்டும்
நாதாந்த சித்தொளிவு அருளேவேண்டும்
திண்மையாய் மனோன்மணியாள் சோதிகண்டு
தீர்க்கமுட னாசனத்தி லிருந்துகொண்டு
வண்மையாய்ச் சதாகால மவுனவானாய்
வையகத்தில் வாழ்பவனே புனிதன்பாரே. 162

பாரேதான் வையகத்தி லூமைபோலே
பான்மையுடன் தானிருந்து சுகிதவானாய்
நேரேதான் சகலவிதங் கற்றேனென்றும்
நெடிதான கெருவமதைக் கொள்ளாமற்றான்
சீரேதான் குருவணக்க மனதுவந்து
சிற்பரனை யென்னாளும் மனதிலுன்னி
வேரேதான் மாறான வழியிற்செல்லா
விருப்பமுட னிற்பவனே யோகியாமே. 163

யோகியென்றால் யோகமது சொல்லப்போமோ
வொருவரையும் மதிக்குகின்ற யோகம்வேண்டும்
போகமது கொண்டாலு மிந்திரபோகம்
பொங்கமுடன் யோகத்துக் கீடாமோசொல்
ஆகமென்ற சிவயோக மருண்மைந்தாகேள்
அப்பனே வாய்ப்பதுவு மருமையாகும்
சாகமுடன் சிவயோகம் பூண்டுகொண்டு
சட்டமுட னிருப்பவனே வாதிதானே. 164

தானான வாதிக்கு வயித்தியமும் வேண்டும்
தண்மையுள்ள வயித்தியமும் வாய்க்குமானால்
கோனான குருதனையே மனதிலெண்ணி
கொற்றவனே தரும சிந்தனையுங்கொண்டு
தேனான மணிமந்திர அவுஷதங்கள்
தேர்ந்தெடுத்து கைமுறைகள் மிகவேசெய்து
பானான பராபரியை மனதிலெண்ணி
பட்சமுடன் ரோகமதைத் தீர்ப்பான்காணே. 165

காணவே வாதியவன் வயித்தியஞ்செய்தால்
கனமான ரோகமது பறக்கும்பாரு

தோணவே பிராணாய கலையறிந்து
துப்புரவாய்த் தான்கொடுப்பான் மருந்தின்வேகம்
நாணவே பண்டிதர்கள் நடுங்குவார்கள்
நலமான யோகீஸ்வர் ரென்பார்தானும்
வேணதொரு உபசார மிகநடக்கும்
வித்தகனே வாதியின்றன் வண்மைபாரே **166**

வண்மையாம் நவதாது பாஷாணங்கள்
வளமான லவணவகை இருபத்தைந்தும்
உண்மையாம் உபசாரங்கள் நூற்றிரெண்டுபத்து
ஒகோகோ கற்கவகை முன்னூற்றுசொச்சம்
தண்மையாம் மூலிகைக ளனந்தம்போக்குந்
தாரணியில் கண்டறிந்து சாபந்தீர்த்து
கண்மையாங் கசடகற்றி ரோகந்தீர்த்து
காசினியில் வாழ்பவனே தருமனாமே. **167**

தருமனாஞ் சரக்கினுட பேதாபேதம்
தாரணியில் கண்டறிந்து தெளிவுள்ளானாய்
கருமமெனுங் காண்டநூல் விதியின்மார்க்கம்
கருத்துடனே ரோகமதை நிவர்த்திசெய்து
மருமமென்ற மனதுதனி லொன்றுங்கொள்ளார்
மகத்தான ரோகிக்கு உண்மைவானாய்
திருமுகமுந் தான்மலர்ந்து மருந்தையீய்ந்து
தீர்க்கமுட னிருப்பவனே வாதிதாமோ **168**

தாமான வாதியவன் பொன்னேசெய்தால்
தண்மையுடன் தடமடங்கள் கட்டல்வேண்டும்
ஆமேதான் வாதமது பலித்துதானால்
அவனிதனி லவ்னுமொரு சித்தனைப்போல்
நாமேதா னதிதிபர தேசிகட்கு
நலமுடனே மனுதர்மஞ் செய்யவேண்டும்
கோமேதா னரசனைப்போ லிருந்துகொண்டு
கொற்றவனே தருமமது செய்வார்பாரே. **169**

செய்யவே செம்பொன்னின் வராகன்தன்னை
செப்பவே செயகண்டி சங்கமர்க்கு
துய்யதொரு வஸ்திரங்கள் மிகவுந்தந்து
துப்புரவாய்ப் போஜனமு மிகவளித்து
பையவே பொன்காசு கட்டணமுந்தந்து
பாரினிலே பூசைகளு மர்ச்சனைகள்செய்து

வெய்யவே மனோன்மணிக்குத் தியானஞ்செய்து
விருப்பமுட னிருப்பவனே சுத்தனாமே. 170

சுத்தனா யிருப்பதற்கு கற்பமுண்டு
சூட்சமுடன் வெகுகோடி காலந்தானும்
சித்தனாய் வாய்மூடு மவுனியாக
சீரான வுலகுபதி தனிலிருந்து
சத்திய வாக்குடையவனாய்த் தயாளவானாய்
தாரணியில் கீர்த்திபெற்று வேடம்பூண்டு
புத்தியுள்ள சுந்தரனா யிருந்துமல்லோ
புகழான கீர்த்தியது அடைவார்பாரே. 171

அடையவே முப்பூவைக் காணவேண்டும்
கண்டாலுங் காயுமில்லைப் பூவுமில்லை
சடைபோன்ற ரிடிமுனிவர் சித்தரெல்லாம்
தாரணியில் சதாகால முழன்றுமாண்டார்
படையான நவகோடி திரவியங்கள்
பாருலகில் சுட்டலைந்தோர் கோடாகோடி
நடையிழந்து பதியிழந்து வீடிழந்து
நாட்டிலே மாண்டவர்கள் கோடியாமே. 172

கோடிபேர் மாண்டதுவுங் குற்றமல்ல
கொண்டதொரு மனையாளும் மக்கள்பிள்ளை
வாடியே சீவனத்துக் கிடமில்லாமல்
மண்ணிழந்து மாடிழந்து மாண்டுபோனார்
தேடியதோர் திரவியங்க ளெல்லாந்தோற்று
தெருவீதி சன்னியாசி வேடம்பூண்டு
ஆடியே வையகத்தை மறந்துமேதான்
ஆக்கையுடன் மண்ணிலது மாண்டார்பாரே. 173

பொய்வாதிக்கு ஆசனவிதிகூறல்

பாரேதான் புலத்தியனே வருண்மைந்தாகேள்
பாலகனே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
நேரேதான் சிகாமணியே உந்தனுக்கு
நேர்மையுடன் எந்தன்போல் யார்தான் சொல்வார்
சீரேதா னெந்தனிட பாதசிலா
திரள்கோடி திகழ்கோடி தொந்தங்கோடி
ஆரேதா னுந்தமக்குச் சொல்வாருண்டோ
அப்பனே யாமுமக்குச் சொல்வோம்பாரே 174

சொல்லுவேன் புலஸ்தியனே யுந்தமக்கு
சுத்தமுள்ள பொய்வாதிக் கபடுதந்திரம்
மெல்லவே வாதத்தின் பிரட்டையெல்லாம்
மேன்மையுட னுந்தமுக்கு யானுரைப்பேன்
பல்லறிவு வையாமல் புலஸ்தியாகேள்
புத்தியுள்ள புலஸ்தியனே இன்னஞ்சொல்வேன்
நல்லறிவு கொண்டதொரு ஞானிபோலும்
நாதாந்த சித்தொளிபோல் பேசுவாரே *175*

பேசுவார் வாதத்தின் பேதாபேதம்
பேரான மெய்போன்ற வாதிபோல
காசுபணம் பறிப்பதற்கு யிதவுகூறி
காசினியில் வெகுவேடம் மிகவும்பூண்டு
வீசுபுகழ் திரவியங்க ளதிகந்தேடி
விருப்பமுடன் சீவனத்துக் கிடமேசெய்து
மாசுபுகழ் மெய்ஞ்ஞான வாதிபோல
வையகத்தின் மிகப்பகட்டு செய்வார்பாரே. *176*

செய்யவென்றால் வகையேது துரையேதென்றால்
செயலான பாக்கியமும் மிகவுந்தேட
வையகத்தில் சிறுமாண்ப ரொன்றாய்க்கூடி
வகைகெட்டு பதிகெட்டு வழியுங்கெட்டு
துய்யபுகழ் சாத்திரத்தைப் பாராமற்றான்
துப்புரவாய்க் காப்பேடுங் கடையேடுந்தான்
வெய்யவினைக் காளாகி நூல்பாராமல்
விருப்பமுடன் மனக்கலக்கங் கொண்டிட்டாரே *177*

கொண்டதொரு சிறுபால ரெல்லாங்கூடி
கூட்டமிட்டு வாய்பேசி குளரல்கொண்டு
பண்டிதங்கள் கற்றவர்போல் மிகவாய்ப்பேசி
பரிகாரப் பண்டிதன்போல வியப்புகூறி
கண்டிதமாய்ச் சித்தர்களின் நூலைக்காணார்
கண்டிதமாய்ச் சித்தர்நூல் பிரட்டேயென்று
உண்டமட்டு மேப்பமென்ற கதையைப்போல
உளறினார் பலகோடி மாண்பராமே *178*

மாண்பராம் சித்தர்களின் கருமார்க்கந்தான்
மகத்தான நூல்தனில் யறியாமற்றான்
வீண்பான கதைபேசி நூலைக்காணார்
விண்ணுலகில் கூட்டமிட்டு விருதுபேசி

ஆண்மையில்லா சத்துருமேற் போர்செய்தாற்போல்
அடவான சாத்திரத்தைக் குற்றங்கூறி
சாண்பாம்பை அடிப்பதற்குத் தடிகொண்டாற்போல்
தாரணியில் மாண்பரெல்லாந் தயங்கினாரே 179

தயங்கினார் பலதுறையாம் வேதைமார்க்கம்
தட்டழிந்து கெட்டழிந்து தரணிமீது
மயங்கியே சிவவேடம் மிகவும்பூண்டு
மகத்தான சாத்திரங்கள் கையிற்கொண்டு
பயங்கர மில்லாத மெய்வாதிபோல
பாரினிலே கெம்பீரப் பிரட்டனாக
நயம்படவே மிகவார்த்தை களிப்புற்றேங்க
நலமுடனே மாண்பர்களைப் பகட்டுவாரே 180

பகட்டுவார் செம்புசுத்தி செய்துமல்லோ
பாகமுடன் கவச குண்டலமுமாட்டி
நகமுடனே சன்னியாசி சடையுமாக
நாதாக்கள் போலவொரு வேடம்பூண்டு
அகந்தனிலே வழியாகி உறவுபேசி
அன்பாக சுந்தரனே வாவென்றேதான்
செகமுழுதுஞ் சுத்திவந்த சித்துநானும்
சீர்படநா ளாச்சுதென்று செப்புவாரே 181

செப்புவார் சுந்தரனார் மாண்பர்தன்னை
சிறியதொரு வடிவேலா எந்தன்சீடா
இப்புவியி லுனைப்போலே ஒருவர் தானும்
உத்தமனே கண்டதிலை வையகத்தில்
ஒப்பமுட னுந்தமக்கு ஞானங்கூறி
ஒளிவான வாதமதை உனக்குத்தானும்
எப்படியு முந்தனுக்கே தத்தஞ்செய்வேன்
எழிலான சுந்தரன்மே லாணைதானே 182

சுந்தரனே உந்தனுக்கு இன்றுமட்டும்
சுற்றத்தார் பெற்றோர்கள் தனைப்பிரிந்து
சிந்தனைக ளென்மீதில் மிகவேகூர்ந்து
சிறப்புடனே பின்தொடர்ந்து வருவாயானால்
சொந்தமுட னுந்தமக்கு ஞானவாதம்
சூட்சாதி சூட்சமெல்லாஞ் சொல்வேனென்று
பந்துகளை விட்டொழித்துப் பாவிஞானி
பரதேச சஞ்சாரஞ் செய்யென்பாரே 183

பொய்வாதி யில்லறத்தானை சீடனாக்கி வையகத்தை மிரட்டல்

பாரேதான் சமுசாரி வாழ்க்கையோனை
பட்சமுட னிதவுமொழி மிகவுங்கூறி
நேரேதான் தன்னோடு தேசசாரம்
நேர்மையுடன் சென்றல்லோ சீடனாக்கி
சீரேதான் தங்கமென்ற பாளந்தன்னை
சிறப்புடனே யேமாத்தல் செய்துகொண்டு
தீரேதான் தங்கமதை செம்பதாக்கி
தீர்க்கமுடன் திரவியனைத் தேடுவாரே. *184*

தேடயிலே திரவியவான் றன்னைக்கண்டு
தேசமெல்லாந் திரிந்துவந்த சித்துவென்று
மாட மாளிகைதனிலே பிரவேசித்து
மார்க்கமுடன் மகதேவா நீயுமல்லோ
சாடையிலே உன்ராசி சிங்கமப்பா
சட்டமுடன் வாதமது பலிக்குமென்று
தாடகையாள் பெண்போல வார்த்தைகூறி
சட்டமுடன் சித்தனைப்போல் பசப்புவாரே *185*

பசப்பியே மெய்ஞ்ஞான வாதந்தானும்
பாரினிலே உந்தனுக்குப் பலிக்கும்பாரு
தசமாற்று யேமமது யுந்தமக்கே
தப்பாது பலிக்குமது நிட்சயந்தான்
வசமதுவும் மிகப்படுத்திக் கொண்டேயல்லோ
வண்மையுட னாள்தோறும் போதங்கூறி
நிசமான மொழிபோலே வார்த்தையாடி
நீதியுடன் தானடப்பான் சித்துதாமே. *186*

தாமான சித்துமுனி போலேயல்லோ
தகமையுடன் பொய்யென்ற வாதங்கூறி
சாமான மானதொரு பொய்கைதானும்
சட்டமுடன் சுந்தரற்கு மிகவுஞ்சொல்லி
வேமான மாகவல்லோ உபதேசங்கள்
விருப்பமுட னவர்தமக்கு மிகவுரைத்து
நாமான வாக்கியங்க ளதிதஞ்சொல்லி
நலமான தங்கமென்ற செம்பைத்தானே *187*

செம்பான தங்கமென்ற செம்பையப்பா
திகழ்மைந்தா சுந்தரனார் தன்றமக்கு
கம்பியென்ற தங்கமதைக் கைகொடுத்து
கருணையுட னவர்தமக்கு மசக்கைகூறி

வெம்பியதோர் துரோகங்க ளெந்தனுக்கு
வேலவனே சுந்தரனே செய்யாதப்பா
நம்பியே உந்தனுக்கு முறையுந்தந்தேன்
நலம்பெறவே யெந்தனுக்கு நடந்துகொள்ளே 188

நடந்துமே நீயுமொரு ராசனைப்போல்
நலமான உந்தனுக்கு வாசனாக
தொடந்துமே யெந்தன்மேல் பட்சம்வைத்து
துப்புரவாய்ப் பணிவிடைகள் மிகவுஞ்செய்து
சடந்தனக்கு நோய்வந்து மாண்டுபோனால்
சாங்கமுட னெந்தனுக்கு நீயேசீடன்
அடந்துமே சிலகால மெந்தன்பக்கல்
அப்பனே வேதைமுகம் வாங்கிக்கொள்ளே. 189

கொள்ளவென்றால் சமாதிக்கு யேகுமுன்னே
கொற்றவனே யெந்தனுக்கு முன்னிருந்த
உள்ளபடி கருவிகர ணாதியெல்லாம்
உத்தமனே உந்தமக்கு தத்தஞ்செய்வேன்
எள்ளளவு மிடையூறு நேராதப்பா
எழிலான சுந்தரனே சத்தியஞ்சத்தியம்
விள்ளவே யேமமென்ற வித்தைதன்னை
விருப்பமுடன் யானுரைப்பே னென்பார்பாரே 190

பாரேதான் பொய்வாதி பிரட்டும்போது
பாங்கான சமுசாரி தான்மிரண்டு
நேரேதான் மனோன்மணியாள் கிருபையாலே
நேர்மையுடன் வாதமது லபித்துதென்று
தீரேதான் தன்மனதி லுள்ளடக்கம்
தீர்க்கமுடன் வொருவருக்கும் விள்ளாமற்றான்
பேரேதான் கேட்டாலுங் கூறாமற்றான்
பேருலகில் யேமாந்து போவார்காணே. 191

பொய்வாதிக்கு சமுசாரி பொருள்தந்து ஏமாறல்

காணவே பொய்வாதி யானவன்றான்
கபடான பிரட்டதனை மனதிற்கொண்டு
நீணவே செம்பென்ற பொன்னைத்தானும்
நீதியுடன் கைக்குமெய்யாய்க் காட்டுவன்போல்
தோணவே செம்பதனைப் புடத்திலிட்டு
தோற்றமுடன் தானெடுத்துக் காட்டுவான்பார்

மாணவே தங்கமென்ற செம்புவாடை
மகத்தான தீயதனில் பறக்குந்தானே 192

தானான மித்துருவாஞ் செம்புவாடை
தகமையுள்ள சத்துருவாஞ் சரக்கால்காக்க
கோனான வசுவனியாஞ் சொன்னநீதி
கொற்றவனே புலஸ்தியனே தப்பாவண்ணம்
தேனான செம்பதுவுந் தங்கமாகி
செம்மையென்ற நிறமாகி குங்குமம்போல்
ஆனான தங்கமது மாற்றோபத்து
அடைவுடனே கைக்குமெய்யாக் காட்டுவானே 193

காட்டுவான் தசமாற்றுப் பிறவித்தங்கம்
காசினியோர் தான்மயங்க சூதுமார்க்கம்
நாட்டுருபல் குடிகடிகளையே நலியச்செய்வான்
நாதாந்த சித்துவென்ற பொய்வாதியப்பா
கூட்டுநீ மறுபடியும் திருஷ்டாந்திரந்தான்
கொற்றவனே யெந்தனுக்கு உகந்த தங்கம்
வாட்டமுடன் குருவென்ற யேமச்செம்பை
வண்மையுடன் சீவனத்தை செய்துகொள்ளே. 194

கொள்ளவே சீவனத்துக் கிடமேதென்றால்
கொற்றவனே செம்புசுத்தி போதுமப்பா
விள்ளவே யுந்தனுக்குக் கைபாகத்தை
விருப்பமுடன் தத்தமது செய்வேனென்று
உள்ளபடி மெய்போலே தாமுரைத்து
உத்தமனே குருமுடிக்க வேண்டுமென்று
எள்ளளவு யெந்தனுக்கு நீயுமப்பா
யேற்றமுடன் மனதுவர நடந்துகொள்ளே 195

நடந்துகொண்டா லுந்தனக்கு யெல்லாந்தத்தம்
நலமுடனே உடல்பொருளக ளாவியெல்லாம்
சடமதுவுஞ் சமாதிக்கு சொல்லுமட்டும்
தார்வேந்தா நீயுமல்லோ பெரியசீடன்
திடமுடனே பசப்பான வார்த்தைகூறி
தீர்க்கமுடன் இதவுமிகக் கூறியுந்தான்
மடமதுவுங் கட்டுதற்கு பொருள் தான் வேண்டும்
மகத்தான சீடனென் றுரைத்திட்டாரே 196

பொய்வாதி குருமுடிப்பதற்கு சீடனை திரவியம் வாங்கி மோசஞ் செய்தது

உரைக்கையிலே சமுசாரி சீடனப்பா
ஒகோகோ நாதாக்கள் மகத்துவத்தால்
திரைக்கவே சமுசாரி மனதுவந்து
தீர்க்கமுடன் குருபரனா ரென்றேயெண்ணி
நிரைக்கவே குருமுடிக்க யென்னவேண்டும்
நிகரான குருநாதா கூறவேண்டும்
முரைப்படியே கருவிகர ணாதியெல்லாம்
உத்தமனே முடிப்பதுவுந் திண்ணந்தானே 197

திண்ணமுடன் சீடனவ னுரைக்கும்போது
சிறப்பான புலத்தியனே சொல்லக்கேளும்
எண்ணமுடன் சமாதிக்கு யிடமுந்தேடி
எளிதான மடதடங்கள் கட்டவேண்டும்
வண்ணமுடன் குருமுடிக்க ஆயிரம்பொன்
மகத்தான நற்சீடர் இருக்குமானால்
குண்ணதுபோல் திரவியங்கள் குவிந்துபோகும்
கூறாதே ஒருவருக்கும் ஊமைபாரே 198

பாரேதான் பாரினிலே ஊமைபோலே
பாங்குபெற வொடுக்கமதா இருந்துகொண்டு
நேரேதான் கருமிகளை விட்டகற்றி
நேர்மையுடன் துஷ்டர்களைத் தான்துரத்தி
சீரேதான் குருமுறையை முடித்துமல்லோ
சித்தாதி சித்தர்களுங் காணாமற்றான்
வீரேதான் மலைபோலே தங்கமப்பா
விருப்பமுடன் செய்துகொள்ளு வெளிவிடாதே 199

வெளியான வார்த்தையது மிகவுங்கூறி
விட்டகுறை இருந்ததினா லபித்ததென்று
நெளிவான வாதவித்தை சூதுவித்தை
நேர்மையுட னுந்தனுக்கு லபிக்கலாச்சு
தெளிவான நற்சீஷா உந்தனுக்கு
தேவியாம் மனோன்மணியாள் கடாட்சத்தாலே
வளியான வித்தையது கிடைத்ததென்று
வன்மையுடன் சீடனுக்கு உரைத்தார்தாமே. 200

தாமான பொய்வாதி வுரைக்கும்போது
தகமையுள்ள சமுசாரி மெய்யென்றெண்ணி

சாமான்னிய மானதொரு குருவுதானும்
சற்றேதான் துரோகமது செய்யாரென்று
போமேதான் திரவியங்க ளிருந்துமென்ன
புகழான வாதமது லபித்தாற்போதும்
நாமேதான் திரவியங்க ளனைத்துமல்லோ
நலமாகத் தான்கொடுத்து செய்வோம்யாமே 201

செய்யவே சமுசாரி யானவன்றான்
செப்பமுடன் திரவியங்க ளனைத்துமல்லோ
துய்யமதி யானதொரு பூஷணங்கள்
துப்புரவாய்த் தான்கொடுத்தார் மாண்பர்தாமும்
வையகங்கள் தானறிய குருவாஞ்சித்து
மகத்தான நிதியனைத்துங் கையிற்கொண்டு
வெய்யவே சமுசாரி முகமும்வாட
வேகமுடன் நல்லவர்போல் வாங்குவாரே 202

வாங்குவார் பொய்வாதி யிவர்சமர்த்தை
வையகத்தில் கண்டறிய யெவராலாகும்
தூங்கியே திரியாதே மெய்வாதிபோலே
துப்புரவாய் லோகத்தைப் புரட்டுமாண்பர்
ஏங்கியே சமுசாரி மிகமிரண்டு
எழிலான தனமெல்லா மீவதற்கு
பாங்கயர்போல் பசப்புமொழி மிகவுங்கூறும்
பண்பான வலைதனிலே சிக்குவாரே 203

சமுசாரி ஏமாறல்

சிக்கியே தான்தேடும் தனங்களெல்லாம்
திரளான வீடுமனை மாடனைத்தும்
தக்கவே நாடுவளம் பூமியெல்லாம்
தளராத ஜலநிதி பாஷாணங்கள்
தொக்கபுகழ் சிங்கார மச்சிவீடு
தோறாத நவதான்னிய கோட்டையெல்லாம்
மிக்கவே திரவியங்கள் வேண்டுமென்று
மீறியே பொருளனைத்தும் விற்பார்தானே 204

விற்பாரே விலைகூறி நாணயங்கள்
வீரான ஆணிமுத்து பதக்கம்யாவும்
கற்போன்ற நவரத்ன பூஷணங்கள்
கல்லான வாபரண சொத்துயாவும்

சிற்பரன்போல் பொய்க்குருவை மெய்யென்றெண்ணி
சிதாபாசப் பொருளனைத்தும் தான்மறந்து
உற்பனமாய்த் தான்கொண்ட மனைவிதாலி
ஒருகையுடன் விற்றுமல்லோ கொடுப்பார் தானே 205

தானான பாலர்களின் பூஷணங்கள்
தகமையுள்ள சொத்துக்க ளனைத்துங்கண்டீர்
கோனான குருபரனார் பாட்டன்சொத்து
கூறாத நிதியனைத்தும் விற்றுமல்லோ
தேனான மனோன்மணியாள் கடாட்சம்வேண்டி
தேசத்தில் பொன்னையல்லோ மிகவேதேடி
மானான வையகத்தில் கண்ணியவானாய்
மாட்சியுடன் இருப்பதற்கு நண்ணுவாரே. 206

நண்ணியே சமுசாரி யானபேர்கள்
நாடதனில் தான்தேடும் பொருளையெல்லாம்
எண்ணியே பாராமல் மதியீனத்தால்
எழிலான திரவியத்தை மாறியல்லோ
புண்ணியனார் பொய்வாதி யானபேர்க்கு
புரட்டியே தனமெல்லாம் ஈவார்பாரு
வண்ணமுடன் தனங்கொடுத்து சமுசாரிதானும்
வையகத்தில் பதாதியாய்ப் போவான்பாரே 207

பாரேதான் மனைவிமக்கள் யாவுந்தோற்று
பார்தனிலே கெட்டலைந்தோர் கோடாகோடி
சீரேதான் புத்தியுளான் சொற்கேளாமல்
சீரழிந்து கெட்டவர்கள் மாண்பர்கோடி
நேரேதான் தன்மதியை நினைக்காமற்றான்
நீதிவழி செல்லாமல் கெட்டார்கோடி
ஊரேதான் உறவின்முறை சொற்கேளாமல்
ஓகோகோ கெட்டவர்கள் கோடிதானே 208

கோடியாம் சமுசாரி மாண்பரப்பா
குவலயத்தில் மெத்தவுண்டு கூறப்போமோ
பேடிபோல் மனையிழந்து மாடிழந்து
பேருலகில் கெட்டவர்கள் கோடியுண்டு
நீடியே வையகத்தில் பதாதியாக
நிலைகெட்டு பதிகெட்டோர் கோடியுண்டு
வாடியே மனதேங்கி யேக்கங்கொண்டு
வன்மையுடன் கெட்டவர்கள் கோடிபேரே 209

சமுசாரிக்குப் பொய்வாதி கைகொடுத்தல்

பேரான பொய்வாதி மார்க்கங்கேளு
பேருலகில் சமுசாரி தனத்தையெல்லாம்
சீராகக் கைப்பற்றிக் கொண்டபின்பு
சிறப்புடனே பொய்வாதி யேதுசொல்வார்
கூரான யென்சீடர் மைந்தாகேளு
கொற்றவனே குருமுடிக்க ஆரம்பித்தேன்
சாரான சித்திரையாம் பனிக்காலந்தான்
சார்பான குருமுடிக்க நான்கொண்டேனே 210

கொண்டேனே எந்தனுக்கு உகந்தபாலா
குவலயத்தில் உந்தனுக்கு எல்லாந்தத்தம்
விண்டதொரு பொருள்கொண்ட சீலாகேளும்
விட்டகுறை உந்தனுக்கு முடிந்துதல்லோ
சண்டமா ருதம்போலே செந்தூரங்கள்
தகமையுள்ள பற்பமது நீற்றினங்கள்
கண்டதொரு பொருளெல்லா மிதிலேதோயும்
காணாத கருவியெல்லாங் காணலாமே. 211

குரு சமுசாரிக்கு நாளோட்டல்

காணலாஞ் சித்திரையாம் பருவத்துள்ளே
கடியதொரு சரக்கு மித்துருவுதானும்
பூணலாஞ் சத்துரு மித்துருவுபோக்கி
புகழான யேமமதைக் காணலாகும்
வேணதொரு சின்மயத்தின் பிரகாசத்தால்
விட்டகுறை உந்தனுக்கு லபிக்கும்பாரு
தோணவே சரக்கனைத்தும் உனக்குதோன்றும்
தொல்லுலகில் வாதியெல்லாம் மயங்குவாரே 212

மயங்குவா ருனைக்கண்ட வாதியெல்லாம்
மானிலத்தி லிவர்போலுஞ் சித்துமுண்டோ
தியங்கியே யுன்பாதங் கிட்டுமோசொல்
தீரமுடன் கிட்டுவது மரிதென்பார்கள்
பயமுடன் யுந்தனைத்தான் தொழுதுபோற்றி
பராபரனே ரட்சிக்கு மெந்தன்தேவா
வயங்கமுடன் வாதவித்தைக் கொண்டபூபா
வையகத்தில் கண்டதில்லை என்பார்தாமே. 213

தாமான குருபற்ப முந்தனுக்கு
தகமையுடன் வாய்த்துதென்று பிரமைகொள்வார்
கோமான்போலுந்தனையும் மதித்துமல்லோ
குவலயத்தி லுன்பாதம் தொழுவார்பாரு
சிமான்க ளிவ்வுலகி லிருந்துமென்ன
சீரான வாதமது கண்டாரோசொல்
ஆமான மாகவல்லோ யுமைமதித்து
அவனிதனில் சற்குருவா மென்பார்காணே 214

குருவான குருமுடிக்கும் கோலாகலன்
குவலயத்தி லுனைப்போல வேறுண்டோசொல்
தருவான குருவென்று எண்ணியல்லோ
தாரணியி லுமையெடுப்பார் கோடிமாண்பர்
சருவமுடன் நயம்படவே மொழிகள்பேசி
சதுராக மோசமது செய்வார்பாரு
கெருவமது மிகப்படைத்த கருமிதானும்
கிட்டுறவாய் மிகவுறவு பேசுவானே 215

பேசுவான் என்றுமே மதியங்கூறி
பேரான பிரட்டுமொழி மிகவுஞ்சொல்லி
ஆசுகவி புலவர்மொழி பொய்யேயாகும்
அப்பனே என்மொழியும் பொய்யாதப்பா
வீசுபுக ழிந்திரனு முனக்கீடுண்டோ
விட்டகுறை இருந்ததனா லபித்ததென்று
பூசுமொழி மிகவுரைத்துப் பொய்யாம்வாதி
புகழ்ச்சியுடன் மிகமருந்து முடித்தான்பாரே 216

முடித்தானே சமுசாரி மயங்கவென்று
மூதுலகில் பொய்வாதி செய்தசேதி
கடிப்பான பாஷாணம் முடித்தேனென்றும்
கடிதான செம்புவெள்ளி யாகுமென்றான்
துடிப்புடனே கெந்தகத்தைத் தயிலஞ்செய்தேன்
துப்புரவாய் நவலோகம் பழுக்குமென்றான்
நடுப்படையில் வில்லாணி யற்றாற்போல
நாயகனே தயிலமது முடிந்துபோச்சே 217

போச்சென்ற தயிலமது போனாலுந்தான்
பொங்கமுடன் லிங்கமது மெழுகுபாரு
நீச்சுடைய கெந்தகமு மிதற்கீடுண்டோ
நிலையாணி மாற்றதுவும் எட்டேகாலாம்

ஆச்சரிய முள்ளதொரு வாதவித்தை
ஆர்காண்பா ருனைப்போலே காண்பாருண்டோ
பாச்சலுடன் நவலோகம் பழுக்கும்பாரு
பாங்கான வித்தையது குருவுமாமே 218

வித்தையிலே குருவித்தை லிங்கவித்தை
விண்ணுலகிற் காண்பதுவு மரிதேயாகும்
சித்தர்முனி காணார்க ளிந்தவேதை
சிறப்புடனே நீர்பிழைக்க யாமுரைத்தோம்
சத்துகளு மிகச்சேர்ந்த வித்தையுண்டு
சாதுக்க ளனேகம்பேர் செய்வார்பாரு
புத்தியுள்ள பாலருக்கு இந்தவித்தை
பூவுலகில் கிடைப்பதுவும் உறுதியாமே 219

உறுதியா மின்னம்வெகு வித்தையுண்டு
உலகமதில் யாமுடிக்க நாளுமில்லை
நிறுதியுடன் கைகண்ட முறைகள்யாவும்
நீதியுட னுந்தனுக்கு செயநீர்செய்து
பரிதியுடன் வைப்பதற்கு விதியுஞ்சொன்னேன்
பான்மையுடன் சரக்கெல்லா முடிப்பாய்நீயும்
சுறுதியுடன் சாத்திரங்கள் கையில்தந்தேன்
சுட்டலைந்து போகாமல் பிழைக்கத்தானே 220

தானான குருபற்பஞ் சொல்லிவிட்டேன்
தாக்கான நலலோகம் பழுக்கவென்று
கோனான எனதையர் கடாட்சத்தாலே
கொற்றவனே யுந்தனுக்கு யெல்லாஞ்சொன்னேன்
பானான பராபரியை மனதிலெண்ண
பாலிப்பாள் நாள்தோறும் நிர்த்தஞ்செய்வாள்
வேனான மிடியதுவும் நீங்கியல்லோ
வெகுகாலம் உலகினிலே வாழ்குவீரே 221

வாழ்கவென்று பொருள்பறித்து மயக்கங்கூறி
வண்மையுள் பொய்வாதி யிதவுசொல்லி
நீழ்கவே தந்திரங்கள் மிகவுரைத்து
நிலையான பதியைவிட்டு தனமுங்கொண்டு
தாழ்கவே சமுசாரி யேங்கிநிற்க
தாட்சியில்லா மனவுறுதி கொண்டுமல்லோ
வாழ்கவென்று மோசமது செய்துகொண்டு
வனமேகி யோடிடுவான் வாதிதானே 222

தானான பொய்வாதி யோடும்போது
தன்மையுள்ள சம்சாரித் தலைமேற்கையை
கோனான குருதானும் பிரட்டனல்லோ
கொடியதோர் சண்டாளன் மோசஞ்செய்தான்
வேனான வாதவித்தை சூதவித்தை
வெகுபேர்கள் கெட்டார்க ளிந்தமார்க்கம்
பானான பரதேசி குருக்கள்மாரை
பாருலகில் நம்பவுந்தான் நம்பொண்ணாதே 223

அகஸ்தியர் மலைமிலிருக்கும் அதிசயத்தை புலஸ்தியர்க்குக் கூறல்

ஒண்ணாது இன்னமொரு மார்க்கங்கேளு
ஒகோகோ நாதாக்கள் கூறும்வண்ணம்
கண்ணாக லோகமதி லதிசயங்கள் கூறும்வண்ணம்
கண்டதில்லை ஒருவருந்தான் விண்டதில்லை
வண்ணமுள்ள புலஸ்தியனே இன்னஞ்சொல்வேன்
வலிமையுள்ள நாதாக்க ளதிசயங்கள்
திண்ணமுடன் எந்தனது மலையிலப்பா
திரளான அதிசயங்கள் மெத்தவுண்டே 224

மெத்தவுண்டு அதிசயங்கள் புலஸ்தியாகேள்
மேன்மையுள்ள ரிஷிமுனிவர் யாருங்காணார்
செத்தசவம் மலைமீதிற் சென்றுபோனால்
திரும்பியே வருவதற்கு ஐயமில்லை
புத்தியுள்ள ரிஷிமுனிவ ரனேகருண்டு
புகழான கெடிஸ்தலமாஞ் சிகரமீதில்
சத்தியங்கள் தவறாத நாதர்கூட்டம்
சட்டமுடன் வீற்றிருப்பா ரங்கேதானே 225

தானாக மானிலத்தில் செத்தோர்தம்மை
தாரணியை விட்டுமல்லோ மலையிற்சென்றால்
தேனான குருமூலி கொண்டுசித்தர்
தேவிமனோன் மணியாளை தனைநினைந்து
மானான விதிவிலக்கு தன்னைநீக்கி
மகத்தான நசியமது செய்வார்பாரு
பானான பிரேதமது உயிருண்டாகி
பார்தனிலே மறுபடியும் பிழைக்குந்தானே 226

பிழைக்கவே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
பேரான மலைதனிலே நெல்லியுண்டு

முழக்கமுடன் கதண்டுகளு மங்கேயுண்டு
மூளாது கடித்தாலும் விஷமிரங்கா
தழையதுவுந் தானில்லை மரத்திலப்பா
தன்மையுள்ள காயதுவும் கசப்போடுமெத்த
இமைபோன்ற நெல்லியது கற்பங்கொண்டால்
இணையான நரைதிரையு மற்றுப்போமே 227

போமேதான் காயாதி கற்பந்தானும்
பொங்கமுடன் காயத்துக் குறுதியாச்சு
நாமேதான் சொன்னபடி மண்டலந்தான்
நாயகனே நெல்லியது தானுங்கொண்டால்
தாமேனி காயமது வண்டுபோலாம்
தாரணியில் வெகுகால மிருக்கலாகும்
வேமேதான் விண்ணாளர் கண்டதில்லை
வெளியமயக்க மானதொரு கற்பந்தானே 228

தானான வெகுகோடி கற்பமப்பா
தாரணியில் சித்தர்முனி யாருங்காணார்
கோனான வசுவனியாந் தேவர்தானும்
கொற்றவனார் கண்டதொரு நெல்லியாச்சே
தேனான நெல்லிதனைப் புலஸ்தியாகேள்
செப்பினே னுந்தனுக்காய் இரக்கம்வைத்தும்
மேனான மனோன்மணியாள் கிருபையாலே
மொழிந்திட்டேன் உந்தனுக்காய் கற்பந்தானே 229

கற்பந்தா னிருப்பதுவும் யாருங்காணார்
கைலாச சட்டமுனி கண்டதில்லை
அற்பமென்று நினையாதே நெல்லிகற்பம்
அன்புடனே யானுரைத்தே னிருக்கும்தானம்
சொற்பழுது வாராது துய்யபாலா
தொல்லுலகில் மாணாக்கள் கண்டதில்லை
விற்பிடித்த மன்னர்களும் மலைமேற்சென்றால்
விட்டகுறை இருந்தால்தான் லபிக்குங்காணே 230

அகத்தியர் மலையில் சுப்பிரமண்யர் தேவஸ்தானம் கண்டது

காணவென்றா லுந்தனுக்குத் தடமுஞ்சொல்வேன்
கருவான மலைதனிலே செல்வதற்கு
பூணவே மலையடியாம் வாரந்தன்னில்
புகழான சுப்பிரமண்ணியர் கோயிலுண்டு

வேணவே கோபுரமாம் வாசல்பக்கம்
வேகமுடன் மகிடாவி சூரனப்பா
நீணவே தேவதா ஸ்தானந்தன்னில்
நீதியுடன் கொலுவிருப்பான் வீரன்றானே 231

வீரனாங் கொலுமேடை தனையகற்றி
விருப்பமுடன் மேற்புறத்தைச் சென்றபோது
சூரனாம் பத்மாதி சூரனப்பா
துப்புரவாய் மேற்காவல் தானிருப்பான்
தீரனாம் வடபுரத்தைச் சென்றபோது
தீர்க்கமுடன் பத்திரகாளி காவலுண்டு
மாரனுந் தென்புறத்தில் காவலுண்டு
மார்க்கமுடன் தாமிருப்பார் சுத்திபாரே 232

பாரேதான் கோபுரமாய் வாசல்விட்டு
பதிகடந்து நதிகடந்து பார்க்கும்போது
சேரேதான் குத்துக்கால் தோற்றம்பாரு
சிறப்பான வழிதடமுங் காணலாகும்
நீரேதான் வழிதடமுங் கண்டபோது
நிலையாழி கோபுரமும் மதிலுந்தோன்றும்
சேரேதான் சித்துமுனி யாசீர்மந்தான்
சிறப்பான உட்கோட்டை ஒன்றுஉண்டே 233

உண்டான கோட்டையிலே சுனைதானுண்டு
உத்தமனே உதகமென்ற மலைதானுண்டு
கண்டவர்க ளாருமில்லை வையந்தன்னில்
காசினியில் சித்துமுனி காணலாகும்
பண்டுடைய கிருஷ்ணாவ தாரனங்கே
பாலகனார் வீற்றிருக்கும் பாறையுண்டு
திண்ணமுடன் புலஸ்தியனே செல்வதற்கு
தீர்க்கமுடன் தந்திரங்கள் சொல்வேன்தானே 234

அகஸ்தியர் தன்பாட்டனார் மலைபெருமை கூறல்

தானான புலஸ்தியனே மைந்தாகேளு
சதுரான கோபுரமாம் வாசல்தன்னில்
பானான படியேழு அடிவாரத்தில்
பாங்கான செப்போடு கண்டிருக்கும்
கோனான யென்குருவாம் பாட்டன்தானும்
கொற்றவனே துவாபரமாம் யுகத்திலப்பா

மானான மலையினது மகுத்துவங்கள்
மன்னவனே எழுதிருக்கக் காணலாமே 235

காணவே சுனையருகே மேல்வாரத்தில்
கருவான ஞானாமிர்தத் தடாகமொன்று
பூணவே தடாகமது சித்தர்பொய்கை
புகழான கங்கைநதி இதற்கீடல்ல
தோணவே படிதோறும் ரிஷிதானப்பா
தோற்றமுடன் யாகங்கள் செய்திருப்பார்
வேணதொரு தவசிகளோ ரிஷிகள்கோடி
விருப்பமுடன் படியோரங் காவல்தானே 236

காவலாம் ஞாலமென்ற தடாகந்தன்னில்
கைலாய மேருகிரி தவசியப்பா
போவதுவும் வருவதுவும் மெத்தவுண்டு
பொங்கமுடன் தெரிசனையுங் கிட்டாதங்கே
ஆவலுடன் விட்டகுறை இருந்துமல்லோ
அங்ஙனவே சென்றவர்க்குப் பதவிகிட்டும்
சாவதுவுந் தெரியாத கருமிகட்கு
சட்டமுடன் தரிசனையுங் கிட்டாதன்றே 237

அன்றான அருளதுவு மிருந்துதானால்
அங்ஙனவே வழிதடமுந் தோன்றும்பாரு
குன்றான மகமேரு எதிரேநிற்கும்
கூறான கருமிகட்குச் சற்றுந்தோணா
சென்றவர்க ளனேகம்பேர் தடாகங்கண்டு
திடுக்கிட்டு மெய்மறந்து தனைமறந்தார்
வென்றிடவே ரிஷியாருந் தானும்பார்த்து
விட்டகுறை இருந்திதினா லெழுப்பினாரே

எழுப்பினதோர் சாதுக்கள் மெத்தவுண்டு
எழிலான தவரிஷிகள் வலுமைமெத்த
பழுதுபடாத் திருமேனிக் காவலோர்கள்
பண்புடனே ஞானமென்ற தாடகந்தன்னில்
தொழுதுமே ஸ்நானமது மிகவுஞ்செய்து
தோற்றாமல் ஞானமென்ற சாகரத்தை
விழுதுடைய வாலினது வேரைப்போல
வித்தகரும் மிகச்சிறந்து பேர்கொண்டாரே 239

சாதுக்கள் ரிஷியாருக்கு அடிமையானது

கொண்டாரே சாதுக்கள் ரிஷியார்பாதம்
கோலமுடன் ஞானமென்ற கடல்போதத்தை
தொண்டுமிக செய்துமல்லோ சாதுதானும்
தோறாம லுபதேசம் பெற்றுமேதான்
வண்டமிழாம் ஞானமொழி பாசுரங்கள்
வல்லமையாய்த் தானுணர்ந்து கலைகளோதி
அண்டர்முனி தேவரிஷி போலேயல்லோ
அவனியிலே சித்துமுனி யானார்பாரே 240

ஆனாரே புலஸ்தியரே இன்னஞ்சொல்வேன்
அன்புடனே நீசெல்க தடமுஞ்சொல்வேன்
கோனான மகிடாவி சூரன்றன்னை
கொப்பனவே நீவணங்கி வளப்பங்கேட்டால்
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
தெரிவிப்பா னுந்தனுக்குத் தடமுங்காண
பானான தேவரிஷி உந்தனுக்கு
பகருவான் நல்லவழி சொல்வான்பாரே 241

சொல்லவென்றால் நாவேதுப் பாவுமேது
தோறாத தேவதா தலத்திநேர்மை
வெல்லவே காவலர்பேர் உத்தாரத்தால்
வீரான அதிசயங்கள் காணலாகும்
புல்லவே குத்துக்கல் அருகிற்சென்றால்
புகழான மண்டபந்தா னொன்றுதோன்றும்
நல்லதொரு மண்டபத்தைக் கிட்டிநின்றால்
நாதாந்த செகவொளிவுந் தோற்றுங்காணே 242

அகத்தியர் மலைமில் தட்சணாமூர்த்தி திருமந்திர நூலைப் புலத்தியர் கண்டது

தோற்றவே செகஜோதி சமாதிமுன்னே
தோறாத சாத்திரங்கள் அனேகமுண்டு
ஆற்றவே திருமந்திர நூல்தானுண்டு
அப்பனே தெரிசித்தா லுந்தனுக்கு
கூற்றனெனுங் காலனவ னுனக்கீடுண்டோ
குவலயத்தி லன்நூல்போ லொருநூலுண்டோ
தேற்றமுள்ள நூலதுவை சமாதிநோக்கி
தெளிவுடனே கேட்டாலே தருவார்தானே 243

தருவாரே குருநூலாதம் பெருநூலப்பா
தண்மையுள்ள தட்சணாயன் மூர்த்திநூலை
குருவான எனதையர் சொன்னநூலாம்
குவலயத்தில் அசுவனியாம் தேவர் தாமும்
பெருநூலாங் காவியமா யிரத்தைநூரும்
பேரான லோக வதிசயங்களெல்லாம்
சிறுநூலாம் ஒருநூலாய்த் திரட்டியல்லோ
சித்தருக்கா மென்றுசொல்லி வைத்தார்தாமே 244

தாமான சாஸ்திரத்தை யுந்தமக்குத்
தப்பாமல் கொடுப்பதற்கு ஐயமில்லை
பூமானா மசுவனியாந் தேவர்வாக்கு
பூதலத்தில் பொய்யாது மெய்யேயாகும்
சீமானே புலஸ்தியனே அப்பாநீயும
சிற்றறிவாற் பொருளுணர்ந்து கேட்பீரானால்
நாமேதா னுரைத்தப்படி யுந்தமக்கு
நலமாக நூலதுவுங் கிட்டுந்தானே. 245

கிட்டுமே நூலதுவு முந்தனுக்கு
கிருபையது மேல்நோக்கி வருள் தான்கொள்ளும்
சட்டமுடன் நூலாலே காயகற்பம்
தாரணியி லெளிதாகக் காணலாகும்
வட்டமுடன் நூலதனை வாங்குதற்கு
வளமுடனே பதாம்புயத்தைத் தேடுவாய்நீ
திட்டமுடன் சமாதிமுகம் மேற்பாகத்தில்
தீர்க்கமுடன் அசரீரி காணலாமே 246

புலஸ்தியர் அசுவனி சமாதிகண்டது

காணவே நாதாந்த சித்துதாமும்
கனமான சமாதியது இருப்பார்பாரு
தோணவே வசுவனியாந் தேவர்தானும்
தோற்றமுடன் சமாதியது வார்த்தைசொல்வார்
நீணவே வார்த்தை உபதேசங்கேட்டு
நீதியுடன் உந்தன்மேல் பட்சம்வைத்து
வேணதொரு இதிகாச வித்தையெல்லாம்
விருப்பமுட னுந்தமக்கு வருள்செய்வாரே 247

செய்வாரே புலஸ்தியனே மைந்தாகேளு
செப்புவா ருலகிலுள்ள மகிமையெல்லாம்

உய்யவே யசுவனியின் கடாட்சத்தாலே
உத்தமனே உந்தமக்கு யெல்லாஞ்சித்தி
பையவே அவருடைய சமாதிகண்டு
பாங்கான பீடமதில் நின்றாயாகில்
உய்யவே சீஷவர்க்க மனேகம்பேர்கள்
உத்தமனே உபதேசம் புரிவார்பாரே 248

அகத்தியர் புலத்தியருக்கு புஜண்டர் ஆனந்த கற்பங்கூறல்

பாரேதா னின்னமொரு வயணஞ்சொல்வேன்
பாங்கான புலத்தியனே பண்பாய்க்கேளு
நேரேதா வென்குருவா மசுவனியாந்தேவர்
நேர்மையுட னெந்தனுக்குச் சொன்னமார்க்கம்
தீரேதான் திரேதாயி னுகத்திலப்பா
தீர்க்கமுடன் புஜண்டரவர் கொண்டகற்பம்
வீரேதான் கற்பமது யேதென்றாக்கால்
வித்தகனே சொல்லுகிறேன் வினவிக்கேளே 249

கேளப்பா கோரக்கர் மூலிதானும்
கெடியான தும்பலென்ற பூண்டுதானும்
ஆளப்பா நிழல்வணங்கி யென்றமூலி
அப்பனே தொட்டாலும் சிணிங்கியோடும்
மாளப்பா தும்பையென்ற மூலியோடும்
மகத்தான சிரியானி னங்கையோடும்
சூளப்பா திகைப்பூடு மூலியோடும்
சுந்தரனே மலைதாங்கித் தானுங்கூட்டே 250

கூட்டவே மலைவேம்பு நிலவேம்புதானும்
குணமான கருவேம்பு நூல்வேம்புதானும்
நாட்டமுடன் கோரையது ரெண்டுங்கூட்டு
நலமான கௌதாரி ரெண்டுஞ்சேரு
தேட்டமுடன் தும்பையது ரெண்டுங்கூட்டு
தெளிவான விளாவதுவும் ரெண்டுஞ்சேரு
வாட்டமுடன் பசளையது ரெண்டுஞ்சேரு
வளமான முருக்கையது ரெண்டுந்தானே 251

தானான முருக்கையுடன் வேலிமூன்று
தாக்கான சாரையது ரெண்டுஞ்சேரு
தேனான சூரையது ரெண்டுங்கூட்டு
தெளிவான மணியதுவும் பஞ்சமாகும்

கோனான காளியது ரெண்டதாகும்
குருவான கண்ணியது பஞ்சமாகும்
மானான நங்கையது மூன்றுமாகும்
மகத்தான ஆவாரை யைந்துங்கூட்டே 252

கூட்டவே மத்தையது மூன்றுமாகும்
குணமான கிலிப்பையது ரெண்டுமாகும்
நீட்ட முடன் வந்தியது ரெண்டுமாகும்
நிட்களங்க மானதொரு கரந்தைரெண்டு
கூட்டமுட னலரியது ரெண்டுஞ்சேரு
குணமான வகத்தியது பஞ்சயமாகும்
வாட்டமுடன் நந்தியதுரெண்டதாகும்
வளமான வேளையது நாலுமாச்சே 253

ஆச்சப்பா கள்ளியது யெட்டுமாகும்
வழகான முள்ளியது நாலதாகும்
பாச்சலென்ற கூந்தலது மூன்றுமாகும்
பாங்கான தாழையது மூன்றுமாகும்
வீச்சலென்ற தகரையது ரெண்டுமாகும்
விசையான தாமரையு மைந்துமாகும்
மாச்சலுடன் தொட்டியது ரெண்டதாகும்
மகத்தான மல்லியது தசமுமாமே 254

ஆமேதான் வகைவகைக்கு ரெண்டதாகும்
அப்பனே முத்தியதோர் தழைகள்கொண்டு
நாமேதான் சொன்னபடி வருண்மைந்தாகேள்
நயமுடனே ரவிதனிலே காயப்போடு
போமேதான் கல்லுரலில் போட்டிடித்து
பொங்கமுடன் சூரணமாய்ச் செய்துகொண்டு
வேமேதான் கடைசரக்கை வியம்பக்கேளு
வித்தகனே புலத்தியனே இன்னங்காணே 255

கற்பவகை

காணவே புலத்தியனே மைந்தாகேளு
கருவான கற்பத்துக் குறுதிசொல்வேன்
தோணவே சுக்கதுவும் ஒன்றேயாகும்
துகளான மிளகதுவும் ரெண்டேயாகும்
நீணவே விளங்கமது வொன்றேயாகும்
நெடிதான மூலமது வொன்றேயாகும்

மாணவே அரத்தையது வொன்றேயாகும்
மகத்தான ரோசனையு மொன்றுமாமே 256

ஒன்றான பூமி சர்க்கரைக்கிழங்கு
உத்தமனே பரங்கியென்ற பட்டைதானும்
நன்றான லவங்கமுடன் லவங்கப்பட்டை
நலமான ஜாதிக்காய் ஜாதிபத்திரி
குன்றான குராசானி யோமந்தானும்
கூரான வால்மிளகு வோமமோடு
தன்றான வசம்புடனே மிளகுதாளி
தாக்கான கச்சோலம் அதிவிடையந்தானே 257

தானான தான்றிக்காய் நெல்லிதானும்
தாக்கான கொடிவேலி கடுக்காய்ப்பூவும்
கோனான வால்மிளகு யேலங்கூட்டு
கொடிதான கறுஞ்சீரகம் காட்டுச்சீரம்
பானான தேசாவரம் தக்கோலந்தான்
பாங்கான பேரறத்தை மாசிக்காயும்
மானான சரக்கெல்லாம் பலந்தான்காலாய்
மார்க்கமுடன் சூரணமாய் செய்துகொள்ளே 258

கொள்ளவே யக்கினியில் வாட்டிமைந்தா
கொடிதான சூரணத்தை செய்துகொண்டு
மெள்ளவே முன்செய்த சூரணத்தில்
மேன்மையுடன் தான்கலந்து எடுத்துமைந்தா
விள்ளவே கோரக்கர் மூலிதன்னால்
விருப்பமுடன் கியாழமது செய்துகொண்டு
தள்ளவே ஆவின்பால் தானுஞ்சேர்த்து
தளராமல் சரக்கையெல்லாங் கலந்துகொள்ளே 259

கலந்துமே சூரணத்துக் கிடைதான்ரெட்டி
கலக்கமில்லா சீனியது தான்கலந்து
சலந்திரள பாகுபதா மாகுமட்டும்
தாக்கான ஆவின்நெய் நாலுக்கொன்று
மலந்ததொரு சிற்றேனும் நாலுக்கொன்று
மகத்தான மெழுகுபதந் தன்னிலாட்டி
அலந்தசெந் தாமரைபோன்ற குங்குமப்பூ
அப்பனே பலமதுவுந் தானுங்கூட்டே 260

கூட்டவே வாடையென்ற கஸ்தூரியப்பா

குணமான கோரோஜனந் தானுஞ்சேரு
வாட்டமுடன் வகைவகைக்குப் பலங்காலாக
வளமுடனே தான்சேர்த்து மைந்தாகேளு
நீட்டமுடன் பச்சையென்ற பூரந்தானும்
நீதியுடன் பலமதுவுங் காலதாகும்
தாட்டிகமாய்த் தான்கூட்டி வாசனையுங்கூட்டி
தப்பாமல் தாளிதனை இறக்கிடாயே 261

இறக்கியே வானந்த கற்பந்தன்னை
எழிலாகக் கணபதிக்கும் பூசைசெய்து
சிறக்கவே சோடசமாம் பூசைதானும்
சீருடனே மனோன்மணியைத் தொழுதுபோற்றி
உறக்கமது வாராம லுண்மைமைந்தா
உத்தமனே யசுவனியாந் தேவர்தம்மை
திறமுடனே யவர்பாதந் தான்வணங்கி
தீர்க்கமுடன் பூசைமுகம் நிற்பீர்தானே 262

பூசிக்குங் காலமதி லசுவனியாந்தேவர்
புலஸ்தியனே உந்தமக்கு நிர்த்தஞ்செய்யார்
மாசிபடாத் திருமேனிக் காவலோனே
மகிமைகளு முந்தமக்கு வோதுவார்பார்
ஆசுகவி பாவாணர் செய்தமார்க்கம்
அப்பனே உந்தமக்கு வாய்க்கும்பாரு
வீசுபுகழ் சித்துமுனி ரிடிகள்தேவர்
விண்ணாடர் மண்ணாடர் போற்றுவாரே 263

போற்றியே பூசைமுகம் முடிந்தபின்பு
பொங்கமுடன் கற்பமதை எடுத்துமைந்தா
ஆற்றலுடன் சிவயோகந் தன்னிற்சென்று
அப்பனே சமாதியென்ற பீடந்தன்னில்
நாற்றிசையில் சித்துமுனி பிர்மித்தேங்க
நலமான கற்பமதை எடுத்துபாலா
கூற்றனுக்கு இடமதுவும் நேராமற்றான்
கொற்றவனே யோகமதில் களஞ்சிகொள்ளே 264

களஞ்சியென்ற கற்பமதைக் கொள்ளும்போது
கைலாச முடிவரைக்குங் காணலாகும்
தளர்ந்ததொரு மேனிதனில் கற்பமூர
தாக்கான சின்மயத்தி லறிவுநின்று
வளர்ந்துமே பஞ்சபூத மொன்றேயாகி

வாகான சிகரமது மேலேயேகி
குளம்போன்ற சின்மயத்தில் சிகாரமிஞ்சி
கொடியவா றாதாரங் காணலாச்சே 265

காணவே வாறாதா ரத்தையப்பா
கருவான கோட்டைவழி வாசல்நின்று
பூணவே யனாகதத்தி லிருந்துகொண்டு
புகழான வாசிநிலை காணலாகும்
தோணவே வனாகதத்தை மாட்டியல்லோ
துப்புரவாய் சுவாதிட்டான மறியலாகும்
வேணவே கலையிரெண்டு மாறிக்கொண்டு
வேகமுடன் குதிரையென்ற வாசிபூட்டே 266

பூட்டவே கேசரதத்தின் மேலேநோக்கி
புகழான வாசியைநீ பூட்டுபூட்டு
நீட்டவே மேல்நின்ற வாறாதாரம்
நிட்களங்க மாகியல்லோ வொடுங்கும்பாரு
வாட்டமுடன் சுவாசமது மேல்நோக்காது
வளமுடனே அங்கென்று வழுத்தும்போது
தாட்டிகமாய் பிணைமாறி கணையும்மாறி
தன்மையுடன் பதினாறு கலையில்தாக்கே 267

தாக்கவே சோடசமாங் களையில்நின்று
தன்மையுடன் வங்கென்று வோதும்போது
நோக்கமுட னிதழதுவு முப்பத்திரெண்டு
நுணுக்கமுடன் கும்பத்தி லிருந்துகொண்டு
சீக்கிரமாய் மலர்ந்ததொரு இதழில்நின்று
சீருடனே சிதாபாச கலையில்நின்று
தூக்கமது வாராமல் துய்யபாலா
துப்புரவாய் மவுனநிலை சாதிப்பாயே 268

சாதிக்க வட்டாங்க யோகந்தன்னில்
சாங்கமுடன் கலைபீடந் தமர்பீடமாகும்
பேதிக்க சமாதியது பீடந்தன்னில்
பேரான அமுதநிலை நின்றுகொண்டு
வாதிக்க தன்னுக்குள் ளாராதாரம்
வளமுடனே கலைமாறி யோகஞ்செய்யில்
சாதிக்க சின்மயத்தி னாட்டபாட்டம்
சதுரான கேசரத்தின் மகிமைபாரே 269

கற்பமுண்ண விதி

பாரேதான் புலத்தியனே மைந்தாகேளு
பாங்குடனே யசுவனியாஞ் சொன்னநீதி
நேரேதான் கற்பமது கொண்டுமென்ன
நெடிதான யோகமது செய்துமென்ன
தீரேதா னனாகதத்தி லிருந்துமென்ன
தீர்க்கமுடன் கும்பகத்தை யடைந்துமென்ன
தேரேதான் சுவாதிட்டானம் பெற்றுமென்ன
தேற்றமுடன் பூதமதை ஒடுக்கார்தானே 270

தானான பூதமதை ஒடுக்கியென்ன
தாக்கான கமலமது கொண்டுமென்ன
சோனான இதழதுவும் பெற்றுமென்ன
கோசரத்தின் பாசரங்கள் பெற்றுமென்ன
தேனான மவுனநிலை அறிந்துமென்ன
தேஜொளிவின் பதாம்புயத்தைக் கண்டுமென்
பானான பராபரத்தின் பதாம்புயத்தைப்
பாருலகில் கண்டவர்க ளில்லைகாணே 271

காணவே தத்துவத்தில் வல்லோர்தம்மை
காசினியில் வெகுமாண்பர் சித்தர்கூடி
பூணவே கற்பமது பூண்டுகொண்டு
புகழான லாகிரியால் வஸ்துபூண்டு
தோணவே மவுனநிலை யறிந்தோர்போலும்
தோறாமல் வஸ்துவென்ற மயக்குந்தன்னால்
வேணபடி வாசிதனை நடத்துவோன்போல்
வேகமுடன் வையகத்தில் மிரட்டுவாரே 272

மிரட்டுவார் கற்பமென்ற குளிகைபூண்டு
மிக்கான நோக்கர்வித்தை காட்டுவார்பார்
சரட்டுடனே ருத்திராட்சங் கையிற்கொண்டு
சாங்கமுடன் மணிபூரக மென்றுகூறி
கரமதிலே மும்மணியாங் கோர்வை தன்னை
கருத்துடனே ஜெபிப்பவர்போல் கபடுகூறி
வரமுடைய தத்துவத்தோர் தியானிபோலே
வாகுடனே மகிமையது புரிவார்பாரே 273

புரிவாரே லோகபதி மாண்பருக்கு
புகழான வானந்த கற்பத்தாலே

சரியான வேதமது ஓதுவார்பார்
தாரணியில் மாண்பரெல்லாம் மயங்குவார்கள்
உரிமையுடன் கற்பமதைக் கொண்டாலல்லோ
உத்தமனே உலகுதனில் நெடுங்காலந்தான்
தெரியவே சமாதிமுக மிருந்துகொண்டு
தேற்றமுடன் வயதுதனை வளர்த்தலாமே 274

ஆனந்தகற்பத்தால் ஆயுளை விருத்திசெய்தல்

வளர்த்தலாங் கற்பமது கொண்டபோது
வாகான சட்டையது தள்ளும்பாரு
களரான தேகமது ரோகம்நீங்கி
கனத்தயிரு விழியிரண்டுஞ் சிகப்புமெத்த
பளபளத்த திரேகமது காந்தலில்லை
பாங்கான வயததுவும் லக்கோயில்லை
குளவந்தம் போலாக தேகந்தானும்
கொற்றவனே இறுகியல்லோ இருக்கும்பாரே 275

பாரேதான் சிவயோகஞ் செய்தபேர்க்கு
பாங்கான கற்பமது கொடுத்தாயானால்
நேரேதா னுந்தமக்கு மகிமைசொல்லி
நேர்மையுடன் சமாதிமுகம் உளவுகூறி
சேரேதான் கிட்டிருந்து மனோலயத்தை
சிறப்புடனே சிதாபாச நிலையிற்செல்ல
ஆரோதான் கற்பமது உண்டபேரும்
அப்பனே உந்தமக்கு உதவுவாரே 276

உதவவென்றால் காயாதி கற்பத்தாலே
உத்தமனே உந்தனுக்கு யெல்லாஞ்சித்தி
சதகோடி நெடுங்கால மிருக்கலாகும்
சாங்கமுடன் வாசிமுக மேறலாகும்
பதமான நாற்பதவி யுந்தனுக்கு
பாங்குடனே வாயப்பதுவும் மெய்யேயாகும்
இதமுடனே யசுவனியாந் தேவர்தம்மை
எழிலாக சதாகாலந் துதிப்பீர்காணே 277

காணவே குளிகையது கொண்டபோது
கனமான கற்பத்தின் குளிகையாலே
வேணபடி கண்ணபிரான் திருக்கூற்றெல்லாம்
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்

மாணமரும் மங்கையரோ டிணங்கியல்லோ
மகத்தான கலையறு பத்துநான்கும்
பாணமது கொண்டதொரு மன்மதன்போல்
பாருலகில் சித்துவிளை யாடலாமே 278

ஆடலாம் புலஸ்தியனே யுந்தமக்கும்
அன்பான சமுசாரி யானவர்க்கும்
மாடமாளிகை நிறைந்த மன்னவர்க்கும்
மகத்தான சிவயோகி மாண்பருக்கும்
தேடறிய சீர்த்திகொளும் வாணருக்கும்
தேசமதில் சன்னியாசி வேஷத்தோர்க்கும்
சூடலாங் காயாதி கற்பந்தன்னை
சுந்தரனே புலஸ்தியனே மொழிந்திட்டேனே 279

மொழிந்தேனே யசுவனியாந் தேவர்தம்பாடல்
முனையான பதாம்புயத்தைப் போற்றியேதான்
வழிபாடு குணபாடு தேவபாடு
வளம்பெரிய யோகத்தின் பாட்டையெல்லாம்
அழியாத காயாதி கற்பத்தாலே
அப்பனே உந்தமக்கு யெல்லாஞ்சித்தி
விழியிருக்க விளக்கேந்தி கேணிதன்னில்
விழுந்திறந்த கதைபோல மொழிந்தார்தானே 280

தானான சூட்சாதி சூட்சந்தன்னை
தன்மையுள்ள புலஸ்தியனே சித்தரெல்லாம்
பானான பனியைநம்பி விழுந்துகெட்ட
பாங்கான சண்டாளர் மாண்பர்போலே
தேனான குருவிருக்க மறுவிருக்க
தேசமதில் வெகுமாண்பர் ஞானங்கொண்டு
கோனான குருபரனைத் தேடாமற்றான்
குவலயத்தில் வெகுமாண்பர் கெட்டார்தாமே 281

கெட்டதொரு ரிடிதேவர் முனிவரெல்லாம்
கெடியான சாத்திரத்தின் மறைவுதன்னை
விட்டகுறை தானிருந்தும் நூல்பாராமல்
விதியாளி யாயிருந்து மதியுங்கெட்டு
தொட்டகுறி போலாக வாசான்வார்த்தை
தொடர்ந்துமே பற்றாமல் கெட்டார்மாண்பர்
சட்டமுட னசுவனியாந் தேவர்நூலில்
சாற்றினா ருந்தமக்கு வோதினேனே 282

அகஸ்தியர் புலஸ்தியருக்கு தென்பொதிகை மகுத்துவங்கூறல்

ஓதவே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
ஓகோகோ நாதாக்கள் கூறவில்லை
நீதமுடன் யானுரைப்பேன் புலஸ்தியாகேள்
நிட்களங்க மானெதொரு புண்ணியபாலா
ஈாதமிகக் கொண்டவர்க்கு யேப்பம்போல
சாற்றினார் பலதேவ ரிடிகள்தாமும்
ரதவங்கள் யான்புரிந்து பதாம்புயத்தை
யசுவனியார் சொன்னபடி உரைப்பேன்தானே 283

உரைப்பேனே புலஸ்தியனே மைந்தாகேளு
உதகமென்ற தென்பொதிகை தன்னிலப்பா
திரைமறைவு இல்லாம லுந்தமக்கு
தீர்க்கமுடன் கூறுகிறே னுண்மையாக
வரைகோடி சித்துமுனி ரிடியார்தாமும்
வண்மையுட னிதுவரையிற் கண்டதில்லை
ரைபோன்ற உதகமென்ற கிரியில்தானும்
சுந்தரனே மகிமையது கூறுவேனே 284

சூதக்கிணறு

கூறுவேன் சுனையோரந் தன்னிலப்பா
குருவான வசுவனியார் சொன்னவாக்கு
மாறுபடா வார்த்தையது கொண்டுமல்லோ
மகத்தான சுனையருகே சென்றாயானால்
ஆறுகுளம் மடுவதுபோல் கேணியொன்று
அப்பனே யங்கிருக்கக் காணலாகும்
வீறுடைய சூதமென்ற ராஜகேணி
விடமிருக்க காணுகைக்கு யிடமுண்டாமே 285

உண்டான சூதமென்ற கேணியப்பா
உத்தமனே மகிமையது யென்னசொல்வேன்
அண்டமுடி தேவாதி தேவரெல்லர்ம்
அப்பனே கேணிதனைக் கண்டதில்லை
கெண்டபே ரண்டமென்ற பட்சிதானும்
கெவனமுடன் தான்பொசிக்குஞ் சூதமப்பா
சண்டமெனும் மலமதுவுங் காரமேறி
சட்டமுடன் மலையோரங் கிடக்கும்பாரே 286

பாரேதான் மலந்தனை எடுத்துமைந்தா
பாங்குடனே பரணைதனில் பதனம்பண்ணு

நேரேதான் பொன்னம்ப ரென்றநாமம்
நேர்மையுடன் சூதமது பேரேயாச்சு
ஊரேதான் கண்டவர்க ளாறுமில்லை
உத்தமனே உந்தமக்குச் சொன்னநீதி
ஆரோதா னெனைப்போலே சொல்வாரப்பா
அப்பனே யானுனக்குச் சொல்வேன்பாரே 287

சொல்வேனே வறுமைவருங் காலந்தன்னில்
துப்புரவாய்ப் பொன்னம்ப ரென்றநாமம்
வெல்லவே சூதமென்ற வம்பர்தன்னை
வேகமுடன் றானெடுத்து விளம்பக்கேளு
புல்லவே வறுமைவருங் காலந்தன்னில்
புகழான பொன்னம்பர் தனையெடுத்து
செல்லவே மதியதுவு மாயிரந்தான்
சேர்மையுடன் களஞ்சியது எடுத்துக்கொள்ளே 288

கொள்ளவே ஆயிரமாங் களஞ்சிவெள்ளி
கொற்றவனே தானுருக்கி செப்பக்கேளு
விள்ளவே பொன்னம்பர் களஞ்சிதன்னை
வித்தகனே உருக்குமுகந் தன்னிலீய்வாய்
தெள்ளமுர்த மானதொரு வெள்ளிதானும்
தேற்றமுடன் மாற்றதுவும் பதினாறாகும்
வெள்ளையென்ற மதியதுவுஞ் சிவப்புமாகி
வேதாந்தத் தாயினது தங்கமாச்சே 289

தங்கமாஞ் சுயத்தங்கம் பிறவித்தங்கம்
தாரணியில் சிவயோகிக் குகந்ததங்கம்
புங்கசித்தி எட்டுரியோர்க் குகந்ததங்கம்
புகழான சின்மயத்துக் குகந்ததங்கம்
அங்கமுடன் யோகமதுக் குரியதங்கம்
அழகான தங்கமது மாற்றோமெத்த
சிங்கமென்ற கன்னிதுலா ராசியோர்க்கு
சிறப்பான தங்கமென்றே செப்பலாமே. 290

செம்புவேதை

செப்பவே மார்க்கமது இன்னஞ்சொல்வேன்
செயலான புலஸ்தியனே தர்மவானே
ஒப்புவமை இல்லாத செம்புதன்னை
ஒகோகோ நாதாக்கள் சொன்னமார்க்கம்

இப்புவியில் யாரேனுஞ் சொல்வதுண்டோ
எழிலான குறுக்குவழி சொன்னாருண்டு
தப்பிதங்க ளில்லாம லடியேன்றானும்
தன்மையுட னெடுக்குவழி கூறுவேனே. 291

கூறுவேன் செம்பதுவு மாயிரந்தான்
குணமான செம்பதுவுங் களஞ்சியாக
நாறுகின்ற களிம்பான செம்புதானும்
நலமாக மூசைதனி லுருகும்போது
மாறுபடா வம்பரென்ற சூதந்தன்னை
மார்க்கமுடன் றானுருக்கி களஞ்சியிய
ஊறுகின்ற செம்பதுவும் வூறலேகி
உத்தமனே மாற்றதிகங் காணுந்தானே 292

தானான செம்பதுவும் ஊறலற்று
தாக்கான தங்கமென்ற செம்பேயாகும்
கோனான செம்புதனைக் களஞ்செடுத்து
கொற்றவனே மதிதனிலே நூற்றுக்கொன்று
தேனான மனோன்மணியைப் போற்றிசெய்து
தெளிவறவே வஞ்சலிகள் மிகவுங்கூறி
பானான வெள்ளிதனை எடுத்துப்பாரு
பரிதிமதி நீங்கியல்லோ யேமமாச்சே 293

ஆச்சப்பா யேமமது என்னசொல்வேன்
அரகரா நாதாக்கள் கண்டதில்லை
மூச்சடங்கி நெடுங்கால மிருந்தசித்து
முனையான யிவ்வேதை யார்தான்கண்டார்
பாச்சலுடன் நாதாக்கள் கண்டதில்லை
பாருலகில் சாத்திரத்திற் கூறவில்லை
ஆச்சரிய மானதொரு இந்தப்போக்கு
அப்பனே சித்துமுனி கூறார்காணே. 294

காணவே தங்கமென்ற செம்புதன்னை
கனமான வெள்ளிதனில் தாக்கும்போது
பூணவே மாற்றதுவும் முப்பத்திரெண்டு
புகழான வெள்ளிதனிற் காணும்பாரு
நீணவே ஒருவருக்குங் கூறவேண்டாம்
நிட்களங்க மானதொரு சூதத்தங்கம்
வேணபடி உந்தனுக்குத் தொண்டுசெய்து
விருப்பமுடன் காத்திருந்தால் சொல்லக்கேளே 295

சொல்லவென்றால் நெடுங்கால முந்தன்பக்கல்
சுந்தரனே காத்திருந்து தொண்டுசெய்து
வெல்லவே சித்தாதி முனிவர்தம்மை
வேதாந்தச் சாத்திரத்தை மனதிலெண்ணி
புல்லவே நெடுங்காலந் தவமிருந்து
புகழான வேதைமுகங் காணவேண்டும்
நல்லதொரு பெயருண்டாய் விடையும்பெற்று
நாதாந்த சித்தொளிவை தேடீர்பாரே. 296

சிங்கிவேதை

பாரேதா னின்னமொரு பரிகாரம்பார்
பாலகனே புலஸ்தியனே பண்பாய்க்கேளு
நேரேதான் சிங்கியென்ற மிருதார்சிங்கி
நிலையான பலமதுவு மொன்றேவாங்கி
சேரேதான் கல்லாலின் பழந்தானப்பா
சிறப்பான சேரதுவும் ரெண்டேவாங்கு
தீரேதான் புதுக்கலசத் தன்னிற்றானும்
தீர்க்கமுடன் தான்பொதிய வகையைக்கேளே 297

வகையான கலசமது நடுமையத்தில்
வாகுடனே பழமதனைக் கீழ்மேலிட்டு
சிகையான வோடதுவும் வாயிலிட்டு
திறமுடனே சீலையது வலுவாய்ச்செய்து
தகையாமல் ரவிதனிலே காயவைத்து
தளராமல் பத்தெருவிற் புடந்தான்போடு
துகையான சிங்கியென்ற பலமுமப்பா
துப்புரவாய்ப் புகையடங்கி கட்டும்பாரே 298

கட்டுமே சிங்கியென்ற வங்கமப்பா
கருவான புடம்பத்தில் கட்டும்பாரு
திட்டமுடன் புடமதுவும் முன்சொன்னாற்போல்
தீர்க்கமுடன் லகுவதுவாய்ப் புடமேபோடு
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்
வேதாந்தத் தாயினது கடாட்சத்தாலும்
தொட்டகுறி போலதுவுஞ் சிங்கியப்பா
தோராமல் புகையடங்கி கட்டுந்தானே 299

தானான சிங்கியது கட்டேயாகும்
தகமையுள்ள கட்டதுவுஞ் செந்தூரிக்க

கோனான குருவருளா லாராதாரம்
கொற்றவனே தாமுரைப்பே னுந்தமக்கு
தேனான சரக்கதுவு மேதென்றாக்கால்
தெளிவான சத்திசிவ மாறுமல்லோ
பானான பரிதிமதி யிதுவேயாகும்
பாங்கான வாதத்துக் குறுதியாச்சே 300

ஆச்சப்பா சத்திசிவஞ் சொல்வேனப்பா
ஆகாகா நாதாக்கள் மறைத்துவைத்தார்
மூச்சடங்கிப் போனபின்பு யார்தான்காண்பார்
முனையான சத்திசிவம் யானேசொல்வேன்
காச்சலென்ற துருசுவெடி யுப்புக்காரம்
கருஞ்சாரஞ் சீனமென்ற உப்புமாகும்
மாச்சலது வாராது ஆறுஞ்சேர்ந்தால்
மகத்தான ஜெயநீர்கள் செய்யலாமே 301

செய்யவே ஜெயநீரை எடுத்துமைந்தா
செப்புகிறேன் புலஸ்தியனே யுந்தனுக்கு
பெய்யவே யறுவகை ஜெயநீர்தன்னால்
பேரான சிங்கியென்ற கட்டையப்பா
துய்யதொரு குழிக்கல்லி லிட்டுமைந்தா
துடியாய்த்தா னரைப்பா யாறுசாமம்
பொய்யாது சிங்கியென்ற கட்டுத்தானும்
புகழான ஜெயநீரில் மடியுங்காணே 302

காணவென்றால் ஜெயநீரி லப்பாநீயும்
கருவான சிங்கியதை தாய்ப்பாலாலாட்டி
தோணவே பில்லையது செய்துமல்லோ
தோயவே ரவிதனிலே காயப்போடு
வேணபடி ஒட்டிலிட்டுச் சீலைசெய்து
வேதாந்தத் தாய்மாரை மனதிலுன்னி
ஆணவங்கள் தானொடுங்கிப் புலஸ்தியாகேள்
அப்பனே கணபதியைப் போற்றிடாயே 303

போற்றியே கோழியென்ற புடத்தைப்போடு
பொங்கமுடன் புடமாறி எடுத்துப்பாரு
சாற்றியதோர் புடம்போலே மைந்தாகேளு
சாங்கமுடன் பத்துமுறை போட்டாயானால்
நீற்றியதோர் வெண்ணீறு பற்பம்போலே
நிஷ்களங்க மானதொரு பற்பமாகும்

போற்றியே பற்பமதைப் பதனம்பண்ணு
பொங்கமுடன் வேதைமுகம் வரிசைகேளே 304

கேளப்பா பற்பமதை எடுத்துமைந்தா
கெடியான செம்புக்கு நேரதாக
பாளப்பா போகாமல் கிராசமீவாய்
பாலகனே பச்சையென்ற செம்புதானும்
நாளப்பா நெடுங்கால மிருந்திட்டாலும்
நாயகனே பச்சையென்ற ஊறலில்லை
கோளப்பா வாராது வொருநாளுந்தான்
கொற்றவனே சுத்தியென்ற செம்புமாச்சே 305

செம்பான செம்பதுவு மென்னசொல்வேன்
செகதலத்தில் நாதாந்த சித்துகாணார்
அம்பொன்னாஞ் செம்பதுவு மிதுவேயாகும்
ஆராதாரச் சரக்கால் விளைந்ததப்பா
பம்பரம்போல் முனிகோடி சித்தரெல்லாம்
பாரினிலே வேதைமுகஞ் சொன்னாரப்பா
கும்பமுனி வாக்கதுவும் பொய்யாதிங்கே
குவலயத்தி லுந்தனுக்காய்ச் சொன்னேன்பாரே 306

சொன்னேனே சிங்கியென்ற செம்புதன்னை
சொற்பெரிய நாதாக்கள் மறைத்தாரிங்கே
நன்னயமாய்ச் செம்புமுகம் வேதைகாண
நலமான வழிபாடு சொல்வேனப்பா
முன்னவர்கள் சொன்னதொரு நூலிற்றானும்
முறைபாடு வழிபாடு குணபாடெல்லாம்
பன்னியே சொல்லாமல் பலநூல்தன்னில்
பாலகனே தாமறைத்தார் சித்துதாமே 307

சித்தான சித்துமுனி நூல்களெல்லாம்
சிறப்புடனே பாடியல்லோ மறைத்துவைத்தா
புத்தான சமாதிதனி லொளித் வந்து
புகழுடனே தவயோக மிருந்துகொண்டு
கத்தனையே என்னாளும் மனதிலுன்னி
கருவான முறைகளெல்லாங் காட்டாமற்றான்
எத்தனையோ கோடிமுகம் யாகஞ்செய்து
எழிலுடனே மாண்டார்கள் கோடியாமே. 308

கோடியாம் இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
கூறான புலஸ்தியனே புனிதவானேகேள்

தேடியே கெந்தியென்ற செம்புதன்னை
தேசத்தில் சித்துமுனி மறைத்தாரப்பா
கூடியதோர் நூல்களெல்லாங் குறிப்பாராய்ந்து
கொற்றவனே நானுரைப்பேன் சிடிகைவேதை
பாடியதோர் நூல்களெல்லாம் பார்த்துமென்ன
பண்புள்ள புலஸ்தியனே பகரக்கேளே. 309

பகரவே கெந்தியது சேர்தானொன்று
பாங்கான காரமது சேர்தான்பாதி
நிகரமுடன் தானெடுத்து தேங்காய்ப்பாலில்
நிகட்சியுடன் தானரைப்பாய் நாலுசாமம்
வகரமென்ற போக்கதுவுக் கிந்தபாகம்
வளமையுடன் செய்யுகின்ற வண்மைபாரு
தகரமென்ற இரும்பாலே சட்டியப்பா
தன்மையுடன் அடுப்பேற்றி சரக்கைப்போடே 310

போடேதான் சரக்கதுவு மடுப்பிலேற்றி
பொங்கமுடன் தானெரிப்பாய் கமலம்போலே
ஆடேநீ கடுகுபத மாகும்போது
அப்பனே கடுகுதனை வழித்துமைந்தா
தேடேநீ சூதமதற் கிடையேசேர்த்து
தெளிவான குழிக்கல்லில் தன்னிலிட்டு
நாடேதான் பழுபாகற் சாற்றினாலே
நலமாகத் தானரைப்பாய் சாமம்நாலே 311

நாலான சாமமது வரைத்தபின்பு
நலமான பில்லையது வட்டுபோலாம்
மாலான ர்விதனிலே காயவைத்து
மகத்தான ஓட்டிலிட்டு சீலைசெய்து
பாலான புடமதுவுங் கோழியாக
பாலகனே தான்போட்டு கொடுப்பாய்மைந்தா
மேலான களங்கமது என்னசொல்வேன்
மேதினியில் நர்தாக்கள் சொல்லார்தானே 312

தானான களங்கமதை என்னசொல்வேன்
தன்மையுள்ள புலஸ்தியனே தகமைபாரு
கோனான வசுவனியார் சொன்னநீதி
கொற்றவனே ஒருக்காலும் பொய்யாதப்பா
தேனான களங்கமதைக் காரமிட்டு
தேற்றமுடன் மூசைதனி லிட்டுமைந்தா

பானான சீலையது வலுவாய்ச்செய்து
பாங்குபெற அடுப்பிலிட்டு உருக்கிடாயே 313

உருக்கவே களங்கமது உருகியல்லோ
உத்தமனே மாற்றதுவு மென்னசொல்வேன்
நெருக்கமுடன் கெந்தியது செம்புமாகி
நேர்மையுள்ள தங்கமென்ற செம்புமாச்சு
வருக்கமுடன் செம்பதனை பரணைசெய்து
பாகுடனே சூதமதை உள்ளடக்கி
திருகையுடன் திருவலென்ற வன்னிபூட்டி
தீர்க்கமுடன் நெருப்பதனில் வாட்டிடாயே 314

வாட்டவே சூதமது இறுகியல்லோ
வளமையுடன் மணியாகி நிற்கும்பாரு
தேட்டமுடன் மணியெடுத்து மைந்தாநீயும்
தெளிவுடனே சாரணைகள் செப்பக்கேளும்
நாட்டமுடன் சாரணைதான் என்னவென்றால்
நயமான தும்பலென்ற பூண்டுமாகும்
தாட்டிகமாய் சாரணைகள் செய்தாயானால்
தப்பாது குளிகைக்கு வித்துமாச்சே 315

வித்தான குளிகையது என்னசொல்வேன்
விருப்பமுடன் சித்துமுனி சொன்னாரில்லை
சத்தான குளிகைக்கு சாரணைகள்தானும்
சட்டமுடன் செய்பவர்க்கு பலனுமுண்டு
முத்தான குளிகையது எடுத்துமைந்தா
முசியாமல் வாய்தனிலே யடக்கிக்கொண்டு
சுத்தமுடன் நாளொன்றுக் காயிரந்தான்
சுகம்பெறவே நாழிவழி நடக்கலாலே 316

நடக்கவே வாசியது மேல்நோக்காகும்
நலமான குளிகையது என்னசொல்வேன்
கடக்கவே நெடுந்தூரம் நடக்கலாகும்
கருவான குளிகையது வேகத்தாலே
அடக்கமுடன் யாருக்குந் தெரியாமற்றான்
அப்பனே கேசரத்தை நடத்தலாகும்
முடக்கமது வாராது முடிமன்னாகேள்
மூதுலகில் நடப்பவனே யோகியாமே 317

ஆமேதா னின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
அப்பனே புலஸ்தியனே அன்புள்ளானே

நாமேதான் சொன்னபடி நளினமார்க்கம்
நாதாக்கள் சொன்னதொரு வாக்குபோலே
தாமேதான் கேசரத்தை நடத்துதற்கு
தப்பாமல் மார்க்கவழி கூறிவிட்டேன்
போமேதான் சூதமென்ற குளிகைதன்னை
பொங்கமுடன் செந்தூரிக்க வகையைக்கேளே 318

வகையான சூதமென்ற குளிகைதன்னை
வளமான நாலுக்கோர் தங்கமப்பா
பகையான கெந்தியது எட்டிலொன்று
பாங்குபெற தாளகமு மதற்குப்பாதி
துகையான சரக்கதுவு மொன்றாய்க்கூட்டி
துப்புறவா யதற்குநிகர் சீனஞ்சேர்த்து
வகையுடனே யாறுவகை செயநீர்தன்னால்
மார்க்கமுடன் தானரைப்பாய் ஜாமமெட்டே 319

எட்டான ஜாமமது வரைத்தபின்பு
எழிலான சரக்கதனைப் பொடியாய்செய்து
திட்டமுடன் காசியென்ற குப்பிதன்னில்
சிறப்புடனே தானடைத்து செப்பக்கேளீர்
வட்டமுடன் மாக்கல்லால் கொண்டுமூடி
வகுப்புடனே சீலையது வலுவாய்ச்செய்து
தொட்டகுறி போலாக மைந்தாநீயும்
தோறாமல் பாண்டமென்ற படியில்தாக்கே 320

படியான பாண்டமென்ற மணலைத்தானும்
பாங்குபெற விரக்கடையீ னுயரம்போடு
அடிதனிலே குப்பியிட்டு மணலைச்செம்மி
அப்பனே கழுத்துவா யளவுமட்டும்
துடியுடனே மணற்கொட்டி பாண்டமூடி
துப்புரவாய்ச் சீலையது வலுவாய்ச்செய்து
மிடிபோக நாற்சாம மெரித்தாயானால்
மீளவே செந்தூர மாகும்பாரே 321

பாரேதான் மனோன்மணியைத் தொழுதுபோற்றி
பாங்குபெற சின்மயத்தி லிருந்துகொண்டு
சீரேதான் கணபதியைத் தொழுதுபோற்றி
சிறப்புடனே செந்தூர மெடுத்துப்பாரு
ஆரோதான் செய்வார்கள் இந்தப்போக்கு
அப்பனே புலஸ்தியனே யமைத்துதல்லோ

வீரேதான் செந்தூர மென்னசொல்வேன்
        வித்தகனே பாதைவழி கூறுவேனே 322

கூறுவேன் நாதாக்கள் சொன்னதில்லை
        குவலயத்தி லுந்தமக்கு மனதுவந்து
மாறுபடா சாத்திரங்க ளுளவாராய்ந்து
        மார்க்கமுடன் மறைப்புமுதல் யாவுந்தேர்ந்து
தேறுடைய கைபாகஞ் செய்பாகங்கள்
        தெளிவறவே மார்க்கமெல்லாந் தேர்ந்துபார்த்து
வேறுவழி செல்லாமல் புனிதவானே
        விருப்பமுடன் பாடிவைத்தேன் முறையிதாமே 323

செந்தூரப் போக்கு வேதைமுறை

முறையான செந்தூரப் போக்குசொல்வேன்
        முனையான வேதைமுகம் விரும்பிக்கேளீர்
உறைபோன்ற செந்தூரந் தாக்கக்கேளீர்
        உத்தமனே நாதாக்கள் மறைத்துவைத்தார்
கறையான செந்தூரந் தனையெடுத்து
        காட்டடா வெள்ளிதனில் நூற்றுக்கொன்று
குறையதுவும் வாராது புலஸ்தியாகேள்
        கூறுவே னதினுடைய வண்ணங்கேளே 324

வண்ணமாஞ் செந்தூரந் தன்னையப்பா
        வளமான வெள்ளிதனில் தாக்கும்போது
திண்ணமுடன் மாற்றதுவு மென்னசொல்வேன்
        தீபவொளி சதாசிவனார் ஜோதிகாண
வண்ணமுடன் செய்வதற்கு யாராலாகும்
        வளப்பமென்ற மாற்றதுவும் பதினாறல்லோ
கண்ணபிரான் தன்காலில் ஜாதிபூண்ட
        கனகமெனும் பசும்பொன்னி னாணியாமே 325

ஆணியாஞ் செந்தூரந் தனையெடுத்து
        அப்பனே செம்பதனில் நூற்றுக்கொன்று
காணிபெற உருக்குமுகந் தன்னிலீய
        கருவான சுயத்தங்கம் சிவந்ததங்கம்
வாணியெனுஞ் சரஸ்வதியாள் பீடத்தங்கம்
        வளமுடனே கலைவாணி இருக்குந்தங்கம்
சோணிதமா முன்னதொரு பிறவித்தங்கம்
        துரைராஜ சுந்தரனார் தங்கமாச்சே 326

தங்கமாஞ் செம்பதனில் கொடுத்ததங்கம்
தன்மையுள்ள தங்கமது எடுத்துமைந்தா
அங்கமுடன் வெள்ளிதனில் பத்துக்கொன்று
அப்பனே யிச்செம்பி லொன்றுயீய்ந்தால்
வங்கமது கோடாது பிறவியாகும்
வகுப்பான மாற்றதுவும் பத்தேயாகும்
துங்கமென்ன ரசிதமெனுந் தங்கமப்பா
துரைராஜ சுந்தரனார் வேதையாச்சே 327

வேதையா மின்னமொரு மார்க்கங்கேளு
விண்ணாடர் மண்ணாடர் கண்டதில்லை
போதமுடன் செந்தூரந் தனையெடுத்து
பொங்கமுடன் குடவனையே தானுருக்கி
நீதமுடன் நூற்றுக்கு களஞ்சியாக
நீமகனே கொடுத்துப்பா ரென்ன சொல்வேன்
பாதைவழி தெரியாமல் மாண்பரெல்லாம்
பதிகெட்டு விதிகெட்டு மதிகெட்டாரே 328

மதியான குடவனிலே நூற்றுக்கொன்று
மன்னவனே தானுருக்கி செந்தூரத்தை
விதியான கணக்கதுபோ லுருக்கித்தீரு
வித்தகனே வித்தியாசம் வாராதப்பா
துதியுடனே வாரடித்துப் புடத்தைப்போடு
துப்புரவாய்க் குடவனென்ற தங்கமாச்சு
கதிபெறவே தங்கமதை சிவயோகத்துக்
கருமையுடன் பூசைமுகம் போற்றிடாயே 329

போற்றவே ஜீவனத்துக் கிடமேதேடி
பொங்கமுடன் முப்பத்தீ ரறமுஞ்செய்து
நாற்றிசையும் மெச்சுதற்கு புலஸ்தியாகேள்
நயமுடனும் பயமுடனும் நண்போர்முன்பு
தேற்றமுடன் வறுமையுரு மாண்பர்போலே
தேசாந்திரி வேஷமுடன் நயங்கள்பேசி
போற்றியே மனோன்மணியை மனதிலுண்ணி
பொங்கமுடன் சிவயோக நிலையில்நில்லே 330

நிலையான யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
நிஷ்களங்க மானதொரு செந்தூரத்தை
சிலையதுவும் செய்வதற்கு யாகம்பூண்டு
சிறப்புடனே கோயில்குளங் கட்டிவைப்பீர்

தலைமுறைகள் நெடுங்கால மிருக்குந்தோறும்
சட்டமுடன பரதேசிக்கு அன்னமீய
குலையான செந்தூரந் தனையெடுத்து
குவலயத்தில் வினோதமிகச் செய்யலாமே 331

தாம்பரச் செந்தூர வேதை

செய்யலா மின்னமொரு பாகஞ்செய்வேன்
செம்பவள ------------ ட புலஸ்தியாகேள்
உய்யவே யகவனியார் சொன்னவாக்கு
உத்தமனே உந்தனுக்கு உரைத்தேனப்பா
பெய்யவே தாம்பரமாம் களஞ்சிநூறு
பெயரான தாளகமுங் களஞ்சிநூறு
பையவே கெந்தகமுங் களஞ்சிநூறு
பட்சமுடன் தானெடுப்பாய் மைந்தாகேளே 332

கேளப்பா தளவாயாம் பாண்டந்தன்னில்
கெடியான கெந்தமுடன் தாளகந்தான்
மாளப்பா இரண்டையுந்தான் பொடியதாக்கி
மகத்தான பாண்டமதி லிட்டுமைந்தா
சூளப்பா தாம்பரமாந் தகடுதன்னை
சுத்திசெய்து பாண்டமதி லிட்டுமல்லோ
பாளப்பா போகாமல் முன்னுரைத்த
--- ன்ற சரக்கதனை மேலே தூவே 333

தூவவே கற்பாண்டங் கொண்டுமூடி
துப்புரவாய்ச் சீலையது வலுவாய்ச்செய்து
போவதற்குப் புகையதுவும் மேல்நோக்காமல்
புண்ணியனே சில்லிட்டுச் சீலைசெய்து
சாவவே தாம்பரமும் வேகுமட்டும்
சட்டமுடன் தானெரிப்பாய் நாலுசாமம்
தேவனது அருள்கொண்டு மைந்தாநீயும்
தேட்டமுடன் தானெரித்து இறக்கிடாயே 334

இறக்கியே பாண்டமதை உடைத்துப்பாரு
எழிலான களங்கமது என்னசொல்வேன்
உறக்கமது வாராது பின்வாங்காது
உத்தமனே தாம்பரமாங் களங்குமார்க்கம்
சிறக்கவே தானெடுத்து மைந்தாகேளீர்
சீர்பெறவே குழிக்கல்லி லிட்டுமேதான்

திறமுடனே பொடியாக்கி மாவதாக்கி
திட்டமுடன் றானரைக்க வகையைக்கேளே 335

கேளப்பா பொடியதனை மெழுகதாக்கி
கெவனமுடன் லிங்கமது பலமோவைத்து
நாளப்பா போகாமல் மனதுவந்து
நலம்பெறவே லிங்கத்துக் கங்கிபூட்டி
சூளப்பா சீலையது வலுவாய்ச்செய்து
சுந்தரனே வராகமென்ற புடத்தைப்போட்டு
ஆளப்பா தாம்பரமும் லிங்கஞ்சேர்ந்து
அப்பனே முடியும்வகை தன்னைக்கேளே 336

கேளேதான் நிம்பழத்தின் சாற்றினாலே
கெணிதமுடன் தானரைப்பாய் நாலுசாமம்
பாளேதான் போகாமல் வில்லைகட்டு
பாக்கியங்கள் மிகப்பெறுவாய்ப் பாலாநீயும்
சூளேதான் ரவிதனிலே காயவைத்து
சுந்தரனே சில்லிட்டுச் சீலைசெய்து
கோளேதான் நேராமற் புடந்தானப்பா
கொற்றவனே கோழியென்ற புடமுந்தானே 337

தானான புடமதுவு மாறிப்பின்பு
தகமையுடன் தானெடுத்துப் பார்க்கும்போது
கோனான குருவருளால் தாம்பிரவேதை
கொற்றவனே மயில்நிறம்போ லிருக்கும்பாரு
மானான களங்கமென்ற செந்தூரத்தை
மாராட்ட மில்லாமல் முன்சொன்னார்போல்
தேனான செந்தூரந் தனையெடுத்து
திட்முடன் குழிக்கல்லில் போட்டிடாயே 338

போட்டுமே முன்போலத் தானரைத்து
புகழான பில்லையது லகுவாய்ச்செய்து
நீட்டமுடன் ரவிதனிலே காயவைத்து
நிலையான வில்லைதனை எடுத்துமைந்தா
நாட்டமுடன் சில்லிட்டுச் சீலைசெய்து
நவின்றிடவே முன்போலப் புடத்தைப்போடு
வாட்டமுடன் மறுபடியு மெடுத்துப்பாரு
மகத்தான சிந்தூரஞ் செம்போத்தாச்சே 339

ஆச்சப்பா இப்படியே பத்துமுறைபோடு
அழகான செந்தூர மென்னசொல்வேன்

பேச்சுதற்கு நாவில்லைப் பாவுமில்லை
பேரான செந்தூர பச்சைவர்ணம்
பாச்சுதற்கு வேதைமுகஞ் செல்வதற்கும்
பாங்கான வரிசைமுறை சொல்வேனப்பா
மாச்சலது வாராமல் செந்தூரத்தை
மார்க்கமுடன் முடிப்பதற்கு வகைதான்பாரே 340

ஆறாதார திராவகம்

பாரேதான் செந்தூரஞ் சிவப்பதற்கு
பாங்குபெற திராவகத்தைச் சொல்வேனப்பா
நேரேதான் துருசுவெடி உப்புக்காரம்
நெடுஞ்சாரங் கரியுப்பு சீனமாகும்
கூரேதான் இடைகண்டு இனமுங்கண்டு
கொற்றவனே சேர்வையது மிகவுங்கண்டு
வேரேதான் சரக்கதுவுங் கூட்டாமற்றான்
வேகமுடன் தாமரைப்பாய் சாமம்நாலே 341

நாலான சாமமது வரைத்துமைந்தா
நயம்பெறவே கரகமென்ற வாலைதன்னில்
காலான கரகமதில் சரக்கடைத்து
கருவுடனே புனல்கொண்டு பாண்டம்வைத்து
மேலான கரகமதில் வாலைவைத்து
மேன்மையுடன் சீலையது வலுவாய்ச்செய்து
கோலான விறகதுவுங் கமலம்போலாங்
கொற்றவனே தானெரிப்பாய் சாமம்ரெண்டே 342

இரண்டான சாமமது எரித்தபின்பு
எழிலான திராவகமு மிறங்கும்பாரு
திரண்டதொரு திராவகந் தன்னைவாங்கி
தீர்க்கமுடன் சீசாவி லடைத்துமைந்தா
கரண்டமெனுஞ் செந்தூரந் தனையெடுத்து
கருவாகக் குழிக்கல்லி லிட்டுமல்லோ
வரண்டிடவே திராவகத்தா லரைத்துபாலா
வளமையுடன் வில்லையது கட்டிப்போடே 343

போடேதான் நாற்சாம மரைத்தபின்பு
பொங்கமுடன் பில்லைகட்டி ரவியில்வைத்து
நாடேதான் ரவிதனிலே காய்ந்தபின்பு
நயம்பெறவே சில்லிட்டுச் சீலைசெய்து

தேடரிய புடமதுவுங் கோழியாக
தேவிமனோன் மணியாளைப் போற்றிசெய்து
சாடலது வாராமல் புலஸ்தியாகேள்
சட்டமுடன் முன்போலப் புடத்தைப்போடே 344

புடமான புடமதுவு மென்னசொல்வேன்
புகழான திராவகத்தில் சோடசந்தான்
திடமுடனே போட்டுவா புலஸ்தியாகேள்
தீர்க்கமுள்ள செந்தூரரங் காவிமெத்த
படம்வரையுஞ் செந்தூரம் போலேயாகும்
பாங்கான நிறமதுவு மதற்குமேலாம்
புடமதுவு மிகவாகி யேறும்போது
புகழான செந்தூர மருணன்காணே 345

செந்தூரப்போக்கு

காணவே யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
கருவான புலஸ்தியனே மந்திரவானே
தோணவே முன்சொன்ன செந்தூரத்தில்
தோராத வீரமது பத்துக்கொன்று
மாணவே தான்சேர்த்து திராவகத்தால்
மார்க்கமுடன் தானரைப்பாய் நாலுசாமம்
ஊணவே முன்போல வில்லைகட்டி
உத்தமனே ரவிதனிலே காயப்போடே 346

போடவே பில்லையது காய்ந்தபின்பு
பொங்கமுடன் சில்லிட்டுச் சீலைசெய்து
நீடவே குக்குடமாம் புடத்தைப்போடு
நெடிதான செந்தூரமென்ன சொல்வேன்
ஆடவே இப்படியே பத்துமுறைபோடு
அழகான செந்தூரஞ் சொல்லொண்ணாது
சாடவே நாதாக்கள் சொல்வாருண்டோ
சாங்கமுடன் நானுமக்கு வோதினேனே. 347

ஓதினேன் செந்தூர வேதைமார்க்கம்
உத்தமனே பதினெண்பேர் தானுங்கூடி
நீதமுடன் கைமறைப்பு வெளியாச்சென்று
நிஷ்டூர மெந்தன்மேல் கூறலாச்சு
வாதமென்ற போக்கெல்லாம் வெளியாச்சென்று
வல்லிடிபோல் எந்தன்மேல் யுத்தஞ்செய்தார்

போதமுடன் மனதுவந்து மனங்களித்து
பொங்கமுட னபசாரஞ் சொல்லிட்டேனே 348

சொன்னதொரு வபசார வார்த்தைக்கஞ்சி
சொற்பெரிய நாதாக்கள் ரிஷிகள்தாமும்
நன்னயமா யெந்தனுக்கு வஞ்சலித்து
நமஸ்கார பரிபோக மிகவுஞ்செய்து
பன்னயமாய் நாதாக்கள் மறைத்தநூலை
பட்சமுடன் குகைதனிலே வையாமற்றான்
வின்னமது நேர்வதற்கு வையகத்தில்
வித்தகரே வெளியிட்டீர் பாபந்தானே. 349

சித்தர்கள் அகஸ்தியர்க்கு இதவுகூறல்

தானான வசுவனியாந் தேவர்நீதி
தகமையுடன் றானுரைத்த வண்மையெல்லாம்
கோனான எங்கள்குரு கும்பயோனி
குவலயத்தி லாருந்தா னறியமாட்டார்
மானான மகதேவர் சொன்னவாக்கை
மகத்தான புலத்தியருக் குபதேசித்தீர்
பானான உலகமெலாஞ் சித்தாய்ப்போகும்
பாங்குடனேகைமறைப்பு வைத்தால்நன்றே 350

நன்றான மறைப்புவைத்தால் மெத்தநன்று
நலமான கருமியென்ற மாண்பர்கண்டால்
குன்றான சாத்திரங்கள் கோடாகோடி
கொற்றவனே யனேகம்பே ரறிவார்பாரு
வென்றிடவே கைமறைப்பை கண்டுகொண்டால்
வித்தகரே ஒருவருந்தான் மதியாரையா
சென்றிடவே செகமறைப்பு வைத்தால்நன்று
செகதலத்தில் மதிப்புண்டாய் வாழ்வார்தானே 351

தானேதான் மர்மங்கள் கொண்டுமல்லோ
தகமையுள்ள மர்மத்தி னுளவுகண்டு
மானேதான் மண்டலத்தா ரறியாமற்றான்
மகிமையுடன் திறவுகோ லேற்படுத்தி
ஊனேதான் சாத்திரத்தின் விசேடமெல்லாம்
உத்தமனே யுவமானஞ் செய்துமல்லோ
தேனேகேள் சாபமது நீக்கியல்லோ
தெள்ளமுர்த வழிதனையைக் காட்டுவீரே 352

காட்டெனவே சித்தரெல்லா மொன்றாய்க்கூடி
களிப்புடனே யகத்தியர்க்குச் சரணங்கூறி
நீட்டமுடன் மகதேவா யெந்தநாதா
நீதியுடன் எங்கள்மேல் கிருபைவைத்து
தாட்டிகமாய்ப் பன்னீரா யிரத்தின்நூலை
தாரணியி லொருவருந்தா னறியாமற்றான்
வாட்டமுடன் புலத்தியருக் குபதேசித்து
வையகத் தோர் காண்பதற்கு மறைப்புகொள்ளே 353

கொள்ளவே சாபமது என்னவென்றால்
கொடிதான பாபிகட்கும் லோபிகட்கும்
விள்ளவே கருமியென்ற சண்டாளர்க்கும்
விருப்பமுடன் நூல்கொடுத்தால் சாபமாகும்
தெள்ளமுர்த்த மானதொரு நண்பருக்கும்
தேஜொளிவைக் கண்டதொரு சிவயோகிக்கும்
கள்ளமது வாராமல் சாபந்நீந்து
கர்த்தாவே நூலதனைப் பதனங்கொள்ளே 354

பதனமென்றால் பதனமது சமாதிபீடம்
பாங்குபெற வைப்பதுவே குருவின்பீடம்
விதனமது தானகற்றி துறவிபீடம்
விற்பனர்கள் வந்துமல்லோ நூல்கேட்டாக்கால்
நிதமதுவுஞ் சமாதியது பூசைகொண்டு
நிஷ்களங்க மானதொரு சிவயோகிக்கும்
சதமுடனே ஆயிரம்பேர் வந்திட்டாலுஞ்
சட்டமுடன் மனதுவந்து கொடுக்கநன்றே 355

கொடுத்தாலு மவர்தமக்கு யிதவுகூறி
குணமுடனே மணமுடனே மவுனங்கூறி
தடுத்துமொழி கூறாத சீஷவர்க்கம்
தாரணியில் கண்டுமிக உளவாராய்ந்து
அடுத்துமே வெகுகாலஞ் சமாதிபீடம்
ஐயனே வைத்திருந்து மனமாராய்ந்து
கொடுத்துமே உபதேச உண்மைகூறி
கொப்பெனவே ஆசிர்மங் கூறுவீரே 356

கூறவென்று சித்தரெல்லாம் வணக்கங்கூறி
கொற்றவனா ரகத்தியரின் பாதம்போற்றி
தேறலுடன் இதிகாச வித்தையெல்லாம்
தெளிவுடனே உபதேசஞ் செய்தநூலை

மாறலது வாராமல் புலத்தியர்க்கு
மகதேவா உபதேசங் கொண்டுகூறி
சீறலது வாராமல் புலத்தியர்க்கு
சிறப்புடனே புத்திமதி கொள்ளல்நன்றே 357

கொண்டாலும் மதியூகி ஆகியென்ன
கொற்றவரே சீஷனா இருந்துமென்ன
தொண்டுமிகத் தான்புரிந்து வணக்கஞ்செய்து
துஷ்டர்களைத் தானகற்றி அகலத்தள்ளி
விண்டதொரு கருவிகர ணாதியந்தம்
விட்டகுறை தொட்டகுறை அனைத்தும்பெற்று
திண்டிரைசூழ் வையகத்தில் சீஷருந்தான்
தீர்க்கமுடன் நல்லவர் போலிருப்பார்தாமே 358

இருக்குமனந் தானறிந்து வினயங்கூறி
எழிலான பிரணவத்தின் மகிமைகூறி
உருக்கமுட னுபதேச வள்ளல்கூறி
உண்மையுடன் வாதமக்கு தீட்சைதந்து
செருக்குமிகத் தானகற்றி வணக்கங்கொண்டு
சேடனைப்போல் கீர்த்தியது மிகவுந்தந்து
திருக்கமலம் வீற்றிருக்கும் மணியாள்பாதம்
தீர்க்கமுட னருள்பெறுக அருள்கொள்வீரே 359

கொள்ளவென்றால் ஞானமது கொண்டாலுந்தான்
கொடிதான பவக்கடலை விட்டகன்ற
தெள்ளமுர்த மானதொரு புத்தியுண்டாய்
தேசமதில் கீர்த்திகொண்டு வாழ்ந்தாலுந்தான்
வள்ளலுயர் மரபுதனி லுதித்துமென்ன
வண்டமழின் செந்துணர்வ் அறிந்துமென்ன
கள்ளமில்லா சீஷனவன் புத்திகண்டு
காசினியில் குருபதத்தை ஓதுவீரே 360

ஓதவென்றால் உந்தமக்கு உற்றசீஷன்
ஓகோகோ நாதாக்க ளறிந்தசீஷன்
போதமெனுந் தவக்கடலுக் குகந்தசீஷன்
பொங்கமுடன் பவக்கடலை அகன்றசீஷன்
சோதனைக்கு அடங்காத புத்தியுள்ளான்
தோறாமல் சித்தர்கட்கு வணக்கஞ்சொல்வேன்
பேதமிலாக் கபடகற்றி பிறந்தசீடன்
பேரான புலத்தியரு மென்னலாமே 361

அகத்தியர் சீடர் புலத்தியரை பெட்புகூறல்

என்னவே பதினெண்பே ரிஷிகள்தாமும்
எழிலான நவகோடி ரிடியார்தாமும்
துன்னவே நாற்பத்தி யெண்மர்பேரும்
துப்புரவாய் புலஸ்தியர்க்கு பெட்புகூறி
சொன்னயங்கள் பொருனயங்கள் பொருந்தவல்லோ
சோறாம லகத்தியர்க்கு யிதவுகூறி
நன்னயமாம் அஞ்சலிகள் மிகவுஞ்செய்து
நாதாந்த சித்தொளிவும் நடந்திட்டாரே 362

அகஸ்தியர் புலத்தியருக்கு இந்த பன்னீராயிரக் காவியத்தை சாபம்நீக்கி உபதேசித்தல்

நடக்கவே இன்னமொரு சேதிசொல்வேன்
நாதாந்த சித்தொளிவை செப்பக்கேளும்
அடக்கமுள்ள புலஸ்தியனே அன்பாய்க்கேளு
அவனிதனி லுண்டான சித்தரெல்லாம்
தொடுக்கமுட னெந்தனுக் குரைத்தவண்ணம்
தொட்டகுறை விட்டகுறை தனையகற்றி
முடக்கமது நேராம லுந்தனுக்கு
மொழிந்திடுவேன் ஞானமதை உண்மைபாரே 363

பாரேதான் திரேதாயி னுகத்திலப்பா
பண்பான காலாங்கி நாதர்தாமும்
நேரேதான் போகரிடி நாதருக்கு
நேர்மையுடன் லோகவதி செயங்களெல்லாம்
சேரேதா னுபதேசஞ் செய்தாற்போலே
சிற்பரனே புலஸ்தியனே உந்தமக்கு
நீரேதான் கண்டறிய சூளுவில்ஞானம்
நீதியுடன் நானுரைப்பேன் கவிவல்லோனே 364

வல்லதொரு புலத்தியனே இன்னஞ்சொல்வேன்
வளமான பன்னீரா யிரக்காண்டந்தான்
நல்லதொரு காண்டமது பனிரெண்டுக்குள்
நலமான சித்துமுனி கூறாவண்ணம்
புல்லறிவா லுந்தமக்கு மனதுவந்து
புகட்சியுடன் போதிப்பே னுண்மையாக
வெல்லவே கருவிகர ணாதியந்தம்
வேட்கமுடன் கற்றணர்ந்து முறைகொள்வீரே 365

கொள்ளவென்றால் முறைபாடு குணபாடெல்லாம்
கொற்றவனே தாமறிந்து மனங்களித்து
எள்ளளவும் பிசகதுவும் நேராவண்ணம்
எழிலான லோகவதி சயங்களெல்லாம்
உள்ளபடி தாமறிந்து புத்திவானாய்
உத்தமனே சின்மயத்தி லிருந்துகொண்டு
தெள்ளமுர்த ஞானமென்ற கடலையப்பா
தேற்றமுட னென்னாளும் பதிகொள்வீரே 366

பதியான பதியதுவு மேதென்றாக்கால்
பாலகனே புலத்தியனே பகரக்கேளீர்
விதியான முறைபாடு துறைபாடெல்லாம்
வித்தகனே கற்றறிந்து மேதினிக்குள்
துதியான நயங்கண்டு பயமுங்கொண்டு
துன்பமெனுஞ் சாகரத்தை விட்டகற்றி
மதிபோன்ற ஞானமெனுங் கடலுக்கப்பா
மன்னவனே வழிதேட நண்ணுவீரே 367

நண்ணவென்றால் ஞானமதை யோதுவேன்யான்
நலமான வையகத்து வதிசயங்கள்
திண்ணமுடன் கற்றிந்து சிறுபாலாநீ
சிறப்புடனே உபதேசங் கொண்டுமல்லோ
எண்ணரிய நற்பொருளை யேகவெண்ணி
எழிலான துற்பொருளை சிக்கறுத்து
பண்ணவெனக் கன்புடைய சீடனாகி
பாலகனே சதாகாலம் வாழ்குவீரே 368

அகஸ்தியர் புலத்தியருக்கு ஐந்துவயதில் சிலம்புகூட வித்தை கற்பித்தது

வாழ்கவே புலத்தியரே இன்னஞ்சொல்வேன்
வளமான பாலகனே பண்புள்ளானே
நீழ்கவே சிலம்பமென்ற வித்தைதன்னை
நீதியிட னானுமக்கு வுகந்துகேளீர்
மூழ்கவே பூமியது வட்டாரத்தில்
முனையான ....துவும் நூறேயாகும்
தாழ்கவே பூமியது அடிவாரந்தான்
தாக்கான கெஜமதுவும் நாலுமாமே 369

நாலான கெஜமதுவும் பூமியுள்ளே
நலமான வட்டார மென்னசொல்வேன்

மாலான மச்சியது கொட்டாரந்தான்
மகத்தான சூத்திரமுங் கொம்பும்நாட்டி
பாலான கொட்டாரம் நடுமையத்தில்
பாலகனே சாளர .... கி
சோலான கோலதுவும் விளையாட்டுக்கு
கொற்றவனே உந்தனுக்குக் கூறுவேனே 370

கூறுவே னாயுதத்தின் வரிசைசொல்வேன்
கொற்றவனே கோலநூறு சிக்கமாறு
மாறுபடா தளவரிசை கத்திநூறு
மகத்தான சங்கிலிகள் மூன்றுமாகும்
ஆறுபடை வீர சங்கிலியுமாகும்
அப்பனே லாடமென்ற சங்கிலியுமாகும்
மீறுதிரு வட்ட சங்கிலியுமாகும்
மிக்கான தடிகள் சதநூறுமாமே 371

ஆமப்பா சக்கரம் இருநான்காறு
அப்பனே ஒன்பதுசேர் பரிசைகத்தி
தாமேதான் மத்தகமாம் ஸ்தலமிரண்டு
தாக்கான கைபாலா பரிசுகத்தி
நாமேதான் சொன்னபடி வல்லயங்கள்
நலமான ஈட்டிபல்லா குத்திதானும்
போமேதான் விளையாட்டுக் குகந்தவண்ணம்
புகழான சக்கரமாந் தீவட்டிதானே 372

தாமேதான் வளைவுதடி கொம்புநூறு
தாக்கான வம்புடனே குண்டுபத்து
கோனான லேஜியங்க ளொன்பதாகும்
கொற்றவனே கும்பமென்று கலசம்நூறு
தேனான செம்பாலை தடிகளெட்டு
தேற்றமுடன் கவுண்டுடனே நாணியாறு
மானான மண்பவள சிறுத்தைசெண்டு
மகத்தான கோபிலா நாலுபாரே 373

பாரேதான் சிங்கணத்து சிலம்பவித்தை
பாலகனே பகருகிறே னின்னங்கேளீர்
நேரேதான் மாடியது பெருமாடியப்பா
நெடிதான உருளையது ஸதம்பம்நாலு
சீரேதான் மண்டலியா முருளைகத்தி
சிறப்பான வாளிமுகத் தோடயங்கள்

கூரேதான் சிம்பமுக வேஜியங்கள்
குணமான உக்கடிகள் லிங்கங்காணே 374

லிங்கமென்றால் லிங்கமது என்னசொல்வே
னிராசாக் களானுகின்ற லிங்கவித்தை
தங்கமெனும் யாளிமுகச் சோடாபாங்கு
சதுரமான மாத்திரைக்கோல் பிரம்புதானும்
துங்கமெனும் சமுதாடு பல்லயங்கள்
சுத்தமுடன் வீரன்கை யேந்திரவாளு
புங்கசித்தி எட்டுடைய வண்டயங்கள்
புகழான பாணமென்ற வம்புதானே 375

அம்பான கால்வளையஞ் சிலம்புத்தண்டு
அட்டபரி பாலாவும் ஆயுதங்கள்
செம்பொன் முடிவேந்தர் கைவுண்டிவில்லு
செயலான வாயுதங்கள் முப்பத்திரெண்டு
நம்புலையா வளைவுதடி சக்கரங்கள்
நயமான ஈட்டிபரி பரிசைவேதை
கும்பமெனும் துத்தாரி கலசகும்பம்
கொடியதொரு சோடசமும் ரெண்டதாமே 376

இரண்டான வாயுதங்கள் தன்னோடொக்க
எழிலான வித்தைமுத லுலவுமார்க்கம்
திரண்டதொரு கோகரண விந்திரஜாலம்
தீர்க்கமுடன் புலத்தியருக் குபதேசிக்க
கரணமெனுங் கைலாகு வித்தையெல்லாம்
கண்டறிந்து புலத்தியனுங் களிப்புண்டாகி
சரணமென வகத்தியரின் தாள்பணிந்து
சட்டமுட னஞ்சலிகள் செய்திட்டாரே 377

செய்யவே வகத்தியரும் மனதுவந்து
செயலான வித்தைமுதல் ஏற்றந்தன்னை
பையவே கரியேற்றம் பரயினேற்றம்
பாங்குடனே மிருகத்தின் பாஷையெல்லாம்
துய்யபுகழ் புலத்தியருக் குபதேசித்து
துப்புரவாய் மதியூகம் மிகவுங்கூறி
நையவருங் கோபமதை யுள்ளடக்கி
நலமுடனே வையகத்தில் வாழ்குவீரே 378

வாழ்கவென்று புலத்தியருக் குபதேசித்து
வளம்பெறவே காட்டகத்து மகிமையெல்லாம்

தாழ்மையுடன் சிறுபாலா எந்தன்மாரா
 தகமையுட னுந்தனுக்குச் சொல்வேனப்பா
மூழ்கவே வையகத்தில் கோடிமாண்பர்
 முனையான சித்தர்களோ கோடாகோடி
கேள்வியுடன் யாகமது செய்துமல்லோ
 வேதாந்த சின்மயத்தி லிருப்பார்தானே 379

தானான சித்தர்முனி கோடாகோடி
 சதகோடி சூரியர்போல் பிரகாசிப்பார்
கோனான தவரிடிகள் கோடாகோடி
 குவலயத்தில் கணக்குண்டோ லக்கோயில்லை
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
 தேஜொளிவின் சின்மயத்தைக் காண்பதற்கு
மானான காட்டகத்தில் தவசியாக
 மார்க்கமுடன் செய்துமல்லோ நிற்பார்பாரே 380

பாரேதான் யுகங்கோடி யுகாந்தங்கோடி
 பான்மையுடன் சமாதிமுகம் நிற்பார்பாரு
நேரேதான் திருமுகத்தைக் கண்டபோது
 நெடிதான புலத்தியரே யாரென்பார்கள்
சேரேதான் கிட்டிருந்து வஞ்சலித்து
 சேர்வையுடன் தாள்பணிந்து முடிகள்சாய்த்து
நீரேதா னெந்தனது தேவாயென்று
 நீதியுடன் நமஸ்காரம் புரிவீர்காணே 381

காணவே யாரென்று மனங்களித்து
 கண்மணியே உந்தனையா ரென்பார்பாரு
பூணவே கும்பமுனி சீஷனென்று
 புகழுடனே அடிபணிந்து மொழிகள்கூறி
நீணவே புலத்தியனா னென்றுரைத்து
 நிஷ்களங்க மாகவல்லோ கரங்குவித்து
தோணவே உபதேசஞ் செய்வீரென்று
 தோற்றமுடன் அவர்பாதம் பணிவீர்தாமே 382

பணியவே உன்மீதிற் கருணைகூர்ந்து
 பட்சமுடன் ஞானமென்ற பொருளையப்பா
அணியணியாய் சித்தர்முனி செய்தவேதம்
 அப்பனே உந்தமக்கு வோதுவார்கள்
மணிபோன்ற ஞானமென்ற பாலையப்பா
 மார்க்கமுட னுபதேசஞ் செய்வார்பாரு

கணிதமெனுங் கணக்கறிந்து உறவறிந்து
கண்மணியே சிதாபாசப் பொருளைக்கேளே 383

பொருளான பொருளதுவு மேதென்றாக்கால்
பூவுலகில் பொய்யான பொருளுமல்ல
அருளான மோட்சமென்ற பொருள் தானப்பா
அப்பனே எந்தனுக்கு அன்புகூர்ந்து
இருளான காட்டகத்தை விட்டகற்றி
எழிலான ஞானமென்ற பொருளைத்தானும்
மருளாம லெந்தனுக்கு உபதேசித்து
மார்க்கமுடன் நற்பதத்தைக் காட்டுவீரே 384

காட்டவென்று கேட்கையிலே யுந்தமக்கு
கைலாச சட்டமுனி தம்மைப்போல
தாட்டிகமாய் உடல்பொருள்க ளாவியந்தம்
சட்டமுட னுந்தமக்குத் தாரோமென்பார்
வாட்டமுடன் சிவயோகஞ் செய்யுமென்பார்
வண்மையுடன் சமாதிமுகங் கொள்ளுமென்பார்
நீட்டமுடன் காயாதி கொள்ளுமென்று
நிட்சயமாய்க் கற்பமது தருவார்தாமே 385

தருவான கற்பமது யேதென்றாக்கால்
தகமையுள்ள சட்டமுனி நாதர்தானும்
திருவான கிரேதாயி னுகத்திலப்பா
தீர்க்கமுடன் கொண்டதொரு கற்பமாகும்
பருவமுடன் வயததுவை வளர்க்குங்கற்பம்
பாங்கான நாதாக்கள் கொண்டகற்பம்
அருமையுள்ள காயாதி கற்பந்தன்னை
அப்பனே உந்தமக்கு ஈவர்பாரே 386

பாரேதான் மூன்றுயுகங் கொண்டகற்பம்
பாலகனே மூன்றுமுறை சமாதிகற்பம்
நேரேதான் சட்டமுனி யுண்டகற்பம்
நெடிதான கற்பமதை உனக்கேயீவார்
சீரேதான் சித்துமுனி ரிடிகள் தாமும்
சிறப்பாகக் கொண்டதொரு கற்பமாகும்
ஆரேதா னுந்தமக்குத் தருவார்பாரு
அப்பனே கும்பமுனி கடாட்சந்தானே 387

தானான கற்பமதைக் கொண்டபோது
தகமையுடன் மனம்பொங்கி கொர்ச்சிடாதே

மானான கோபமதைத் தவிர்க்கவேண்டும்
மனோன்மணியாள் கடாட்சமதைப் பெறவேவேண்டும்
தேனான கும்பகத்தி லிருந்துகொண்டு
தேஜொளிவின் சின்மயத்தை அறியவேண்டும்
பானான பரஞ்சுடரைப் போற்றியேதான்
பலகாலும் யோகநிலை நடத்துவீரே 388

நடத்துகையில் காமமென்னுங் குரோதந்தன்னை
நலமுடனே நீக்குதலே நன்மையாகும்
தொடர்ந்துமே மாச்சரியம் மதங்கள்தன்னை
தோற்றமுடன் லோகமதை நீக்கவேண்டும்
அடர்ந்துமே ஞானப்பால் தன்னைத்தானும்
அப்பனே மனவாக்கா லறியவேண்டும்
சடந்தனையே வழியாமல் நிலைநிறுத்தி
சட்டமுட னிருப்பதுவே சமாதியாமே 389

ஆமேதான் சமாதிமுக மிருக்கும்போது
அப்பனே மதங்கொண்டு கெர்ச்சிக்காதே
நாமேதான் சித்துமுனி ரிடியார்பாதம்
நன்மையுடன் பதாம்புயத்தைப் பணிந்துபோற்றி
தாமேதா னவர்தமக்கு வஞ்சலித்து
தன்மையுடன் ஞானமென்ற பொருளைவாங்கு
ஆமேதான் மனதுவந்து உந்தன்மீதில்
அப்பனே கிருபையருள் புரிவார்தானே. 390

புரிவாரே ஞானோப தேசந்தன்னை
புகழ்பெறவே யுன்மீதில் வினயங்கொண்டு
சரியான சீஷனென்று சாங்கோபித்து
சட்டமுடன் கருவிகர ணாதியந்தம்
பரிவுடனே உந்தமக்கு வோதுவார்கள்
பாரினிலே உனைக்கண்ட மாண்பரெல்லாம்
திரிலோக நாயனென்று வவமதித்து
தீர்க்கமுட னுன்பாதம் தொழுவார்தாமே 391

தொழுதுமே உந்தனையு மதிப்புற்றோங்கி
தோறாம லுபநிடதம் ஓதுவார்கள்
முழுதுமே பரிபாஷை கற்பமெல்லாம்
மூதுலகில் விட்டகுறை யனைத்துஞ்சொல்வார்
தழுவியே உந்தனையு மாசீர்மித்து
சட்டமுடன் நற்சீஷ னென்றுகூறி
பழுதுபடா மேனியனே புலத்தியாகேள்

பண்புடனே வேதைவழி கூறுவாரே 392

கூறுகையில் வையகத்து சித்தரெல்லாம்
கொற்றவனே உந்தனையும் மதிப்புகொண்டு
ஆறுதலாய் வேதவழி ஞானப்பாலை
அப்பனே ஊட்டியல்லோ கருணைகொள்வார்
மாறுபடா வேகமதற் கற்பமீவார்
மன்னவனே சதாகால மிருக்கவென்று
நீறுடைய வெண்ணீறு முந்தமக்கு
நீதியுடன் குருமொழியால் தருவார்பாரே 393

பாரேதான் ராஜமுடி வேந்தரெல்லாம்
பாலகனே உந்தனையும் மதிப்புகொண்டு
நேரேதான் முன்னின்று வினயங்கூறி
நேர்மையுள்ள சீஷவர்க்க மென்றுசொல்லி
தீரேதான் கும்பமுனி சீஷரென்று
திரளான மனுகோடி வஞ்சலித்து
சேரேதான் கிட்டிருந்து யேவல்செய்வார்
செம்பவள புலத்தியனே திண்ணம்தானே 394

திண்ணமா மனுவேந்தர் வர்க்கத்தோரும்
திரளான வையகத்து மாந்தர்யாவும்
கண்ணபிரான் றனைப்போலே யுனைமதித்து
காசினியில் அதிதங்கள் மிகவேசெய்வார்
எண்ணறிய நற்பொருளை அறிந்தோனென்று
எழிலான மாந்தரெல்லா மொன்றாய்க்கூடி
வண்ணமுடன் பதாம்புயத்தைப் போற்றிசெய்து
வளமையுடன் சதாகாலத் துதிப்பார்காணே 395

காணவே இன்னமொரு வதிதஞ்சொல்வேன்
கன்மணியே புலத்தியனே கவிராஜேந்திரா
மாணமருங் கல்வியுள் ளரிடிகள்யாவும்
மண்டலத்தில் தமைப்போல சித்தரென்று
நாணவே மனங்களித்த மனதுவந்து
நற்சீடன் புலத்தியனா ரென்றுகூறி
வேணபடி இன்னமிகு ஞானப்பாலை
வேட்கையுடன் ஊட்டிவழி மேவுவாரே 396

மேவுவார் ஞானமென்ற சாகரத்தை
மோதினியில் நாதாக்கள் மறைத்தபாலை

தாவுபுகழ் புலஸ்தியனே உந்தமக்கு
　　தாரணியில் சதாகாலம் நிர்த்தஞ்செய்வார்
சாவுவது வொருக்காலு மில்லையப்பா
　　சாங்கமுடன் காயாதி கற்பமீவார்
நாவுதவ ராமலல்லோ புலஸ்தியாகேள்
　　நற்சீஷ னென்றல்லோ மதிப்புகொள்ளே　　397

அகத்தியர் புலத்தியருக்கு திருமந்திரம் ஓதியது

கொள்ளவே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
　　கூறான புலத்தியனே குணமுள்ளானே
தெள்ளுதமிழ் வாணர்முதல் போற்றும்பாலா
　　தெளிவான கண்மணியே செப்பக்கேளும்
வள்ளலுயர் சித்துமுனி ரிடியார்தாமும்
　　வளமுடனே உபதேச மிகவுஞ்செய்தார்
உள்ளதொரு திருமந்திர மார்க்கந்தன்னை
　　உத்தமனே யோதாமல் மறந்திட்டாரே　　398

மறந்தாரே சித்துமுனி அடியார்தாமும்
　　வையகத்தில் திருமந்திர மார்க்கந்தன்னை
திறந்துமே கூறியதோர் தட்சணாயன்
　　தீர்க்கமுடன் மந்திரத்தை மறைத்துப்போட்டார்
கரந்தபால் தானிருக்குந் தண்ணீருண்ட
　　கதைபோலே சித்தர்முனி கழறினார்கள்
மறவான மந்திரத்தை மறைத்துப்போட்டு
　　மன்னவனே ஞானப்பா லூட்டினாரே.　　399

ஊட்டினார் திருமந்திரங் கூறவில்லை
　　உத்தமனே உந்தனக்கு சொல்வேனப்பா
தாட்டிகமாய்த் திருமந்திர வேதைமார்க்கம்
　　தண்மையுடன் உந்தனுக்கு கூறுவேன்யான்
வாட்டமுடன் திருமந்திர வாராதாரம்
　　வ்ன்மையுடன் போகும்வகை செப்பக்கேளீர்
வாட்டமுடன் தேகமென்ற காயக்கூறு
　　வளமுடனே செப்புகிறேன் வண்மைபாரே.　　400

வண்மையாம் பஞ்சபூத வாராதாரம்
　　வளம்பெரிய கோட்டைவழி வாசல்சொல்வேன்
உண்மையாய்ப் பூதமென்றா லஞ்சுபூதம்
　　உத்தமனே யதிலொடுக்கம் உகந்துபாரு

திண்மையாய்ப் பிருதிவினி லப்புதங்கி
திறமான அப்புதனில் வாய்வுதங்கி
நண்மையுடன் வாயுவினில் தேய்வுதங்கி
நலமான தேய்வதனி லாகாசந்தானே 401

தானான பஞ்சமென்ற பூதந்தானும்
தாக்குடனே வொன்றுக்கு ளொன்றுமாகி
தேனான பூதமது வொன்றோடொன்று
தேஜொளிவின் சின்மயத்தி லொடுக்கமாகி
கோனான வாசலென்ற வாராதாரம்
கொற்றவனே பூதமதில் மேலேநின்று
மானான வாரா தாரப்பெருமை
மன்னவனே சித்தர்முனி மறைத்தார்பாரே 402

பாரேதான் அண்டபிண்ட மேதென்றாக்கால்
பாங்கான வாரா தாரந்தானென்று
சேரேதான் பிண்டநிலை யறிவதற்கு
ஜெககோடி மனுரிடிகள் கண்டாராய்ந்து
வேரேதான் சமாதிநிலை பூண்டுகொண்டு
வெவ்வேறாய் வாசிதனி லொடுக்கமாகி
நேரேதான் கைவேறு கால்வேறாக
நீணிலத்தில் சமாதிமுகங் காண்பித்தாரே 403

காண்பித்தார் வையகத்தார் மயங்கவென்று
காசினியில் சித்தர்வெகு ஜாலஞ்செய்தார்
ஆண்பிள்ளை சிவயோகக் காரனென்றும்
ஆராதாரத் தினைக் கண்டேனென்றும்
வீண்பேசி வாய்குளறி மதங்கள்கூறி
விருப்பமுடன் பஞ்சபூத மறிந்தோன்போலும்
தாண்மையுடன் மனதுவந்து மனங்களித்து
தாரணியில் மாண்பர்களை மயக்குவானே 404

மயக்குவான் தவநிலையைக் கடந்தோன்போலும்
மகத்தான வாசிவழி யறிந்தோன்போலும்
தயங்கியே சிதாபாசக் கலையறுத்து
தாடாண்மைக் கொண்டதொரு தவசிபோலும்
நயம்படவே வார்த்தையது மிகவும்கூறி
நற்றவசிக் குறியதொரு ஜெபமும்பூண்டு
செயம்பெறவே விருதுமணி கையில்கட்டி
ஜெகதலத்தில் யோகியென்று செப்புவானே 405

யோகியென்றால் யோகியல்ல போகியாவான்
உற்றகலை உணராத கருமிமாண்பன்
யூகிமனங் கொண்டவன்போ லுறுதிபேசி
உதாசினங் கொண்டவன்போல் உகமைகூறி
போகியென்ற குரோதமெனும் வலையிற்சிக்கி
பொங்கமுடன் காயாதி கொண்டோன்போலும்
தீகிடக்கக் கர்ப்பூர தீபந்தன்னை
தீர்க்கமுடன் உபவாசங் கொள்வான்காணே 406

காணவே சமாதிமுக மிருந்துகொண்டு
கைலாச தவநிலையைக் கண்டான்போலும்
பூணவே யாங்கார கெர்ச்சிப்பாலே
புகழான வையகத்தோர் மயங்கவென்று
நீணவே மூச்சுதனை உள்ளடக்கி
நீணிலத்தில் செத்தசவந் தன்னைப்போலும்
வேணதொரு பொய்வேடம் மிகவும்பூண்ட
வேகமுடன் ஜாலமது புரிவார்தானே 407

தானான புலஸ்தியனே தருமவானே
தாரணியில் வெகுகோடி மாண்பர்தானும்
மானான மகதேவர் தன்னைக்காண
மகத்தான ஞானப்பா லுண்டோன்போலும்
தேனான மனோன்மணியாள் சோதிதன்னை
தெளிவுடனே கண்டவன்போல் யூகம்பேசி
கோனான குருவிருக்க தவமிருக்க
கண்டபடி பினத்திடுவான் மட்டைதானே 408

மட்டையாஞ் ஞானியென்றும் யோகியென்றும்
மகத்தான தத்வநிலை கடந்தான்போலும்
சட்டமுனி நாதரைப்போல் சமாதிகொண்டு
சாயுச்சிய பதவிநிலை கடந்தோன்போலும்
சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒட்டாதென்ற
சொல்லதுபோல் ஞானமென்ற மதியங்கொண்டு
விட்டகுறை யிருந்தல்லோ வாய்ந்ததென்று
விருப்பமுடன் குளரிடுவ ரனேகம்பேரே 409

பேரான நூலறிந்த ஞானிபோலும்
பெருமையுள்ள திருமந்திர மறிந்தோன்போலும்
தூரான பவக்கடலை விட்டகற்றித்
துப்புரவாய்த் தவக்கடலைக் கண்டோன்போலும்

நேரான குருவினது உபதேசங்கள்
நெடுங்காலங் கண்டறிந்த ஞானிபோலும்
சீரான புலஸ்தியனே உறுதிசொல்வார்
தீர்க்கமுட னொருக்காலும் நம்பொண்ணாதே 410

ஒண்ணாத திருமந்திர மறியவென்றால்
உத்தமனே தேகநிலை அறியவேண்டும்
வண்ணமுடன் காயாதி கொள்ளவேண்டும்
வளமான மூப்புதிரை யகற்றவேண்டும்
எண்ணறிய நற்பொருளை அறியவேண்டும்
யேகாந்த உட்பொருளைக் காணவேண்டும்
திண்ணமுடன் சிதாபாசக் கலையறுத்து
சிக்கறுத்து வேரறுத்து தெளிவில்நில்லே 411

நிற்கையிலே தேவிவந்து நிர்த்தஞ்செய்வாள்
நிலையான பதப்பொருளை காட்டுவான்பார்
துற்கையெனும் பிடாரிமுதல் முன்னேநிற்கார்
துய்யபரஞ் சுடர்ப்பொருளைக் காணலாகும்
அற்பமென்று நினையாதே ஞானப்பாலை
அதைவிட்டால் கெதியில்லை மோட்சமில்லை
சொற்பமெனும் பொருளல்ல திருமந்திரந்தான்
சுந்தரனே புலஸ்தியனே மகிமைகேளே 412

கேளப்பா திருமந்திர மெண்ணாயிரந்தான்
கெடியான திருமூலர் சொன்னாரப்பா
நாளப்பா போகாமல் திரே தாயுகத்தில்
நலமான பிரளயத்தில் முழுகலாச்சு
பாளப்பா வனேகம்பேர் சித்தர்செய்த
பாங்கான திருமந்திர முழுதுமல்லோ
சூளப்பா பிரளயங்கள் வந்தபோது
சுந்தரனே புலஸ்தியனே முழுகலாச்சே 413

ஆச்சப்பா திரேதாயி னுகத்தில் தானும்
அற்புதமாங் கிரந்தங்க ளனேகங்கோடி
மூச்சடங்கி சமாதிதனி லிருந்தசித்து
முனையான தேவரிடி கோடாகோடி
மாச்சலது வாராமல் சமாதிபீடம்
வைத்திருந்த கிரந்தங்க ளனேகங்கோடி
ஆச்சரிய மாகவல்லோ போகநாதர்
அப்பனே குளிகைகொண்டு உரைத்தார்தானே 414

காணவே அவர்சொன்ன மொழியினாலே
கண்டறிந்தேன் வையகத்தி லதிசயங்கள்
தோணவே குளிகைகொண்டு சமாதிசுத்த
தோறாமல் வந்ததொரு வல்லபத்தால்
நாணவே மாண்பரெல்லாந் தானடுங்க
நலமாகத் தானுரைத்த நீதிவண்ணம்
பாணம்போல் யானறிந்தேன் சித்துபாலா
பட்சமுட னுந்தனுக்கு ஒதுவேனே 415

ஓதுவேன் திருமந்திர வேதந்தன்னை
உத்தமனே புலஸ்தியரே யின்னங்கேளீர்
சேதுபதி பூசைமுகம் ஸ்ரீராமன்றான்
சிறப்புடனே செய்ததொரு வாசீர்மத்தை
பாதிமதி சடையணிந்த தம்பிரான்றன்
பரவொளியின் ஜெகவொளியைக் கண்டோன்போலும்
நீதியுடன் சாத்திரங்க ளிதிகாசங்கள்
நிஷ்களங்க மாகவல்லோ கூறலாச்சே 416

கூறியதோர் திருமந்திர மகிமைதன்னைக்
குவலயத்தில் சித்துமுனி ரிடிகள்கூடி
தேறியதோர் சாத்திரங்கள் புராணவாசம்
தெளிவுடனே கட்டுமுறை யனேகஞ்சொன்னார்
நீறிடவே வெண்ணீறின் திருமந்திரார்த்தம்
நிஷ்களங்க மாகவல்லோ வினயங்கூறி
தேறியதோர் கண்ணபிரான் திருமந்திரங்கள்
தேற்றமுடன் வெகுகோடி உரைத்தார்பாரே 417

பாரேதான் பல்லாண்டு பல்லாண்டாக
பாடிவைத்தார் புராணநூற் காரரெல்லாம்
நேரேதான் ஞானோப தேசஞ்சொல்லி
நேர்மையுடன் சிவபதத்தைக் காட்டவில்லை
கூரேதான் நற்கூரை யேறியல்லோ
கொற்றவனே கோழிபிடி யாதவன்றான்
தீரேதா னுபதேச உண்மையாலே
தீர்க்கமுடன் ஞானமென்ற வழிசொல்வானோ 418

வழியான வழியதுவுஞ் சொல்லமாட்டார்
வளமையுடன் ஞானமென்ற பால்தான்சொல்வார்
மொழிபோன்ற சாத்திரத்திற் கூறினாற்போல்
முனையான வேதமதைக் கூறுவார்கள்

பழியான பழிப்புமிக சொல்வாரப்பா
பாலகனே பாரினிலே யனேகமாண்பர்
சுழிமுனையில் ஞானப்பா லறியவென்று
துறைமுறைபோ லோதிடுவா ரனேகம்பேரே *419*

பேரான ஞானப்பா லறியவென்றால்
பேருலகில் வெகுபாடு மெத்தப்பாடு
சீரான சுந்தரனார் சொன்னமார்க்கம்
ஜெகதலத்தில் வெகுசுருக்கம் மிகநெருக்கம்
நேரான திருமந்திரம் நெடுங்காலந்தான்
நேர்மையுடன் கற்றறிந்த சுந்தரன்தான்
பூரான மாகவல்லோ குறுக்கெடுத்து
புகட்டினார் திருமந்திரம் புகட்டினாரே *420*

புகட்டியதோர் மந்திரங்க ளின்னஞ்சொல்வேன்
பாலகனே புலஸ்தியனே பண்புள்ளானே
திகட்டாத திருமந்திர மாயிரந்தான்
தீர்க்கமுடன் சீஷனுக்கு உபதேசித்தார்
சகமுழுதுஞ் சித்துமுனி அறிவாரப்பா
சாங்கமுட னுபதேச முறைத்தன்மை
புகட்டியதோர் திருமந்திரந் தன்னைத்தானும்
புகழ்நீக்கி இகழாக்கி புரிந்தார்காணே *421*

சுந்தரானந்தர் சீஷனுக்குபதேசித்த திருமந்திரத்தை தடுத்தாட் கொண்டது

காணவே புலஸ்தியனே இன்னஞ்சொல்வேன்
கண்மணியே கருவிளமே கருதக்கேளீர்
தோணவே சுந்தரனார் நெடுங்காலந்தான்
தோறாம லுபதேசஞ் செய்தமந்த்ரம்
வேண்படி தாமறிந்த சீஷர்தாமும்
வெகுகோடி பான்மையெல்லா மோதிவைத்தார்
நாணவே யவர்தமக்கு வஞ்சங்கூறி
நலமுடனே வெகுகால மிருந்தார்தானே *422*

தானான சுந்தரா னந்தரேசர்
தன்மையுள்ள சீடனுக் குபதேசித்த
கோனான திருமந்த்ர ஞானப்பாலை
கொற்றவனார் தாமறிந்து இறுமாப்பாகி
மானான மகதேவர் குருவுக்கொப்பாய்
மார்க்கமுட னோதிவைத்த திருமந்த்ராத்தம்

பானான சூரியன்போ லமுர்தங்கொண்டு
பராமரிக்கை யாகவல்லோ பழித்தார்தாமே 423

பழியான சுந்தரர்மேல் பகடிகூறி
பாருலகில் வெகுபேர்க ளறியவேண்டி
வழியான தடமுறைகள் காணாமற்றான்
வளமுடனே நெடுங்கால மிருந்துமல்லோ
அழியாத கற்பமது யானுங்கொண்டு
அப்பனே வையகத்து சித்தன்போலே
சுழிமுனையில் கும்பகத்தை மேலேநாட்டி
சுந்தரன்மேல் பரியாசம் பாலித்தாரே 424

பாலித்தார் சீடனுமே மமதைகொண்டு
பாரினிலே குருவுக்குத் துரோகங்கூறி
வாலிபனா யிருந்ததொரு வலுமையாலே
வளம்பெரிய ஞானமெலாந் தாழதாக்கி
மூலிவகை அறிந்ததொரு தன்மையாலே
முறையான கௌதமங்கள் மிகவுங்கூறி
வேலிக்குப் போட்டமுள் காலிற்றைத்த
வினைபோன்ற கதைபோலே முடியலாச்சே 425

ஆச்சப்பா குருவுக்குஞ் சீடனுக்கு
மலங்கார மானதொரு வன்மையெல்லாம்
மாச்சலுடன் கற்றறிந்து மகிமைகூறி
மானிலத்தில் வெகுகோடி துரோகஞ்செய்து
ஏச்சலுடன் குருநிந்தை செய்தபேர்கள்
எழிலான தவநிலையைப் பழித்துமல்லோ
மூச்சடங்கி மானிலத்தில் மாண்டாரப்பா
மூதுலகில் கணக்குண்டோ யில்லைபாரே. 426

தவரிடி குட்டரோகத்தை நீக்கி ஞானமிர்தங்கொடுத்ததை அகத்தியர் புலத்தியருக்குக் கூறல்

இல்லையே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
எழிலான புலத்தியனே இன்னங்கேளீர்
தொல்லையெனும் பிறவியென்ற மாற்றந்தன்னை
தோறாமல் பற்றறுத்த ஞானிதானும்
வல்லபமாங் கொண்டதொரு சித்துமல்லோ
மகாரோகி கசரோகி குட்டரோகி
எல்லைதனை விட்டுவந்து கானகத்தில்
எழிலான தவயோகஞ் செய்தார்தானே 427

தானான செங்கதிரோன் உதிக்கும்நாடு
தாக்கான மலைநாடு மழைநாடாகும்
கோனான எனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் சமாதிமுகங் காணவென்று
மானான மகதேவர் பதாம்புயத்தை
மார்க்கமுட னெளியேனுங் கண்டுமல்லோ
பானான பரமகுரு ரிடியார் தன்னை
பட்சமுட னாதரிக்க மனங்கொண்டேனே 428

கொண்டுமே ரிடியாரை யாதரிக்க
கொற்றவனே புலத்தியரே சொல்வேனப்பா
தண்டுளவ மாலையணி கிருஷ்ணனைப்போல்
தாரணியில் கீர்த்திபெற்ற யோகியல்லோ
திண்டிரைசூழ் நந்தவனந் தான்கடந்து
திருப்பாலின் கடலோரம் மேற்பாகத்தில்
கண்டேனே தவரிடியார்க் குட்டரோகி
கடுந்தவசி கசரோகி இருந்தார்காணே 429

காணவே தவயோகி என்னைக்கண்டு
கடுந்தவசித் தானெழுந்து வஞ்சலித்து
நாணவே கரங்குவித்து முடிகள்சாய்த்து
நளினமுட னெந்தனது சேர்வைகண்டு
பூணவே தென்பொதிகை முனியாரென்று
புகழான ஞானமதில் தானறிந்து
வேணவே யெந்தனது விடரோகத்தை
வித்தகனே நிவர்த்திசெய்ய வென்றிட்டாரே 430

வென்றிடவே அடியேனு மனதுவந்து
வேழ்க்கைசெய்த ரிடியாரை யாதரிக்க
குன்றான மலைதேடி குகைகள்தேடி
கூறான மலைநாடு தானடர்ந்து
சென்றேனே வினைதீர்க்கு மூலிதன்னை
சிறப்புடனே இருக்குமிடந் தானறிந்து
நன்றியுடன் தவசியரை யாதரிக்க
நலமான மூலியது பார்த்திட்டேனே 431

அகத்தியர் திருப்பாற்கடலில் வடபாகத்தில் வினைதீர்க்கு மூலிகண்டது

பார்த்தேனே புலத்தியரே பண்புள்ளானே
பகலிரவு சூரியனு மிராவேயாகும்

தீர்த்தமுட னிராவதுவும் பகலேயாகும்
திகழான சூரியனார் பிறக்கும்நாடு
கார்த்திருந்தேன் பகலிரவு வருகுமட்டும்
கருவான மூலிதனைக் கண்டறிந்தேன்
சேர்த்துமே யான்பறிக்குங் காலந்தன்னில்
சிறப்பான மூலியது கூறுவேனே 432

கூறுவேன் மகிமையது என்னவென்றால்
கொடிதான சித்தருட மூலியாகும்
தேறியதோர் வடபாக சித்தரங்கே
திகழான சதகோடி சூரியன்போல்
சீறியே எனைக்கண்டு மனஞ்சினந்து
திறமையுள்ள அகத்தியரோ யாரென்றென்ன
மாறிடவே வார்த்தையது உதாசினங்கள்
மார்க்கமுட னுந்தாரங் கேட்டிட்டாரே 433

கேட்டவுட னடியேனும் மனங்கலங்கி
கெடியான வசுவனியாந் தேவர்தம்மை
நீட்டமுட னென்மனதில் தானினைத்து
நெடிதான ரிடியாரின் கூட்டத்தார்க்கு
தாட்டிகமா யசுவனியாஞ் சீடனென்று
தாடாண்மை கொண்டல்லோ யானுரைத்தேன்
கூட்டமுடன் ரிடிகளெல்லா மெந்தனுக்கு
கொப்பெனவே யஞ்சலிகள் செய்திட்டாரே 434

செய்துமே யெந்தனுக்கு உபசாரங்கள்
செம்மலுடன் மூலிதனைக் காண்பதற்கு
துய்யநல்ல குகைதனிலே கொண்டுசென்று
துப்புறவாய்த் திருமந்தர மிகவேயோதி
பையவே மூலிதனைக் கைகொடுத்து
பட்சமுடன் மகிமைதனைத் தானுரைத்து
வெய்யவே மகுத்துவங்கள் காட்டினார்கள்
வேதாந்த சித்துமுனி ரிடியார்தானே 435

தானான மூலியது மகிமைசொல்வேன்
தன்மையுள்ள புலஸ்தியனே தார்வேந்தாகேள்
கோனான யிலைதனையே பறித்தாரல்லோ
கொற்றவனே கிளையதுவும் வணங்கியேதான்
தேனான யிலையதுவும் முகத்தில்வீசும்
தெளிவான மூலிகண்ட போதேயப்பா

பானான பரஞ்சுடர்போல் விஸ்வரூபா
பாலகனே முகத்தெதிரே காணலாமே 436

காணலா மிலையதுவுங் கையில்பட்டால்
கனகம்போல் செங்கரமு மிருக்கும்பாரு
பூணவே நரைதிரையு மற்றுமல்லோ
புகழான செங்கதிரோன் மேனிதானும்
நீணவே தங்கமென்ற வர்ணம்போலே
நிமிஷத்தில் மிருந்த விடத்திலப்பா
தோணவே எந்தனுக்கு மரத்திலப்பா
தோற்றவில்லை எந்தன்மதி மயங்கலாச்சே 437

மயங்கியே சிலநேர மங்கிருந்தேன்
மகத்தான ரிடிகளெல்லா மெந்தனுக்கு
பயந்ததொரு யென்மீதில் பட்சம்வைத்து
பாலகனே தைரியமும் மிகவுங்கூறி
தியங்காமல் மூலியுட சாபஞ்சொல்லி
தீர்க்கமுட னுபதேசந் தாமுரைத்து
நயம்படவே எந்தனுக்கு யிதவுகூறி
நாதாந்த சித்தொளிவு மறைந்திட்டாரே 438

மறைந்தாரே சித்துமுனி ரிஷிகளெல்லாம்
மானிலத்தி லெந்தன்முன் காணாமற்றான்
திறந்துமே நேத்திரத்தில் கண்டேனங்கே
திகழான சித்துமுனி யாருங்காணேன்
சிறந்ததொரு மூலிதனை யானெடுத்து
சீரான சிவயோகி ரிடியாருக்கு
குறைவான ரோகமதைத் தீர்ப்பதற்கு
கொற்றவனே மூலியது கொண்டிட்டேனே 439

கொண்டுமே ரிடியாரின் பக்கல்சென்றேன்
கொடியதொரு யாகமது செய்யும்போது
அண்டியே கசரோகி குஷ்டரோகி
அன்பான யாகமது செய்யும்போது
திண்ணமுடன் மூலிதனை சிவயோகிக்கு
தீர்க்கமுடன் றான்கொடுத்து விதியுஞ்சொன்னேன்
வண்ணமுள்ள மூலியென்று மனதுவந்து
மயங்காமல் மூலிதனை யருந்திட்டாரே. 440

அருந்தியே மூன்றுநா ளாறுவண்ணம்
அப்பனே காராவின் பாலையுண்டு

இருந்திட்டார் சிவயோக நிலையிலப்பா
நிலையான கசரோகி குட்டரோகி
வருந்தியே எந்தனுக்கு உபசாரங்கள்
வளமுடனே செய்துமல்லோ மனங்களித்து
பொருந்தவே போதமிகத் தானுரைத்து
பொங்கமுடன் உபதேசஞ் செய்தார்தானே 441

தானான உபசார வார்த்தை சொல்லி
தன்மையுட னாகமங்கள் மிகவுங்கூறி
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
தோற்றமுட னெந்தனுக்குக் கோடாகோடி
மானான மகுத்துவங்க ளிதிகாசங்கள்
மன்னவனே கூறியது லக்கோயில்லை
வேனான உலகவதி சயங்களெல்லாம்
வித்தகனே யெந்தனுக்கு உரைத்தார்பாரே 442

பாரேதான் மூலியது கொண்டபோது
பாங்கான திரேகமது என்னசொல்வேன்
சேரேதான் சிவந்ததொரு முருக்கம்பூபோல்
செங்கண்மால் வடிவம்போல் சொரூபமாகி
வேரேதான் ரூபமது மாறியல்லோ
வேகமுடன் காயாதி கற்பமூலி
தீரேதான் வினைதீர்த்த மூலியாலே
திகழான யோகிசர் மகிழ்ந்திட்டாரே 443

இட்டாரே பரமகுரு யோகிதானும்
எழிலுடனே எந்தனுக்கு மனதுவந்து
சட்டமுடன் மூன்றுயுக வதிசயங்கள்
தார்வேந்தர் புலஸ்தியரே உரைத்தார்பாரும்
விட்டகுறை இருந்ததினா லபிக்கலாச்சு
வேதாந்தத் தாயினது கிருபையாலே
திட்டமுட னசுவனியாந் தேவராலே
தீர்க்கமுட னெந்தனுக்கு வாய்க்கலாச்சே 444

ஆச்சப்பா புலத்தியனே யனந்தமார்க்கம்
ஆகாகா வையகத்து சித்துதானும்
மூச்சடங்கிப் போனதொரு கோடிசித்து
முனையான தேவரிடி கணக்கோயில்லை
பாச்சலுட னெந்தனுக்கு உபதேசங்கள்
பகர்ந்தவர்க ளாறுமில்லை பாரின்மீது
மாச்சலது வாராமல் சித்துதாமும்
மகதேவ ரெந்தனுக்கு வோதினாரே. 445

ஓதினதோர் வையகத்து மகிமையெல்லாம்
உத்தமனே புலத்தியனே சொல்லவென்றால்
ஆதிசேடன் றன்னாலு முடியாதப்பா
அப்பனே அருங்காதை சொல்லொண்ணாது
நீதிவழு காதுமக்கு உரைப்பேன்யானும்
நின்மலனே நீதியுள்ள நிலைவீராகேள்
சோதிமணி முடியரசர் கண்டாலல்லோ
சுந்தரனே உந்தனையும் வருத்துவாரே 446

வருத்துவார் லோகத்தின் மகிமையெல்லாம்
வாய்ப்பேச்சாய் வன்பேச்சாய் வகுக்கவேண்டும்
திருத்தமுடன் கண்டறிந்து மகிமை யெல்லாம்
திகழான வையகத்தி லிறைப்பார்பாரு
பொருத்தமுடன் லோகமெலாஞ் சித்தாய்ப்போகும்
பொன்னவனே மன்னவனே புகலொண்ணாது
திருத்தமுட னுன்மனதி லுள்ளடக்கி
திகழ்வேந்தா மருமமதா யிருப்பீர்தானே. 447

தானான மருமமதை வெளிவிடாதே
தன்மையுள்ள புலஸ்தியனே தயவுள்ளானே
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தனுக்குச் சொன்னநீதி
மானான மகுத்துவத்தை வெளியிட்டாக்கால்
மன்னவனே லோகமெல்லாஞ் சித்தாய்ப்போகும்
வேனான வெகுமாண்பர் கருமிமாண்பர்
வெகுகோடி சதகோடி இருப்பார்பாரே. 448

பாரேதான் கருமிகளுங் கண்டாலல்லோ
பாருலகி லாரையுந்தான் மதிக்கமாட்டார்
நேரேதான் கோடியிலே யொருவனுண்டு
நேர்மையுடன் கண்டறிந்தால் மதிப்பான்பாரு
தீரேதான் சத்ராதி பகைவருண்டு
திகழான வையகத்தில் நல்லோர்போலும்
சீரேதான் மருமமதை வெளிவிடாதே
வெளியிட்டா லுந்தனையும் மதியார்காணே 449

அகஸ்தியரை புலஸ்தியர் வருந்தல்

காணவே யென்தேவர் யெந்தநாதா
காசினியில் வெகுகோடி சித்தருண்டு
பூணவே யுன்மனம்போ லாரையுந்தான்
பூதலத்தி லடியேனுங் கண்டதில்லை

மாணமருங் கல்வியுள்ள மதியுள்ளோரே
மகத்தான யெந்தனிரு மணியேகேண்மோ
நீணவே வையகத்தி லடியேன்றானும்
நிஷ்களங்க மானவரைக் கண்டிலேனே 450

கண்டிலேன் கலியுகந் தன்னிலையா
காசினியி லெவரேனுங் கண்டதில்லை
உண்டான பொருளெல்லா மெந்தனுக்கு
உத்தமனே யோதிவைத்த புண்ணியத்தால்
அண்டரண்ட சராசரங்கள் உள்ளமட்டும்
ஐயனே யென்குருவே யெண்ணுவேன்பார்
விண்டதொரு பொருளெல்லாம் விரும்பிநீரும்
வித்தகனே தந்தமது செய்வீர்தானே. 451

செய்ததொரு நன்றிதனை யான்மறந்தால்
ஜெகதலத்தி லிறப்புமில்லை பிறப்புமில்லை
வையகங்க ளுள்ளமட்டும் அடியேன்றானும்
மன்னவரே யொருக்காலும் மறப்பதில்லை
துய்யதமிழ்ப் பண்டிதங்கள் கோடாகோடி
துப்புரவாய்ப் பாடிவைத்தார் லக்கோயில்லை
செய்யபுகழ் திருமந்திர முரைத்திட்டாலும்
செப்பேனே மர்மமதை வெளியிட்டேனே 452

வெளியான மருமமதை வையகத்தில்
வெட்டவெளி யாக்கிவைத்தால் சாபங்கூறும்
பழியான பாகமது தேரலாகும்
பார்மீதி லெந்தனுக்குக் கர்மமெய்தும்
தெளிவான நூலிருக்க மதியிருக்க
தேற்றமுடன் பொருளிருக்க குருவிருக்க
அழியாத பரம்பொருளே சுடரேபோற்றி
அப்பனே யொருக்காலும் விள்ளேன்பாரே 453

விள்ளேனே துன்மார்க்கர் தனையகற்றி
வித்தகனே சன்மார்க்கர்க் குரைப்பேன்யானும்
கள்ளமிலா ஞானமென்ற பொருளைத்தானும்
காசினியில் விதியாளி கண்டறிந்து
உள்ளதொரு பொருளறிந்து கருவறிந்து
உத்தமனே மதியறிந்து விதியறிந்து
எள்ளளவுங் கபடமிலா மனமறிந்து
எழிலான உபதேசம் நண்ணுவேனே 454

நண்ணுவேன் முறைபாடு வழிபாடாக
நலமான முறைபாடு தேவபாடு
எண்ணியே தானடைந்து பூதங்கண்டு
எழிலான பதங்கண்டு விதமுங்கண்டு
குண்ணியதோர் முகம்பார்த்து கிரியைபார்த்து
கூரான சிவவேட புனிதம்பார்த்து
திண்ணமுட னேகாந்தங் கண்டுமல்லோ
தீர்க்கமுட னுபதேசம் நாட்டுவேனே 455

நாட்டுவேன் பரிபாஷை சரிபாஷையோடும்
நலமான திருமந்திரம் ஞானபோதம்
தாட்டிகமா யானுரைப்பேன் தருமவானே
தயாநிதியே சற்குருவே தார்வேந்தேகேள்
நீட்டமுட னிதிகாசப் பொருளையெல்லாம்
நின்மலனே நிஷ்களங்க மாகச்சொல்வேன்
வாட்டமுடன் பழிபாவ முட்கொள்ளாமல்
வளமையுடன் மகதேவா யுரைப்பேன்பாரே. 456

உரைத்தாலும் விட்டகுறை யுள்ளோனாக
உத்தமரே யானுரைப்பேன் உலகுளோர்க்கு
திரைகடல்சூழ் கோடியிலே யொருவனுண்டு
திடங்கண்டு மனங்கண்டு தீரங்கண்டு
புரையதுவு மணுவளவும் போகாவண்ணம்
புத்தியுள்ள பூமானாய்ப் புகழுங்கண்டு
உரைமொழிகள் பதில்வண்ணங் கூறாவண்ணம்
உத்தமனே மனதுவந்து உரைப்பேன்காணே. 457

காணவே யெந்தனது குருவேபோற்றி
கைலாச வகஸ்தியரே கும்பயோனி
பூணவே பதாம்புயத்தைத் தொழுதுபோற்றி
பொங்கமுட னென்னாளும் பதவிபோற்றி
தோணவே யெந்தனையுங் கொண்டணைத்து
தோறாமல் ஞானோப தேசமெல்லாம்
வேணபடி யெந்தனுக்கு உபதேசித்து
வித்தகரே பதவிமுகஞ் சொல்லுவீரே. 458

அகஸ்தியர் புலஸ்தியர்க்குத் தாடாண்மைகூறல்

சொல்லவே புலஸ்தியனே புனிதவானே
தொல்லுலகில் விசாரங்கள் மெத்தவுண்டு
நல்லவர்கள் போலிருப்பார் தீயோர்தாமும்
நன்மையுட னிதவுமொழி கூறுவார்கள்

வல்லமையாய் வாயாட்ட மிகவுங்கூறி
வகுப்பான வுதாசினங்கள் மிகவுஞ்சொல்வார்
புல்லறிவா லுந்தனுக்கு இன்னஞ்சொல்வேன்
புகழான புலஸ்தியனே புண்ணியவானே 459

புண்ணியனே யின்னமொரு புனிதங்கேளு
புகழான புலஸ்தியனே வதிதமார்க்கம்
எண்ணரிய தம்பொருளைப் பராபரத்தின்
எழிலான பதப்பொருளை பகுத்துச்சொன்னேன்
நண்ணரிய நற்பொருளே பாதாபோதா
நாதாந்த சித்தொளிவின் மார்க்கமெல்லாம்
வண்ணமுட னுந்தமக்கு வகுத்துச்சொல்வேன்
வளமையுள்ள புலஸ்தியனே வண்மைபாரே. 460

பாரேதான் கோடியுகங் கோடிகாலம்
புரங்கான போதகத்தை நண்ணினாலும்
நேரேதா னவரவராய் மனதுவந்து
நெடிதான பவக்கடலை விட்டகற்றி
சீரேதான் குருவின்மொழி பதாம்புயத்தை
தீர்க்கமுட னண்ணினால் பதவிகிட்டும்
ஆரோதான் சொல்லுவது யாருமில்லை
அப்பனே வசுவனியாந் தேவர்வாக்கே. 461

வாக்கான வாக்கதுவும் பொய்யுமல்ல
வையகத்தி லசுவனியாஞ் சத்தியவாக்கு
நோக்கமுடன் யானறிந்து உந்தமக்கு
நுட்பமுடன் மனங்களித்து யோதினேன்யான்
தூக்கமெனு மிருட்கடலைக் கொண்டபேர்க்கு
துப்புரவாய் ஞானமது துய்மோதான்
ஆக்கமுடன் அருட்கடலைக் கொண்டபேர்க்கு
அப்பனே ஞானம்வந்து வாய்க்குந்தானே 462

பொதிகை மலையிலிருக்குஞ் சித்தர்களுண்டசஞ்சீவி மூலியை அகத்தியர் புலத்தியருக்கு உபதேசித்தல்

தானான யின்னமொரு தன்மைகேளு
தகமையுள்ள புலத்தியனே தயவுள்ளானே
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கோடியுக மலைதனிலே தவமிருந்தார்
மானான மனோன்மணியாள் தரிசனத்தை
மகதேவ ரொருநாளுங் கண்டதில்லை

பானான பராபரியாள் சோதி தன்னை
பார்த்ததுண்டு மனோன்மணியாள் காணார்தாமே 463

காணாமல் வெகுகோடி சித்தரெல்லாம்
காத்திருந்தார் தவநிலையில் மலையின்மீதில்
தோணாமல் சித்துமுனி ரிடிகள்யாவும்
தொழுதிறங்கி ஜோதிதனைக் கண்டுமல்லோ
வீணாகக் காத்திருந்தா லாபமென்ன
வென்றுசொல்லி விட்டுவிட்டார் தரிசனத்தை
வேணதொரு தவயாகங் கண்டுமல்லோ
வேகமுட னசுவனியா ருரைத்தார்பாரே 464

பாரேதான் சித்துமுனி ரிஷியாரேகேள்
பாருலகில் நெடுங்காலம் யானுமல்லோ
நேரேதான் மலைமீதிற் றவமிருந்தேன்
நெடிதான அதிசயங்கள் கோடாகோடி
சீரேதான் யாரேனுங் கண்டதில்லை
சிறப்புடைய மலைமீதிற் தரிசனத்தை
வீரேதான் காண்பதற்கு முடியுமோசொல்
வித்தகனே சித்துமுனி யென்றிட்டாலே 465

என்றுமே மனதுவந்து கேட்டபோது
எழிலான சித்துமுனி ரிஷிகளெல்லாம்
வென்றிடவே யென்மீதிற் பட்சம்வைத்து
விருப்பமுடன் மலையிலுள்ள வதிசயத்தை
நன்றியுடன் மனங்களித்து யிதவுகூறி
நலமுடனே மூலிவகை யாவுஞ்சொல்லி
தின்றிடவே யெந்தனுக்கு மார்க்கங்கூறி
தீர்க்கமுடன் மகிமைதனைக் கூறினாரே 466

சித்தர்கள் நித்திய மூலி

கூறவே தென்பொதிகை மலையிலப்பா
கொப்பெனவே சித்துவர் க்கங் கொண்டமூலி
மாறவே நாளொன்றுக்கு இருபோதப்பா
மகத்தான மூலியது கருமூலிதானும்
ஆறவே மூலியது கொண்டபோது
அப்பனே பசியதுவுங் காண்பதில்லை
மீறவே பசிவந்த போதிலேதான்
மிக்கான மூலியது உண்பார்காணே 467

வாரமூலி

காணவே சிவசித்தர் மகுத்துவங்கள்
கணிதமுடன் வாரத்துக் கொருநாளப்பா
பூணவே மூலியது உண்பார்பாரு
புண்ணியனே பசியதுவுந் தானுமில்லை
நாணவே பசிவந்த போதிலப்பா
நலமான மூலியது கொள்வார்பாரு
வேணபடி தவயாகஞ் செய்துமல்லோ
வித்தகனே மலைமீதி லிருப்பார்பாரே 468

பட்ச மூலி

இருக்கவே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
எழிலான புலத்தியனே இன்புள்ளானே
பொருக்கவே சிலதேவ ரிடிகளப்பா
பொங்கமுடன் மலைமீதிற் றானிருக்கும்
வருக்கமுடன் பட்சத்துக் கொருநாளப்பா
வளமுடன் பசிவந்த போதில்யானும்
பெருக்கமுடன் மூலியது கொள்வாரப்பா
பேரான தவயோகி உண்டுதானே 469

உண்டான சித்துமுனி ரிடிதானப்பா
உத்தமனே பொசிப்பதுவு மாருமில்லை
விண்டிடவே பசிவந்த போதில்தானும்
விருப்பமுடன் மூலியது கொள்வார்பாரு
தண்டகம்போல் பட்சத்துக் கொருநாளப்பா
தாரணியில் மூலிகற்பங் கொண்டுமேதான்
சண்டமா ருதம்போலே தவமிருப்பார்
தவசிமகா ரிடியாரு மென்னலாமே 470

திங்கள் – மூலி

என்னவே புலத்தியனே இயம்பக்கேளும்
எழிலான சித்தினுட மகிமை தன்னை
பன்னவே எவராலுஞ் சொல்லப்போமோ
பாருலகில் நாதாக்கள் கொண்டகற்பம்
மன்னவர்க ளறிந்ததில்லை திங்கள்கற்பம்
மகத்தான சித்ததுவு முண்டகற்பம்
சொன்னபடி பசிவந்த காலந்தன்னில்
சோறாமல் மூலியைத்தான் கொள்வார்தாமே 471

கொள்வாரே திங்களுக்குத் திங்களப்பா
குருவான ரிடியாரு முண்டகற்பம்
எள்ளவும் பிசகதுவும் நேராவண்ணம்
எளிதான மூலிதனைக் காலங்கண்டு
உள்ளபடி காயத்துக் குறுதியாக
உத்தமனே ரிடியாருங் கொண்டகற்பம்
கள்ளமது வாராமல் நெடுங்காலந்தான்
கர்சினியில் வெகுகோடி தவசியாமே 472

ஆறு திங்கள் மூலி

தவசியா மின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
தவனெறியில் வல்லதொரு புலத்தியாகேள்
சிவபதத்தை என்னாளு மனதிலுன்னி
சிறப்புடனே யாகமது செய்யும்வேந்தா
பவக்கடலை விட்டகற்றிப் பாரின்மீதிற்
பட்சமுடன் தானிருந்த புண்ணியபாலா
நவகண்டம் போற்றுகின்ற ரசிதவானே
நாதாக்கள் கொண்டதொரு மூலிகேளே 473

கேளப்பா சித்துமுனி ரிடியார்தாமும்
கெவனமுடன் கொள்ளுகின்ற மூலிதானும்
நாளப்பா நெடுங்காலம் மாறுதிங்கள்
நயமுடனே கொள்ளுகின்ற கற்பமூலி
சூளப்பா பசிவந்த காலந்தன்னில்
சுந்தரனே கொள்ளுகின்ற மூலியாகும்
நீளப்பா மூலியது பெருமைதன்னை
நீதியுடன் சொல்வதற்கு நாவொண்ணாதே 474

ஒண்ணாது வாறுதிங்கள் மூலிதானும்
உத்தமனே நாதாக்கள் கொள்ளுங்கற்பம்
திண்ணமுடன் யாரேனுங் கண்டதில்லை
தீர்க்கமுடன் தென்பொதியில் கண்டேன்யானும்
வண்ணமுடன் மூலியது என்னசொல்வேன்
வளமான சிவராஜ மூலியாகும்
எண்ணரிய மூலியது பெருமைகூற
எவராலுஞ் சொல்வதற்கு நாவொண்ணாதே 475

ஓராண்டு மூலி

நாவான மார்க்கமது இன்னஞ்சொல்வேன்
நளினமுள்ள புலத்தியனே நண்புள்ளானே
பாவாணர் கண்டதில்லை மூலியப்பா
பாருலகில் ராஜர்முதல் கண்டதில்லை
ஆவதுந் தின்றாலுஞ் சாவேயில்லை
அப்பனே சித்தருட மூலியப்பா
கோவேந்தர் கண்டாலும் விடுவாரோசொல்
கொற்றவனே சித்தாதி பெருமைபாரே 476

பாரே தான் ஓராண்டு மூலியப்பா
பாங்கான தென்பொதிகை சார்பிலோரம்
கூரான பாறையின்மேல் படர்ந்திருக்குங்
கொற்றவனே சித்தாதி கொள்ளுமூலி
நேரேதான் பசிவந்த காலந்தன்னில்
நெடிதான மூலிதனைக் கொள்வாரப்பா
ஆரோதா னறிவார்க ளந்தமூலி
அப்பனே காயாதி மூலிதானே 477

மூலியாஞ் சித்தருட மகிமைபோக்கு
மூதுலகில் கண்டறிவா ராறுமில்லை
வாலிபத்தைத் தான்கொடுக்கு மூலியப்பா
வையகத்தி னெடுங்கால மிருக்கலாகும்
வேலியெனுங் கொடிவேலி சித்தர்மூலி
விண்ணாடர் மண்ணாட ரறியாமூலி
மூலிதனைக் கண்டவர்க ளாருமில்லை
முனையான கொடிவேலி கருவேலிதானே 478

கருவான மூலியது கொண்டபோது
காசினியில் நெடுங்கால மிருக்கலாம்
திருவான மனோன்மணியைக் காணலாகும்
தீர்க்கமுட னற்பதவி கிட்டும்பாரு
சருமமென்ற சடலமதில் பிணியேயில்லை
தகமையுள்ள புலத்தியனே தருமவானே
மருமமுடன் பசிவந்த காலந்தன்னில்
மகத்தான நாதாக்க ளுண்பார்தானே 479

ஈராண்டு மூலி

தானான புலத்தியனே தருமவானே
தகமையுள்ள கண்மணியே கருதக்கேளும்

கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தனுக்குச் சொன்னநீதி
பானான மூலியது யென்னசொல்வேன்
பாலருகி வீராண்டுக் கொருதரந்தான்
மானான மகாரிடிகள் கொள்ளுமூலி
மகத்தான மூலியுட பெருமைகேளே 480

பெருமையா மலைதனிலே யிருக்குஞ்சித்தர்
பேரான தவரிடிகள் முனிவர்தாமும்
அருமையாய்ப் பசிவந்து நேர்ந்தாலும்
அப்பனே யுண்ணுகிற மூலியாகும்
வெருமையாய் மற்றோர்க்கு கிட்டாதப்பா
வேதாந்தத் தாயினது அருளும்வேண்டும்
ஒருமையாய் சித்துமுனி நாதர்தாமும்
உத்தமனே கொள்ளுகிற மூலிகாணே 481

காணவே யீராண்டு மூலிதன்னை
காசினியில் வெகுகோடி சித்தரப்பா
தோணவே தவநிலையி லிருந்துகொண்டு
தோறாமல் மூலிதனை யுண்பாரப்பா
மாணவே மூலிதனை யுண்டுமல்லோ
மகத்தான வையகத்தி னெடுங்காலந்தான்
ஆணவங்கள் தானொடுங்கி மலையின்மீது
அப்பனே தாமிருப்பா ரிடியார்பாரே 482

பாரப்பா இன்னமொரு பதனஞ்சொல்வேன்
பரிசுத்த புலத்தியனே பண்புள்ளானே
நேரப்பா வையாண்டு மூலிதன்னை
நேர்மையுட னாரேனுங் கண்டதில்லை
சீரப்பா தென்பொதிகை சித்துதாமும்
சிறப்புடனே கண்டறிந்தோர்ர லக்கோயில்லை
வேரப்பா மற்றொருவ ரறியப்போமோ
மேன்மையுள்ள மூலியது வலுமைபாரே 483

வலுமையாந் தவமிருக்குஞ் சித்தரப்பா
வளமுடனே கொள்ளுகிற கற்பமூலி
துலுவமென்று நினையாதே துய்யபாலா
துடியான வையாண்டு கற்பமாகும்
பலுவமுள்ள மூலியப்பா சித்தர்மூலி
பாரினிலே வையகத்தோர் காணாமூலி

நிலுவையது தானறியார் நீண்டமூலி
நிட்களங்க மானதொரு கற்பமாச்சே 484

ஆச்சப்பா சித்துமுனி கொள்ளுங்கற்பம்
அகிலமதில் நெடுங்கால மிருக்குங்கற்பம்
மூச்சடங்கி பூமிதனி லிருக்கலாகும்
முனையான சித்தருட மூலியப்பா
மாச்சலது வாராது நெடுங்காலந்தான்
மன்னவனே ராஜாக்க ளறியாமூலி
ஆச்சரிய மானதொரு மூலியப்பா
அப்பனே வையாண்டு மூலிதானே 485

சத்தாண்டுமூலி

தானான புலஸ்தியனே தருமவானே
தன்மையுட னுந்தனுக்கு மின்னஞ்சொல்வேன்
கோனான சித்துமுனி ரிடியார் தாமும்
கூரான தென்பொதிகை தன்னில்வாழும்
தேனான மூலியது சத்தமூலி
தெளிவான சத்தமென்ற வாண்டுமூலி
மானான மகாரிடிகள் கொள்ளுமூலி
மன்னவனே மகிமைதனைக் கூறுவேனே. 486

கூறுவேன் சத்தான மூலி தன்னை
கொற்றவனே பசிவந்த காலந்தன்னில்
மாறுபடா தவயோகி நிலையில்நின்று
மார்க்கமுட னுண்ணுகிற மூலியாகும்
ஆறுதலம் நாடுதனி லில்லாமூலி
அப்பனே யருந்தவசி யானமூலி
வீறுடைய மூலிதனைக் கண்டோருண்டோ
வித்தகனே புலத்தியனே விளம்புவேனே. 487

விளம்புவேன் மூலியது கொண்டபோது
விண்ணுலகில் நெடுங்கால மிருக்கலாகும்
தளம்படவே காயாதி மூலிதன்னை
தகமையுடன் கொண்டவர்க்குச் சாவேயில்லை
உளம்படவே ராஜாதி ராஜர்தாமும்
உலகமதில் கண்டறியா மூலியப்பா
சளமதுவும் வாராது கொண்டாயானால்
சட்டமுடன் தவசிமுகங் கொள்ளலாமே. 488

பஞ்சதசவாண்டுமூலி

கொள்ளவே யின்னமொரு போக்கு சொல்வேன்
கொற்றவனே புலஸ்தியனே குணமுள்ளானே
கள்ளமது வாராத சித்தரப்பா
காசினியில் மலைமீதி லனேகருண்டு
உள்ளபடி சொல்லுகிறேன் மூலிமார்க்கம்
உத்தமனே பதினைந்து வாண்டுமூலி
தெள்ளமுர்த மானபசி வந்தபோது
தேற்றமுடன் சித்தருண்பார் பாருபாரே. 489

பாரேதான் காயாதி கற்பமூலி
பாலகனே பசிவந்து உற்றபோது
நேரேதான் மூலியது உண்டபோது
நெடிதான காயத்துக் குறுதியாச்சு
சீரேதான் தென்பொதிகை மூலிதன்னை
சிறப்புடைய ராஜர்களுங் கண்டதில்லை
ஆரோதான் மூலிவகை யறிவாரப்பா
அப்பனே சித்தர்களு மறிவார்தானே 490

தானான மூலியது கொண்டபோது
தன்மையுள்ள வாசியது மேல்நோக்காகு
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தனுக்குச் சொன்னநீதி
தேனான மூலியது கொண்டபேர்கள்
தேசத்தில் நெடுங்கால மிருந்தாரென்று
மானான மகதேவர் சொன்னாரப்பா
மார்க்கமுட னுந்தமக்கு வோதினாரே 491

சோடசாண்டுமூலி

ஓதவே யின்னமொரு வதிதஞ்சொல்வேன்
உத்தமனே புலஸ்தியனே வுண்மையோனே
நீதமுடன் சித்துமுனி ரிடியார்தாமும்
நிலைதனிலே சமாதிமுக மிருந்துகொண்டு
பேதமது வாராமல் நெடுங்காலந்தான்
பேரான மலைதனிலே கற்பங்கொண்டு
சாதகமாய் சோடசமா மாண்டுக்குள்ளே
சட்டமுடன் மூலியது உண்பார்பாரே 492

உண்ணவே பசிவந்து நேர்ந்தபோது
உத்தமனே பறந்துவிடுஞ் சிவயோகங்கள்
திண்ணவே மூலியது பதினாறாண்டு
தீர்க்கமுள்ள மூலியது மகிமைசொல்வேன்
கண்ணபிரா னுண்டாதொரு மூலியாகும்
காசினியில் நாதாக்க ளறிவார்பாரு
எண்ணரிய நற்பொருளா மேகமுலி
எழிலான சித்தர்முனி யறிவார்பாரே 493

அறிவாரே மூலியுட பேதாபேதம்
அப்பனே யாரறிவா ருலகில்மாண்பர்
குறியான சித்துமுனி ரிடியார்தாமுங்
குவலயத்தில் தானறிவார் மற்றோர்காணார்
நெறியான மூலிவர்க்கங் கொண்டபோது
நெடுங்காலந் தானிருக்க லாகும்பாரு
அறியாமல் வெகுகோடி மாண்பரெல்லாம்
அப்பனே முலிதனை மறந்தார்தானே. 494

இருபதாண்டுமூலி

தானான இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
தன்மையுள்ள புலத்தியனே தருமவானே
கோனான தென்பொதிகை தன்னிலப்பா
கொற்றவனே வெகுகோடி சித்தருண்டு
மானான மலைதனிலே மூலியுண்டு
மகத்தான வாண்டதுவு மிருபதாகும்
பானான மூலிதனை யுண்டுமல்லோ
பலவிதமாய் சித்தர்களு மிருந்திட்டாரே. 495

இருந்தாரே பசிவந்து நேர்ந்தபோது
எழிலான சித்தர்முனி ரிடியார்தாமும்
பொருந்தவே மூலியது கொண்டுமல்லோ
பொங்கமுடன் தானிருந்தார் நெடுங்காலந்தான்
திருந்தவே மூலிகற்பங் கொண்டபோது
தீர்க்கமுடன் வையகத்தி னாசையற்று
அருந்தியே காயாதி கற்பமூலி
அற்புதமாய்க் கொண்டுமல்லோ சாதித்தாரே 496

சாதித்தார் மூலிதனைக் கொண்டார்சித்தர்
தாரணியில் மாண்பர்களுங் கண்டதில்லை

ஆதித்தன் சந்திரன்போல் தேகம்பொன்னாம்
அப்பனே யாரறிவார் மகுத்துவங்கள்
பாதிமதி சடையணிந்த தம்பிரான்போல்
பார்மீதில் வெகுகால மிருந்தாரப்பா
சோதிமுடி மணியரசர் கண்டதில்லை
சொற்பெரிய நாதாக்க ளாடுங்கூத்தே. 497

கூத்தான மகுத்துவங்க ளதிதமார்க்கம்
கொற்றவனே ராஜாதி ராஜர்தாமும்
பார்த்தனெனும் வில்வாங்கு மர்ச்சுனன்றான்
பாருலகில் மன்மதனுங் கண்டதில்லை
சாத்தகியாள் வார்முதலோர் தாங்கள் தானும்
சதுரான கண்ணபிரான் முதலோன்றானும்
மார்த்தாண்டன் முதலானோர் மதியுள்ளாரும்
மகத்தான மூலிதனை யறியார்காணே. 498

காணவே காயாதி கற்பமாகும்
கருவான மூலியது இதுவேயாகும்
தோணவே விட்டகுறை இருந்தாலல்லோ
துப்புரவாய் வாய்க்குமது மற்றோர்க்கில்லை
நாணவே மானிலத்தில் கருவிமாண்பர்
நலமான புண்ணியமு மனேகமுண்டு
மாணமருங் கல்வியுள்ளோ ரனேகம்பேர்கள்
மானிலத்தில் வெகுகோடி மாண்பர்தாமே. 499

மாண்பான கற்பமது யாருக்கென்றால்
மகத்தான சித்தர்களும் விதியாளியானால்
ஆண்மையுள்ள சித்தர்களும் காயகற்பம்
அப்பனே வாய்க்குமல்லால் மற்றோர்க்கில்லை
தாண்மையுட னவர்தமக்குத் தொண்டுசெய்து
தக்கபடி மனதுவந்து நடந்துகொண்டால்
வீண்போகா தொருநாளும் வித்தியபாலா
விற்பனனே நற்பனனே வியந்துகேளே 500

நாற்பதாண்டுமுலி

கேளேதா னின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
கெவனமுள்ள புலஸ்தியனே கெணிதவானே
நாளேதான் போகாமல் நவிலக்கேளீர்
நலமான தென்பொதிகை தன்னிலப்பா

சூளேதான் வீற்றிருப்பார் முனிவர்சித்தர்
துப்புரவாய் மூலிகற்பங் கொள்வாரப்பா
வீளேதான் போகாமல் நாற்பதாண்டு
வித்தகனே கற்பமது கொள்வார்பாரே. 501

பாரேதான் பசிவந்து நேர்ந்தபோது
பாலகனே நாற்பது வாண்டுமூலி
நேரேதான் கொள்வார்கள் சித்தரப்பா
நெடிதான மூலியது யென்னசொல்வேன்
சீரேதான் காயாதி கொண்டுமல்லோ
சிறப்புடனே நெடுங்கால மிருந்தாரப்பா
நீரேதா னித்தாதி மூலிதன்னை
நினைவுதடு மாறாமல் நினைவிற்கொள்ளே 502

கொள்ளவே யுந்தனுக்கு உபதேசங்கள்
கோடான கோடிமுறை யானுஞ்சொன்னேன்
விள்ளவே மதங்கொண்டு கெர்ச்சிக்காதே
வீணருடன் வாய்பேசி மயங்கிடாதே
உள்ளதொரு கருவிகர ணாதியந்தம்
உற்றதொரு பொருளெல்லா முனக்குரைத்தேன்
எள்ளளவும் பிசகதுவும் வாராதப்பா
எழிலான தென்பொதிகை மகிமைபாரே. 503

மகிமையா மூலியது கொண்டுமல்லோ
மகத்தான சித்தரெல்லாம் நெடுங்காலந்தான்
அகிலமெலா மொருகுடையி லாண்டராஜர்
அன்பான மன்னவர்கள் கோடாகோடி
சகிதரொடு யிருந்ததொரு கேள்விகூட்டம்
சட்டமுடன் கண்டவர்கள் லக்கோயில்லை
அகிதலங்கள் கொள்ளாது அன்புள்ளானே
அப்பனே புலஸ்தியனே யின்னங்கேளே. 504

அறுபதாண்டுமூலி

கேளப்பா புலஸ்தியனே கெம்பீரனே
கெடியான தென்பொதிகை தன்னிலப்பா
மாளப்பா சித்தர்முனி ரிஷிகள் தாமும்
மகத்தான மலைதனிலே கொலுவிருப்பார்
சூளப்பா மலையினுச்சி யடிவாரந்தான்
சுத்தமுள்ள சொர்ணமென்ற மூலிதானும்

ஆளப்பா வம்மலையில் தவசிருந்து
அனேகம்பேர் காயாதி கொண்டார்பாரே. 505

கொண்டதொரு ரிடிகளுக்குஞ் சித்தருக்கும்
கோடான கோடியது மூலியுண்டு
அண்டர்பிரான் தன்னருளால் காயகற்பம்
அப்பனே பசிவந்து நேர்ந்தபோது
திண்ணமுடன் மூலியது கற்பந்தன்னை
தீர்க்கமுடன் தானருந்தும் மகிமைசொல்வேன்
சண்ணவே மூலியது கொண்டபோது
சட்டமுடன் நெடுங்கால மிருந்தார்பாரே. 506

இருந்தாரே யின்னமொரு வதிதஞ்சொல்வேன்
எழிலான புலஸ்தியனே யின்னங்கேளு
பொருந்தவே தென்பொதிகை மலையில்தானும்
பொங்கமுடன் நவகோடி ரிடிகள்தாமும்
திருந்தவே தவசிமுக யாகந்தன்னில்
தீர்க்கமுடன் வெகுமுனிவர் தாமிருப்பார்
அரும்பசிகள் நேர்ந்தவுடன் தவசியாரும்
அப்பனே அவருண்ணும் மூலியாண்டே. 507

ஆண்டான மூலியது என்னசொல்வேன்
அப்பனே அறுபது ஆண்டுமூலி
கூண்டுடனே சடலமதை இருத்தியல்லோ
கொற்றவனே காயாதி கற்பமூலி
தாண்டவம்போல் சித்தர்களுந் தவமிருந்து
தகமையுடன் சமாதிமுகங் கொண்டமூலி
ஆண்மையுள்ள மூலியது கற்பமூலி
அப்பனே அறுபது வாண்டுகாணே. 508

காணவே மூலியது கொண்டபோது
காசினியில் நெடுங்கால மிருக்கலாகும்
தோணவே காயாதி கற்பங்கொண்டு
துப்புரவாய் வெகுகால மிருந்தாரல்லோ
வேணபடி மலைதனிலுஞ் செடிகள் தன்னில்
விருப்பமுடன் வெகுகால மிருந்தார்பாரு
நீணவே வையகத்து மாண்பர்தாமும்
நிலையான வரசர்முதல் காணார்பாரே. 509

எண்பதாண்டுமூலி

பாரேதா னின்னமொரு பாகஞ்சொல்வேன்
பாலகனே புலஸ்தியனே பண்புள்ளானே
நீரேதா னறிவதற்கு வையகத்தில்
நெடிதான கற்பாதி மூலிமார்க்கம்
சீரேதான் உந்தனுக்கு ஓதிவைத்தேன்
சிறப்பான தென்பொதிகை மகிமைகேளும்
கூரேதான் சித்தர்முனி ரிடிகள் தேவர்
கொப்பெனவே மலையோர மிருப்பார்தானே 510

தானாக நெடுங்காலஞ் சமாதிபூண்டு
தற்பரன்மேல் நினைவுகொண்டு பரிவுகூர்ந்து
கோனான குருமலையாம் பொதிகையப்பா
கொப்பெனவே வெகுகாலங் கிருபையாலும்
தேனான மனோன்மணியாள் தவமிருப்பார்
தேர்வேந்த ரசுவனியா ரருளினாலும்
மானான மகதேவர் கடாட்சத்தாலும்
மானிலத்தில் பொதிகைதனி லிருந்தார்தானே 511

இருந்தாரே பசிவந்து நேர்ந்தபோது
எளிதான யெண்பதாங் கற்பமூலி
பொருந்தவே தானுண்டு தவமிருந்து
பொங்கமுட னெடுங்காலம் யாகஞ்செய்து
திருந்தவே வையகத்தின் மகிமையெல்லாம்
தீர்க்கமுடன் கண்டுமிக வாராய்ந்தேதான்
குருந்தமிக மரத்தடியில் வீற்றிருந்து
கொப்பெனவே சமாதிமுகம் பூண்டார்பாரே 512

பூண்டாரே சித்துமகா ரிடியார்தாமும்
புகழான மூன்றுயுக மகிமையெல்லாம்
ஆண்டகையாள் பதாம்புயத்தை மனதிலுன்னி
அப்பனே நெடுங்கால மிருக்கவெண்ணி
தூண்டகமாய் மூன்றுயுக மகுத்துவங்கள்
துப்புரவாய்த் தானறிந்து நெடுங்காலந்தான்
தீண்டாத சொரூபமென்ற சடாட்சரூபம்
சிற்பரனார் ஜோதியது போலானாரே. 513

நூறாண்டுமூலி

ஆனாரே யின்னமொரு வதிதஞ்சொல்வேன்
அப்பனே புலஸ்தியனே யருண்மைந்தாகேள்

தேனான தென்பொதிகை மலையிலப்பா
        தென்புறமாம் வாசலது பிற்பக்கந்தான்
போனார்க ளென்றதொரு சித்தரெல்லாம்
        குடிகூட்டம் வெகுமாண்பர் குண்ணோரத்தில்
பானான சூரியனார் மலைச்சார் பக்கல்
        பாங்குடனே குடியிருப்பு கோடிதானே **514**

கோடியாந் தவபாகஞ் செய்யும்போது
        குடிலமுடன் பசிவந்து நேருங்காலம்
தேடியே மலையோரஞ் சார்பிற்சென்று
        தேஜொளிவின் சின்மயத்தை மனதிலுன்னி
நாடியே நூறாண்டு கற்பந்தன்னை
        நலமுடனே கண்டுமிக வுளவாராய்ந்து
ஆடியதோர் சமாதிபதி நின்றமர்ந்து
        அப்பனே காயமது கொள்வார்தானே. **515**

கொள்வாரே மூலியென்ற கற்பந்தன்னை
        கொற்றவனே புலத்தியனே நெடுங்காலந்தான்
கள்ளமிலா மனப்பாலை யமுர்தங்கொண்டு
        காசினியில் தவநிலையா யோகஞ்செய்து
மெள்ளவே வையகத்தின் மகிமையெல்லாம்
        மேன்மையுடன் மனக்கண்ணா லறிந்துமேதான்
வள்ளலுயர் பவக்கடலை விட்டகற்றி
        மாசில்லாத் தவக்கடலை நிற்பார்பாரே **516**

நிற்பாரே மூலியென்ற கற்பங்கொண்டால்
        நிலையான தேகமது கற்றூணாகும்
அற்பமென்று நினையாதே யறிவுள்ளானே
        அருமையுள்ள சதநூறு கொண்டகற்பம்
விற்பனர்கள் மாண்பர்களோ வறியமாட்டார்
        வித்தகனே விண்ணுலகி லாருங்காணார்
சொற்பமென்று நினையாதே துய்யபாலா
        சுந்தரனே விந்திரனே செப்பக்கேளே. **517**

வெள்ளைக்கல் பாறையில் சித்தர்கள் ரவையெடுத்தது

கேளப்பா யின்னமொரு வினோதஞ்சொல்வேன்
        கெவனமுள்ள புலஸ்தியனே கெணிதவானே
ஆளப்பா தென்பொதிகை வடபாகத்தில்
        அப்பனே வதிசயங்கள் மிகவுரைப்பேன்

நாளப்பா போகாமல் தினந்தோறுந்தான்
நலமாக மலையோரஞ் சுற்றியானும்
வேளப்பா யாகமதைக் காணவென்று
வித்தகனே சித்தரிடம் வந்திட்டேனே 518

வந்தேனே தவயாகஞ் செய்யும்போது
வளமையுடன் எதிர்முகமாய் நின்றிருந்தேன்
சிந்தனையாய் சித்தர்முனி ரிடிகள்தாமும்
சிறப்புடனே யெந்தனையு மனதுவந்து
அந்தமுட னெந்தனையும் யாரென்றென்ன
அன்புடனே யடியேனும மனங்களித்து
விந்தையுட னசுவனியார் சீஷனென்று
விருப்பமுடன் யானுரைத்தே னுண்மைபாரே 519

பாரேதா னென்றதுமே மனங்களித்து
பான்மையுடன் சிலகால மங்கிருந்தேன்
நேரேதான் மலையோரந் தன்னிலப்பா
நெடிதான குத்துக்கல் லொன்றுகண்டேன்
சீரேதான் குத்துக்கல் லருகிலப்பா
சிறப்புடனே யான்வந்து நின்றேனங்கே
கூரேதான் படிகம்போல் பாறைதன்னை
கொற்றவனே கண்டுமிக பிர்மித்தேனே. 520

பிர்மித்து நிற்கையிலே ரிடியார்தாமும்
பிரியமுட னங்கிருந்த சீடனுக்கு
கர்மத்தை தானகற்றி உபதேசித்து
கைலாய மகிமையெல்லாந் தாமுரைத்து
மர்மமதாய் சித்துமுனி ரிடியார் தாமும்
மார்க்கமுடன் சீடனையுந் தானழைத்து
தர்மமது தானிருக்க முனியார்தாமுஞ்
சட்டமுடன் தானெடுக்க மிகச்சொல்வாரே 521

சீடனுக்கு ரவையெடுக்க மார்க்கம் கூறல்

சொல்வாரே புலத்தியரே யின்னஞ்சொல்வேன்
சொகுசுள்ள இந்திரனே சுந்தராகேள்
வெல்லவே ரவையெடுக்கு மார்க்கமெல்லாம்
வேகமுடன் தாமுரைப்பார் சீடனுக்கு
புல்லவே வைரமது சித்தர்தாமும்
புகலவில்லை சாத்திரத்தி லனந்தமார்க்கம்

நல்லதொரு ரவையெடுக்கும் மார்க்கந்தன்னை
நலமுடனே உரைத்தவனங் கேட்டிட்டேனே 522

இட்டேனே சமாதிமுகந் தன்னிலப்பா
எழிலான சித்தொருவர் தானெழுந்து
சட்டமுடன் வாதமது காணமாட்டாய்
சதுரான ரவையினுட மார்க்கந்தன்னை
விட்டகுறை இருந்ததொரு தன்மையாலே
விருப்பமுடன் சீடனுக்கு லபித்துதல்லோ
திட்டமுடன் சீடனையுந் தானழைத்து
சிறப்புடனே ரவைவிளைவு சொல்லென்றாரே 523

சொல்லென்றார் ரவைவிளைவு மலைபோல்வேண்டும்
சுந்தரனே க-- நிதியே யென்றுகேட்க
வெல்லவே தேசாதி தேசமார்க்கம்
விற்பனனார் விளைகின்ற வதிதந்தன்னை
நல்லதொரு சீடனவர் கூறும்போது
நலமான சித்துமுனி ரிடியார்தாமும்
வல்லதொரு சீடனுக்கு விளைவுமார்க்கம்
வகுப்புடனே தாமுரைப்பார் வதிதங்காணே 524

சித்தர்கள் சீஷனுக்கு பாறையுடைக்கத் தந்திரங் கூறினது

காணவே இன்னமொரு வயணஞ்சொல்வேன்
கருவான சீஷரே கருதக்கேளும்
தோணவே உலகுபதி சுற்றிவந்தேன்
தோறாமல் மலைவளமும் யானுங்கண்டேன்
நீணவே ரவைவிளைவு கண்டதில்லை
நிஷ்களங்க மானதொரு மலைச்சார்தன்னை
வேணபடி ரவைவிளைவை யானுங்கண்டேன்
வித்தகனே தென்பொதிகை மலையில்தானே 525

தானான ரவையெடுக்கு மார்க்கஞ்சொல்வேன்
தகமையுள்ள தந்திரமு மேதென்றாக்கால்
கோனான வையகத்தில் கோடிமாண்பர்
கொற்றவனே கோவேந்தர் முதலானோரும்
தேனான தென்பொதிகை மலையிலப்பா
தேர்வேந்த ராஜர்முதல் கண்டதில்லை
மானான ரவையெடுக்கு மகுத்துவங்கள்
மறைப்பகற்றிக் கூறுகிறேன் மன்னாகேளே 526

மன்னவனே தென்பொதிகை தன்னிற்றானும்
மகத்தான ரவையெடுக்கு மார்க்கம்பாராய்
தென்னவனே சித்துரிடி யன்பனாரே
தேற்றமுட னைங்கோலத் தயிலங்கொண்டு
கன்னவனே பாறைகனின் மேலேபூசி
கருவாகச் சொல்லுகிறேன் சூதுமார்க்கம்
முன்னமே யசுவமொன்று தீர்மானித்து
முனையான உபதேசஞ் செய்திடாயே 527

அசுவத்துக்கு சித்தர் உபதேசித்தல்

செய்யுவகை தந்திரமு மேதென்றாக்கால்
செய்லான பாறையது வெடிக்குமுன்னே
உய்யவே உபதேச உத்தேசங்கள்
உத்தமனே ஏதென்றால் சொல்வேனப்பா
பையவே தயிலமது பூசிப்பின்பு
பாங்குபெற நிமிஷமரை நாழிக்குள்ளே
வெய்யவே வெகுதூரங் காதமப்பா
உத்தனே அசுவமதைக் கொண்டுசெல்லே 528

செல்லவே அசுவமது போகுமுன்னே
செயலான பாறையது காரமேறி
வெல்லவே யண்டரண்டந் தத்தளிக்க
வேதாந்தத் தாயின்மனந் திடுக்கிட்டேங்க
புல்லவே பாறையது சத்தத்தோடு
பூவுலகம் அதிர்ந்திடவே புகைகொண்டேறி
கல்லதுவுந் தான்தெறித்துக் காதமப்பா
கடுகளவே மாண்பர்களைக் கொல்லும்பாரே 529

பாரேதான் கல்லெறிவு தப்பியல்லோ
பாலகனே சிலநேரஞ் சென்றபின்பு
நீரேதா னவ்விடத்திற் சென்றுமல்லோ
நிலையான பாறைதனைக் கண்டபோது
கூரேதான் கல்லெறிவு பிறப்புக்குள்ளே
குணமான ரவையதுவு மென்னசொல்வேன்
தீரேதான் ரவைதனையே கண்டபோது
தீர்க்கமுடன் கலியதுவும் நீங்கிப்போச்சே 530

நீங்கியே நாதாக்கள் சொன்னதில்லை
நிஷ்களங்க மானதொரு விளைவுதன்னை

பாங்குபெற சோதிமயந் தன்னைப்போலே
        பாலகனே பாறைக்குள் விளையும்பாரு
ஓங்கிடவே ரவையதனை யெடுத்துமைந்தா
        உத்தமனே தானதருமஞ் செய்யவேண்டும்
வாங்கியே மலைபோல ரவைகளப்பா
        வளமான வையகத்தில் குவிக்கலாமே 531

குவிக்கலாஞ் சதகோடி சூரியன்போல்
        கொற்றவனே லோகமதில் மாண்பர்காணார்
புவிதனிலே ரவைகண்ட மாண்பரில்லை
        புகழான போகரிடி கண்டாரப்பா
நவின்றிடவே போகரிடி ரவையைக்கண்டு
        நலமான சீனபதிப் பெண்களுக்கு
அபினயங்கள் தானுரைத்த போகர்தாமும்
        அப்பனே உபதேசஞ் செய்தார்காணே. 532

காணவே மற்றொருவர் மாண்பரெல்லாம்
        காசினியில் ரவைவிளைவு கண்டதில்லை
தோணவே யுந்தமக்கு உபதேசங்கள்
        சொல்லிவிட்டேன் துப்புரவாய் மனதிற்கொள்வீர்
வேணபடி ரவைவிளைவைச் சொல்லியல்லோ
        வேதாந்த சித்தர்களும் மலையிற்சென்று
மாணவவே சமாதிநிலை போறோமென்று
        மகத்தான மகுத்துகளும் மறைந்திட்டாரே 533

அகஸ்தியர் புலஸ்தியருக்கு ரவைமார்க்கங் கூறுவது

மறைப்பாக இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
        மகத்தான நாதாக்க ளாடுங்கூத்து
நிறையான வசுவனியாந் தேவர்தேவர்
        நீதியுட னெந்தனுக்குச் சொன்னகூறு
முறையான தென்பொதிகை தன்னில்தானும்
        முறையான ரவைவிளைவு மார்க்கந்தன்னை
அறைந்தாரே யெந்தனுக்குத் தேவர்தானும்
        அப்பனே வதிசயத்தைகக் கூறுவேனே. 534

அகஸ்தியர் புலஸ்தியருக்கு ரவையதிசயத்தைக் கூறல்

கூறவே யகத்தியருஞ் சீடனுக்கு
        குறிப்புடனே மனதுவந்து சொல்லும்போது
ஆறவே புலஸ்தியரு முடிவணங்கி
        அன்புடனே மனங்களித்து கரங்குவித்து

மாறலது வாராமல் யெந்தன்தேவா
மகத்தான சற்குருவே நாதபோதா
சீறலது வாராம லெந்தன்மீதில்
சிறப்புடனே வினயமது சொல்வீர்தானே. 535

தானான நமதைய ரசுவனியாந்தேவர்
தன்மையுடன் முன்னடந்த வதிதமார்க்கம்
கோனான ரவைவிளைவு மார்க்கந்தன்னை
கொற்றவரே மனங்களித்து வினயங்கொண்டு
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
தேர்வேந்தே யெந்தனுக்குச் சொல்லவந்தீர்
பானான வழிபாடு சொல்லியல்லோ
பாலகனே வருள்புரிந்து வாட்கொள்வீரே. 536

கொள்ளவென்று புலஸ்தியருங் கேட்கும்போது
குணமான கும்பமுனி கூறலுற்றார்
தெள்ளமுர்த மானதொரு புலஸ்தியாகேள்
தென்பொதிகை மலையினது சாரலோரம்
உள்ளபடி மேற்பாகந் தன்னிலப்பா
உத்தமனே குகைதனிலே சென்றீரானால்
கள்ளமிலாப் பாறையது வங்கேயுண்டு
கருவான ரவைமகிமை சொல்வேன்காணே 537

காணவே பாறையது முன்னேசென்று
கருவான புலஸ்தியனே கவிராஜேந்திரா
தோணவே யுந்தமக்கு வேணமட்டும்
தோறாத திரவியங்கள் கண்டுமேதான்
வேணதொரு ரவைவிளைவு மார்க்கந்தன்னை
விருப்பமுடன் தானெடுத்துப் பார்க்கவல்லோ
நீணவே முன்சொன்ன மகிமைபோல
நிலையான வசுவமதைப் பூண்டுகொள்ளே. 538

பூண்டுமே யசுவமதி லேறியேதான்
புகழான வெங்கோல ஜெயநீர்தன்னை
காண்டவனந் தனிற்சென்று பாறைமீது
கருவாகத் தான் பூசிப் புலஸ்தியாகேள்
தீண்டியே வசுவமதைத் தட்டியேதான்
தீர்க்கமுடன் காதவழி ஓடும்போது
மாண்டுமே பாறையது வெடித்துமல்லோ
மகத்தான ரவைவிளைவு காண்பீர்தாமே. 539

தாமான ரவைவிளைவு கண்டபோது
தாக்கான புலத்தியனே யுந்தனக்கு
சாமான மென்றதொரு மிடிகள் நீங்கி
தகமையுள்ள குபேந்திரனுக் கொப்பேயாவாய்
கோமான்போல் நீயுமொரு வரசனாகி
கோலமுடன் வையகத்தில் நெடுங்காலந்தான்
நாமேதான் சொன்னபடி உந்தமக்கு
நற்கால மாச்சுதப்பா சொல்லொண்ணாதே 540

ஒண்ணாது என்றல்லோ புலஸ்தியர்க்கு
உத்தமனார் கும்பமுனி கூறும்போது
தண்மையுடன் புலஸ்தியரு மேதுசொல்வார்
தாக்கான என்குருவே சுவாமிநாதா
மண்ணிலுள்ள திரவியங்க ளெந்தனுக்கு
மகத்தான என்குருவே வருள்கொண்டீர்கள்
கண்ணான மனோலயத்தைக் கூறவில்லை
கருவான ஞானப்பால் காட்டுவீரே. 541

காட்டவே எந்தனுக்கு இதிகாசங்கள்
கருவிகர ணாதியந்தங் கூறவேண்டும்
தாட்டிகமாய்ச் சரிதைகிரி யோகந்தன்னை
சட்டமுட னெந்தனுக்கு ஞானோபித்து
வாட்டமுடன் காயாதி கற்பங்கூறி
வளமையுடன் தென்பொதிகை மகிமையெல்லாம்
நீட்டமுடன் மனதுவந்து பட்சம்வைத்து
நீடூழி காலமது வரங்கொள்வீரே. 542

வரங்கொண்டு எந்தனையு மாதரித்து
வளமையுடன் ஞானமென்ற பொருளைத்தானும்
பரமனது சொரூபன்றன் கடாட்சத்தாலே
பாலகன்மே லன்புவைத்து பதிவுகூர்ந்து
திறமுடனே என்னாளும் பரிவுகூர்ந்து
தீர்க்கமுடன் சித்தர்கள்முன் என்னையல்லோ
உறமுடனே காயாதி கற்பந்தந்து
உத்தமனே கொண்டணைத்து வழிசொல்வீரே 543

வழியான வழிபாடு குணபாடெல்லாம்
வளமையுடன் தானறிந்து ரிடியார்முன்னே
பழிபாவம் நேராமல் பாதுகாத்து
பட்சமுடன் எந்தனுக்கு யிதவுகூறி

அழியாத மோட்சமென்ற மேலாம்வீடு
அப்பனே காண்பதற்கு பதமுங்கூறி
விழிதெரிய சீடனுக்கு வினயஞ்சொல்லி
விருப்பமுட னுபதேசஞ் சொல்வீர்தானே 544

தானான உபதேச மென்னவென்றால்
தாக்கான பதினெண்பே ரறியாவண்ணம்
கோனான என்தேவர் கும்பயோனி
குணமுள்ள இதிகாசப் பொருளறிந்து
மானான தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
மகத்தான வுடற்பொருள்க ளாவியந்தம்
தேனான தென்பொதிகை சங்கநாதா
தேற்றமுட னெந்தனுக்கு ஓதுவீரே 545

அகத்தியர் புலத்தியருக்கு மனதுவந்து ஞானங்கூறல்

ஓதவே இன்னமொரு புனிதஞ்சொல்வேன்
உத்தமனே புலத்தியனே புகழுள்ளானே
நீதமது தான்கேழ்க்கும் புத்திவானே
நிஷ்களங்க மானதொரு நிடிதவானே
பேதமது வாராமல் சித்தர்முன்னே
பேரான பேரின்பக் கடலிலப்பா
ஆதவன்போல் தான்துலங்க உந்தமக்கு
அப்பனே சொல்லுவதும் உண்மைதானே 546

உண்மையாய் புலத்தியனே உகந்துபாரீர்
உத்தமனே கண்மணியே கணிதவானே
நண்மைபெற உந்தமக்கு ஞானப்பாலை
நாதாக்கள் தானறிய நாட்டுவேன்யான்
தண்மையுடன் சத்தியமாய்ச் சாற்றுவேன்யான்
சாட்சாத்காரப் பொருளாய் முன்னேநிற்க
வண்மையுடன் ரிடிமுனிவர் முன்னதாக
வாகுடனே ஞானப்பால் ஓதுவேனே 547

ஓதவென்றா லுந்தனுக்கோ ருலகுதானும்
உத்தமனே ஈடுண்டாய்ச் சொல்லப்போமோ
நாதரிஷி முனிவரெல்லா முனக்கீடுண்டோ
நாதாந்த சித்தொளிவு மீடுமல்ல
பேதமது வாராம லுபதேசங்கள்
பேரின்பக் கடலதனைப் புகட்டுவேன்யான்
வீதமுடன் மனதுவந்து மன்னாபாலா
மிக்கான போதமதைக் கொள்வார்தானே 548

தானான அகஸ்தியருங் கூறும்போது
தாக்கான புலஸ்தியரு மேதுரைப்பார்
கோனான யென்குருவே யெந்தனாதா
குவலயத்தி லதிசயங்கள் மகிமையுண்டு
மானான சித்துமனி ரிஷிகள் தாமும்
மகுத்துவங்கள் மிகமிகவாய்ப் பலநூல்தன்னில்
தேனான அமுர்தம்போல் திரட்டியல்லோ
திருப்பாலின் கடலதனில் செலுத்திட்டாரே 549

செலுத்தினார் கோடான கோடிநூல்கள்
ஜெகதலத்தில் கண்டவர்க ளாறுமில்லை
மலுவலுடன் மூன்றுயுகந் தன்னிலையா
மகத்தான அதிசயங்கள் நடந்ததுண்டு
கொலுவிருந்த நமதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் நந்தமக்கு சொன்னநீதி
வலுவான இதிகாச புராணமெல்லாம்
வண்மையுட னெந்தனுக்கு ஒதென்றாரே 550

சிவசுப்பிரமணியர் அகத்தியருக்கோதிய
சுத்தஞானத்தை புலத்தியர் கேட்டது

என்றாரே கும்பமுனி தன்னைநோக்கி
எழிலான புலஸ்தியரு மேதுரைப்பார்
குன்றான பருவதமே குணக்குன்றேகேள்
கோவேந்தே தெள்ளமுர்தே குருவேநாதா
வென்றிடவே சிவசுப்பிர மணியர்ஞானம்
வேதாந்த முத்தொளிவை அறிந்தமட்டும்
சென்றுமே வந்ததொரு சீஷனுக்கு
சீருடனே மனதுவந்து போதிப்பீரே 551

போதித்தா லடியேனுங் காட்சிபெற்று
பொங்கமுடன் நெடுங்காலம் வையகத்தில்
ஆதித்தன் சந்திராதி யுள்ளமட்டும்
ஐயனே நன்றியது மறவேன்யானும்
சோதிமுடி மணியரசர் செங்கோல்தானும்
ஜெகதலத்தில் தலைகீழாய் மாறிட்டாலும்
பாதிமதி சடையணியுந் தன்னாராணை
பட்சமுட னுன்பாதஞ் சரணந்தானே 552

தானான வாகாஷ வாணிதேவி
தற்பரமாம் மனோன்மணியாள் தன்மேலாணை

கோனான என்தேவர் குருவினாணை
கொற்றவரே சதாகால நித்தமையா
பானான பார்லோக மழிந்திட்டாலும்
பாற்கடலுந் தலைமாறி பொங்கிட்டாலும்
மானான தேவாதி தேவர்தானும்
மன்னவர்கள் தானறிய சொல்லுவேனே 553

சொல்லவென்றா லாணையது இன்னஞ்சொல்வேன்
சுத்தமுள்ள வடிவேலர் தன்மேலாணை
வெல்லவே பதினெண்பேர் தன்மேலாணை
வேதாந்த நவகோடி ரிடிமேலாணை
புல்லவே நாற்பத்தென் பேர்களான
புகழான ரிடிமுனிவர் தன்மேலாணை
கல்லாலின் மரத்தின்கீழ் வீற்றிருக்கும்
கணபதிமே லாணையது கூறுவேனே 554

கூறுவே னாதிசேடன் தன்மேலாணை
குறிப்பான மாலயனார் தன்மேலாணை
மாறுபடா வேதாந்த மெந்தனுக்கு
மகுத்துவங்கள் மகிமையது புரிந்துமேதான்
நீறுடைய வெண்ணீறு மெனக்குமீய்ந்து
நிஷ்களங்க உபதேச மிகவுஞ்செய்து
வீறுடைய ஞானப்பா லமுர்தப்பாலை
விருப்பமுட னெந்தனுக்கு விளம்புவீரே 555

விளம்புவேன் புலஸ்தியனே விறுதுள்ளானே
வித்தகனே விண்ணொளியே வீரதீரா
தளம்படவே ஞானமெனுஞ் சாகரத்தை
தட்டாம லுந்தனுக்கு சாதிப்பேன்யான்
வளம்பெறவே யோகநிலை அறியவேண்டி
மார்க்கமுடன் விதியுனக்குக் கூறுவேன்பார்
குளமான சத்த சாகரத்தைப்போலும்
கூறுவேன் புண்ணியனே குடியுள்ளானே 556

குடியான சமுசார சாகரத்தை
கொற்றவனே விட்டறுத்து கட்டறுத்து
விடியான மனக்கவலை விட்டகற்றி
விரிவான பவக்கடலைத் தாண்டியேதான்
குடியான சுற்றத்தார் கூட்டத்தாரை
கூசாமல் பாசமென்ற மனதகற்றி
இடி போன்ற துன்பநிலை மிகக்கடந்து
எழிலான இன்பநிலை தன்னிற்செல்லே 557

செல்லவென்றால் யோகமது யேதென்றாக்கால்
சொற்பெரிய புலஸ்தியனே துய்யநேயா
வெல்லவே சமாதிநிலை அறியவேண்டும்
வீண்புரளிக் காரரெல்லா மகற்றவேண்டும்
சல்லியமாங் கர்மமென்ற வித்தைதன்னை
சட்டமுடன் விலக்கியல்லோ இருக்கவேண்டும்
புல்லறிவாற் றன்மனதை அறியவேண்டும்
புகழான புலஸ்தியனே ஞானம்பாரே 558

ஞானமென்றால் ஞானமது மவுனஞானம்
நாதாக்கள் தானறியும் ஞானமப்பா
ஈனமது வாராமல் ஞானந்தன்னை
எழிலான வையகத்தி னாசையற்று
ஊனமுடன் மண்ணாசைப் பெண்ணினாசை
உத்தமனே பொன்னாசை தனையகற்றி
பானமது கொள்ளவென்றால் வஸ்துவல்ல
பாக்கியனே ஞானப்பால் பானந்தானே 559

தானான பானமது சற்குருவேபானம்
தன்மையுள்ள வபானமது வஸ்துபானம்
கோனான குருசொல்லும் பானமப்பா
கொற்றவனே சித்துமு[illegible]ரியும்பானம்
தேனான மனோன்மணியா[illegible] பானம்ப்பா
தெளிவான ப[illegible]பரத்தின் பானமாகும்
மானான வையகத்தில் பானங்கண்டே
மார்க்கமுடன்வகுத்திடவே கோடியிலே ஒருவனுண்டே 560

உண்டான உலகாதி உலகிலுள்ளோர்
உத்தமனே மாண்பர்களு மனேகருண்டு
செண்டான முறைகொண்டு நயங்கள்பேசி
செந்தமிழின் பானமதை அறிந்தாப்போலும்
பண்மையுடன் பானமென்ற வஸ்துதன்னை
பாரினிலே லாகிரியால் மோகித்துமேதான்
தொண்டரென்றும் முனிவரென்றுஞ் சீஷரென்றுந்
தோறாத சித்துரிடி என்பார்பாரே 561

பாரேதான் திருமூல வர்க்கத்தோர்கள்
பாருலகில் வெகுபேர்கள் வேஷம்பூண்டு
நேரேதான் ஞானப்பா லுண்டார்போலும்
நெடிதான பவக்கடலைக் கடந்தோர்போலும்

சிரேதான் சிற்றின்ப வாசைகொண்டு
சீர்த்தியுடன் மகப்பேறு வதிமாகி
வேரேதான் சமுசார வாழ்க்கைகொண்டு
விட்டகுறை இருந்ததென்பார் மண்ணுள்ளோரே 562

மண்ணுள்ள பேர்களிலே யதிதஞ்சொல்வேன்
மகத்தான புலஸ்தியனே மகிபாகேளும்
விண்ணுள்ளா ரவர்தமக்கு மீடுமல்ல
விற்பனனே வேதாந்தத் தெளிவேபாரீர்
கண்ணுள்ள போதுமல்லோ காட்சிகண்டார்
காசினியில் மாயவலை சிக்கறுத்தோர்
வெண்ணரிய நற்பொருளை யறிந்தசித்து
வேதாந்த சித்தொளிவு கோடியுண்டே 563

கோடியாம் புலஸ்தியனே சொல்லொண்ணாது
குவலயத்தில் கண்டறிய லாகுமோசொல்
நீடியதோர் தவப்பெரியோர் சமாதிகண்டோர்
நிஷ்களங்க மானதொரு சித்துகோடி
தேடியே மலையாறு தனைக்கடந்து
தேஜொளிவின் சின்மயத்தைக் கண்டுமேதான்
வாடியே மனங்கலங்கி சமாதிதன்னை
வளமுடனே யோகமதில் இருந்தார்காணே 564

காணவே சமாதிமுகந் தனிலிருந்து
காணாத காட்சியெல்லாங் கண்ணிற்கண்டு
பூணவே மலைதனிலும் வனாந்திரத்தில்
புகழான சமாதிநிலை நின்றார்கோடி
தோணவே மகிமையது கொண்டோர்தாமும்
தொல்லுலகைப் பொய்யென்று விட்டோர்தானும்
பாணம்போல் ஞானமென்ற பாலைத்தானும்
பட்சமுடன் கொண்டதொரு சித்துமாச்சே. 565

ஆச்சப்பா புலஸ்தியனே உலகுமார்க்கம்
அப்பனே பலபலவா இருக்கும்பாரு
மூச்சடங்கிப் போனதொரு சித்தரெல்லாம்
மூதுலகில் இப்படியே பானமுண்டு
மாச்சலது வாராமல் மண்ணின்கீழே
மடிந்தார்கள் கோடியுண்டு லக்கோயில்லை
பாச்சலுடன் ஞானப்பா லுண்டுநீயும்
பாங்குபெற சின்மயத்தை மனதிலுன்னே 566

உன்னவே யோகமது கொள்ளும்போது
உத்தமனே யவையடக்கங் கூறுவேன்யான்
பன்னவே பூமிதனில் சமாதிபூண்டு
பாங்குபெற பிராணாயந் தன்னிற்சென்று
சொன்னபடி சாத்திரங்கள் முறைதப்பாமல்
சொற்சோர்வு சாராமல் சமாதிநின்று
சென்னியுடன் தான்வணங்கிக் கரங்குவித்து
செங்கமல பதாம்புயத்தை நண்ணுவாயே 567

அகஸ்தியர் புலஸ்தியருக்கு யோகங்கூறுவது

நண்ணுவா யோகமது ஏதென்றாக்கால்
நாதாந்த சித்துரிடி யடையும்பாகம்
குண்ணுமே லிருந்ததொரு சித்தானாலும்
குவலயத்தில் மாண்பர்களில் சித்தானாலும்
கண்ணுவனா ரிடிகூட்ட முதலானோரும்
காட்டடர்ந்த தென்பொதிகை முனியானாலும்
எண்ணறிய சமாதியது பீடம்நின்று
எழிலான தத்துவத்தைக் கொள்வார்தானே 568

கொள்ளவே புலஸ்தியனே குணமுள்ளானே
குவலயத்தி லுந்தனுக்கு ஞானமெய்தும்
தெள்ளமுர்த மானதொரு ஞானப்பாலை
தெவிட்டாம லுந்தமக்கு ஓதுவேன்யான்
கள்ளமிலா மனக்குரங்கை உறுதிபூண்டு
காசினியில் பஞ்சேந்திர நிலையில்நின்று
உள்ளதொரு கருவிகர ணாதியந்தம்
உத்தமனே தானறிந்து நினைவாய்நில்லே 569

நில்லென்ற சமாதியிலே இருந்துகொண்டு
நீடாழி வையத்தைத் தான்மறந்து
புல்லறிவால் தன்மனதை உள்ளடக்கி
புகழான சின்மயத்தி லிருந்துகொண்டு
கல்லென்ற விக்கிரகந் தான்மறந்து
காசினியில் ஜெகஜோதி தன்னைக்காண
தொல்லையெனும் பிறவியது மயக்கறுத்து
தோறாமல் மௌனநிலை கொண்டிடாயே 570

கொண்டாலே யஷ்டசித்தி தானுங்கொண்டு
கொடிதான கர்மேந்திரியந் தனையகற்றி

கண்டுமே மவுனநிலை கொள்ளும்போது
கைலாச பரவெளியைக் கண்டாற்போலும்
விண்டதொரு வாக்கினேயந் தனிலிருந்து
விட்டகுறை தனையகற்றி முடிவைப்பற்றி
சண்டமா ருதம்போல கலைகள்மாறி
சட்டமுடன் சமாதிநிலை கொள்வீர்பாரே 571

பாரேதான் வாக்கினேயங் காணும்போது
பாங்கான மூலட்டா னத்தைநோக்கி
சீரேதான் விசுத்தியிலே இருந்துகொண்டு
சிறப்பான யனாகதத்தை மேலேபூட்டி
நேரேதான் கும்பகத்தின் மேலிருந்து
நெடிதான மூலவழி காணும்போது
தீரேதான் ரேசக பூரகமுந்தோன்றும்
செங்கண்மால் உருவதுவுங் காணலாமே 572

காணலாஞ் செங்கண்ணைக் காணும்போது
கருவான செங்கண்ணே மனக்கண்ணாகும்
பூணலாஞ் சுடரொளிபோல் தோற்றங்காணும்
புகழான வாசியது மேல்நோக்காது
தோணவே பிரிதிவென்ற சடலந்தானும்
தோராமல் சமாதிக்கு இடமேகாட்டும்
நீணவே கடாட்சமது திறக்கொண்ணாது
நிஷ்களங்க மானசித்தி காட்டும்பாரே 573

காட்டுமே வம்பரத்தின் வழியேதோன்றும்
கருவிகர ணாதியெல்லா மிதிலடக்கம்
பூட்டுமே யேனைய மச்சதாது
புகழான குருதிமுத லிதிலடக்கம்
நாட்டுமே சர்மமது மேலேபூண்டு
நளினமுடன் தேகமென்ற பீடமாச்சு
தீட்டுபுகழ் ஞானமெலா மிதிலடக்கம்
தீக்குணங்க ளிதிலிருந்து விளையும்பாரே 574

விளையுமே தேகமது சமாதிபூண்டால்
வித்தகனே காயாதி கற்பங்கொண்டு
தளையான மரம்போலே கற்றூணாகி
சாக்கிரதை சொற்பன சுழத்திக்காணலாகும்
இளையாது பிரிதிவென்ற தேகந்தானும்
எழிலாக மண்ணோடே மண்ணிற்சாயும்
விளைவான போதநிலை தன்னிற்சென்று
விட்டகுறை இருந்தமட்டும் லபிக்குந்தானே 575

தானான புலஸ்தியனே சமாதிபூண்டு
சற்குருவின் பதாம்புயத்தை மனதிலுன்னி
தேனான யோகமது கொண்டபோது
தேசத்தில் மகிமையெல்லாங் காண்பாய்பாரு
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் பதாம்புயத்தின் கடாட்சத்தாலே
மானான யோகமென்ற மகுத்துவத்தை
மார்க்கமுட னுந்தனுக்கு ஓதுவேனே 576

ஓதுவேன் புலத்தியனே புண்ணியவானே
ஓகோகோ நாதாக்கள் மறைத்தஞானம்
வாதுகுறி வயித்தியர்க ளறியாஞானம்
வளமான ஞானப்பா லூட்டுவேன்யான்
தீதில்லா யோகமது செய்யும்போது
தீர்க்கமுடன் மவுனநிலை நாட்டவேண்டும்
சூதுபொய் கொலைகளவு தந்திரமார்க்கம்
துப்புரவாய்த் துகளகற்றல் வேண்டும்பாரே 577

பாரேதான் யோகநிலை வாசிதன்னை
பண்புடனே சமாதியிடஞ் சென்றுமேதான்
நேரேதான் உச்சிநிலை கரத்தையூன்றி
நேர்மையுடன் பூமிக்குக் கீழ்மேலாக
சீரேதான் சூத்திரமாம் வாசிபூட்டி
சிறப்புடனே அங்கென்று நீட்டும்போது
கூரேதான் கபாடமென்ற வாசல்தோன்றுய்
குறிப்புடனே வாசல்வழி காணுந்தானே 578

தானான வாசல்வழி காணும்போது
தகமையுள்ள ஓங்கார மதிலேதோயும்
கோனான ஓங்கார சப்தத்தாலே
கொற்றவனே சிகாரமது மிகவேமிஞ்சி
தேனான ரீங்கார மதிலேபாய்ந்து
தேற்றமுடன் சுவாசமது பொறியேகாணும்
பானான பொரிமுழுது மனலேகாணும்
பகலான வெளிச்சமது காணலாமே 579

காணலாம் வெளிச்சமதின் சோதிகண்டால்
கருவான சின்மயத்தி னொளியேதோன்றும்
பூணவே பிராணாய மிதிலடக்கம்
புகழான பஞ்சதச வாய்வுதானும்

நீணவே யொன்றுக்கொன் றுற்பனத்தால்
நிஷ்களங்க மாகியல்லோ கூடுபாயும்
வேணபடி வாசிதனை மிகவோட்டாது
வேறாறு தலம்வரையுங் காணலாமே 580

ஆறான தலமதுவுங் கண்டபோது
அப்பனே சின்மயத்துக் கிடமேயாச்சு
நீறான நெற்றியது மனக்கண்ணாச்சு
நீதியுள்ள வைம்பொரியு மதிலடக்கம்
கூறான வாசிவழி கண்டபோது
குறிப்பான ரேசக பூரகமுமாகும்
மாறான வழிபாடு குணபாடெல்லாம்
மன்னவனே வைம்பொரியின் வாசியாமே 581

வாசியாங் கும்பகமு மிதிலடக்கம்
வளமான விசுத்தியிலே சுழுத்திதோன்றும்
ஊசியது காந்தமதைக் கொண்டாற்போலும்
உத்தமனே சின்மயத்தின் வாசிதானும்
காசியெனும் பதிதனிலே சென்றாலுந்தான்
காண்பதுண்டோ மனக்காசி யுன்னுக்குள்ளே
மாசிபடா படிகம்போல் ஞானப்பாலும்
மகத்தான பஞ்சபூத ஒடுக்கந்தானே 582

ஒடுக்கமா மனம்புத்தி சித்தாகாசம்
ஓகோகோ நாதாந்த சித்தர்தாமும்
அடுக்குநிலை போதவழி சென்றுமேதான்
அப்பனே நாதாந்தப் பாலையுண்டார்
தடுக்கவே வாசிதனை யாராலாகும்
தாரணியில் பஞ்சகர்த்தா ளாடுங்கூத்து
ஒடுக்கமுடன் சிவந்தனக்கு ளொடுக்கமப்பா
உத்தமனே வாறாதாரங் காணலாமே 583

காணலாம் நந்திமுத லானதேவர்
காசினியில் வெகுகோடி மாண்பர்தாமும்
நீணவே பீடமது சமாதிநின்று
நிட்களங்க மாகியல்லோ பொறிகலங்கி
வேணபடி வாசியென்ற விளையாட்டைத்தான்
விட்டகுறை லபித்ததென்று வீணாய்மாண்பர்
பாணமது போல்வாசி நடத்தியேதான்
பாரினிலே பொறிவெடித்துப் புலம்பினாரே 584

புலம்பினார் சதகோடி மாண்பர்தாமும்
புகழான வாசிநிலை காணவென்று
அலம்புருடன் குகுதன்வரை தலங்கண்டாற்போல்
அப்பனே கிருதர்த்தன் கூர்மனோடும்
தலம்பெறவே தனஞ்செயனுஞ் சதாநித்தந்தான்
சாங்கமுடன் பிரிதிவினி லொடுக்கமென்று
நிலமதனில் சமாதிமுக மிருந்துகொண்டு
நீணிலத்தில் வாசியது செய்தார்பாரே 585

பாரேதான் கேசரத்தை நாட்டியல்லோ
பாரினிலே யம்பரத்துக் குள்ளாகாமல்
நேரேதான் நெடுமூச்சு வாங்காமற்றான்
நெடுநேரம் வாசிதனை யொடுக்கியல்லோ
கூரேதான் கலைமாறி தலமுமாறி
குடிலமுடன் பெருமூச்சு அதிகங்கொண்டு
வீரேதான் உந்தினிலை தன்னைப்பற்றி
வித்தகனே விட்டிழந்தா ருயிரைத்தானே 586

தானான கேசரத்திற் செல்வேனென்றும்
தாக்கான கெவுனநிலை கொள்வேனென்றும்
கோனான மண்டலங்கள் தன்னைக்கிட்டி
கொற்றவனே வாசியது இழுக்காமற்றான்
மானான வெகுகோடி மாண்பர்தாமும்
மகத்தான வையகத்தில் வாசிபூண்டு
பானான பதிவிட்டு சமாதிசென்று
பாரினிலே மடிந்தார்கள் கோடியாமே 587

கோடியா மடிந்ததொரு சமாதியப்பா
கொற்றவனே ஞானமென்ற சமாதியாகும்
தேடியே பதியமர்ந்து யோகஞ்செய்து
தேற்றமுடன் ஞானவொளி காணாமற்றான்
பாடியே பொருள்தேடி பதங்காணாமல்
பாரினிலே ஞானப்பா லுண்டேனென்று
நீடியே தவநிலையைக் கொண்டேனென்று
நிட்சயமாய் மண்ணதனில் மறைந்திட்டாரே 588

மறைந்தாரே வெகுகோடி ஞானவான்கள்
மகத்தான வையகத்தில் மகிமைபூண்டு
துறந்தாரே ஞானமென்ற சமாதிபீடம்
துப்புரவாய்க் காயாதி கொண்டுமல்லோ

இறந்துமே போனார்கள் வாசியோகம்
எழிலான மூச்சின்நிலை தனைக்காணாமல்
பறந்துமே பாருலகை விட்டுமேதான்
பரமபதி தானடைந்தார் பண்புதானே. 589

பண்பான உச்சிநிலை காணாமற்றான்
பாங்குடனே தலைதெறித்து மாண்டாரல்லோ
திண்பான பிராணாயம் மனங்கலங்கி
தீர்க்கமுடன் மவுனநிலை காணாமற்றான்
வண்மையுடன் கேசரத்தில் போவேனென்று
வளம்பெரிய உட்கோட்டை அறியாமற்றான்
மண்ணான வாறுதலங் காணாமற்றான்
மகதேவர் பாதமது சேர்ந்திட்டாரே. 590

சேர்ந்திட்டார் வெகுகோடி மாண்பரெல்லாம்
சீருடனே வாசியோக பீடஞ்சென்று
தேர்ந்திட்ட நாதாக்கள் ரிடிகள்போலும்
தெளிவான வொடுக்கநிலை சார்ந்தோன்போலும்
கூர்ந்துமே தன்னைத்தா னறியாமற்றான்
குவலயத்தில் சித்தர்கள்போல் வேஷங்கொண்டு
பேர்ந்துமே சிவநிலையை விட்டிழந்து
பேரிழந்து வீடிழந்து மண்ணானாரே. 591

மண்ணான மாண்பர்களோ மெத்தவுண்டு
மானிலத்தில் சமாதியிடந் திடங்கொள்ளாது
உண்மையாய்க் கலைபகுத்து வாசியோகம்
உத்தமனே உந்தனுக்கு வோதுவேன்யான்
திண்ணமுடன் சிதாபாசக் களையேபூண்டு
தீர்க்கமுடன் மவுனநிலை யறிவாற்சென்று
எண்ணரிய பரம்பொருளே யோகவானே
எழிலான வாசிமுகங் கண்டுகொள்ளே. 592

கொள்ளப்பா புலஸ்தியனே குணமுள்ளானே
கோடிவரை யாறுதலங் காண்பதுண்டு
மெள்ளப்பா விதியாளி யாயிருந்தால்
மேலான நுணுக்கமென்று வாசிகிட்டும்
தெள்ளமுர்த மானதொரு ஞானப்பாலும்
தெவிட்டாத சின்மயத்தின் சிதாபாசந்தான்
உள்ளபடி உந்தனுக்கு லபிக்கும்பாரு
உத்தமனே உண்மையிது பாருபாரே. 593

புலஸ்தியருக்கு அகத்தியர் அட்சரமகிமையோதல்

பாரப்பா புலத்தியனே பண்புள்ளானே
பாரினிலே நாதாக்கள் மறைத்தமார்க்கம்
ஆரப்பா எனைப்போல சொல்வாரங்கே
அப்பனே நானுனக்கு மனதுவந்து
தேரப்பா வட்சரமா மகிமைப்போக்கு
தெளிவாக யானுரைப்பேன் தேர்வேந்தேகேள்
கூரப்பா பஞ்சாட்சர வதிதமார்க்கம்
குறிப்புடனே யானுரைப்பேன் குணமாய்க்கேளே 594

கேளப்பா ஆறுவரை குறுக்கேகீறி
கெடியான வாறுவரை நெடுக்கேகீறி
மாளப்பா வரைதோறுஞ் சூலம்போடு
வளமான யிருபத்தஞ் சரையுமாச்சு
ஆளப்பா வட்சரத்தின் குறிப்புமார்க்கம்
அப்பனே நடுவணையைப் பிடித்துமாறு
நாளப்பா நடுவணைதா னேதென்றாக்கால்
நலமான சிவயநம வென்றுபோடே 595

போடப்பா வயநமசி என்றுபோடு
புகழான மேற்பக்கந் தன்னில்மாறு
நீடப்பா வசிநமய வென்றுமேதான்
நிலையான கடைப்பக்கங் கொண்டுமாறு
பாடப்பா மசிநவய மென்றுமேதான்
பாங்குடனே கீழ்ப்பக்கங் கொண்டுமாறு
ஆடப்பா யநமசிவ வென்றுமேதான்
அப்பனே யிடக்குறையிற் கொண்டுமாறு
சூடப்பா இப்படியே வைந்துபோடு
சுறுக்கமுடன் நால்நான்கு ரெட்டிப்பாக்கே. 596

ஆக்கப்பா வரைதோறும் வீடுமாக்கி
அப்பனே விருபத்தஞ் சரைதானுள்ளே
வாக்கதுவும் பிசகாமல் மையம்பூண்டு
மகத்தான நாதாக்கள் வழியறிந்து
நோக்கமுடன் கலைமாறி தலையுமாறி
நெடிதான வட்சரத்தை உள்ளடக்கி
தூக்கமது வாராமல் பிரணவத்தால்
துப்புரவாய் வசியமது முதலாஞ்சித்தே 597

சித்தான வட்சரத்தி னுயிரேதென்றால்
சிறப்பான ஓங்கார வீடமைத்து
முத்தான வட்சரத்தை உறுதிகொண்டு
மூதுலகில் நாதாக்கள் தன்னைப்போல
குத்தமது வாராமல் நசியம்பேடு
குணமான வட்சரத்தின் மகிமைகேளே
சுத்தமுள்ள ஓங்காரம் முதலெழுத்தாம்
சுருதிபொருள் கருவிகர ணாதியாமே. 598

ஆதியாம் ரீங்காரம் ஐயுங்கிலியும்
அப்பனே சவ்வுடனே மௌவுமாகும்
நீதியாம் அகரமென்ற உகரமப்பா
நிலையான ககரமுடன் பகரமாகும்
சோதியா மட்சரத்தை உருக்கொண்டோதி
சுருக்கமுட னுச்சரித்து வருகும்போது
பாதிமதி சடையனார் தம்பிரான்போல
பார்வைக்கு சோதியது காணுந்தானே 599

தானான சிகாரமது உகாரங்கூட்டி
தாக்கான சின்மயத்தின் வொளியேதோணும்
தேனான மனோன்மணியாள் நிர்த்தஞ்செய்வாள்
தேஜொளிவின் சொருபமதைக் காணலாகும்
மானான ஸ்ரீங்கிரியும் ஒன்றாய்க்கூடி
மகத்தான மயேஸ்வரரைக் காணலாகும்
பானான பரமவெளி முன்னேதோன்றும்
பாருலகில் சித்தர்செய்யும் பண்புதானே 600

பண்பான இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
பாலகனே கண்மணியே பகரக்கேண்மோ
உண்மையாய்ப் புலஸ்தியனே சுகுணமாரா
ஒகோகோ இந்திரனே சுந்தராகேள்
திண்மையாய் மாயவலை சிக்கறுத்து
திகழான வையகத்தைத் தான்மறந்து
உண்மையாய் உபதேசம் பெற்றுமல்லோ
ஒகோகோ நாதாக்க ளிருந்திட்டாரே 601

இருந்தாரே புலஸ்தியரே இந்திரவானே
எழிலான வையகத்தில் கோடிமாண்பர்
அருந்தவசி யாயிருந்து மதியம்பூண்டு
அப்பனே உலகாசை தன்னைவிட்டு

பொருந்தவே உபதேசங்கள் கொண்டுமல்லோ
பொங்கமுடன் தானிருந்தார் லக்கோயில்லை
திருந்தியே ஞானப்பா லட்சரத்தை
தீர்க்கமுட னுண்டல்லோ இருந்தார்தாமே 602

தாமான சௌவுடனே ஞௌவுங்கூடி
தாக்கான பிரணவத்தின் மகிமையாலே
பூமான்க ளானதொரு மாண்பரெல்லாம்
புகழான வட்டசித்தி பெறவேயாகும்
நாமேதான் சொன்னபடி நிட்டைதன்னில்
நலமான காளிதனைக் காணலாகும்
வேமேதான் டௌவுடனே ணௌவுங்கூடி
வெட்டவெளி யம்பரத்தைக் காணலாமே 603

காணலாம் பிரணவத்தை ஓதும்போது
கருவான காளிதனைக் காணலாகும்
பூணலா மௌவுடனே தௌவுங்கூடி
புகழான சித்துமுனி ரிஷிகளெல்லாம்
தோணவே யட்சரமா முயிரினாலே
தொல்லுலகில் சமாதிமுக மிருந்துகொண்டு
வேணபடி தவயாகஞ் செய்துமல்லோ
வெட்டவெளி கேசரத்தில் நின்றிட்டாரே 604

நின்றாரே குணக்குன்றே சிங்கவேறே
நெடிதான மணிவிளக்கே குலக்கொழுந்தே
குன்றான குஞ்சரமே புலஸ்தியாகேள்
குவலயத்தில் தேர்ந்தெடுத்த மணியுள்ளானே
தென்றிசையில் சித்துமுனி மெச்சும்பாலா
தேனமுர்த மானதொரு சிங்கவேறே
இன்றுமக்கு ஞானோப தேசமெல்லா
மியலாக உரைத்துவிட்டே னின்னங்கேளே 605

கேளப்பா ஞானமென்ற மௌனப்பாலை
கெட்டியாய் யானுரைப்பேன் சுகுணமாரா
ஆளப்பா மதியமுர்தம் பூண்டுமல்லோ
அப்பனே கும்பகத்தி லிருந்துகொண்டு
மீளப்பா வாசியது நடத்தும்போது
மிக்கான மவுனநிலை தன்னைப்பற்றி
சூளப்ப வட்சரமாஞ் சடாட்சரத்தை
சுத்தமுட னோதுதற்கு வண்மைகேளே 606

வண்மையாம் ரெளவுடனே நெளவுங்கூடில்
வளமான டாகினியும் வசியமாவாள்
உண்மையாய்க் கிலியுடனே மலியுங்கூடில்
உத்தமனே சித்தரெல்லாம் வசியமாவார்
திண்மையாய் இலிங்குடனே கிலியுங்கூடில்
தீர்க்கமுடன் மாண்பரெல்லாம் வசியமாவார்
தண்மையுள்ள வட்சரத்தை யுச்சாடிக்க
தாரணியில் சகலமுனி வசியமாமே 607

அகத்தியர் புலத்தியருக்கு சித்தர்கள் மகுத்துவங்கூறல்

வசியமா மின்னமொரு வதிதம்பாரு
வளம்பெரிய புலத்தியனே மச்சகேந்திரா
நிசிதமாய் ஞானப்பால் பெற்றபோது
நிதியுடன் சன்மார்க்க நிலையேவேண்டும்
விசிதமுடன் கசடகற்றி மெய்யேபூண்டு
வித்தியா கண்ணியத்தை மனதுவந்து
உசிதமுடன் மனோன்மணியாள் பதாம்புயத்தை
உத்தமனே நினைப்பவனே சித்தனாமே 608

சித்தனாக யிருந்தல்லோ ஞானப்பாலை
சிதானந்தப் பொருளென்று மனதிலுன்னி
புத்தியுடன் வாசியோக நிலையிற்சென்று
புங்கசித்தி யெட்டுமிகக் கொண்டாராய்ந்து
பகதியுடன் பிதாகுருவை மனதிலுன்னி
பாங்கான சிவயோக வலையில்நின்று
சத்தியமா யிருந்தவர்க்கு ஞானப்பால்தான்
தாரணியில் கிட்டுவதுந் திண்மையாமே 609

திண்மையாஞ் சிவயோகம் உடையானென்று
தன்மையுடன் வையகத்தில் கீர்த்திபெற்ற
நன்மையுள்ள ரிடிமுனிவர் சித்துதாமும்
நாதரது கிருபையுள்ள சித்தரென்றும்
வன்மைசெரி பாக்கியமும் பெற்றோனென்றும்
வளநாடு வையகத்தை யாண்டோனென்றும்
தன்மையாய் முன்னிலையாய்க் காணவென்று
சதகோடி சித்துமுனி வருவார்காணே 610

காணவே சித்துமுனி வந்திட்டாலுங்
கனகமென்ற கண்மணியே கருத்துள்ளானே
வேணபடி உந்தனையு முபசரித்து
விண்ணாடர் மண்ணாடர் வினையங்கொண்டு

மாணமருங் கல்வியுள்ள மதியுள்ளானே
மகப்பேறு வாசல்தனை விட்டபாலா
காணவே வருவார்கள் பட்சம்வைத்து
கண்டாலும் அஞ்சலிகள் மிகக்கொள்வீரே 611

கொள்ளவே உந்தனையு மாசீர்மிப்பார்
குணமுள்ள புலத்தியனே குமுதவானே
உள்ளதொரு உடல்பொருள்க ளாவியந்தம்
உத்தமனே அவர்தமக்கு தத்தமென்று
கள்ளமிலா மனதுடனே கசடகற்றி
கரங்குவித்து முடிசாய்ந்து கண்ணிலொத்தி
வள்ளலுயர்த் தெள்ளுதமிழ் அன்புள்ளானே
வணக்கமுட னவர்பாதந் தொழுவாய்பாரே 612

பாரேதா னவர்தமக்குப் பணிகள்செய்து
பாரினிலே எந்தனுக்கு குருவேயென்று
நேரேதான் முகதாவில் மனங்களித்து
நெடிதான பதாம்புயத்தைத் தலைமேற்கொண்டு
சீரேதான் சின்மயத்தி னொளிகண்டாப்போல்
தீர்க்கமுடன் அஞ்சலிகள் மிகவுங்கூறி
நீரேதான் மனவுறுதி கொண்டுமல்லோ
நீதியுட னவர்பதத்தைப் போற்றுவீரே 613

போற்றியே அவர்மனது கனியவேதான்
பொங்கமுட னவர்தமக்கு இதவுகூறி
நாற்றிசையும் மெச்சுகின்ற கற்பமப்பா
நலமான வானந்த கற்பந்தன்னை
ஆற்றலுடன் செய்தல்லோ சித்தருக்கு
அப்பனே தான்கொடுத்து மனங்களித்து
சீற்றமுடன் ஞானப்பா லின்னங்கேளு
சிறப்பான புலத்தியனே திடமுள்ளானே 614

அகத்தியர் புலத்தியருக்கு ஆனந்த கற்பங்கூறுவ து

திடமான கற்பமது வதிதஞ்சொல்வேன்
தீர்க்கமுட னாதாக்க ளருந்துங்கற்பம்
சடலமது அழியாத கற்பமப்பா
தாரணியில் மானிடர்கள் செய்யாகற்பம்
படலமுடன் கற்பமது சித்தர்தாமும்
பாரினிலே யாரேனுங் கூறவில்லை

குடகரிபோல் மாயாதி கற்பந்தன்னை
கூறுகிறேன் மாணாக்கள் பிழைக்கத்தானே. 615

தானான கற்பமது யேதென்றாக்கால்
தாக்கான நாதாக்கட் குகந்தகற்பம்
கோனான மூலியது யேதென்றாக்கால்
கொற்றவனே கோரக்கர் மூலியப்பா
தேனான மூலியது பலம்பத்தாகும்
தெளிவான கருஞ்சாரை பலம்பத்தாகும்
பானான சூரியனார் காந்தியப்பா
பாலகனே பலம்பத்து சேர்த்திடாயே. 616

சேர்க்கவே கருநாபி பலம்பத்தாகும்
செயலான பூவந்தி பலம்பத்தாகும்
ஏற்கவே பஞ்சாங்க மூலிதானும்
எழிலாக சமூலமது பலம்பத்தாகும்
தீர்க்கமுடன் பொன்னினூ மத்தையப்பா
திகழான பொன்னினா வாரைதானும்
வேர்க்கொடியாங் கொடிவேலி பலம்பத்தாகும்
வேருடனே தோன்றியது பலம்பத்தாமே 617

பத்தான மூலியது செஞ்சோறாதான்
பாங்கான உரிவியது ரெண்டதாகும்
புத்தான மூலியது பலம்பத்தாகும்
புகழான காஞ்சோரி பத்ததாகும்
முத்தான முருங்கையது பத்ததாகும்
முசியாத புரசையது பலம்பத்தாகும்
சத்தான கண்ணியது பலம் பத்தாகும்
சார்பான முள்ளியது பகரொண்ணாதே 618

ஒண்ணாது அழுகண்ணி பலம்பத்தாகும்
ஒகோகோ நாதாக்கள் மறைத்தகூத்து
எண்ணமுட னெழுத்தாணிப் பூண்டுதானும்
எழிலான செந்தொட்டி பலந்தான்பத்து
திண்ணமுடன் கருந்தும்பை பலந்தான்பத்து
தீர்க்கமுடன் கருந்துளசி பலம்பத்தாகும்
வண்ணமுள்ள கொ,,டிவேலி பலம்பத்தாகும்
வளமான கருவேலி பலம்பத்தாமே. 619

பத்தான கவுதும்பை பலந்தான்பத்து
பாங்கான செந்தும்பை பலந்தான்பத்து

புத்தான கருநொச்சி பலம்பத்தாகும்
புகழான வெண்ணொச்சி பலம்பத்தாகும்
சித்தான முட்டியது பலம்பத்தாகும்
சிறப்பான செங்கழுநீர் பலம்பத்தாகும்
குத்தமற்ற கருவிளா பலம்பத்தாகும்
கூறான வில்வமது பலம்பத்தாமே 620

பலமான சித்திரமா மூலியப்பா
பாங்கான பாலாடை பலம்பத்தாகும்
சலமான நீரின்மேல் நெருப்புதானும்
சாங்கமுடன் பலமதுவும் பத்துசேரு
குலமான நீர்ப்புலா பலம்பத்தாகும்
கூறான செவ்வள்ளி பலம்பத்தாகும்
நிலம்படறு முசுக்கையது பலம்பத்தாகும்
நிகரான கலப்பையது பலந்தான்பத்தே 621

பத்தான செங்கழுநீர் பலம்பத்தாகும்
பாங்கான வரமுள்ளி பலம்பத்தாகும்
சத்தான மூலியது விரலிதானும்
தன்மையுடன் மூலியது பலம்பத்தாகும்
சித்தமுடன் துத்தியென்ற மூலிதானும்
சிறப்பான எட்டியது பலம்பத்தாகும்
முத்தமுடன் கோரையென்ற மூலிதானும்
முயலான அல்லியது பலம்பத்தாமே. 622

அல்லியாஞ் செவ்வல்லி மூலிதானும்
அழகான தாமரையும் பலம்பத்தாம்
கொல்லிமலை தானிருக்கும் மூலியப்பா
கூறான பசளையது பலம்பத்தாகும்
பல்லுயென்ற பூண்டதுவும் பலம்பத்தாகும்
பாங்கான சகுனியது பலம்பத்தாகும்
புல்லியன்ற வாமணக்கு பலம்பத்தாகும்
புகழான சிறுமல்லி பத்துசேரே 623

சேரேதான் கடம்பையென்ற மூலிதானும்
சிறப்பான திகைப்பூண்டு பலம்பத்தாகும்
நேரேதான் மலைமீதிற் படர்ந்திருக்கும்
நெடிதான கும்பமென்ற மூலிதானும்
நீரேதான் அண்ணெரிந்தான் பூண்டுதானும்
நீதியுடன் சேரதுவும் பலம்பத்தாகும்

சீரேதான் மலைதாங்கி மூலியப்பா
சிறப்பான பலமதுவும் பத்துங்கூட்டே. 624

கூட்டவே தழுதாழை பலம்பத்தாகும்
குணமான தக்காளி பலம்பத்தாகும்
நீட்டமுடன் மூலிவகை யொன்றாய்க்கூட்டி
நினைவாக ரசமதுவும் பிழிந்துமேதான்
வாட்டமுடன் பாண்டமென்ற கலயந்தன்னில்
வளமுடனே தான்கலந்து கைபாகந்தான்
பூட்டகமாய் கற்கவகை சூரணந்தான்
புகலுகிறேன் மாணாக்கள் பிழைக்கத்தானே 625

தானான சூரணங்க ளேதென்றாக்கால்
தன்மையுள்ள சீரமது கருஞ்சீரந்தான்
தேனான மதுரமது பலமொன்றாகும்
தெளிவான யேலமது பலமொன்றாகும்
பானான சீரமது பலமொன்றாகும்
பாங்கான வசுவாசி பலமொன்றாகும்
மானான கார்போகம் பலமொன்றாகும்
மகத்தான செவ்வியம் பலமொன்றாமே 626

ஒன்றான யேலமது பலமொன்றாகும்
உத்தமனே சாதிக்காய் பலமொன்றாகும்
குன்றான குராசானி யோமந்தானும்
கூரான நற்சீரம் பலமொன்றாகும்
பன்றான வால்மிளகு பலமொன்றாகும்
பாங்கான சாதிபத்திரி பலமொன்றாகும்
தென்றிசையில் மலைதனிலே விளைந்திருக்கும்
தேற்றமுடன் சிறுநாகம் பலமொன்றாமே. 627

பலமான மிளகதுவு மொன்றேயாகும்
பாங்கான சுக்கதுவு மொன்றேயாகும்
தலமான திப்பிலியு மொன்றேயாகும்
தாக்கான தான்றியது வொன்றேயாகும்
வலமான நெல்லியது வொன்றேயாகும்
வளமான கடுக்காயு மொன்றேயாகும்
திலதமெனு மாசிக்கா யொன்றேயாகும்
தீர்க்கமுடன் கிராம்பதுவு மொன்றுதானே. 628

தானான கருவாயின் பட்டைதானும்
தாக்கான தக்கோலம் ஒன்றேயாகும்

கோனான முத்தமது வொன்றேயாகும்
குணமான சாதியென்ற கோஷ்டந்தானும்
மானான பலமதுவு மொன்றேயாகும்
மகத்தான பாங்கியது பலமொன்றாகும்
தேனான கசகசா பலமொன்றாகும்
தெவிட்டாத குங்குமமும் பலந்தான்காணே. 629

காணவே வாலுளுவை பலமொன்றாகும்
கருவான இம்பூரா பலமொன்றாகும்
தோணவே உச்சியது பலமொன்றாகும்
துடியான துளசிவிதை பலமொன்றாகும்
நீணவே சூரையென்ற வித்துதானும்
நிலையான செவ்வாலன் வித்துதானும்
பூணவே அத்தியென்ற வித்துதானும்
புகழான பலமதுவாய்ச் சரியாய்க்கூட்டே. 630

கூட்டியே வாய்விளங்கம் பலமொன்றாகுங்
குணமான ஓமமது பலமொன்றாகும்
நீட்டமுடன் தாளிசமும் பலமொன்றாகும்
நிலையான வித்ததுவு மின்னஞ்சொல்வேன்
வாட்டமுடன் கருத்துளசி பலமொன்றாகும்
வளமான நாய்க்கடுகு பலமொன்றாகும்
தேட்டமுடன் தேசாவும் பலமுமப்பா
தெளிவான கொத்துமல்லி விரையுமாமே 631

விரையான சாரமென்ற வித்துதானும்
வீரான குமட்டிமா தளையின்வித்தும்
திரையகற்று மாதண்டை வித்துதானும்
தீர்க்கமுள்ள கருங்காலி வித்துதானும்
சாரையென்ற வித்ததுவுஞ் சோனைவித்தும்
சுகரான பூசனியின் வித்துதானும்
தரைமீதிற் படர்ந்திருக்கும் முள்ளிவித்தும்
தாக்கான சரக்கதுவும் பலமொன்றாமே 632

ஒன்றான காக்கரியின் வித்துதானும்
ஓகோகோ சுருண்டையென்ற வித்துதானும்
குன்றான மத்தங்காய் வித்துதானும்
கூறான திராட்சமென்ற வித்துதானும்
பன்றான கடம்பத்தின் வித்துதானும்
பாங்கான காட்டுமிதி பாகல்வித்து

நன்றான நறுவெளியான் வித்துதானும்
நலமான தாமரையின் வித்துமாமே 633

வித்தான வெள்ளையென்ற குன்றிதானும்
வீரான சண்பகத்தின் வித்துதானும்
கொத்தான முந்திரிகை வித்துதானும்
குணமான பாவட்டை வித்துதானும்
சத்தான நீர்முள்ளி வித்துதானும்
சாங்கமுடன் பலாமரத்தின் வித்துதானும்
முத்தான மிளகரணை வித்துதானும்
முனையான பாற்சோறா வித்துகாணே 634

காணவே சரக்கெல்லாம் பலமொன்றாகும்
கருவாகத் தானெடுத்து வறுப்பாய்மைந்தா
பூணவே சூரணமாய்ச் செய்துகொண்டு
பொங்கமுடன் முன்சொன்ன சாற்றிலேதான்
நோணவே சாரதனிற் கலந்துமல்லோ
துப்புரவாய்ச் சீனியது ரெட்டிப்பாக
வேணபடி பாகுபதஞ் செய்துமல்லோ
வேற்றுமைகள் நேராம லின்னங்கேளே. 635

கேளேதான் மெழுகுபத மாகும்போது
கெடியான சூரணமு மூலியோடும்
பாளேதான் போகாமல் பாகுதன்னில்
பட்சமுடன் றான்கலந்து ஆவின்நெய்யால்
சூளேதான் பாகமது பிசகிடாமல்
சுந்தரனே மெழுகுபதந் தன்னில்வாங்கி
நீ[illegible]தான் மெழுகுபதந் தன்னில்வாங்கி
நிட்களங்க மாகியல்லோ யிறக்கிடாயே 636

இறக்கியே தேனதுவுங் கூடச்சேர்த்து
எழிலான பாகுபத மாகும்போது
திறக்கமுடன் றானிறக்கி தாளிதன்னை
தீர்க்கமுடன் நெல்லாவிப் புடத்திலப்பா
சிறக்கவே பட்சமது வைத்துமல்லோ
சீரான லேகியத்தைப் பதனஞ்செய்து
முறைப்படியே கொள்வதற்கு விதிதஞ்சொல்வேன்
முன்னவனே இன்னமொரு வயணங்கேளே 637

வயணமாம் லேகியத்தைப் பதனம்பண்ணு
வளமுடனே செல்வதற்கு வகுப்புகேண்மோ

பயமுடனே சித்தாதி முனிவருக்கு
பாங்குபெற ஊழியங்கள் மிகவுஞ்செய்து
நயமதுவாய் வார்த்தையது மிகவுங்கூறி
நாதாக்கள் மனமதுவு மகிட்சிகொள்ள
தயவுடனே ரிடிகளுக்குப் பணிகள்செய்து
தகமையுடன் கொடுத்திடுவாய் தன்மைபாரே 638

அகஸ்தியருபதேசித்த ஆனந்தகற்பத்தை புலஸ்தியர் சித்தர்களுக்கீதல்

பாரேதான் புலஸ்தியனே புண்ணியவானே
பட்சமுட னுந்தனுக்கு உபதேசித்த
நேரேதா னானந்த கற்பந்தன்னை
நெடிதான சித்துமுனி ரிடியாருக்கு
சீரேதான் தொண்டதுவு மிகவாய்ச்செய்து
சிற்பரனே விற்பனனே மனங்களிக்க
தீரேதா னவர்தமக்கு யிதவுகூறி
திட்டமுடன் கற்பமதைத் தாக்குவாயே 639

தாக்கையிலே அவர்களுந்தான் மனதுவந்து
தன்மைபெற உம்மீதில் பட்சம்வைத்து
நோக்கமுடன் வையகத்தின் மகிமையெல்லாம்
நுட்பமுட னுந்தமக்கு ஓதுவார்பார்
வாக்கதுவு மெதிர்நின்று மொழிகூறாமல்
வளமுடனே நயம்பேசி வணக்கங்கூறி
ஆக்கமுட னவர்பாதந் தொழுதுபோற்றி
அப்பனே பணிவிடைக்கு முன்னே நில்லே 640

நிற்கையிலே கற்பமது கொண்டபோது
நினைவழிந்து மதிகுலைந்து மதியம்பூண்டு
சொற்பமுள்ள வானந்த கற்பத்தாலே
சுந்தரம்போல் மனம்பொங்கி புளகாங்கித்து
விற்பனனே விண்மாரா விதியுள்ளானே
விட்டகுறை இருந்ததினா லுந்தமக்கு
அற்பமுடன் கருவிகர ணாதியந்தம்
அப்பனே உந்தனுக்கு வாய்க்கும்தானே 641

தானான குருபீடம் வாய்க்கும்பாரு
தாக்கான சமாதியிடங் காணலாம்
கோலான எனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் தன்பாத கடாட்சத்தாலும்

தேனான னமனோன்மணியாள் கிருபையாலும்
தென்பொதிகை சித்தருட வரத்தினாலும்
மானான மகதேவர் கடாட்சத்தாலும்
மார்க்கமுட னுந்தமக்கு வமைக்கும்பாரே 642

அமைக்குமே வானந்த கற்பந்தன்னால்
அஷ்டாங்க யோகமெல்லாங் கைக்குள்ளாகும்
நிமைப்பொழுதுந் தவப்பொழுதும் நிலைகொள்ளாமல்
நிராமயத்தின் சற்குருவை மனதிலுன்னி
சுமைபோன்ற ஞானமெனுஞ் சாகரத்தை
சுந்தரனே இந்திரனே சுட்டறுத்து
அமையளவு நிதானமது கண்டுமேதான்
அப்பனே யஷ்டாங்கந் தன்னைக்கொள்ளே 643

அகஸ்தியர் புலஸ்தியருக்கு தாளக வேதை கூறல்

கொள்ளவே இன்னமொரு வதிதஞ்சொல்வேன்
கொற்றவனே புலஸ்தியனே குணமுள்ளானே
உள்ளபடி உந்தமக்கு வாதஞ்சொல்வேன்
உத்தமனே புலஸ்தியனே என்றுகூறி
கள்ளமிலா புலஸ்தியரு மேதுசொல்வார்
கண்ணான கண்மணியே கவிராஜேந்திரா
தெள்ளமுர்த மானதொரு வாதசூட்சம்
தேஜொளியே கூறவென்று வணங்கிட்டாரே 644

வணங்கியே கேட்கையிலே கும்பயோனி
வணக்கமுடன் புலஸ்தியரை நோக்கியல்லோ
இணங்கவே வாதவித்தை ஏதுசொல்வார்
எழிலான புலஸ்தியர்க்கு உண்மையாக
மணங்கமழும் என்சீஷா மச்சகேந்திரா
மகத்தான நாதாக்கள் கூறவில்லை
குணமான வேதையிது தாரவேதை
கொற்றவனே உந்தமக்கு ஓதுவேனே 645

ஓதுவேன் புலஸ்தியனே உண்மையோனே
ஒகோகோ நாதாக்கள் மறைத்துவைத்தார்
நீதமுடன் தாரமென்ற வேதையப்பா
நிஷ்களங்க மானதொரு சுளுக்குவேதை
போதமுடன் தாரமது சேர்தானப்பா
பொங்கமுடன் கற்சுண்ணம் பொதிந்துமல்லோ
நீதமுடன் தாளகத்தைச் சுத்திசெய்து
நீதியுடன் தானெடுப்பாய் நீதியுள்ளானே 646

நிதியான வித்தையிது யேமவித்தை
நீணிலத்தில் நாதாக்கள் மறைத்தவித்தை
பதியான பதியமர்ந்து காட்டகத்தில்
பாங்குடனே முக்கள்ளிப் பாலாலப்பா
விதிபோலே மண்டலந்தான் சுறுக்குதாக்கு
வீரான தாளகமு மடிந்துமல்லோ
மதிபோன்ற நிறமதுபோல் மெழுகுமாகி
மகத்தான காரமது உண்டாம்பாரே 647

பாரேதான் மெழுகுவகை போக்குசொல்வேன்
பாங்கான கண்டரது சரிநேரொக்க
நேரேதான் ஆறுவகை ஜெயநீர்தன்னால்
நேர்மையுடன் தானறைப்பாய் துருசுதன்னை
சீரேதான் தாளகத்துக் கங்கிபூட்டி
சிறப்புடனே சீலையது கற்சுண்ணந்தான்
வீரேதான் போகாம லேழுசீலை
வீறுடனே செய்துமல்லோ ரவியில்வையே 648

வைக்கவே ரவிதனிலே காய்ந்தபின்பு
வளமுடனே புத்துமண் சீலைசெய்து
நைக்கவே சீலையது வலுவாய்ச்செய்து
நலமுடனே புடமதுவு மேதென்றாக்கால்
பொய்க்காம லன்பதெரு புடத்தைப்போடு
போக்கான தாளகமுங் கட்டிப்போகும்
மெய்க்கவே தாளகமுங் கட்டிப்போனால்
மேதினியில் வாதவித்தை மெய்யதாச்சே 649

ஆச்சப்பா தாளகமுஞ் சத்தேயானால்
அப்பனே வாதவித்தை கைகுள்ளாச்சு
மூச்சடங்கித் தாளகமு முறுதியல்லோ
முனையான கரிவங்கம் போலாகும்பார்
மாச்சலது வாராத வங்கமப்பா
மானிலத்தில் மாண்பர்களுங் காணாவித்தை
ஆச்சரிய மானதொரு வங்கச்சத்து
அப்பனே தங்கமென்ற சத்துக்காணே 650

காணவே தங்கமென்ற வங்கசத்தை
கருவான நாகத்திற் கிடையேகூட்டி
தோணவே ரசமதுவுஞ் சுத்திசெய்து
தோறாமல் வங்கமிடை சூதஞ்சேரு

பூணவே மூன்றுமொன்றா யுருக்கிப்பாரு
புகழான சூதமென்ற பிட்டுபோலாம்
காணரிய வங்கமென்ற சத்துதானும்
காசினியி லாரேனுங் காண்பார்தானே 651

தானான தாரமென்ற சத்துதன்னால்
தாக்கான சூதமென்ற நாகந்தானும்
கோனான தாளகத்தின் சத்துதன்னால்
கொற்றவனே சரக்கெல்லாஞ் சத்தேயாகும்
தேனான சத்துடனே தங்கஞ்சேர்த்து
தெளிவுடனே தானரைக்க வகையைக்கேளீர்
மானான வாறுவகை ஜெயநீர்தன்னால்
மன்னவனே தானறைப்பாய் ஜாமம்நாலே 652

புலஸ்தியர் அகஸ்தியரை ஜெயநீர் பாகங் கேட்டது

நாலான ஜாமமது வரைக்கவென்று
நன்மையுடன் குருநாதா எந்தன்சாமி
பாலான ஜெயநீர்தா னேதென்றாக்கால்
பாலகனே எந்தனுக்கு பட்சங்கொண்டு
சூலான பாகமதை எந்தனுக்கு
சுந்தரரே சூட்சமதை தெரியவென்று
மேலான பதாம்புயத்தை தாள்பணிந்து
மெல்லடிக்குப் பதந்தொழுது பணிந்திட்டாரே 653

பணிந்துமே நிற்கையிலே கும்பயோனி
பட்சமுடன் மனதுவந்து புலஸ்தியர்க்கு
துணிந்துமே ஆறுவகை ஜெயநீர்தன்னை
துப்புரவாய் முறைபாகங் கைபாகந்தான்
மணிபோன்ற கண்டரது ஒன்றேயாகும்
மகத்தான மதியுப்பு ரெண்டேயாகும்
துண்டரித்த மானதொரு சாரந்தானும்
துப்புரவாய் ரெண்டிடையாய்க் கூடக்கூட்டே 654

கூட்டியே் காரமது நாலதாகும்
குணமான சீனமது எட்டதாகும்
வாட்டமுடன் கரியுப்பு ரெண்டதாகும்
மகத்தான சரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி
நீட்டமுடன் ஜெயநீராய்ச் செய்துகொண்டு
நிஷ்களங்க மாகவல்லோ சரக்கையெல்லாங்
பூட்டகம்போல் ஜெயநீரா யிறக்கியல்லோ
புகழான சரக்கதனை அரைத்திடாயே 655

அரைக்கையிலே சரக்கெல்லா மடிந்துகொல்லும்
அப்பனே புலஸ்தியனே மச்சகேந்திரா
திரையகன்ற தாளகத்தின் சத்துதன்னை
தீர்க்கமுடன் செந்தூரஞ் செய்வதற்கு
முறையான முறைப்படியே கெந்திதானும்
முசியாமல் சத்துக்கு இடைகாலாக
மறைவாகத் தான்சேர்த்து ஜெயநீரப்பா
மார்க்கமுடன் றானரைப்பாய் சாமமெட்டே 656

எட்டான செந்தூர மரைத்துமேதான்
எழிலான ரவிதனிலே காயப்போடு
திட்டமுடன் ரவிதனிலே காய்ந்தபின்பு
தீர்க்கமுடன் காசியென்ற குப்பிதன்னை
சட்டமுடன் சீலையது யேழுசெய்து
தன்மையுள்ள செந்தூர மதிற்பொதிந்து
வட்டமுள்ள பாண்டமதில் மணலைச்செம்மி
வளமான பாண்டமதில் பொதிந்திடாயே 657

பொதிந்துமே இன்னம்வெகு வினோதஞ்சொல்வேன்
பொங்கமுடன் புலத்தியனே புகலக்கேளும்
விதியளவாய் மேலுமந்த மணலைச்செம்மி
வித்தகனே மேற்பாண்டந் தன்னால்மூடி
பதியவே சீலையது வலுவாய்ச்செய்து
பாங்குபெற ரவிதனிலே காயவைத்து
மதியுடனே வாலுகா எந்திரத்தில்
மன்னவனே தானெரிப்பாய் சாமம்பத்தே 658

பத்தான ஜாமமது எரித்தபோது
பாலகனே செந்தூர மென்னசொல்வேன்
சத்தான தீயாறிக் குளிர்ந்தபின்பு
சட்டமுடன் பாண்டமதைத் திறந்துபார்க்க
முத்தான செந்தூர மென்னசொல்வேன்
மூதுலகில் நாதாக்கள் செய்யும்வேதை
பத்தியுள்ள மாண்பர்களுங் காணமாட்டார்
பாலகனே புலஸ்தியனே பகர்ந்திட்டேனே 659

பகர்ந்தேனே புலஸ்தியனே பண்டுள்ளானே
பலகோடி சித்தர்முனி நூல்களெல்லாம்
தகர்ந்திடவே கண்டுமிக வுளவாராய்ந்து
தாரணியி லுந்தமக்கு ஓதினேன்யான்

யம்பெறவே சித்தர்செய்யும் வேதைதன்னை
தேற்றமுட னுந்தமக்குக் கைபாகந்தான்
நயம்படவே யானுரைத்தேன் புலஸ்தியாகேள்
நாட்டினிலே கருமிகட்கு யீயாநன்றே 660

நன்றான செந்தூரந் தன்னையப்பா
நாட்டினிலே கருமிகட்கு யீயவேண்டாம்
குன்றான மலைபோலே மன்னரப்பா
குவலயத்திற் சிவயோகி குருக்களுண்டு
சென்றுமே உமதிடத்தில் மனதுவந்து
செப்புவார் கோடிமுறை பலபேதங்கள்
வென்றிடவே புலஸ்தியனே மனதாராய்ந்து
விருப்பமுடன் கொடுப்பதுவுந் தருமமாமே 661

தருமமாஞ் சிவயோகி மாண்பாருக்கும்
தகமையுள்ள ராஜாதி ராஜருக்கும்
மருமமது கொண்டதொரு மாண்பருக்கும்
மகத்தான ரிஷிமுனிவர் சித்தருக்கும்
அருமைபெறும் நற்குணத்தை உடையவர்க்கும்
அப்பனே கொடுப்பதுவும் புண்ணியந்தான்
கருமியென்ற சண்டாள பாவியோர்க்கும்
காசினியில் கொடுப்பதுவும் பாவம்தானே 662

செந்தூர வேதைமுகம்

தானான புலஸ்தியனே தம்பிரானே
தன்மையுள்ள கண்மணியே கவிராஜேந்திரா
கோனான தென்பொதிகைக் குடையகோவே
கொற்றவனே நூலறிந்த குணமுள்ளானே
தேனான ஆயுள் வேதந்தன்னை
தேற்றமுடன் கண்டறிந்த சித்துபாலா
மானான மன்னவனே மணமுள்ளானே
மார்க்கமுடன் சொல்லுகிறேன் மகிழ்வாய்க்கேளே 663

கேளப்பா செந்தூரந் தனையெடுத்து
கெவனமுடன் சீசாவிற் பதனம்பண்ணு
பாளப்பா போகாமல் செந்தூரத்தை
பாலகனே பாச்சுகின்ற வகைதான்பாரு
மீளவே மதிபோன்ற வெள்ளிதானும்
மிக்கவே சதநூறு நிறுத்துகொண்டு
மாளவே வெள்ளிதனை உருக்கிமைந்தா
மன்னவனே களஞ்சிடைதான் பாச்சிடாயே 664

பாச்சவே மாற்றதுவும் பத்தேயாகும்
பாங்கான தங்கமது சொல்லொண்ணாது
மாச்சலது வாராத தங்கமப்பா
மகத்தான சிவயோகித் தங்கமாகும்
பாச்சலுடன் வாரடித்துப் புடத்தைப்போடு
பழுப்பான தங்கமது பசுமையாகும்
ஆச்சரிய மானதொரு தங்கமப்பா
அப்பனே நாதாக்கள் வேதைதானே 665

தானான வேதைமுகஞ் சொல்லொண்ணாது
தாக்கான செந்தூரஞ் சிவப்புமெத்த
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தனுக்கு சொன்னநீதி
மானான மாண்பர்களுஞ் செய்வாரேதான்
மானிலத்தில் கருவாளி செய்வான்பாரு
தேனான மனோன்மணியாள் கிருபையாலே
தேற்றமுட னுந்தமக்கு ஓதினேனே 666

ஓதினேன் செந்தூரந் தன்னையப்பா
உத்தமனே நாதாக்கள் செய்வாரல்லால்
நீதியுள்ள சிவயோகி மாண்பர்செய்வார்
நிஷ்களங்க மானவர்கள் செய்வாரப்பா
பாதிமதி சடையணியுந் தம்பிரான்போல்
பரமரிஷி செய்வார்பார் மற்றோர்செய்யார்
சாதியிலே ஒருவனுண்டு தருமவான்பார்
சாகரத்தைக் கடந்ததொரு யோகவானே 667

யோகமென்றால் யோகமது செய்வான்பாரு
யோகநிலை கொண்டதொரு சித்தனப்பா
ஆகமங்கள் தானறிந்த மாண்பரப்பா
அப்பனே செய்வார்பார் மற்றோர்செய்யார்
போகமது விட்டொழிந்த புண்ணியோர்கள்
பூதலத்தில் கருவறிந்து செய்வார்பாரு
வேகமுடன் கருமியென்ற பாவியோர்க்கு
விட்டகுறை இருந்தாலும் லபிக்காதன்றே 668

அன்றான செந்தூரந் தன்னையப்பா
அப்பனே செம்பதனில் நூற்றுக்கொன்று
வென்றிடவே தானுருக்கி களஞ்சியீய
வேதாந்தத் தாயினது அருளினாலே

குன்றான மலைமீதில் விளையுந்தங்கம்
கூறான தங்கமிதற் கீடாமோசொல்
அன்றுரித்த வாதிசிவன் பூணுந்தங்கம்
அப்பனே பிறவியென்ற தங்கமாச்சே 669

ஆச்சப்பா தங்கமதை வாரடித்து
அப்பனே புடம்போட பிறவித்தங்கம்
மூச்சடங்கிப் போனதொரு சித்தர்தாமும்
மூதுலகில் தானறிந்த தங்கமாகும்
மாச்சலது வாராது பசுமைத்தங்கம்
மகத்தான நாதாக்கள் செய்யுந்தங்கம்
ஆச்சரிய மானதொரு செந்தூரந்தான்
அப்பனே விதியாளி யறிவான்பாரே 670

பாரேதான் செந்தூரந் தனையெடுத்து
பட்சமுடன் பாச்சுதற்கு வகையைக்கேளும்
நேரேதான் குடவனிலே நூற்றுக்கொன்று
நேர்மையுடன் தானுருக்கி களஞ்சியிய
சீரேதான் குடவனது வூரலற்று
செப்ப வொண்ணாத் தங்கமது பசுமைத்தங்கம்
வீரேதா னுப்புக்குங் காவிக்கேகா
வித்தகனே விளைவுதங்க மென்னலாமே 671

என்னவே செந்தூரந் தன்னையப்பா
எழிலாக உண்பதற்கு வகையைக்கேளீர்
சொன்னபடி திரிகடுகு சூரணத்தில்
சொர்ணமுள்ள செந்தூரங் குன்றியாக
பண்ணவே சூரணமாங் களஞ்சிதன்னை
பாகமுடன் றானருந்த செந்தூரந்தான்
உன்னிதமாய் ரோகமெலாந் தீர்ந்துமல்லோ
உத்தமனே காயாதி கற்றூணாமே 672

கற்றூணாந் தேகமது என்னசொல்வேன்
காயாதி கற்பமென்றே சொல்லலாகும்
சொற்பெரிய செந்தூர முண்டபோது
சோறாமல் நெடுங்கால மிருக்கலாகும்
விற்பனர்கள் ராஜாதி ராஜர் தாமும்
விருப்பமுட னுண்பதற்கு கற்பமாகும்
அற்பமென்று நினையாதே காயகற்பம்
அப்பனே விதியிருந்தால் கிட்டுந்தானே 673

தானான வையகத்தில் நெடுங்காலந்தான்
தகமையுடன் காயாதி கற்பங்கொண்டு
தேனான மனோன்மணியாள் கிருபையாலும்
தெளிவான சின்மயத்தி னருளைக்காண்பீர்
கோனான குருவருளால் யுகாந்தகாலம்
கொற்றவனே மண்மீதி லிருக்கலாகும்
பானான பரிதிமதி யுள்ளமட்டும்
பூாலகனே யிருந்துமிக வாழலாமே. 674

அகஸ்தியர் – புலஸ்தியருக்கு மூன்றுயுக சங்கதிகூறுதல்

வாழவே புலஸ்தியனே வலுவுள்ளானே
வண்டமிழின் பயனறிந்த மதியுள்ளானே
ஆழவே யுகாந்தவரை யிருந்தசித்து
அப்பனே கோடியுண்டு லக்கோயில்லை
வீழவே காயாதி கற்பங்கொண்டு
விண்ணுலகை மறந்தவர்கள் கோடியுண்டு
கீழவே சமாதிமுகஞ் சென்றோர்கோடி
கிட்டாமல் விட்டகுறை இருந்தோர்தாமே. 675

இருந்தாரே வெகுகோடி மாண்பரப்பா
எழிலான சிவயோகஞ் செய்துகொண்டு
திருந்தவே மலைதனிலுங் குகையிற்சென்று
தீர்க்கமுடன் நெடுங்கால மிருந்தாரங்கே
பொருந்தவே விட்டகுறை யிருந்தோரெல்லாம்
பொங்கமுடன் காயாதி கற்பத்தாலே
வருந்தியே மூன்றுயுக மிருந்தாரப்பா
வளமுடனே சமாதிமுகஞ் சென்றார்பாரே 676

பாரேதான் திரேதாயி னுகத்திலப்பா
பாங்கான பிரிங்கிமகா ரிஷியார்தானும்
நேரேதான் கைதனிலே வில்லும்வாளும்
நெடிதான கமண்டலமுங் கையிலேந்தி
சீரேதான் தவயாகஞ் செய்துகொண்டு
சிறப்புடனே நெடுங்கால மிருந்தசித்து
வீரேதான் மூன்றுயுக மறிந்தசித்து
மிக்கான பிரிங்கிமகா ரிஷியார்தானே 677

தானான பிரிங்கிக்கு சீஷனப்பா
தாக்கான சுயமக்கினி சித்துதாமும்
கோனான கருக்கிடையாம் நூல்தானப்பா
கொற்றவனே சூத்திரமும் நூறதாகும்

தேனான சுருக்கமாஞ் சூத்திரத்தில்
தெளிவுடனே ஞானப்பா லதிகஞ்சொன்னார்
பானான யோகமது பூண்டுகொண்டு
பாங்குடனே நெடுங்கால மிருந்திட்டாரே. 678

இட்டாரே மூன்றுயுக காலமப்பா
எழிலான சித்துமகா ரிஷியார்தாமும்
சட்டமுடன் மூன்றுயுக காலந்தன்னில்
சாங்கமுடன் யோகமதி லிருந்துகொண்டு
திட்டமுடன் வையகத்து மகிமையெல்லாம்
தீர்க்கமுடன் கண்டறிந்தார் நாதர்தாமும்
விட்டகுறை யிருந்ததொரு தன்மையாலே
விருப்பமுடன் நெடுங்கால மிருந்தார்தானே. 679

அகஸ்தியர் – புலஸ்தியருக்கு மறுபிறப்பு இல்லையென்றுகூறல்

தானான புலஸ்தியனே தயவுள்ளானே
தகமையுட னுந்தமக்கு சாற்றுவேன்கேள்
கோனான எனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தனுக்குச் சொன்னநீதி
மானான வையகத்து மாண்பரெல்லாம்
மார்க்கமுடன் கோடிநூல் படித்துமென்ன
தேனான ஞானப்பால் ரகசியத்தை
தேற்றமுடன் கண்டறியா மாந்தர்பாரே. 680

பாரேதான் ஞானப்பால் ரகசியத்தைப்
பாருலகில் நாதாக்க ளறிந்திருந்தும்
நேரேதான் சாத்திரத்தின் நுணுக்கறிந்து
நேர்மையுடன் மறைபொருளை அறியாமற்றான்
கூரேதான் குவலயத்தி லிறந்தோரெல்லாம்
கொற்றவனே மறுபிறப்பு பிறப்பாரென்று
சீரேதான் சாத்திரங்கள் மிகவாய்ப்பாடி
சிறப்புடனே கட்டிவைத்தார் கோடிநூலே. 681

நூலேதான் கோடிமுறை சாத்திரத்தில்
நுணுக்கமுடன் மறுபிறப்பு உண்டேயென்று
மேலான காவியங்க ளிதிகாசங்கள்
மேன்மையுடன் பாடிவைத்தார் கோடிவாணர்
சேலான சாத்திரத்தி னுளவுமார்க்கஞ்
செப்புகிறேன் புலஸ்தியனே செல்வவானே
பாலான உபதேசம் ஞானப்பாலை
புகட்டுகிறேன் அருண்மைந்தா பண்பாய்க்கேளே 682

பண்பான பிறப்பதுவு மேதென்றாக்கால்
பகருகிறேன் புலஸ்தியனே பளிங்குள்ளானே
நண்பான பிறப்பதுவு மிறப்புமுண்டு
நலமான பிறப்பதும் பிறப்புமில்லை
வண்பான உளவுதனை காணமாட்டார்
வளம்பெரிய நாதாக்கள் சித்துதாமும்
கண்பான ரகசியத்தை விள்ளாமற்றான்
கருவான நூலெல்லாம் பாடினாரே. 683

புலஸ்தியர் – மறுப்பிறப்பின் வரலாற்றை வினவல்

பாடினா ரென்றல்லோ முனிவர்தாமும்
பகட்டுரையாய்க் கூறினது விள்ளவில்லை
தேடியதோர் சாத்திரங்கள் முறைபாடெல்லாந்
தெளிவுறவே உபதேசஞ் செய்யவென்று
நீடியே கரங்குவித்து பதாம்புயத்தை
நீதியுட னஞ்சலித்து முடிகள்சாய்த்து
வாடியே புலஸ்தியருந் தாள்பணிந்து
வணக்கமுடன் குருதனையே வினவுவாரே. 684

வினவயிலே கும்பமுனி ரிஷியார்தாமும்
விட்டகுறை இருந்ததொரு புலஸ்தியர்க்கு
தினகரன்போல் மறுபிறப்பின் ஞானப்பாலை
தீர்க்கமுட னுபதேசஞ் செய்வேனென்று
மனமிரங்கி கும்பமுனி ரிஷியார்தாமும்
மார்க்கமுடன் புலஸ்தியர்க்கு உபதேசங்கள்
கனவுகண்ட கதைபோலே முனியார்தாமும்
கருவாகத் தானுரைப்பார் பண்பாய்த்தானே 685

பண்பான பிறப்பதுவும் பிறப்பேதென்றால்
பாருலகில் மாண்டவர்கள் பிறப்பதில்லை
திண்பான காயகற்பங் கொண்டுமல்லோ
திறமுடனே வையகத்தில் நெடுங்காலந்தான்
நண்புடனே சிவனோ டிருப்பேனென்று
நாதாந்த சித்துகளு முறுதிகூறி
கண்பான சமாதிக்கு இடமுந்தேடி
கருவாக சிவனோ டிறங்குவாரே. 686

இறங்கியே சிலகால மங்கிருந்து
எழிலான சமாதிமுகந் திரும்பியேதான்
நிறங்குலையா தேகமது தங்கம்போலே
நிஷ்களங்க மாகியல்லோ சமாதிருந்து

திறமுடனே மேதினியில் வருவாரப்பா
சித்துமகா ரிஷியாரு முனிவர்தாமும்
உறமுடனே சமாதிதனி லிருந்துமல்லோ
உத்தமர்கள் கோடிபேர் வந்திட்டாரே. 687

வந்துமே சிலகாலம் வையகத்தில்
வளமையுடன் தானிருந்து சித்துதாமும்
சிந்தனையாய்ப் பிறவியது வேண்டாமென்று
சிறப்பான சடலமதை ஒழிக்கவென்று
அந்தமுடன் தன்மனதி லுள்ளடக்கி
அப்பனே பின்னுமல்லோ சமாதிக்கேகி
சொந்தமுடன் சிலகால மங்கிருந்து
சோறாமல் சமாதிமுகம் வருவார்தானே 688

தானான சமாதிமுக மேகியல்லோ
தன்மையுடன் வருவதுவும் போவதுந்தான்
கோனான சமாதிமுகம் போவதெல்லாம்
கொற்றவனே மறுசென்ம மென்னலாகும்
தோனான சமாதிமுகங் கோடிசித்தர்
தெளிவுடனே போவதும் வருவதுந்தான்
பானான மறுபிறப்பு என்னலாகும்
பாலகனே சமாதியிட பிறப்புதானே. 689

பிறப்பான பிறப்பதுவும் பொய்யேயல்லால்
பேரான யிறப்பதுவும் மெய்யேயாகும்
சிறப்பான சமாதிமுகஞ் சென்றுவந்தால்
செழிப்பான பிறப்பதுவே என்னலாகும்
திறப்புடனே செத்தவர்கள் பிறப்பதில்லை
சீரான சமாதிமுகம் பிறப்பேயாகும்
மறப்புடைய ரகசியங்கள் யார்தான்காண்பார்
மகத்தான கருவாளி காண்பான்பாரே. 690

பாரேதான் ஜெகதலங்க ளிப்படியேயாச்சு
பாருலகில் நாதாக்கள் செய்தநூலில்
நேரேதான் வெகுகோடி காப்புதன்னை
நேர்மையுடன் வெகுநூல்கள் பாடிவைத்தார்
வீரேதான் நூல்பார்த்து மதியம்பூண்டு
விட்டகுறை அறியாமல் மாண்பரெல்லாம்
பாரேதான் மறுபிறவி உண்டேயென்று
பாலகனே பாடிவைத்தார் கோடியாமே 691

கோடியாஞ் சமாதிமுகம் பிறப்பேயல்லால்
கொற்றவனே சடலமது வழிந்துமேதான்
நீடியே மறுபிறவி என்றவார்த்தை
நித்தியமென்ற றைவதற்கு நீதியில்லை
கூடியதோர் மொழிகளெல்லா மனித்தியமென்று
குவலயத்தில் கூறுதற்கு வையமில்லை
பேடியென்ற மாண்பர்களும் விழலாய்க்கூடி
பினத்தினார் வெகுகோடி நூல்கள்காணே 692

அகஸ்தியர்–புலஸ்தியருக்கு பதினெண்பேர் தர்க்கநூல் கூறல்

காணவே இன்னமொரு வதிதஞ்சொல்வேன்
கருவான புலஸ்தியனே கண்ணுள்ளானே
நீணவே பதினெண்பேர் சித்துதாமும்
நிஷ்களங்க மாகியல்லோ நீதிவான்போல்
தோணவே கூட்டமது ஒன்றாய்க்கூடி
தொகுப்புடனே ஞானப்பால் கருவிதன்னை
வேணபடி அவரவர்கள் மனம்வேறாக
விருப்பமுட னெந்தனையுங் கேட்டார்தானே 693

தானான பிறப்பிறப்பை கேட்டபோது
தன்மையுடன் சித்துமகா ரிஷியாருக்கு
கோனான சாத்திரங்க ளுளவுபூண்டு
கொற்றவனே பலபலவா றுரைத்தேன்யானும்
தேனான சமாதியென்ற பிறப்புதன்னை
தேற்றமுடன் யாமவர்க்கு உரைக்கும்போது
மானான பிறவியென்ற சென்மந்தன்னை
மார்க்கமுடன் எந்தனையும் வினவினாரே 694

வினவியே எந்தனைதான் கேட்கும்போது
விளம்பினேன் சாத்திரத்தின் கூறறிந்து
நினைவுதடு மாறாத வண்ணமப்பா
நிராமயத்தின் பொருளறிந்து நீதியோடும்
மனம்புத்தி சித்த மாகாசத்தோடும்
மவுனநிலை தானறிந்து மதிதங்கொண்டு
கனவுகண்ட கதைபோலே யானுரைத்தேன்
கருவான சித்தரெல்லாஞ் சினந்திட்டாரே 695

சினந்துமே என்மீதில் கோபங்கொண்டு
சிதாபாசப் பொருளதனை மறைத்தேனென்றும்
மனந்தனிலே கபடதிக மிகவும்பூண்டு
மார்க்கமுட னிதிகாசப் புராணமெல்லாம்

இனங்கண்டு சித்துமகா ரிஷிகளெல்லாம்
எழிலான சாத்திரங்கள் விளம்பிருக்க
கனமான பிறவியென்ற சென்மந்தன்னை
கருத்தளவாய்க் கூறவில்லை என்றிட்டாரே 696

என்றாரே சித்துமகா முனிவர்தாமும்
எழிலான வார்த்தையது பேதங்கூறி
குன்றான மலைபோலே சாத்திரங்கள்
கோடான கோடிமனு சித்தரெல்லாம்
வென்றிடவே ஒருவருக்கோ ருவமைகூறி
வேதாந்த சித்தாந்த மகிமைசொல்லி
நன்றான நூற்களிலே வதிதமார்க்கம்
நவின்றிட்டார் பலபேரும் நவின்றிட்டாரே 697

நவின்றாரே பிறப்பிறப்பின் மார்க்கந்தன்னை
நவகோடி ரிஷிகள்முதல் பதினெண்பேரும்
புவிமீதில் பாடியல்லோ மறைந்துபோனார்
புங்கசித்தி காயமுடன் சமாதிபூண்டார்
அவியாத தீபம்போல் ஆத்மபேதம்
அப்பனே பலநூலில் பலவாய்க்கூறி
குவிந்ததொரு சாத்திரத்தின் குப்பைபோலே
கூறினார் பலரிஷியுங் கூறினாரே 698

கூறினதோர் சாத்திரங்க ளிதிகாசங்கள்
குவலயத்தில் பிறப்பிறப்பு உண்டேயென்றும்
தூறியே பலமுனிவர் ரிஷிகள்தாமும்
துப்புரவாய்ப் பாடிருக்க பலபேதங்கள்
சீறியே யவர்மீதிற் சினந்துமேதான்
சிற்பரனே பிறப்பிறப்பு இல்லையென்றும்
மாறிடவே புத்திதடு மாற்றங்கொண்டு
மன்னவரே கூறினது பொய்யென்றாரே. 699

பொய்யான சென்மமது சென்மந்தானும்
பூதலத்தில் ஒருகாலும் நிலைநில்லாது
மெய்யான வாழ்வதுவும் பொய்யேயல்லால்
வித்தகரே இருப்பதுவும் பொய்யேயாகும்
கைதவத்தால் விட்டகுறை யிருந்திட்டாலும்
கர்த்தாவே இருப்பதுவும் பொய்தானாகும்
வையகங்கள் தானறியா வாழ்க்கையாவும்
வளமுடனே பாடினதோர் கதைபோலாச்சே. 700

ஆச்சென்று விடுகாதே மவுனயோகி
ஐயனே யுன்பாதந் தொழுதுபோற்றி
மூச்சடங்கி நெடுங்காலம் பொதிகைதன்னில்
முனையான சமாதினி விருந்தசித்தே
பாச்சலென்ற சென்ம சாகரத்தைதானும்
பார்த்திபரே எந்தனுக்கும் பகரவென்று
ஆச்சரிய வார்த்தையது வாசீர்மங்கள்
அன்புடனே கூறவென்று வறைந்திட்டாரே. 701

ஜென்மமில்லையென்று–அகஸ்தியர் சொன்னதை சித்தர்கள் தடுத்தாட் கொள்ளல்

அறையவே அடியேனு மனதுவந்து
அன்புடனே சீஷருக்கு யிதவுகூறி
நிறையவே சித்தரது கேட்டமார்க்கம்
நீடாழி உலகமெலா மறிந்திருக்கும்
முறையோடு ஞானப்பால் உபதேசங்கள்
மூதுலகில் கண்டவர்க ளாறுமில்லை
சிறைகொண்ட ராவணனும் ஞானமுண்டு
திரையாழி கடல்தனிலே மடிந்திட்டானே. 702

மடிந்தாரே வெகுகோடி மன்னரெல்லாம்
மானிலத்தில் சொல்வதற்கு நாவுமுண்டோ
கடிந்ததொரு வேதங்க ளெல்லாங்கூறும்
காசினியில் ஞானப்பால் கொள்வதற்கு
விடிந்தமட்டு முபதேச முரைத்திட்டாலும்
வீணாண வீண்பருந்தான் கேட்பதுண்டோ
படியளவு ஞானப்பால் பார்த்தோருண்டோ
பாலகனே புலஸ்தியனே பண்பாய்க்கேளே 703

பண்பான செனனமது உண்டேயப்பா
பாலகனே பிறப்பிறப்பு என்னலாகா
நண்பான வையகத்தில் நெடுங்காலந்தான்
நன்மையுடன் தானிருந்து வாழ்ந்துமென்ன
வண்பான சாத்திரத்தி னுணிக்கங்கண்டு
வளமுடனே பாடிவத்தார் மாண்பரெல்லாம்
திண்பான கட்டுமொழி என்றவாக்கியம்
தீர்க்கமுடன் சொல்லுவதும் உண்மைபாரே 704

பாரேதான் பிறவியென்ற வார்த்தையல்லால்
பாலகனே பிறந்தவர்க ளாருமில்லை

நேரேதான் நீடாழி உலகமெல்லாம்
நேர்மையுடன் சாத்திரத்தி னளவுதன்னால்
சிரேதான் எழுபிறப்பு என்றவாக்கியம்
செப்பினார் நாதாந்த ரிஷிகள்தாமும்
விரேதான் நூலதனைக் கண்டுமல்லோ
வித்தகனே சித்தர்களு மயங்கிட்டாரே 705

மயங்கவே அடியேனு மனதுவந்து
மார்க்கமுட னுபதேசம் யாவுஞ்சொன்னேன்
நயம்படவே உபதேச முரைத்தபோது
நாதாந்த சித்தொளிவு முனிவர்தாமும்
சயம்பெறவே உபதேச முழுதுங்கூறி
சாற்றினேன் கோடான கோடிநூலை
மயம்படவே சித்தாதி முனிவர்தாமும்
மார்க்கமுட னுபதேச மெய்யென்றாரே 706

என்றதொரு சித்துமகா ரிஷியாருக்கு
எழிலான வாசீர்ம மிகவுங்கூறி
சென்றிட்ட முனிவருக்கு உண்மைஞானம்
தெளிந்திடவே யானுமல்லோ உபதேசித்தேன்
குன்றான மலைபோலே எம்மையெண்ணி
கோடிமுறை உத்தாரங் கெட்டாரல்லோ
நன்றியுட னவர்தமக்கு இதவுகூறி
நலமுடனே பலகாலு முரைத்திட்டேனே. 707

ஞானாமிர்தத் தடாகங் கூறல்

உரைத்தேனே புலஸ்தியனே உண்மையோனே
உலகமதில் ஞானமென்ற மார்க்கம்யாவும்
நிரைத்தாரே பலகோடி நூல்கள்யாவும்
நீணிலத்தில் சித்துமகா ரிஷியார்யாவும்
திரைகடலி லவரவர்கள் செய்தநூலில்
தீர்க்கமுடன் பாடிவைத்தார் பலவண்ணந்தான்
வரைதோறும் ஞானமென்ற பாலையப்பா
வாகுடனே பாடிவைத்தார் கோடியாமே 708

கோடியாம் புலஸ்தியனே குணமுள்ளானே
கொற்றவனே ஞானமென்ற பாலையப்பா
நீடியே உந்தமக்கு உபதேசித்தேன்
நீதியுள்ள புண்ணியனே புத்திவானே

ஆடியதோ ராட்டங்க ளெல்லாமப்பா
அப்பனே பஞ்ச பூதத்தினாட்டம்
சூடியதோர் பஞ்ச பூதங்களப்பா
சுத்தமுடன் ஒடுங்கிநின்றா லெல்லாம்போச்சே 709

போச்சப்பா வாறா தாரங்களப்பா
பொங்கமுடன் பஞ்ச பூதத்தைச்சார்ந்து
மாச்சலுடன் சின்மயத்தி லொடுக்கமாகி
மகத்தான வாறா தாரத்தைப்பற்றி
மூச்சடங்கி பிரணவத்தை உள்ளடக்கி
மூலாதாரப் பொருளை முடிமேற்கொண்டு
மாச்சலது வாராமல் யோகங்கண்டு
மகத்தான மவுனநிலை பற்றிநில்லே. 710

நில்லப்பா புலஸ்தியனே நீதவானே
நீணிலத்தில் வெகுகோடி மாண்பரப்பா
புல்லறிவால் யோகத்தைக் கண்டுதேற
புண்ணியனே சமுசார வாழ்க்கையற்று
நல்லதொரு ரிஷியாரின் பதமுங்கண்டு
நலமான சித்துமுனி பதமுந்தேர்ந்து
சொல்லியதோர் சுவாதிஷ் டானத்தைப்பற்றி
சுந்தரனே சமாதிபதங் கொண்டிட்டாரே. 711

பதமான புலஸ்தியனே பிரம்மக்கியானி
பாரினிலே யவதரித்த பண்புள்ளானே
சதகோடி சூரியர்போல் சாத்திரங்கள்
சாகரத்தைப் போலாகத் திரட்டிவைத்தார்
விதம்விதமா யவரவர்கள் கொண்டமார்க்கம்
வித்தகனே புலஸ்தியனே விண்கொள்ளாது
உதயம்போல் பன்னீரா யிரத்திலப்பா
உத்தமனே பாடிவைத்தே னுண்மைதானே 712

தானான சதகோடி சூரியன்போல்
சாற்றினேன் பன்னீரா யிரத்தைத்தானும்
சோனான் எனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் எந்தனுக்குச் சொன்னநீதி
தேனான ஞானமென்ற பாலையப்பா
தெவிட்டாம லுந்தனுக்குப் புகட்டுவேன்பான்
பானான பரமருட பதாம்புயத்தைப்
பற்றிநின்று சதாகாலம் நண்ணுவீரே. 713

நண்ணினால் மோட்சமென்ற வீடுமுண்டு
நாதாந்த சித்தொளிவின் ஞானமுண்டு
புண்ணியங்கள் மிகவுண்டு புகட்சியுண்டு
புகலவொண்ணா யிம்மையென்ற பதவியுண்டு
வண்ணமுடன் தேவப்பா லாசீர்மங்கள்
வளமான பதவிமுதல் கிட்டும்பாரு
திண்ணமுடன் சிவாலயங்க ளாயிரந்தான்
தீர்க்கமுட னெட்டுமது லபிக்கும்பாரே. 714

பாரேதான் நூற்றெட்டு பதியுமப்பா
பாலகனே புலஸ்தியனே பலிக்கும்பாரு
நேரேதான் சிவானந்த லகிரியுண்டு
நிஷ்களங்க மானதொரு புன்லுமுண்டு
சீரேதா னெவ்வர னாசீர்மமுண்டு
சிறப்பான திருவிளை யாட்டுமுண்டு
வீரேதான் விண்ணுலகி லார்க்குக்கிட்டும்
விதியாளி பதிதனக்கு கிட்டும்பாரே. 715

கிட்டுவது சொல்வதுதா லாருக்கென்றால்
கீர்த்தியுள்ள புலஸ்தியனே புகழுள்ளானே
சட்டமுடன் றானடக்கும் தருமவானே
தாரணியில் பவமிருந்தால் கிட்டாதப்பா
வட்டமுடன் விட்டகுறை யிருந்துதானால்
வாகுடனே யஷ்டசித்தி லபிக்கும்பாரே
நிட்டையிலே இருந்தவர்க்கு யெல்லாஞ்சித்தி
நிஷ்களங்க மிலாதவர்க்கு வொன்றுங்காணே. 716

காணவே ஞானப்பா லறியவேண்டி
கண்மணியே புலஸ்தியனே கவிவல்லோனே
தோணவே சூட்சாதி சூட்சந்தன்னை
தொகையுடனே கண்டறிந்து துவாலைபூண்டு
நீணவே யாசா பாசத்தையப்பா
நீதியுடன் கட்டறுத்து நிற்கவேண்டும்
பூணவே புண்ணியத்தை சதாகாலந்தான்
புகழ்பெறவே வையகத்தில் புகலுவீரே. 717

புகலவே யஷ்டாங்கங் கொள்ளவேண்டும்
புகழான மேற்பதவி நண்ணல்வேண்டும்
இகலவே மனக்கவலை யறுத்தல்வேண்டும்
எழிலான நெஞ்சதனி லுன்னவேண்டும்

மிகபடவே சன்மார்க்க வலையைப்பற்றி
மிக்கமனு நீதியது கொள்ளல்வேண்டும்
சகலமும் யறிந்தாலும் கொச்சிக்காதே
சண்முகனே புலஸ்தியனே தணிவுள்ளானே 718

தணியவே ஞானமது கொண்டபோது
தாக்கான உடல்பொருள்க ளாவியுந்தான்
துணிவுடனே யுந்தமக்கு தத்தமென்று
துப்புரவாய்த் தான்கொடுப்பார் சித்துதாமும்
அணிகடவுட் செய்கைகண்ட தன்மைபோலே
அப்பனே உந்தனுக்குச் சேர்வைதோன்றும்
மணிபோன்ற புலஸ்தியனே மன்னாகேளு
மார்க்கமுட னின்னமும்பா லூட்டுவேனே. 719

ஊட்டுவேன் புலஸ்தியனே உண்மையோனே
ஓகோகோ நாதாக்கள் மகிமையெல்லாம்
தாட்டிகமாய் சின்மயத்தின் ஞானந்தன்னை
சட்டமுட னுந்தமக்கு ஓதுவேன்யான்
வாட்டமுடன் மனோன்மணியா ளருளினாலே
வண்மையுள்ள யிதிகாசப் பொருளையெல்லாம்
நீட்டமுடன் சீஷவர்க்க மென்றுசொல்லி
நீதியுடன் ஓதிவைப்பேன் புண்ணியோனே. 720

புண்ணியனே ஞானப்பால் வேண்டுமென்றால்
புகழான பவக்கடலை அறுக்கவேண்டும்
வண்ணமுட னிருட்கடலை நீக்கவேண்டும்
வளம்பெரிய அருட்கடலை கொள்ளவேண்டும்
எண்ணரிய நற்பொருளை நண்ணல்வேண்டும்
ஏகாந்தக் கூடமதில் நிற்கவேண்டும்
விண்ணுலக மாய்கைதனைத் தள்ளவேண்டும்
விட்டாலும் விட்டகுறை யிருக்கநன்றே. 721

நன்றான பீடமதைக் கொள்ளல்வேண்டும்
நலமான சமாதிநிலை அறியவேண்டும்
குன்றான மலைபோலே படிகடந்து
குணமான தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
வென்றிடவே யோகதண்டு அறியவேண்டும்
வேதாந்த நுட்பமதைப் புரியவேண்டும்
கன்றதுதான் பாலில்லாக் காலந்தன்னில்
கைமூலந் தான்கொடுத்த கதைபோலாமே. 722

கதையான புலஸ்தியனே கண்ணியவானே
கருவாக யுந்தமக்கு இன்னஞ்சொல்வேன்
விதைபோட்டால் சுரையொன்று காய்க்குமோசொல்
வீணருட னுந்தமக்கு வார்த்தையேன்தான்
சதையோடு மாத்துமந்தான் பொருந்தினாப்போல்
சட்டமுடன் ஞானப்பால் பொருந்தவேண்டும்
இதைவேறு கூறுதற்கு நாவொண்ணாது
எழிலான புலஸ்தியனே தருமவானே. 723

தருமமாம் புலஸ்தியனே தயவுள்ளானே
சதகண்ட ராவணனும் ஞானப்பாலை
மருமமுடன் நெடுங்காலந் தானிருந்து
வையகத்தில் சித்தர்முகங் கண்டுமேதான்
பொருந்தவே உபதேசம் பெற்றுமல்லோ
பொன்னுலக பதிதனிலே யமர்ந்தான்தானும்
அருந்துதிபோல் சதகண்ட ராவணன்றான்
அவனிதனை மறந்துமல்லோ யேகினானே. 724

ஏகவே ஞானப்பா லுண்டுமேதான்
எழிலான காயகற்பங் கொள்ளாமற்றான்
சாகமுடன் மானிலத்தைத் தான்மறந்து
சதுரான பொன்னுலக பதியிற்சென்று
தேகமதைக் காப்பாற்றி திடங்கொள்ளாமல்
தேர்வேந்தர் முதலோட மழிந்துபோனார்
பாகமுட னுந்தமக்கு ஞானப்பாலும்
பாங்கான காயகற்பங் கொள்ளநன்றே. 725

கொள்ளவென்று கும்பமுனி கூறும்போது
கொற்றவனார் புலஸ்தியரு மேதுசொல்வார்
உள்ளபடி உடல்பொருள்க ளாவியெல்லாம்
உத்தமனே எந்தனுக்கு தத்தஞ்செய்வீர்
தெள்ளமுர்த மானதொரு காயகற்பம்
தேர்வேந்தே எந்தனுக்கு கூறவென்று
விள்ளவே புலஸ்தியரும் விளம்பும்போது
விருப்பமுடன் கும்பமுனி யோதுவாரே 726

அகத்தியர் புலத்தியருக்கு ஞானப்பாலூட்டும் போது காயகற்பங் கூறல்

ஓதுவேன் புலஸ்தியரே ஒளி யுள்ளானே
ஒகோகோ நாதாக்கள் மறைத்துவைத்தார்

நீதமுடன் சித்தர்முனி ரிஷிகள்தாமும்
நிஷ்களங்க மானதொரு காயகற்பம்
சோதனைக்கு ஒருவருந்தான் கூறவில்லை
சுத்தமுள்ள சுந்தரனே இந்திராகேள்
வேதமறை பாடெல்லாம் யானறிந்து
வித்தகனே உந்தமக்குப் போதித்தேனே. 727

போதிப்பேன் காயகற்ப மேதென்றாக்கால்
பொங்கமுடன் திருப்பாலின் வடபாகந்தான்
ஆதித்தன் தானுதிக்கும் வனத்திலப்பா
அப்பனே பனியதுவும் நிறைந்திருக்கும்
சோதியென்ற சதகோடி சூரியன்போல்
சோர்வில்லா மேகமது திரண்டுமேதான்
பாதிமதி சடையணியுந் தம்பிரான்போல்
பார்வைக்கு கண்ணொளிவு தோற்றும்பாரே 728

பாரேதான் மேகமென்ற பாணிதன்னில்
பாங்கான பனிவந்து மோதியல்லோ
நேரேதான் திரண்டுருவ மாகியல்லோ
நெடிதான ஜலமதுவுங் கல்லேயாகி
சீரேதான் பனிவட்ட மென்றநாமம்
சிறப்புடனே தானமைந்து பனிபோலாகி
வீரேதான் மழையாலங் கட்டியொன்று
வித்தகனே பேருடனே விளம்பலாச்சே 729

ஆச்சப்பா புலஸ்தியனே அன்புள்ளானே
ஆகாகா நாதாக்கள் அரைந்தசேதி
மூச்சடங்கிப் போனதொரு முனிவர்சித்தர்
முதலான ரிஷிகள்முதல் மாண்பர்தாமும்
மாச்சலுடன் காயகற்ப மருந்தவென்று
மானிலத்தில் தவயாகஞ் செய்துமல்லோ
பாச்சலுடன் சிவயோக நிலையில்நின்று
பாலகனே காயாதி கொண்டார்தானே. 730

தானான காயாதி வதிதபாகம்
தன்மையுடன் கொண்டல்லோ மாண்டார்கோடி
தேனான குருபதத்தைக் காணாமற்றான்
தேவிபத மனோன்மணியாள் பாதந்தன்னின்
மானான மகிமைதனை யறியாமற்றான்
மார்க்கமுடன் சமாதிமுக பதியிற்சென்று

கோனான வையகத்தில் முனிவர்சித்தர்
கோடான கோடிபேர் வழிகாணாரே 731

காணார்கள் வெகுகோடி மாண்பரப்பா
காசினியில் காயாதி கற்பந்தன்னை
தோணாமல் கொண்டல்லோ மாண்டுபோனார்
துப்புரவாய் வெகுகோடி மாண்பரப்பா
வீணாக காயாதி கொண்டேனென்று
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்
கோணாமல் மனதுவந்து மனங்களித்து
கொற்றவர்கள் வெகுபேர்கள் மடிந்திட்டாரே. 732

மடிந்ததொரு மாண்பர்களும் லக்கோயில்லை
மானிலத்தில் கூறவொண்ணா நாவுமில்லை
படியளவு நிதானமது கண்டாராய்ந்து
பாரினிலே நவகோடி மாண்பரெல்லாம்
முடியரசர் முறைசெலுத்தும் பான்மைபோலே
மூதுலகி லவரவர்கள் தொடர்ந்துநின்று
கடினமுடன் சமாதிமுகங் கொள்வேனென்று
காசினியில் மடிந்தவர்கள் கோடியாமே. 733

கோடியாஞ் சமாதிமுகங் கொண்டாலென்ன
கொற்றவனே பீடநிலை அறிந்துமென்ன
தேடியே யுகாந்தவரை கடந்துமென்ன
தேஜொளிவின் சின்மயத்தை யறிந்துமென்ன
பாடியே பலநூலுங் கற்றுமென்ன
பாருலகில் நெடுங்கால மிருந்துமென்ன
வாடியே பயிர்க்குமழை வருஷித்தாப்போல்
வளமான காயாதி கொள்கைபாரே 734

பாரேதான் காயாதி யேதென்றாக்கால்
பாங்கான சடலமதற் குயிர்கொண்டாற்போல்
நேரேதா னொப்புவமை சொல்லலாகும்
நெடிதான காயாதி உயிரேயாகும்
சீரேதான் சித்தியென்ற வஷ்டசித்தி
சிறப்புடனே காயாதிக் குள்ளடக்கம்
நீரேதான் பகுத்தறிவு கொண்டபோது
நிஷ்களங்க மாகவல்லோ தோற்றுந்தானே 735

தானான புலஸ்தியனே தருமபாலா
சாற்றுவே னுந்தமக்கு கோடிகற்பம்

மானான வசுவனியாந் தேவரப்பா
மகத்தான யென்குருதான் சொன்னநீதி
கோனான குருசம்பிர தாயவர்க்கம்
கொற்றவனே பிசகதுவும் நேராமற்றான்
தேனான புலஸ்தியனே யுந்தமக்கு
தேற்றமுடன் யானுரைத்தேன் றெளிவாய்த்தானே 736

தெளிவான புலஸ்தியனே தேர்வேந்தேகேள்
தேசமெலாஞ் சொன்றாலுங் கிடையாதப்பா
வளியான வழிபாடு தேவபாடு
வகுப்பான குறைபாடு யாவுமோர்ந்து
நெளிவுடனே பதினெண்பேர் நூலுங்கண்டு
நேர்மையுட னெந்தமக்குச் சொன்னநீதி
பழியதுவும் நேராமல் பண்புள்ளானே
பட்சமுட னுந்தமக்கு ஓதுவேனே 737

ஓதவென்றால் விட்டகுறை யிருந்ததாலும்
ஓகோகோ நாதாக்கள் கிருபையாலும்
நீதமுட னசுவனியா ரருளினாலும்
நிஷ்களங்க சொருபரது புண்ணியத்தால்
வேதமெனும் பொருளெல்லா முந்தமக்கு
மேன்மையுட னுபதேசஞ் செய்யலாச்சு
சூதமுனி சொன்னதொரு கற்பந்தன்னை
சூட்சமுடன் சொல்லுகிறேன் திறமாய்க்கேளே 738

கேளப்பா முன்சொன்ன காயகற்பம்
கெணிதமுடன் பனிமுகத்தி லுதித்தபூவாம்
மாளப்பா நீருரைத்த பனியுமர்ச்சு
மகத்தான கார்மேக முதித்தபூவாம்
தேளப்பா கொட்டியதோர் விஷம்போலாகும்
தெளிவான பனியிமத்தின் வேடமாகும்
ஆளப்பா மழையாலங் கட்டியாகும்
அப்பனே பனிமுகத்து நீருமாமே 739

நீரென்றால் நீரதுவு மேதென்றாக்கால்
நீட்சியுடன் வாரிதியின் கட்டியாகும்
கார்மேகந் தனிலுதித்த நீரேயாகும்
கருவான நீச்சுடைய பனியிமந்தான்
வேரில்லா மரமதுவும் இதுவேயாகும்
மேகத்தின் வித்தென்றே செப்பலாகும்

ஆரறிவா ரிந்தமுறை யார்தானப்பா
அப்பனே கருவாளி யறிவான்றானே 740

அறியவே புலஸ்தியனே யின்னஞ்சொல்வேன்
அப்பனே கண்மணியே யறிவுள்ளானே
குறிபோன்ற காயகற்பம் யானுரைப்பேன்
குணமான புலஸ்தியனே குபேந்திராகேள்
சிறியதொரு நூல்களிலுஞ் சுருக்கந்தன்னில்
சிறப்புடனே பாடிவைத்தார் வினோதமெத்த
அறிவுடையோர் கண்டுகொள்ளும் வேதையப்பா
அப்பனே இதுமுறைபோல் சொல்லொண்ணாதே 741

சொல்வதற்கு காயகற்பம் சேர்க்கும்வண்ணம்
சுத்தமுள்ள புலஸ்தியனே துய்யபால்ா
புல்லவே முன்னுரைத்த கட்டிதானும்
புகழான சேரதுவு மைந்தேயாகும்
செல்லவே லவணமது பஞ்சமப்பா
செயலான காந்தமது வரையுமாகும்
புல்லவே சிப்பியென்ற நீரினாலே
புகழ்பெறவே தானரைப்பாய் சாமம்நாலே. 742

நால்ான சாமமது அரைக்கும்போது
நலமான லவணமென்ற செயநீராச்சு
காலான சரக்கதுவு மேதென்றாக்கால்
கருவான காந்தமது வொன்றேயாகும்
சேலான காந்தமதை யுருக்கிமைந்தா
செப்பவே ஜெயநீரில் காச்சிதோய்க்க
மாலான காந்தமது ஈயம்போலாம்
மகத்தான சத்துவகை என்னலாமே. 743

என்னவே சத்ததுவுஞ் சவளையாகி
எழிலான காந்தமது ஈயமாகும்
பன்னவே ஈயமதைத் தானெடுத்து
பகரவே கெந்தியது சமனாய்ச்சேர்த்து
மின்னவே சூதமது காலதாக
மிக்கான தாரமது அரையுமாகும்
துன்னவே சரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி
துப்புரவாய் முன்சொன்ன செயநீர்காணே. 744

காணவே தானரைத்து வட்டுசெய்து
கருவான ரவிதனிலே காயவைத்து

தோணவே சீலையது வலுவாய்ச்செய்து
துப்புரவாய்க் கோழியென்ற புடந்தான்போடு
நீணவே யிப்படியே பத்துமுறைபோடு
நிஷ்களங்க மானதொரு செந்தூரந்தான்
பாணமென்ற செந்தூர மென்னசொல்வேன்
பாருலகில் சிவயோகிக் காகுந்தானே. 745

தானான செந்தூரந் தனையெடுத்து
தன்மையுடன் குழிக்கல்லில் தன்னிலிட்டு
கோனான தங்கமதை இடையேசேர்த்து
கொற்றவனே முன்சொன்ன ஜெயநீராலே
பானான பதாம்புயத்தைப் போற்றிசெய்து
பக்குவமாய்த் தானரைப்பாய் நாலுசாமம்
மானான ரவிதனிலே காயவைத்து
மன்னவனே ஓட்டிவிட்டு சீலைசெய்யே. 746

சீலையென்றால் சீலையது ஏழுசெய்து
சிறப்புடனே ரவிதனிலே காயவைத்து
வாலையென்ற வாலுகையா மேந்திரத்தில்
வளமுடனே மண்பாண்டந் தன்னிலிட்டு
வேலையெனு முப்பதுவைக் கீழ்மேலிட்டு
வித்தகனே மேல்மூடி சீலைசெய்து
ஆலையெனும் விரகதனாற் சாமமெட்டு
அப்பனே தானெரிப்பாய் உண்மைபாரே 747

பாரேதான் செந்தூர மாறிப்பின்பு
பாலகனே மற்றானா ளெடுத்துப்பாரு
நேரான செந்தூர மென்னசொல்வேன்
நேர்மையுள்ள முருக்கம்பூ வர்ணம்போலாம்
கூரான செந்தூரந் தனையெடுத்து
கொற்றவனே மறுபடியுங் கல்லிற்றானும்
சீரான செந்தூரந் தன்னையிட்டு
சிறப்புடனே செயநீரா லரைத்திடாயே 748

அரைக்கவே முன்போலே பில்லைதட்டி
அப்பனே யோட்டிலிட்டுக் சீலைசெய்து
முறைப்படியே வாலுகையா மேந்திரத்தில்
மூச்சடங்கத் தானெரிப்பாய் எட்டுசாமம்
குறையான செந்தூரஞ் சிவப்புமெத்த
குணமுடனே தானெரித்து மற்றாநாள்

அறையவே செந்தூரந் திறந்துபார்க்க
அப்பனே புட்பம்போல் பூர்க்குங்காணே 749

காணவே செந்தூரம் பதனம்பண்ணு
கண்மணியே புலஸ்தியனே கருவாய்க்கேளு
பூணவே காயத்துக் குறுதிசொல்வேன்
புகழான செந்தூரந் தனையெடுத்து
நீணவே சமாதிமுக மிருக்கும்போது
நீதியுடன் செந்தூரங் குன்றியுண்ண
மாணமருங் கல்வியுள்ள புலஸ்தியாகேள்
மன்னவனே சட்டையது தள்ளும்பாரே 750

தள்ளவே செந்தூர மண்டலந்தான்
தகமையுடன் கொண்டவர்க்கு எல்லாஞ்சித்தி
கொள்ளவே செந்தூர மகிமையாலே
கொற்றவனே தேகமது சட்டைதள்ளி
கள்ளமென்ற தேகமது சிவந்துமின்னும்
கைலாச பிரமனைப்போல் நெடுங்காலந்தான்
உள்ளபடி வையகத்தி லிருப்பதற்கு
உத்தமனே ஒருக்காலுங் குறைவாராதே 751

வாராது சிவயோகங் கொள்ளும்போது
வகுப்புடனே ஞானப்பா லூட்டும்போது
சிரான காயகற்பங் கொள்ளவேண்டும்
சிறப்பான செந்தூர மிதுபோலுண்டோ
கூறான சித்துமுனி ரிஷியார்தாமும்
கூறினார் பலபலவாய் சாத்திரத்தின்
பேரான செந்தூரத் தாதியப்பா
பேச்சுமில்லை மூச்சுமில்லை பின்னுங்கேளே 752

பானான செந்தூர மெதுவென்றாலும்
பேரின்ப நிலைதனக்கு ஒவ்வுமோசொல்
மன்னவனே புலஸ்தியனே மச்சகேந்திரா
மதிப்பான கண்மணியே புனிதவானே
தென்பொதிகை தனில்வாழுந் தேவரப்பா
தேஜொளிவா மசுவனியா ரெந்தமக்கு
நன்னயமாய்த் தானுரைத்த செந்தூரந்தான்
நவிலவொண்ணா துலகோர்க்கு நவிலொண்ணாரே 753

ஒண்ணாது சித்துமுனி ரிஷிகள் தாமும்
ஒகோகோ நாதாக்கள் முதலானோரும்

திண்ணமுடன் மறைப்புவைப்பாய்ப் பாடிவைத்தார்
திகழான சூத்திரத்தில் முன்பின்னாக
வண்ணமுடன் மறைத்துவைத்த மார்க்கமெல்லாம்
மானிலத்தில் மாண்பர்களு மறியவேதான்
எண்ணமுட னுந்தமக்கு யோதினேன்யான்
எழிலான புலஸ்தியனே இன்னம்பாரே 754

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே செந்தூரப் போக்குசொல்வேன்
ஆரப்பா சொல்வார்க ளுந்தனுக்கு
அப்பனே அறிவுள்ள மணியேகேண்மோ
சீரப்பா தேவாதி தேவர்தாமும்
சிறப்புடனே மறைத்துவைத்த வேதைதன்னை
நீரப்பா வறிவதற்கு உளவுமார்க்கம்
நீதியுடன் யானுரைப்பேன் உண்மைதானே 755

செந்தூரம் வேதை முகம்

தானான புலஸ்தியனே தயவுள்ளானே
தகமையுள்ள சிறுபாலா புத்திவானே
கோனான வசுவனியார் சொன்னவாக்கு
கொற்றவனே பிசகதுவும் நேராமற்றான்
தேனான மனோன்மணியாள் வழிபாடாக
தேவிபதந் தாழ்பணிந்து உண்மையுன்னி
பானான வேதைமுகம் பாச்சுதற்கு
பாலகனே பட்சமுடன் பகருவேனே 756

பகரவே வேதைமுக மேதென்றாக்கால்
பாலகனே கண்மணியே புத்திவானே
நிகரமுடன் வெள்ளிதனில் நூற்றுக்கொன்று
நிஷ்களமாய்த் தானுருக்கி குருவொன்றீய
வகரமென்ற வாதமது என்னசொல்வேன்
வகுப்பான சதகோடி சூரியன்போல்
மிகபடவே தான்சொலிக்கு மாற்றுமில்லை
மீதான தங்கமது சொல்லொண்ணாதே 757

ஒண்ணாது புலஸ்தியனே ஒளியுள்ளானே
ஓகோகோ நாதாக்கள் மறைத்தவண்ணம்
கண்ணான கண்மணியே கவிராஜேந்திரா
கருவான பிறவியது தங்கமாச்சு
மண்ணாளும் வேந்தர்களுக் குகந்ததங்கம்
மகத்தான நாதாக்க ளறியாத்தங்கம்

விண்ணாடர் போற்றுகின்ற பிறவித்தங்கம்
வித்தகனே விளம்புகிறே னின்னந்தானே 758

தானான சுயத்தங்கம் நயத்ததங்கம்
தகமையுள்ள ரிஷிமுனிவர் மறைத்ததங்கம்
கோனான யென்குருவாம் அசுவனியாந்தேவர்
கோவேந்த ரெந்தனுக்கு உரைத்தநீதி
பானான பராபரியாள் கடாட்சத்தாலே
பாலகனே யுந்தமக்கு வாய்த்துதல்லோ
மானான மகதேவர் கடாட்சத்தாலே
மன்னவனே யுந்தமக்கு வாய்க்கலாச்சே 759

ஆச்சப்பா புலஸ்தியனே யறிவுள்ளானே
அருண்மைந்தா சொல்லுகிறேன் வன்பாய்க்கேளீர்
மூச்சடங்கிப் போனதொரு வெகுகோடிமாண்பர்
மூதுலகிற் றான்மறைத்தா ரனந்தம்வேதை
பாச்சலுட னின்னும்வகை யனந்தம்போக்கு
பகருகிறேன் புலஸ்தியனே பண்பாய்க்கேளீர்
ஆச்சரிய மாகவின்னம் போக்கு சொல்வேன்
அப்பனே அறிவுடைய அன்புள்ளானே 760

அன்பான புலஸ்தியனே களஞ்சிநூறு
அப்பனே சுத்தித்த செம்புதானும்
இன்பமுடன் தானெடுத்து குகையிலிட்டு
எழில்பெறவே தானுருக்கி குருவொன்றீய
வன்மையுடன் செம்பதுவு முருகியல்லோ
வளமையுடன் குருவதனை வாங்கியேதான்
செம்மையென்ற செம்பதுவுந் தங்கமாகி
செகஜோதி யருணனைப்போல் மின்னும்பாரே 761

பாரேதான் செம்பதுவுந் தங்கமாகி
பட்சமுட னுப்புக்குங் காவிக்கேகா
நேரேதான் சுயத்தங்கம் மாகியல்லோ
நேர்மையுடன் பசுமையது மேலதாகி
சீரேதான் சிவயோக மாண்பருக்கு
செயலான பூசைக்கு உறுதிமெத்த
தீரேதான் பூஜை முகஉறுதித்தங்கம்
தீர்க்கமுள்ள சிவானந்தத் தங்கமாச்சே. 762

தங்கமென்றால் தங்கமது வென்னசொல்வேன்
தாரணில் நாதாந்தத் தங்மாகும்

புங்கசித்தி எட்டுக்கும் உகந்ததங்கம்
புகழான பேரின்பங் கொண்டதங்கம்
வங்கமதற் கசையாது வளமைதங்கம்
வகுப்பான கோஜபீஜத் தங்கமாகும்
துங்கமிலா பரிசுத்த வாளருக்கு
துப்புரவா யமைந்ததொரு தங்கமாச்சே 763

ஆச்சப்பா வையகத்தி லதீதமாண்பர்
அப்பனே வெகுகோடி லக்கோயில்லை
மூச்சடங்கி மண்ணதனில் மறைந்தசித்து
முனையான ரிஷிமுனிவர் தேவர்கோடி
மாச்சலது வாராத மாண்பர்தாமும்
மன்னவர்கள் வெகுகோடி மதிப்போயில்லை
ஆச்சரிய மானசித்து இருந்தாரப்பா
அப்பனே இதனருமை காணார்தாமே 764

காணாதே வெகுகோடி ரிஷிகள்தாமும்
காசினியில் மாண்டவர்கள் லக்கோயில்லை
தோணாமல் பொருள்தோய்ந்துத் தோயாமற்றான்
தோற்றமுடன் பசுபாசக் கடலைவிட்டு
வீணாகப் பவக்கடலை விரும்பியல்லோ
வித்தகனே தவக்கடலை மறந்தார்தாமும்
சாணான்கைப் பரிபோலே களிப்புண்டாக்கி
சாகரத்தின் தொல்லைதனில் மடிந்தார்தாமே 765

மடிந்தாரே இப்படியே வெகுகோடிமாண்பர்
மானிலத்தில் சொல்வதற்கு நாவுமில்லை
படிபடியாய் ஞானமது வூட்டுவார்போல்
பாருலகில் மறைந்தவர்கள் பகரொண்ணாது
அடியளந்த மாயவனு மேமங்கண்டு
அப்பனே உலகுதனில் மடிந்தாரல்லோ
முடியரசர் முறைசெலுத்தும் மன்னரெல்லாம்
மூதுலகில் மடிந்துவிட்டால் வாதங்காணே 766

வாதமது கண்டல்லோ வலுவேந்தர்தாமும்
வாகுடனே வையகத்தி லிருந்ததுண்டோ
பேதமது கூறியல்லோ சமாதிபூண்டு
பேரின்ப நிலைதனையே விட்டகற்றி
பாதகமாம் வழிதனிலே மிகவேசென்று
பாதைவழி காணாமல் மாண்டாரல்லோ

ஆதவனாம் ஞானப்பால் தனைமறந்து
அப்பனே போனவர்கள் லக்கில்லைதானே. 767

அகஸ்தியர் புலஸ்தியருக்கு தேவதாஸ்துதி கூறுவது

தானான புலஸ்தியனே தகமையோனே
தாரணியில் தேவதாஸ் தலத்தினேர்மை
கோனான எனதைய ரசுவனியாந்தேவர்
கோவேந்த ரெந்தனுக்கு உரைத்தநீதி
மானான வையகத்தில் கோடிதேவர்
மார்க்கமுடன் றாமிருப்பார் லக்கோயில்லை
பானான சதகோடி சூரியன்போல்
பாருலகில் கோடிபேர் வகுக்கலாமே. 768

வகுக்கவென்றால் கோயில்குள மனேகமுண்டு
வளமையுடன் சமாதிமுகங் கொண்டலிங்கம்
தொகுப்புடனே ஜாதிமுறை வழிபாடெல்லாம்
சொல்வதற்கு யாராலு முடியாதப்பா
பகுப்பறிந்து பட்சமுடன் முதலாராய்ந்து
பாலகனே யவர்தபதத்தைப் போற்றிசெய்து
நிகுக்கவே யஞ்சலிகள் மிகவுஞ்செய்து
நிகட்சியுடன் பூசித்தல் மெத்தநன்றே. 769

நன்றான வையகத்தின் மார்க்கந்தன்னை
நலமுடனே மனந்தனிலே நண்ணாவிட்டால்
குன்னான பர்வதத்தில் கோடிசித்தர்
குவலயத்தில் சொல்லவென்றால் நாவோயில்லை
தென்றிசையில் கும்பமுனி சீஷனென்று
திடம்பேசி நயம்கூறி தீங்குறைப்பார்
வென்றிடவே யுந்தமைந்தா னிகழ்ச்சிகூறி
வேகமுடன் பலமுறைக ளோதுவாரே. 770

ஓதுவார் நயம்பேசிக் கதைகள்பேசி
உத்தமனே யுதாசினங்கள் மிகவுரைப்பார்
தீதுறவே மனந்தனையே கிலேசமாக்கி
தீட்சையது பெற்றாக்கால் தெரியுமென்று
வாதுமிகக் கூறியல்லோ வளமைசொல்லி
வகுப்புடனே நூல்களெல்லாம் பொய்யதாக்கி
ஆதுலர்கள் தாமுறைத்த வாக்கியமெல்லாம்
அப்பனே பொய்யென்று சாதிப்பாரே. 771

சாதிப்பார் கும்பமுனி சீஷனென்றும்
தாரணியில் மார்க்கமதை யற்றோனென்றும்
ஆதித்த னசுவனியாந் தேவர் தன்னின்
அவர்பேரன் வையகத்தை மறந்தானென்றும்
சோதிமுடி மனுவேந்தர் மாண்பரெல்லாம்
தொல்லுலகில் புலஸ்தியரு மறந்தானென்றும்
நீதியுடன் வாக்கியங்கள் மிகவாய்க்கூறி
நிஷ்களங்க மானகதை யுரைப்பார்காணே. 772

காணவே யனேகவித தெய்வமுண்டு
கைலாச முனிவரென்றும் நாதரென்றும்
பூணவே தொல்லுலகை மறந்தோனென்றும்
புகழான சமுசார வாழ்க்கையற்று
வேணவே தேவாதி தேவனைப்போல்
வேதாந்தத் தாயினது ரூபம்போலே
ஆணவங்கள் கொண்டல்லோ கெர்ச்சிக்காதே
அப்பனே புலஸ்தியனே யறிவுள்ளானே. 773

அறிவான கண்மணியே புலஸ்தியனே
அப்பனே யருண்மைந்தா வேதபாலா
முறிவுபடாத் தன்மையனே முயற்சியோனே
மூதுலகைத் தான்கடந்த முனிராஜேந்திரா
குறியுடனே குவலயத்தில் சித்தர் தம்மை
குணமறிந்து மனமறிந்து குனிதவானாய்
செறியுயர்ந்த தவத்தோனாய்த் தான்வணங்கி
செங்கமல கரத்தாளைப் பணிந்துபோற்றே 774

போற்றியே நிற்கையிலே புலஸ்தியாகேள்
பொங்கமுட னுந்தமக்கு மனதுவந்து
ஆற்றியே வஞ்சலித்து யுந்தனைத்தான்
அன்புடனே யிதவுமொழி மிகவுங்கூறி
தூற்றியே வையாமற் கொண்டணைத்து
துப்புரவா யுந்தமக்கு ஞானப்பாலை
சாற்றியதோர் சாபமதை மிகவுந்தீர்த்து
சட்டமுட னினியமொழி கூறுவாரே. 775

கூறுவார் மனங்களித்து கிருபைகூர்ந்து
குணமுடனே யிதிகாசப் பாலையூட்டி
ஆறுதலங் காண்பதற்கு வழியுங்கூறி
அப்பனே கும்பகத்தின் வழிபாடெல்லாம்

தேறுதலாய்ச் சமாதிமுகம் நின்றுபோற்றி
தேற்றமுடன் தேஜொளிவைத் தன்னைக்காண
மாறுபடாத் தன்மையனே யுண்மைகூறி
மாசற்ற தடமதனைக் காட்டுவாரே. 776

காட்டுவார் தடமதனைக் கண்டபோது
கைலாச வடிவுனக்குத் தோன்றலாகும்
நீட்டமுடன் தற்பரமாஞ் சிற்பரத்தை
நீணிலத்தில் காண்பதற்கு யெளிதேயாகும்
தேட்டமுடன் லகிரியென்ற மவுனத்தாலே
தேகமதின் தற்பரத்தை யறியலாகும்
கூட்டமுடன் பஞ்சகர்த்தா ளாடும்கூத்து
கொற்றவனே தெளிவுறவே காண்பாய்பாரே 777

பாரேதான் யுகநான்கு மிருந்தாலுந்தான்
பாலகனே சமாதிநிஷ்டை காண்பதற்கு
நேரேதான் றிருவடியுன் குருவேவேண்டும்
நிஷ்களங்க மாகவல்லோ யிருந்திட்டாலும்
கூரேதான் தாயறியா சூலுமில்லை
குவலயத்தில் வெகுகோடி மகிமையுண்டு
சீரேதான் குருவில்லாச் சீஷனில்லை
சிறப்புடைய வாளனில்லா தேவிதானே. 778

தானான புலஸ்தியனே தருமவானே
தாரணியி லாளனில்லாத் தேவியுண்டோ
கோனான குருக்களில்லாக் கோயிலுண்டோ
குணமான மதியூகி யில்லாவேந்தன்
தேனான தேர்வேந்த ராஜருண்டோ
தேற்றமுடன் விளக்கில்லா முத்தமுண்டோ
பானான பரலோகங் காண்பதற்கு
பரமகுரு வில்லாம லொன்றுங்காணே. 779

அகஸ்தியர்—புலஸ்தியருக்கு—நவகோடி ரிஷிகள் செய்த தவக்கியானத்தைக் கூறுவது

காணவே யின்னமொரு புலப்பஞ்சொல்வேன்
கண்மணியே விண்மணியே கருத்தாய்க்கேளீர்
கோணமெனும் நவகோணந் தன்னிலப்பா
கொற்றவனே வடபாகம் மேற்பாகத்தில்
நீணவே பரிதிமதி காணாநாடு
நிஷ்களங்க மானதொரு கடலோரத்தில்

வாணமருங் கல்விதனி லுயர்ந்தசித்து
வலுவான ரிஷியொருவ ரிருந்திட்டாரே. 780

இருந்தாரே கிரேதாயி னுகத்திலப்பா
எழிலான தவயாகஞ் செய்யும்போது
பொருந்தவே பிரளயங்கள் நேர்ந்துதங்கே
பொங்கமுடன் ரிஷியாருந் தம்பனமேயாகி
நெருங்கவே ஜலஸ்தம்ப மாகியல்லோ
நேர்மையுடன் சித்ததுவு மூச்சொடுங்கி
வருந்தியே நெடுங்காரந் தன்னிலப்பா
வளமுடனே குடுக்கைபோல் மிதந்திட்டாரே 781

மிதந்துமே நெடுங்காலந் தன்னிலேதான்
மிக்கான சடலமது இருந்துதங்கே
நிதநிதமாய் நீரதுவும் வற்றியேதான்
நீடூழி காலம்வரை வையகத்தில்
பதமுடனே பூமிதனில் தங்கியல்லோ
பாங்குடனே மண்ணோடே மண்ணிற்சாய்ந்து
சதகோடி சூரியன்போல் மண்ணிற்றங்க
சட்டமுடன் வெகுகாலமிருக்கலாச்சே. 782

ஆச்சப்பா நெடுங்காலஞ் சென்றபின்பு
அப்பனே மண்மேடு வதிகமாகி
மூச்சடங்கி யிருந்ததொரு சித்துதானும்
மூதுலகைக் காண்பதற்கு யெண்ணமாகி
மாச்சலது நேராமல் ரிஷியாருந்தான்
மார்க்கமுடன் சமாதிமுக மிருந்தாற்போலே
கூச்சலுடன் சத்தமது வதிகமாகி
குவலயத்தில் மாண்பருக்கு கேட்கலாச்சே. 783

கேட்கவே மாண்பரெல்லா மொன்றாய்க்கூடி
கெவனமுட னதிசயகங் ளென்னவென்று
வாட்டமுட னாயிரம்பே ரோடிவந்து
வடகோடி கானகத்தி னதிசயத்தை
தடடமுடன கிட்டிருந்து கேட்கும்போது
தேஜொளிவின் சத்தமதைக் கணடிடடார்கள்
கூட்டமுட னாயிரம்பே ரொன்றாய்க்கூடி
குண்ணான மண்மீதில் வந்திட்டாரே. 784

வந்துமே மாண்பரெல்லா மனதுவந்து
மனங்கனிந்து இதங்கனிந்து மகிழ்வாயுன்னி

அந்தமுடன் மண்பாறைத் தன்னைநீக்கி
அங்கெனவே சுரங்கமது செய்யும்போது
விந்தையுள்ள சொற்சொரூப விசுவரூப
வித்தகனா ரிஷியொரு வரிருந்தாரங்கே
சிந்தையுள மாண்பரெல்லா மொன்றாய்க்கூடி
சிதாபாச ரூபமதைக் கண்டிட்டாரே. 785

சிற்சொரூப சிதாபாச ரிஷியார் கூறுவது

கண்டாரே ரிஷியாரு மனதுவந்து
களிப்புடனே மாண்பர்தமைக் கடைக்கண்ணாலே
அண்டரண்ட சராசரங்கள் தத்தளிக்க
அருளான தவமுனியார் ரிஷியார்தாமும்
கொண்டல்வண்ண னிடிபோலே சத்தத்தோடு
கூறான முனியாரு மசரீராலே
சண்டமாருதம் போலே கர்ச்சித்தேதான்
சாங்கமுடன் மாண்பர்தமை வினவினாரே. 786

வினவவே ஆயிரம்பேர் மாண்பரெல்லாம்
விட்டகுறை இருந்ததொரு தவத்தினாலே
மனங்கனிந்து வஞ்சலிகள் மிகவேசெய்து
மார்க்கமுட னமஸ்காரத் துதிகளோடும்
தினகரனார் சதகோடி சூரியன்போல்
தீர்க்கமுடன் மலர்தூவி தெண்டனிட்டு
சினமதுவும் வாராம லெந்தமைத்தான்
சிற்பரனே கொண்டணைத்து வருள் கொள்வீரே 787

அருள்கொள்வீ ரென்றல்லோ மாண்பரெல்லாம்
அப்பனே யற்புதமே யன்புள்ளாரே
தெருள்கலையிற் றெள்ளமுதே செந்தேனேகேள்
சிற்பரனே விற்பனரே சிங்கவேறே
இருளகற்றுஞ் சுடர்மணியே யெங்கள்நாதா
எழிலான புராதனமே யின்புள்ளாரே
அருளெமக்குத் தருகவென்று அன்பரெல்லாம்
அரியசெந் தாமரைதனையே போற்றினாரே 788

போற்றியே னிற்கையிலே ரிஷியார்தாமும்
பொங்கமுடன் வையகத்தி லுகந்தானப்பா
சீற்றமுட னுகமதுவு மென்னவாச்சு
சிறப்பான பிரளயங்க ளென்னவாச்சு

நாற்றிசையும் பரிதிமதி தானுமப்பா
நலமுடனே திசைமாறி யிருந்ததுண்டோ
வேற்றுமைக ளுண்டானானற் சொல்லுமென்று
வேதாந்த ரிஷியாருங் கேட்டிட்டாரே. 789

கேட்டதொரு மககோடி ரிஷியாருக்கு
கெவனமுடன் மாண்பர்களுங் கூறலுற்றார்
நீட்டமுடன் காயாதி கற்பங்கொண்டு
நெடுங்காலம் வையகத்தி லிருந்தோம்நாதா
வாட்டமுடன் லோகவதி சயங்களெல்லாம்
வரைகோடி யுகங்கோடி சொல்லொண்ணாது
ஆட்டமதை யாதிசேடன் றன்னாற்றானும்
அப்பனே கூறுதற்கு நாவெண்ணாதே. 790

ஒண்ணாது யென்றல்லோ சீஷவர்க்கம்
உத்தமர்கள் மனதுவந்து கூறலுற்றார்
திண்ணமுடன் யுகமதும் பதினாறாச்சு
தீர்க்கமுள்ள பிரளயங்கள் நாலதாச்சு
வண்ணமுடன் சிரஞ்சீவி பட்டத்தோர்கள்
வாகுடனே தவயாகஞ் செய்துகொண்டு
எண்ணரிய நற்பொருளை யேகவெண்ணி
எழிலான சமாதிமுக மிருந்திட்டாரே. 791

இருந்தாரே நெடுங்காலம் வையகத்தில்
எழிலான ரிஷிதேவர் முனிவர்தாமும்
பொருந்தவே வையகத்தின் வாழ்க்கையாவும்
பொங்கமுடன் பொய்யல்லால் மெய்யொன்றில்லை
திருந்தவே தேகாதி கொண்டுமென்ன
தீர்க்கமுடன் திரவியங்கள் படைத்துமென்ன
வருந்தியே யுகங்கோடி தவங்கள்செய்து
வையகத்தி லிருந்தவர்க ளில்லைதானே 792

இல்லையென்று கூறயிலே ரிஷியார்தாமும்
எழிலான ஆயிரம்பேர் மாண்பருக்கு
தொல்லையெனும் பிறவியது மாயாத்துன்பம்
தொல்லுலகில் தாமிருந்தும் லாபமென்ன
அல்லலெனும் பவக்கடலை விட்டகற்றி
அகிலமெனுஞ் சமாதிதனி லிருக்கநன்று
வல்லதொரு ஞானமென்ற மௌனப்பாலை
வளமையுட னறிபவரே சித்தராமே. 793

சித்தரென்று கூறியல்லோ ரிஷியார்தாமும்
சிறப்புடனே வையகத்தி லிருக்கேனென்று
பத்தியுடன் சமாதிமுக மிருக்கநன்று
பாங்குடனே தேகமதை யொளித்தல்நன்று
சத்தியங்கள் தவறிவிடு மினியிருந்தால்
சாங்கமுடன் வெகுகோடி யுகங்களாச்சு
வெத்தியது மேவாது கலியுகந்தான்
வேதாந்த சீஷர்களை விளம்பக்கேளே 794

கேளேதா னென்றல்லோ ரிஷியார்தாமும்
கெவனமுடன் மண்மீதில் மறைந்துபோனார்
சூளேதா னாயிரம்பேர் சீஷவர்க்கம்
சுத்தமுடன் தாமிருந்து சமாதிபூண்டு
வேளேதான் கலியுகமும் பிறக்குமட்டும்
வேதாந்த சீஷவர்க்க மெல்லோருந்தான்
நீளேதா வஞ்சலிகள் செய்துகொண்டு
நீடூழி காலம்வரை யிருந்திட்டாரே. 795

இட்டதொரு கலியுகந்தான் பிறக்கலாச்சு
எழிலான சீஷவர்க்கந் தாமறிந்தார்
சட்டமுட னெல்லோரு மிருக்கலாகி
சாங்கமுடன் சமாதிமுகம் பூணல்நன்று
திட்டமுடன் குருபாதம் வணங்கியல்லோ
திரளுடனே வையகத்தைத் தாமறந்து
அட்டகிரி மலைதனிலே யெல்லோருந்தான்
அப்பனே சமாதிமுகம் பூண்டார்பாரே. 796

அகஸ்தியரிடத்தில்–பிரமமுனி–உபதேசம்பெற்றது

பாரேதான் புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே யின்னமொரு போக்குசொல்வேன்
நேரேதான் சிவராஜ யோகியப்பா
நெடிதான பிரமமென்ற முனியார்தாமும்
கூரேதா னெந்தனிட மனதுவந்து
கொற்றவனே உபதேசம் பெற்றவண்ணம்
சீரேதான் வரைபாடு முறைபாடெல்லாம்
சிறப்புடனே யாமுனக்கு வோதுவேனே. 797

ஓதுவேன் புலஸ்தியனே வொளிவுள்ளானே
ஓகோகோ பிரமமுனி உபதேசத்தை
நீதமுடன் கிரேதாயி னுகத்திலப்பா
நெடிதான பிரளயங்கள் நேர்ந்தபோது

நாதரெனும் பராபரத்தி னருளினாலே
நாதாந்த பிரமமுனி சித்துதாமும்
தோதமுட னெந்தனது உபதேசங்கள்
தோற்றமுடன் தானடையும் பொருமைபாரே 798

பாரேதான் புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே பகருகிறேன் பரிவாய்க்கேளீர்
நேரேதான் பிரமமுனி ரிஷியார்தாமும்
நீடூழி காலம்வரை கற்பமுண்டு
சீரேதான் சீற்சிதா பாசந்தன்னை
சிறப்புடனே தானடைய மனதிலுன்னி
தீரேதான் ஞானமெனு மௌனப்பாலை
தீர்க்கமுட னெந்தனையுங் கேட்டிட்டாரே. 799

கேட்டுமே பிரமமுனி ரிஷியார்தாமும்
கீர்த்தியுட னெந்தனையு மஞ்சலித்து
தாட்டிகமாய்த் தலைகீழா யிருந்துகொண்டு
சாதித்தார் தவயாக மாமாங்கந்தான்
நீட்டமுடன் சுவாசமதை யுள்ளடக்கி
நீதியுட னெடுங்காலந் தவமிருந்து
நாட்டமுட னெந்தனையு முபதேசிக்க
நயமுடனே பயமுடனே நவின்றிட்டாரே. 800

நவின்றாரே பிரமமுனி ரிடியார்தாமும்
நலமுடனே யவரிருந்த தனத்தைக்கண்டேன்
புவிதனிலே சித்தர்களோ கோடாகோடி
புகழான பதினென்பே ரனேகருண்டு
சகிதமுட னிப்படியாய்த் தவசிருந்த
சதுரான நாதர்தமைக் கண்டதில்லை
மிகபடவே பிரமமுனி தவத்தைப்போலே
மிக்கான தவந்தனையே கண்டிலேனே. 801

கண்டிலேன் புலத்தியனே கனிவுள்ளானே
கைலாச நாதரென்றே செப்பலாகும்
அண்டர்முனி ராட்சதர்கள் கோடாகோடி
அவனிதனில் சொல்வதற்கு லக்கோயில்லை
பண்டுளவு மாலையணி கிருட்ணபூபன்
பார்தனிலே வெகுகால மிருந்தசித்து
சண்டமா ருதம்போலே கோடிகாலம்
சாற்றினான் தரணிதனில் சொல்லொண்ணாதே 802

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
சுந்தரனே புலத்தியனே சுகுணமாரா
வெல்லவே நாலுயுகம் நானறிந்தேன்
வேதாந்த சித்துரிஷி அனேகங்கண்டேன்
புல்லறிவா லவரவர்கள் செய்த நூல்கள்
புராதனங்க ளிதிகாச மனேகங்கண்டேன்
நல்லறிவால் பிரம்மமுனி ரிடியார்தாமும்
நாதாந்த சித்தொளிபோல் சொலித்திட்டாரே 803

சொலித்ததொரு சோதிமயந் தன்னைக்கண்டு
சுட்டெறிக்கும் பனிமதிபோல் சேர்வைகண்டேன்
வலிதான பவக்கடலை விட்டகற்றி
மானிலத்தில் மாயாதி ரூபமாகி
கலியுகமா முடிவதனில் ஞானப்பாலை
கருதவே தன்மனதி லுன்னியேதான்
நலிதமுடன் எந்தனது சேர்வைபூண்டு
நாதாந்த சித்தொளிவும் வந்திட்டாரே 804

அகஸ்தியர் புலஸ்தியருக்கு வேதவியாசர் அற்புதங்கூறல்

வந்ததொரு புலத்தியனே அன்புள்ளானே
வரைகோடி நிறைகோடி வையகத்தில்
சந்ததிகள் மிகவுண்டாய் வாழ்ந்தோர்கோடி
சதாகாலம் நிட்டையிலே இருந்தோர்கோடி
பந்தமுடன் சிதாபாசங் களையகற்றிப்
பாங்குடனே சமாதிமுகங் கொண்டோர்கோடி
விந்தைமிகச் செய்துமல்லோ விட்டார்கோடி
வீணிலே மடிந்தவர்கள் கோடியாமே 805

கோடியாம் சதகோடி ரிடிகள் தம்மில்
கொற்றவர்கள் குவலயத்தி லனேகம்பேர்கள்
தேடியே தவயாகஞ் செய்யவெண்ணி
தேசத்தில் சித்துமுனி தம்மைக்கண்டு
நீடியே சமாதிமுகம் போகவென்று
நீடுழி காலவரை நிலையிற்சென்று
பாடியே பலகோடி சாத்திரங்கள்
பலபலவாய் கொண்டமைத்தார் சித்துதாமே 806

சித்தான சித்துமுனி சொல்லொண்ணாது
சீருள்ள சாத்திரங்கள் கோத்திரங்கள்

முத்தான நுணுக்கங்கள் கோடிசொன்னார்
மூதுலகில் விண்டவர்கள் யாருமில்லை
சத்தான திதுவென்று அறிந்தோரில்லை
சாதகமாய் மறந்ததல்லால் வேறொன்றில்லை
நித்தியமு மனோன்மணியாள் பாதங்காண
நீடித்தார் சமாதிமுகம் நீடித்தாரே 807

நீடவே ஒருலாபங் கண்டதில்லை
நீணிலத்தில் யோகமது செய்துபூண்டு
நாடவே லகுவதுவும் பிரியாமற்றான்
நாதாந்த சித்தொளிவாம் பெயரும்பெற்று
கூடவே சீஷவர்க்கம் பூண்டுமேதான்
குவலயத்தில் நெடுங்கால வரையிற்சென்று
மூடவே சமாதிமுகம் புரிவேனென்று
முறையுடனே மண்மீதில் மடிந்திட்டாரே 808

மடிந்ததொரு ரிடிமுனிவர் சொல்லொண்ணாது
மானிலத்தில் கூறுவதற்கு நாவோயில்லை
கடினமுடன் சமாதிமுக மிருப்பேனென்று
கைலாச மேருகிரி சென்றார்கோடி
விடிபகலும் காணாமல் சமாதிருந்து
வேஷமுக மாறியல்லோ மாண்டார்கோடி
துடிமுடியாய் சமாதிமுகங் காணாமற்றான்
துப்புரவாய் போனவர் கணக்கில்லைதானே 809

தானான புலத்தியனே தார்வேந்தாகேள்
சதுர்யுகமு மிருந்தவர்கள் லக்கோயில்லை
தேனான மனோன்மணியாள் பாதங்காணார்
தேசொளிவைக் கண்டல்லோ மறைந்துபோனார்
மானான சுடரொளியின் மயக்கத்தாலே
மதிமயங்கி நின்றுவிட்டார் கோடிக்காகும்
பானான பராபரத்தின் சின்மயத்தால்
பாருலகை துறந்தவர்கள் கோடிகாணே 810

காணவென்றால வியாசரிடி வளப்பங்கேளாய்
கண்மணியே விண்மணியே கவிராஜேந்திரா
பூணவே கலியுகத்து மாண்பருக்கு
புற்பதம்போல் அமைந்ததொரு சித்துவாகும்
தோணவே அவதார சிங்கமப்பா
தொல்லுலகில் யாவருக்கு முவந்தசித்து

நீணவே சன்மார்க்க நிலையிற்சென்றே
நீடூழி காலம்வரை இருந்தார்தாமே 811

இருந்ததொரு கலியுகத்து மானிடர்க்கு
எழிலான பிதாவென்று செப்பலாகும்
பொருந்தவே புராணகதை அறிந்தஞானி
பூபால சித்துவெளி சொருபராகும்
அருந்தவத்தில் வந்துசித்த பரமஞானி
அப்பனே அவனிதனில் மெய்ச்சுஞ்சிதது
குருந்தமரம் வீற்றிருக்கும் குருவேயாகும்
கோபாலற் கானதொரு ஞானியாமே 812

ஆமேதான் சிவானந்தங் கொண்டபேர்கள்
அப்பனே தவயாக முடையஞானி
தாமேதான் சிதாபாசக் களையகற்றிச்
சச்சிதா நிலைதனையைக் கடந்தபேர்தான்
வேமேதான் புஜண்டருக்குக் காட்சிதந்து
விட்டகுறை தனையகற்றி விதிகள்கூறி
நாமேதான் சொன்னபடி மார்க்கந்தன்னை
நாட்டிவைத்த பாண்டியனென் றறையலாமே 813

அறையவென்றால் நாவில்லை பாவுமில்லை
ஆஆஆ நாதாக்கள் கூறமாட்டார்
சிறைதனிலே வெகுமாண்பர் தம்மைக்கண்டு
சீர்த்தியுட னுபதேச உண்மைகூறி
நிறைபடவே சிதாபாசக் களையகற்றி
நீடாழி யுலகுதனி விருந்தஞானி
குறையாமல் யுகந்தோறு மதிசயத்தை
கொற்றவனே கண்டறிந்த யோகியாமே 814

யோகியாம் வியாசமுனி யென்றுநாமம்
வேதாந்த தாய்தனக்கு வுகந்தசீஷன்
யோகியாம் கலியுகத்துப் புருஷசிங்கம்
யுற்பனத்தில் தேவர்மெய்ச்சு மந்திரவாதி
யோகியாம் கலியுகத்தார் போற்றும்பூபன்
உசிதமுள்ள குருபர னென்னலாகும்
யோகியாம் கலியுகத்துப் பிதாவேபாரு
முருக்கமுள்ள தற்பரனென் றறையலாமே. 815

என்னவே கலியுகத்து மாண்பருக்கு
எழிலான சாத்திரங்கள் கோத்திரங்கள்

துன்னவே மிகப்படைத்து வதிதத்தோடு
துப்புரவாய் தானடைத்து விதிப்பாடோடும்
பன்னவே பலசாதி பலபாஷையாகப்
பாலித்தார் கட்டுவகை வரைபாடெல்லாம்
சின்னமது வாராமல் சினமில்லாமல்
சீருடனே முறைப்பாடாய் தெளிந்திட்டாரே 816

தெளிந்ததொரு வியாசமுனி நாதர்தாமும்
செப்பினார் வேதங்கள் காணம்யாவும்
தெளிவுடனே யவரவற்கு உரைத்தசித்து
நேர்மையுள்ள குணபாடுவழி பாடெல்லாம்
அழிவதுவும் வாராமல் புனைந்தசித்து
அம்பரத்து ரகசியங்கள் ஒதுஞ்சித்து
பழியுதுவும் நேராத பரமஞானி
பட்சமுள்ள சித்துமுனி வியாசர்தானே. 817

தானென்ற கலைக்கியான மறிந்தஞானி
தாரணியில் மகடியற்கு கண்திறந்த
மானென்ற வேதமது மிகவேகூறி
மகிழ்ச்சியுடன் றானிருந்த மதிவல்லோனாம்
தேனென்ற தேஜொளிவைக் கண்டஞானி
தெரிசித்துப் பதவிபெற்ற சிங்கராஜன்
கோனென்ற வரசனுக்கு வொப்பேசொல்வார்
கொற்றவர்க ளிவர்க்கீடு சொல்லொண்ணாதே 818

ஒண்ணாது தேவிகா லோத்திரனென்பார்
ஒகோகோ நாதாக்கள் மெச்சுஞ்சித்து
கண்ணாரக் காசினியில் மாந்தர்தாமும்
கைதொழுது வணங்குகின்ற கடந்தசித்து
பண்ணாக் கோலமெல்லாம் பகருஞ்சித்து
பார்தனிலே நடத்தையெல்லாம் பகுத்துரைத்தோர்
விண்ணாடர் மண்ணாடர் துதிக்கும்சித்து
வித்தகனார் வியாசமுனி யென்பார்காணே. 819

காணவே புலஸ்தியனே மச்சகேந்திரா
கலியுகத்தில் ராஜாதி ராஜர்தாமும்
பூணவே யவர்செய்த யாகமங்கள்
புராணகலை யறுபத்து நான்குகோர்வை
நீணவே நெடுங்கால நிண்ணயத்தால்
நிட்களங்க மாகவல்லோ நிதானத்தோடும்

ஆணவங்கள் தானொடுங்கி அதிவீரத்தால்
அப்பனே துதிகொண்டோர் வதீதமாமே. 820

அதீதமாம் கலியுகத்து ராஜாமன்னோர்
மகாபெருமை கொண்டல்லோ மதிப்புற்றோங்கி
கதீதமுடன் யிதிகாசப் புராணமெல்லாம்
கட்டுரைகள் பொய்யாது மெய்யென்றெண்ணி
நிதிதமுடன் முறைபாடு வழிபாடாக
நீடுழி காலம்வரை நியமித்தேதான்
பதிதமுடன் சிற்பரனா ரிவர்தானென்று
பாலித்தார் கோடியுகம் கோடியாமே. 821

கோடியா மானிடற்கு புத்தியாக
கொற்றவனே விரதங்கள் நேமநிட்டை
நீடியே நெடுங்கால மிருப்பதற்கும்
நீதியுடன் செபதபங்கள் யாவுங்கூறி
பாடியே பாரிலுள்ள மங்கையற்கும்
பாலகற்கும் பெரியோற்கும் பண்புள்ளோற்கும்
கூடியே குணமில்லாக் கர்மிகட்கும்
குடிகெடுக்குஞ் சண்டாளற் குரைத்தார்தாமே. 822

தாமேதான் சாதிக்கு பேதாபேதம்
பண்புடனே கட்டுவகை யாகவல்லோ
வேமேதான் விரதங்கள் கோடாகோடி
வேற்றுமைகள் தாமுரைத்தார் மிகவொண்ணாது
நாமேதான் சொன்னபடி யவரவற்கு
நாட்டினார் பலபேத வண்மையெல்லாம்
ஆமேதான் அற்புதங்கள் மிகவாய்க்கூறி
அவனிதனில் நாட்டிவைத்தார் புதுமையாமே 823

புதுமையாம் திங்களுக்கோர் விரதமாக
பொங்கமுடன் றானமைந்தார் கணக்கோயில்லை
கதுமையாய் தேவகோட்டிக ளனந்தம்
கழறினார் தேவஸ் தானங்கள் தன்னில்
நிதமுடன் திங்களுக்கோர் திருவிழாக்கள்
நிட்களங்க மாகவல்லோ நியமித்தேதான்
பதமுடனே பலபலவாய் தேவவர்க்கம்
பாலித்தார் மாந்தர்களுக்கு பான்மையாமே 824

பான்மையாம் பண்டிகைக ளனந்தங்கூறி
பண்புடனே வாசார பேதங்கூட்டி

நோன்பென்றும் விரதமென்றும் நொடிகள்கூறி
நோக்கமுடன் றானமைத்தார் லக்கோயில்லை
வான்கதிகள் பெறுவதற்கு உபதேசங்கள்
வளமையுடன் நேமித்தார் குருபோல!!க
மேன்மையுடன் கவிவாணர் துதிப்பதற்கும்
மேதினியில் கட்டுரைகள் மிகச்செய்தாரே. 825

செய்யவென்றால் பூசையது அனந்தங்கோடி
செப்பினால் வனபூசை சிவபூசையென்றும்
வெய்யபுகழ் பாண்டியற்கும் ராசருக்கும்
வேதாந்த சின்மயத்தோ ரானவற்கும்
துய்யுபுகழ் கவிவாணர் திலகருக்கும்
துப்புரவாய் தானமைந்தார் வதீதமெத்த
பையவே தாமுரைத்தார் பாருள்ளோற்கு
பட்சமுடன் றான்விதித்தார் பேதந்தானே. 826

தானான பேதா பேதங்கள்கண்டு
தாரணியில் வெகுகோடி மாண்பரெல்லாம்
கோனான குருவாக்கு தப்பாவண்ணம்
குவலயத்தில் வெகுமாந்தர் குருவாயெண்ணி
தேனான மனோன்மணியாள் கிருபையாலும்
தேற்றமுடன் வவர்பாதந் தான்வணங்கி
மானான மயேஸ்பரியை துதித்துமேதான்
மகிதலத்தில் சோடித்தார் வியாசர்காணே. 827

காணவென்றால் வியாசரைப்போல் யாருமில்லை
காசினியில் அவர்போலுஞ் சித்துமில்லை
பூணவே சித்துமுனி யனந்தங்கோடி
புகழுடனே தாமிருந்தார் லக்கோயில்லை
ஆணவங்கள் தானொடுங்கி யிருந்தமாண்பர்
அவனிதனில் சொல்வதற்கு நாவோயில்லை
மாண்பருங் கல்வியுள்ளோர் சுத்தமெத்த
மாற்கமுடன் கூறவில்லை யிவர்போல்தாமே. 828

தாமேதான் கண்டவரை யானுரைத்தேன்
தகமையுள்ள புலத்தியனே தம்பிரானே
நாமேதான் நெடுங்கால மிருந்தசித்து
நாயகனே நாமிருந்த காலமட்டும்
போமேதான் யெனதைய ரசுவனியாந்தேவர்
பொங்கமுடன் றாமுரைத்தார் வளப்பமெல்லாம்

வேமேதா னிவர்வளப்ப மியாவுமேதான்
மேன்மையுட னுமக்குரைத்த துண்மைபாரே. 829

அகஸ்தியர் புலத்தியர்க்கு செனமே செயமகாராசன் அற்புதங்கூறல்

பாரேதான் புலத்தியனே பண்புள்ளானே
பாலகனே கண்மணியே சுழற்க்கேண்மோ
நேரேதான் வடகிழக்க மேற்கேயப்பா
நிலையான கோட்டையது உதகமுண்டு
சீரேதா னுதகமதில் சுனைதானுண்டு
சிறப்புடனே சுனைமீதில் சுரங்கமுண்டு
கூரேதான் சிச்சிலியார் சாதியுண்டு
குறிப்பான தவசியென்ற சன்னாசியாமே. 830

சன்னாசி யென்றுவொரு ரிடிதானுண்டு
சாங்கமுடன் சுனைதனிலே யிருக்குஞ்சித்து
மன்னாகே ளவ்வனத்தில் தவசியாக
மாற்கமுடன் அவர்செய்யுங் காலந்தன்னில்
சின்னவிடை பருவமது கொண்டபெண்ணாம்
சிற்றின்ப வாசையது காதல்கொண்டு
நன்னயமாய் சித்துமுனி தன்னைப்பார்த்து
நாட்டமுடன் மருவியல்லோ இணங்கினாளே 831

இணங்கவே ஜெனமே ஜெயராசனப்பா
இயலுடனே தாம்பிறந்தார் சித்தரூபன்
வணங்கியே தவயாகம் சென்றபின்பு
வளமையுடன் பாலகனைத் தானெடுத்து
சுணங்கமது நேராமல் கன்னிதானும்
சுத்தமுடன் விடைபெற்று தோகைமாது
மணங்கமழும் ரிடியார்முன் விடைகள்பூண்டு
மார்க்கமுடன் நகர்தனக்கு ஏவினாளே 832

ஏவியே கன்னியென்ற மாதுதானும்
எழிலுடனே நகர்மேவி சிலதுகாலம்
ஆவியுடன் சமுசார வாழ்க்கையற்று
அன்புடனே பாலகனைத் தான்வளர்த்து
காவி காஷாயமது தானும்பூண்டு
கர்த்தாவை எந்நாளும் தியானமோதி
பாவியென்ற நாமமது நேராமல்தான்
பரமபதி தானடைந்தாள் கன்னியாமே. 833

கன்னியவள் தானிறந்த காலந்தன்னில்
காசினியில் சிலகாலம் பாலகன்றான்
முன்னிருந்த சித்தர்முனி ரிடிகள்பாதம்
முடிவணங்கி அடிவணங்கி முடிமன்னன்றான்
நன்னயமான் உபதேச மிகவும்பூண்டு
நாதாந்த சித்தொளிவின் கிருபைகொண்டு
பன்னவே பரதேசி மாற்கம்பெற்று
பாரினிலே சிலகால மிருந்தார்பாரே. 834

பாரேதான் கலியுகத்து மாண்பருக்கு
பட்சமுடன் இதிகாசப் பொருள்கள்யாவும்
நேரேதான் கற்றறிந்து நிபுணனாகி
நேர்மையுடன் பாலித்தார் வதீதமெத்த
சீரேதான் புராண சங்கிரங்கள்யாவும்
சிறப்புடனே கேட்டுணர்ந்து பூபாலன்றான்
வேரேதான் வையகத்தில் யார்தான்காதை
விருப்பமுடன் கேட்டுணர்ந்தோ ரில்லைதானே 835

தானான குவலயத்தில் மாண்பர்க்கெல்லாம்
தானவனாய் தான்முதலாய் இருந்தசித்து
கோனான குருவருளால் பிறந்தசித்து
கோபால சிஷ்டனுக்கு உகந்தமாண்பன்
தேனான அம்மணியைத் தரிசனத்தில்
தெளிவுடனே ரூபமதைக் கண்டசித்து
மானான மகதேவர் பாதந்தன்னை
மாநிலத்தில் எந்நாளும் துதிப்பார்தாமே. 836

துதிப்புடனே நெடுங்காலஞ் சென்றபின்பு
துப்புரவாய் சமுசார வாழ்க்கைவேண்டி
மதிப்புடனே மாயாவின் சித்துரூபம்
மாநிலத்தில் கொள்வதற்கு மதியம்பூண்டு
விதிப்பயனைத் தான்வெறுத்து வெறுப்புற்றோங்கி
வினையறுக்கும் வாளானோ மென்றேயெண்ணி
அதிவிநய உணர்வோடு அன்புகொண்டு
அவனிதனில் சிறையெடுத்தார் ஆண்மைகாணே 837

காணவே கன்னிதமை சிறைஎடுத்துக்
காசினியில் நெடுங்காலம் இருந்தசித்து
பூணவே ருத்திராட்சம் விபூதிபூண்டு
புகழுடனே தவயாகஞ் செய்துமேதான்

ஆணவங்கள் தானொடுங்கி மகுத்துகொண்டு
அவனிதனில் கன்னிகையைத் தான்புணர்ந்து
ஈணவே ஜெயமுனி என்றசித்து
எழிலுடனே பிறப்பதற்கு நாளுமாச்சே. 838

ஆச்சப்பா ஜெயமுனியார் பிறக்குங்காலம்
அப்பனே வருஷமது மூன்றதாகும்
மூச்சடங்கி முவ்வாசை மிகுந்தசித்து
மூதுலகில் சித்தர்களும் யாருமில்லை
பேச்சறியா காலமது மூன்றாந்திங்கள்
பேருடனே நயனமென்ற பாஷைதன்னை
கூச்சலுடன் தாயறிய பேசுஞ்சித்து
குவலயத்தில் வரத்தினால் வந்தசித்தே. 839

சித்தான சித்துமுனி ஜெயமுனி தானப்பா
சிற்பரனார் தன்னகத்தில் பிறந்தசித்து
முத்தான மோட்சமென்ற கதி தான்தொட்டு
மூதுலகில் கண்டறிந்த சித்தேயாகும்
சத்தியவா னென்றகுரு ஜெயமுனிதானப்பா
தாரணியில் கீர்த்திகொள்ளும் சித்தேயாகும்
வெத்தியுடன் நான்பிறந்த வினோதசித்து
வேதாந்தத் தாய்தனக்கு உகந்தசித்தே. 840

உகந்தசித்து ஜெயமுனியாம் விஸ்வரூபன்
உத்தமனார் ஜெனமேயன் பயின்றெடுத்த
செகந்தனிலே வந்துதித்த செயமுனிதானப்பா
செகசோதி யானதிரு மணிவிளக்காம்
மகதேவர் பாதமதை சதாகாலந்தான்
மானிலத்தி லெந்நாளும் மறவாசித்து
யுகங்கண்ட சித்தென்று யெந்தநாயன்
உத்தமனார் சொன்னதொரு நீதியாச்சே. 841

அகத்தியர் புலத்தியருக்கு ஜெயமுனி அற்புதங்கூறல்

நீதியாம் புலத்தியனே யின்னஞ்சொல்வேன்
நீடுழி காலம்வரை கண்டமாற்கம்
ஆதியி லசுவனியார் தேர்ந்தமட்டும்
அப்பனே யெந்தனுக்குச் சொன்னநீதி
சோதிமயங் கண்டதொரு வசுவனியாந்தேவர்
சுகுணமுடன் யெந்தனுக்கு உபதேசித்தார்

பாதிமதி சடையணிந்த தம்பிரான்போல்
பாலித்தா ரெந்தனுக்குப் பாலித்தாரே. 842

பாலித்தார் ஜெயமுனியின் பான்மைதன்னை
பாங்குபெற யுந்தமக்குப் பாலிப்பேன்யான்
ஆலவிஷ முண்டதொரு கிஷ்டன்போலும்
அற்புதங்கள் விற்பனங்க ளனேகஞ்செய்தார்
காலனுக் கிடங்கொடா குளிகைதன்னைக்
காசினியில் செய்துவைத்த பூபாலன்றான்
கோல்முடன் ஜெயமுனியார் செய்தவண்ணம்
கூறுவேன் புலத்தியனே கூறுவேனே. 843

கூறுவேன் மேருவுக்கு வடபாகத்தில்
குறிப்புடனே கீழ்த்திசையில் நெடுந்தூரந்தான்
ஆறுண்டு சுனையுண்டு குகைதானுண்டு
அப்பனே குளிகைசெய்து பூண்டுகொண்டு
வீறுபுகழ் கீர்த்தியுடன் ரிடிகள்பாதம்
விட்டகுறை தனையகற்றி விடுதிவிட்டு
மாறுபடா வேஷமது தன்னைநீக்கி
மதிப்புடனே கீழ்த்திசையில் சென்றார்பாரே. 844

சென்றாரே ஜெயமுனியார் ரிடியார்தாமும்
சிறப்புடனே தவயாகஞ் செய்வதற்கு
குன்றேறி மலைமீதி லிருந்துகொண்டு
குணமான யாகமது செய்யும்போது
பன்றியது வயற்றினிலே குஞ்சரந்தான்
பாரினிலே வந்துதித்த வண்மைதன்னை
தென்றிசையில் மலையோர மடிவாரத்தில்
தேர்வேந்த ஜெயமுனியுங் கண்டிட்டாரே. 845

கண்டாரே ஜெயமுனியும் பாரின்மீது
பட்சமுடன் குஞ்சரத்தைக் கண்டபோது
அண்டரண்டந் தானடுங்க வவனிதன்னில்
அப்பனே வசீரி வாக்குண்டாச்சு
புண்டரிக கிருட்ணாவ தாரனைப்போல்
புகழுடனே பிண்டமென்ற கெஜேந்திரன்றான்
தண்டுளவ மாலையது பூண்டுகொண்டு
தரணிதனி லுற்பவித்த விதங்கண்டாரே. 846

விதமான வராகத்தின் அதிசயத்தை
வித்தகனார் ஜெயமுனியுங் கண்டபோது

மதம்பொழியு மதயானை முனியைப்பார்த்து
மகதேவா யென்தேவா மதிவல்லோனே
பதம்பணிவேன் ஜெயமுனியே யென்றுகூறி
பாங்குடனே சாட்டாங்கத் தெண்டனிட்டு
இதமிணங்க வவர்பாதம் பணிந்துபோற்றி
இன்பமுடன் வஞ்சலிகள் கேட்கலாச்சே. 847

கஜேந்திரன் ஜெயமுனியை அஞ்சலிப்பது

ஆச்சப்பா யென்தேவர் குருவேசாமி
அப்பனே விண்மாரா முன்யேகேண்மோ
மூச்சடங்கி மூவாண்டு வயிற்றில்தங்கி
மூதுலகி லவதரித்தே னீஸ்வராகேள்
மாச்சலது நேராமல் யெந்தனுக்கு
மதிப்புடனே வரந்தந்து யென்னைக்காத்து
பேச்சறியா மிருகமென்ற சாதிக்கல்லோ
பிரியமுட னுபதேசம் கூறுவீரே. 848

கூறவென்று பலகாலும் பணிந்துபோற்றிக்
கொற்றவனர் ஜெயமுனியை கேள்விகேட்க
மாறுடைய மிருகமென்ற கெஜேந்திரத்தை
மதிப்புடனே முனிதானு மனதிலெண்ணி
ஆறுபுகழ் மானிலமாங் குண்ணோரத்தில்
அப்பனே முனிதானும் சாபம்தீர்த்து
கூறுவார் ஜெயமுனியு முபதேசங்கள்
கொற்றவனே கெஜேந்திரற்கு உரைப்பார்பாரே 849

ஜெயமுனி கஜேந்திரனுக்கு வரங்கொடுத்தது

பாரேதான் புலத்தியனே புத்திவானே
பாருலகில் கீர்த்திபெற்ற பண்புள்ளானே
நேரேதா னுந்தமக்கு உபதேசங்கள்
நேர்மையுடன் யானுரைப்பே னென்றுகூறி
கூரேதான் யானல்லோ ரிஷிவரத்தால்
கொற்றவனே பிறந்ததொரு பாலனாச்சு
சீரேதான் நீருமல்லோ வரத்தாலீன்ற
சிறப்பான கெஜேந்திரனு மென்னலாச்சே 850

ஆச்சதினா லுந்தமக்கு யென்னால்மட்டும்
அப்பனே வரங்கொடுப்பே னய்யமில்லை
மூச்சடங்கி மூவாண்டு கற்பந்தன்னில்
மூதுலகில் அவதரித்த பாலனாச்சு

பேச்சறியா வடியேனும் ரிடிவரத்தால்
பேரான உலகுதனில் பிறந்தேன்யானும்
மாச்சலது நேராம லுந்தமக்கு
மன்னவனே வரமதுவுங் கொடுத்தேன்காணே 851

காணவே வரமதுவு மென்னவென்றால்
காசினியில் நாதாக்கள் சித்துதாமும்
தோணவே ரிடிமுனிவர் யாவருந்தான்
தொல்லுலகில் மெய்ச்சுவதற்கு வடியேன் றானும்
மாணவே யின்றுமுத லுந்தமக்கு
மன்னவனே மோட்சமது தந்தேனென்று
வாணர்முத லெல்லவரும் களிப்புற்றோங்க
மகதேவர் வரமதுவுந் தந்தேன்பாரே. 852

பாரேதான் வரமதுவுங் கஜேந்திரற்குப்
பாலகனே புலத்தியனே கொடுத்தபாலன்
நேரேதான் ஜெயமுனியார் வரமுந்தந்த
நெடிதான சித்துமுனி யிவர்தானாகும்
கூரேதான் ஜெயமுனிக்கு வொப்பேயானோர்
செகதலத்தி லிவர்போலு மொருவருண்டோ
ஆரோதான் ரிஷிபாலன் வரத்தின்சித்து
அப்பனே ஜெயமுனி சித்துதானே. 853

தானான சித்துவின்றன் பெருமைதன்னைச்
சாற்றுகிறே னின்னம்வெகு வினோதங்கேளு
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனே யெந்தமக்குச் சொன்னநீதி
தேனான வவர்செய்த நூல்கள் தம்மை
தெரிவிப்பே னுந்தமக்கு சுகுணமாரா
ஞானாக படிபடியாய் யெடுத்துரைப்பேன்
பாலகனே நூலினது விபரங்கேளே. 854

ஜெயமுனியார் செய்த நூல்கள்

கேளப்பா புலத்தியனே புண்ணியவானே
கெணிதமுள்ள குணவானே மச்சகேந்திரா
நாளப்பா போகாமல் ஜெயமுனியார்தாமும்
நானிலத்தில் செய்துவைத்த நூல்கள்தானும்
கோளப்பா நேராது குணமுள்ளானே
கொற்றவனே நூல்விபரம் சாற்றுவேன்யான்

பாளப்பா போகாமல் நூல்தான்கண்ட
காட்சியையான் பகருகிறேன் பண்பாய்த்தானே 855

பண்பான நூலதுவும் பெருநூலப்பா
பகருகிறேன் காவியந்தா வாயிரமுமாகும்
நண்பான வாயிரத் தன்னூறப்பா
நலமுடனே பாடிவைத்த சாகரந்தான்
திண்பான சூத்திரமென் னூறாகும்
திறமான முன்னூறு காண்டம்நாலு
கண்பான பற்பத்தில் ரண்டுகாண்டம்
கணக்குடனே பாடிவைத்த திருநூறாமே. 856

நூறான சூத்திரத்தில் கருக்கிடைதானப்பா
நுவலினார் குருக்கிடையு மிருநூறாகும்
தாறான பெருநூலில் கருக்கிடைதானப்பா
சட்டமுனி யுரைத்ததுபோல் யெண்ணூர் சொன்னார்
காறான வெண்ணூறுநான் குசென்னார்
கருவான யிருநூறில் நான்குரைத்தார்
ஆறான வறுநூறி லிரண்டுரைத்தார்
அப்பனே வறுநூறில் நான்கதாமே. 857

ந கான வெகுநூறில் நான்குசொன்னார்
நயமுடனே வாயிரத்து வொன்றுரைத்தார்
திங்கில்லா நொண்டியிலே முன்னூற்சொன்னார்
திரட்டியே பலதிரட்டு நானூர்சொன்னார்
பாங்கான காவியத்தில் சுருக்கஞ்சொன்னார்
பாலகனே சுருக்கமது முன்னூறாகும்
ஏங்காத பள்ளுபத்து நூறுரைத்தார்
என்மகனே சிந்ததிலே நூற்தான்பாரே. 858

பாரேதான் லகிரியா னந்தங்கூறி
பாடினார் ரண்டுபத்து யிருநூறாகும்
நேரேதான் சிதம்பரக் கோவைசொன்னார்
நெடிதான தருக்களு மிருநூறாகும்
சீரேதான் குண்டலமாம் கவசம்நூறு
செப்பினால் சிவயோகம் நூறுரைத்தார்
வேரேதான் குழம்பதிலே வொன்றுபத்து
வேகமுடன் தாமுரைத்தார் கவிதானூறே 859

கவியான சிந்தாமணி வாயிரத்தொன்று
கருத்துடனே வாதமெல்லா மறைத்துரைத்தார்

புவிமீதில் சித்தர்முனி மயங்கவேதான்
பூட்டினார் அம்பர வித்தைநூறு
அவியாத திருவிளக்கு நூறாறைத்தான்
அப்பனே யமகண்ட மிருநூற்சொன்னார்
கவிவாணர் தான்மயங்கும் விகடம்நூறு
கருதினார் வழலைபதி நூறுகாணே 860

தானான தவயோகம் நூறுரைத்தார்
தகமையுள்ள ஜெயகெண்டி வைந்துநூறு
பானான யெண்ணெய் பதினாறுரைத்தார்
பாங்குடனே மூலிபதி னாறுரைத்தார்
தேனான சிவராஜ யோகம்பத்து
தெளிவான அண்டக்கல் முப்புரைத்தார்
மானான கருவுபதி னாறுரைத்தார்
மகத்தான மைகள் பதினாறுகாணே 861

காணவே சடாட்சரத்திலி ரண்டுபத்து
கருவான மைதனிலே மூன்றுபத்து
பூணவே வஞ்சனத்தில் ஆறுபத்து
புகழான யேமவித்தை யிருநூறாகும்
தோணவே சிலம்புவித்தை வன்பதாகும்
தோராத கோகரண வித்தைநூறு
ஆணவமாம் சூதுவித்தை யிருபத்தைந்து
அப்பனே பாடினதோர் நூறுதாமே. 862

பாடியதோர் கருமான மன்பத்தொன்று
பட்சணியு மெட்சணியும் நூறேயாகும்
தேடியுங் கிடையாத திருமந்திரார்த்தம்
திரட்டியதோர் மூலமந்திர நூறாகும்
வாடியே மயங்காத டமரகந்தான்
வாட்டமுடன் பாடிவைத்த தன்பதாகும்
கூடியதோர் கும்மியிலே நூறுரைத்தார்
கொற்றவனே கலிவெண்பா விருநூற்பாரே. 863

பாரப்பா ஞானமது சுத்தஞானம்
பாடிவைத்தார் நூற்றிரண்டு பத்தேயாகும்
நேரப்பா நாடி பதினாயிரந்தான்
நேர்மையுள்ள கருமத்தின் காண்டமப்பா
ஆரப்பா சொன்னார்கள் யெண்ணூறாயிரந்தான்
அப்பனே சோதிடமு மதிலேதோயும்

கூரப்பா குருநூலா யிரந்தான்சொன்னார்
குவலயத்தி லிவர்போலுஞ் சித்துகாணே. 864

சித்தான சோதிடமும் நூறுரைத்தார்
திகழான சிதம்பரமும் நூறுரைத்தார்
சத்தான பனுவலு முன்னூறாகும்
சதுரான கக்கிஷமு மன்பத்தாகும்
முத்தான சிமிழ்வித்தை யெண்பதாகும்
முனையான ஜாலமது மோடிநூறு
வித்தான மூலிகைதா னறுநூறாகும்
வீரான சாத்திரங்கள னேகமுண்டே 865

அகத்தியர் புலத்தியர்க்கு பிரிங்கு மகாரிஷி மகத்துவங்கூறல்

உண்டான மகிமையது யின்னஞ்சொல்வேன்
வுத்தமனே புலத்தியனே புண்ணியவானே
திண்பான வடகிரிக்கு மேற்கேயப்பா
திகழான மலையுண்டு சுனைகளுண்டு
வண்பான மலையோராம் நதியொன்றுண்டு
மகத்தான நதிமுகத்தி லனேகஞ்சித்தர்
நண்பான சித்தர்களின் பெருமை மெத்தக்
கன்னவனே சொல்லுகிறேன் கவிவல்லோனே 866

கவியான சித்தர்களின் மாற்கங்கேளீர்
கைலாச சித்தரென்று செப்பலாகும்
புவிமீதி லனேகம்பேர் சித்தர்கண்டேன்
புகழான சித்தர்களி லிவர்போலுண்டோ
அவியாத தேகமது கற்றூணாகும்
அப்பனே சமாதிமுகங் கொண்டசித்தர்
குவியாத தேகமது பொன்னேயாகும்
குவலயத்தி லிவர்போலுஞ் சித்துகாணே 867

காணவே வதிசயத்தைக் கூறுகின்றேன்
கர்த்தாவாம் அசுவனியார் தேவர்வாக்கு
தோணவே நெடுங்காலஞ் சமாதிருந்த
துரைராஜ சித்தர்களைக் காணவென்று
வேணபடி தவ்யோகம் பார்ப்பதற்கு
விருப்பமுட னவ்வனத்தை வருகும்போது
மாணமருஞ் சித்தர்களின் புத்துகண்டு
மயங்கியே ரிஷியாரும் திகைத்திட்டாரே 868

திகைத்துமே பார்க்கையிலே புத்துதானும்
திரைமூடி மண்மூடி தடங்காணாமல்
புகைபோன்ற யிருள்வனம்போல் குகைதான்மூடி
புகலானே ரிஷியாரும் பார்த்துயேங்கி
நகைசெய்து சித்தர்களை நோக்கிப்பார்த்து
நளினமுடன் மூச்சதுவாய் அறிந்துகொண்டார்
பகையாகி சித்தர்களும் முனிவர்தாமும்
பாரைவிட்டு காசிவழிக் கேகினாரே. 869

ஏகவே சென்றவழித் தடங்காணாமல்
யெழிலான சித்துமுனி யாவருந்தான்
போகவே வழிதேடிப் பார்த்தாரங்கே
பொங்கமுடன் வழியதுவுந் தெரியாமற்றான்
சாகமுடன் மயங்குகின்ற காலந்தன்னில்
சட்டமுடன் பிரிங்குமகா ரிஷியார்தாமும்
வேகமுடன் கீழ்நோக்கி மூச்செறிந்தார்
வெட்டவெளி கானகத்தில் வெளியானாரே 870

வெளியான கானத்தில் சித்தர்யாவும்
வேட்கமுடன் திடுக்கிட்டு அடிவணங்கி
ஒளிவான பரஞ்சோதி பிரிங்கியாரை
உத்தமர்கள் சித்தரெல்லாம் பதம்பணிந்து
நளினமுடன் அஞ்சலிகள் மிகவுஞ்செய்து
நயப்புடனே யெல்லோரும் கிலேசங்கொண்டு
அளியாதே வரமெமக்குத் தருகவென்று
அன்போடு மறுபடியுந் துதித்திட்டாரே 871

துதிக்கவே ரிஷியாரு மனதுவந்து
துப்புரவாய் சித்தர்கள்மேல் பட்சம்வைத்து
கதியதுவு மீவதற்குப் பிரிங்கியாரும்
கைலாச வடிவுடைய நாதர்தம்மை
மதித்துமே தவயாக மார்க்கந்தன்னில்
மகதேவர் தமைநோக்கி ஞானங்கூறி
பதியெமக்குத் தாவென்று யிதவுகூறி
பட்சமுடன் தியானமது கூறினாரே 872

கூறியே மயேஸ்பரனார் அருளினாலும்
குருவான மனோன்மணியாள் கடாட்சத்தாலும்
சீறியதோர் சித்தர்முனி ரிஷிகள்பேரில்
சீருடனே யவயமது தான்கொடுத்து

மீறியதோர் ரிஷிசாபந் தன்னைநீக்கி
மிக்கவனு போதமது யென்னாளைக்கும்
கூறியே வரமதுவும் தான்கொடுத்தார்
கொற்றவர்கள் சித்துமகா புருஷர்தாமே 873

ஆமேதான் பிரிங்கிரிஷி பெருமையப்பா
அப்பனே கூறுதற்கு நாவுமில்லை
போமேதா னசுவனியார் சொன்னநீதி
பொங்கமுடன் யெந்தமக்கு வறிந்தமட்டும்
நாமேதா னுள்ளபடி வுந்தமக்கு
நளினமுடன் யுரைத்துவிட்டே னன்புள்ளானே
ஆமேதான் கயத்துவந்து களிப்புமாரு
அப்பனே படிமுறையாய் நடந்துகொள்ளே 874

சோதிமகாரிஷியார் பெருமையை அகத்தியர் புலத்தியருக்கு கூறல்

கொள்ளவே யின்னமொரு மாற்கஞ்சொல்வேன்
குணமான புலத்தியனே குருவேலாகேள்
தெள்ளமிர்த மானதொரு திவ்வியவேளே
தெவிட்டாத குணக்குன்றே சிங்கவேளே
வெள்ளியங் கிரிதனிற் பிறந்தகோவே
வேதாந்தத் தாயினது பதாம்புயங்கேள்
உள்ளபடி யானறிந்த மட்டுஞ்சொல்வேன்
ஒகோகோ சோதிரிடி மகிமைபாரே. 875

பார்க்கவென்றால் மேருவுக்குத் தென்பாகத்தில்
பதிவாகக் கூறுகிறேன் பாலனேகேள்
தீர்க்கமுள்ள நதியொன்று புனலொன்றுண்டு
திகழான குளமுண்டு வோடையுண்டு
ஏர்க்கவே யெண்ணூறு யோசனைதானுண்டு
யெழிலான வாயிரங்கால் மண்டபந்தான்
பூர்க்கமலம் வீற்றிருக்கும் மனோன்மணித்தாய்
பொய்கையுண்டு வெண்டாமரை யிருக்குந்தானே 876

தானான பொய்கைதனில் மகிமைசொல்வேன்
கட்டமுடன் முதற்படியில் லிங்கமுண்டு
கோனான விரண்டாந்தன் படியிலப்பா
கொற்றவனே வயிரக்கல் பாவுநாட்டி
வேனான மூன்றாங்கால் படியிலப்பா
முளையான முத்துக்கல் தானிறுத்தி

பானான நாலாங்கால் படியில்தானும்
 பளிங்கான பச்சைக்கல் காணலாமே. 877

காணவென்றால் பஞ்சமுகப் படியிலப்பா
 பாங்கான கொம்புக்கல் தூணிறுத்தி
தோறாம லாறாங்கால் படியிலப்பா
 தோராத பவழக்கால் தூணிறுத்தி
பாணமென்ற மற்றபடி தன்னிலப்பா
 பாலகனே தங்கத்தால் தூணிறுத்தி
மாணமருங் கல்வியுள்ள சித்தர் தாமும்
 மகிழ்ச்சியுட னேயிருப்பார் சித்தர்தாமே. 878

தாமேதான் ஒவ்வொரு படியிலப்பா
 தார்வேந்தா சித்தர்களு மிருப்பாரங்கே
நாமேதான் குளம்நடுவில் மண்டபந்தான்
 நலமுடனே நாமிருக்க நவில்வேனப்பா
போமேதான் மண்டபத்தில் பீடந்தன்னிற்
 பெங்கமுடன் சோதிமகா ரிடியார் தாமும்
ஆமேதான் செபமாலை கையிலேந்தி
 அப்பனே தலைகீழா யிருப்பார்தானே 879

இருக்கின்ற ரிடியாரின் மகிமைசொல்வேன்
 யெழிலான மகிமையது கூறொண்ணாது
பெருக்கமுடன் தவயாகஞ் செய்யும்பாகம்
 பேரான மகிமையது யார்தான்சொல்வார்.
உருக்கமுடன் மனோன்மணியாள் பாதந்தொட்டு
 உத்தமனார் தலைகீழாய் தவசுசெய்து
குருக்கமுடன் நெடுங்காலந் தானிருந்து
 குவலயத்தில் கீர்த்திபெற்றார் தவசியாமே. 880

தவசியார் துவாபரத்தில் கற்பமுண்டு
 தார்வேந்த ராஜாதி ராஜா தம்மை
பவமகற்றி யவர்களுக்கு மோட்சந்தந்து
 பாரினிலே நெடுங்கால மிருக்கவென்று
சிவபதம் தாமடைய மனதிலுன்னி
 சிதாபாசக் களையகற்றி மனமுந்தேர்ந்து
அவனிதனில் தலைகீழா யிருந்துகொண்டு
 அப்பனே யாகமது செய்தார்பாரே 881

பாரப்பா அவர்செய்த வேட்கைதன்னை
 பாருலகி லாராலுங் கூறவொண்ணா

சிரப்பா வப்பதியில் படியிலப்பா
சிறப்புடனே யிருந்தசித்து முனிவர் தாமும்
காரப்பா படிக்கம்ப மிருந்தோரெல்லாம்
கர்த்தாவாஞ் சோதிரிடி தன்றனக்கு
நேரப்பா பணிவிடைகள் யாவுஞ் செய்து
நேர்மையுடன் தாமிருப்பார் பதியில்தானே. 882

பதியான பதியிலப்பா நெடுங்காலந்தான்
பாலகனே புலத்தியனே சித்தரெல்லாம்
துதியான பூசையுடன் நைவேத்தியங்கள்
புண்ணியற்கு சோடசவு பசாரத்தோடும்
மதிபோன்ற சோதிமகா ரிடியாருக்கு
மதிப்புடனே தாம்செய்யும் வண்மைக்காக
சுதிதரவே சோதிமகா ரிடியாருக்கு
கடாட்சிக்கத் தன்மனதி லுன்னினாரே 883

உன்னியே சோதிகமா ரிடியாருந்தான்
உத்தமரைக் கடைக்கண்ணா லயர்ந்துபார்த்து
மன்னாதி சித்தர்முனி யெல்லோருக்கும்
மதிமயங்க மதியிலங்க மதிப்புற்றோங்க
நன்னயமா யட்சரத்தை உச்சரிக்க
நளினமுடன் சித்தரெல்லாந் திடுக்கிட்டேங்கி
பன்னவே யம்பரத்தில் யோசனையாந்தூரம்
பறக்கவே பட்டம்போல் செய்தார்காணே. 884

செய்தாரே சோதிமகா ரிடியாருந்தான்
செகதலங்கள் தத்தளிக்கத் திடுக்கிட்டேங்க
கைதனமா யிருந்ததொரு சித்தரெல்லாம்
கைலாச ரிடியாரின் மகத்துவத்தால்
பையவே வானம்விட்டுக் கீழேபோக
பாங்குடனே யட்சரத்தை யோதும்போது
வையகங்கள் தான்புகழ் முனிவர்சித்தர்
வளமுடனே யவரவர்க ளாதீனத்தில் 885

இறங்கியே யவரவர்க ளாதீனத்தில்
யெழிலாகத் தானமர்ந்து மதியம்பூண்டு
திறமுடைய சித்தாதி முனிவரெல்லாம்
திகழுடனே வஞ்சலித்து வடிபணிந்து
குறவள்ளி யெங்களுக்கு வாசீர்மங்கள்
குவலயத்தில் நெடுங்கால மிருக்கவென்று
உறமுடனே காயாதி தான்கொடுத்து
வுத்தமரே காக்கவென்று பணிந்திட்டாரே 886

சோதிமகாரிடி சித்தர்களுக்கு அபயாஸ்தங்கொடுத்து காயகற்பங் கொடுத்தது

பணிந்ததொரு ரிடியாரு மனதுவந்து
பட்சமுடன் றான்கொடுத்த வினயந்தன்னை
அணிபெறவே கூறுகிறே னன்புள்ளானே
அப்பனே புலத்தியனே அருமைமே
துணிவுடைய நற்கோவே மச்சகேந்திரா
துப்புரவாய் வையகத்தி னாசைநீக்கி
மணிபோன்ற ஞானமென்னும் பாலதையப்பா
மகிழ்வுடனே தான்குடித்த கோவேகேண்மோ 887

கோவேகேள் சிங்கமுக பாலாகேளீர்
கொற்றவனே சித்தர்களின் ஞானப்பாலே
ஆவேறு பசுவேறு யென்னலாமோ
அப்பனே குருவேறும் சீஷன்வேறோ
நோகாமல் சித்தர்முக மனங்கோணாமல்
நொந்தவுரை யுரையாத நுணுக்கமாறா
கோவேளே குஞ்சரமே குணக்குன்றேகேள்
குவலயத்தின் சித்தர்மெய்ச்சுங் சுண்ணேகேண்மோ 888

கண்ணான கண்மணியே கவிராஜேந்திரா
காசினியில் வெகுகோடி சித்தர்தாமும்
எண்ணியே சாத்திரங்க ளனந்தங்கோடி
ஏற்றமுடன் செய்துவைத்தார் லக்கோயில்லை
மண்ணான மண்மீதிற் சமாதிபூண்டு
மானிலத்தி லிருந்தவர்கள் கோடாகோடி
திண்ணமுடன் ரிடியாரின் கோபத்தாலே
தீர்க்கமுட னாகாசஞ் சென்றார்காணே 889

சென்றவர்க ளாருமில்லை வையகத்தில்
செப்பவில்லை சாத்திரத்தில் சித்துதாமும்
வென்றிடவே சோதிரிடி போலேயுண்டோ
வேதாந்தத் தாயாருக் குகந்தபாலன்
குன்றறியா குகையறியா சோதியாகும்
சுத்தமுட னிலைதனிலே யிருந்தசித்து
தென்றிசைவா ழசுவனியா ரெந்தமக்கு
செப்பினார் பூர்வீக காதைதானே. 890

காதையாம் சோதிமகா ரிடியார்காதை
காசினியி ...டுங்கால மிருந்த கோலம்

பாதையுடன் வழிபாடு முறைபாட்டோடும்
பாலித்தா ரெந்தனுக்குச் சொன்னநீதி
வாதையன்றி துகளகற்றி மர்மம்நீக்கி
மகாதேவ ரெந்தமக்கு யுரைத்தவண்ணம்
வேதையெனும் தவசுமுகம் கண்டாராய்ந்து
வித்தகனே யெந்தமக்கு உரைக்கலாச்சே 891

ஆச்சப்பா புலத்தியனே அன்புள்ளானே
அம்பரத்தி னதிசயத்தை அறிவித்தேன்யான்
மூச்சடங்கி வெகுகோடி சித்துதாமும்
மூதுலகில் இருந்தல்லோ சமாதிபூண்டார்
பேச்சறியாப் பாலகனே இந்தசித்து
பேருலகி லார்செய்வா ரிந்தவண்ணம்
ஆச்சரிய மாச்சரியங் கூறொண்ணாது
அப்பனே ஆகாகா மகிமைபாரே 892

அகத்தியர் புலத்தியர்க்கு சோதிரிடி கற்பங் கூறல்

பாரேதான் கற்பமது என்னசொல்வேன்
பாருலகில் சித்துமுனி அறியாக்கற்பம்
நேரேதான் கற்பத்துக் குறுதிசொல்வேன்
நேர்மையுள்ள கற்பமது மூலியல்ல
சீரேதா னுபரச சரக்குமல்ல
சிற்பரனே பூண்டுமுத லானதல்ல
நேரேதான் வேந்தர்கொள்ளு மருந்துமல்ல
வேதாந்த தாய்கொடுத்த மருந்துமாச்சே 893

மருந்தான மருந்ததுவு மென்னவென்றால்
மகதேவர் தான்கொடுத்த கற்பமப்பா
குருந்தமரந் தானிருந்து தவசுசெய்து
கொற்றறவனார் சோதிரிடி கொண்டகற்பம்
அருந்தவத்தில் வந்துதித்த வட்சரத்தின்கற்பம்
ஆரறிவார் பேரறிவார் எவர்தான்காண்பார்
பொருத்தவரே சித்தர்களும் காணாமற்றான்
பொங்கமுடன் மதிமயங்கி திகைத்திட்டாரே 894

இட்டாரே வெகுகோடி மாண்பர்சித்தர்
எழிலான வட்சரத்தைக் காணாமற்றான்
பட்டாரே நாலுயுகந் தன்னிலப்பா
படுபாடு வெகுபாடு சொல்லொண்ணாது
கெட்டாரே யாதுபலன் கிட்டாமற்றான்
கெவனமுடன் குளிகைகொண்டு யிருந்தார்சித்து

அட்டதிசை தான்புகழ் சோதிதானும்
அலைகடலும் கீர்த்தியுடன் மாந்தார்தானே 895

அட்சரத்தின் பெருமைகூறல்

தானான வட்சரமே யேதென்றாக்கால்
தன்மையுள்ள புலத்தியனே தார்வேந்தாகேள்
கோனான குருவெழுத்து அகாரவீடு
கொற்றவனே மயேஸ்பரியாள் இகாரமாகும்
தேனான உகாரமது சித்தேயாகும்
தெளிவான எகாரமது கற்பமாகும்
மானான ஒகாரமது வைந்துங்கூட்டி
மகதேவ ருயிர்கொடுத்தார் மகிமைபாரே. 896

பாரப்பா வுயிர்கொடுத்து வுச்சரித்துப்
பாலகனே மனோன்மணியாள் தியானமோதி
நேரப்பா நடுநிலையில் நின்றுமாறி
நேர்ப்புடனே பிரணவத்தை மாறிமாறி
வேரப்பா மையநிலை மதியம்பூண்டு
வேரறுத்து சிக்கறுத்து வெழுத்தைமாறி
நீரப்பா வாகாயம் தன்னிற்செல்ல
நிட்களங்க மாகவல்லோ நிர்மித்தாரே. 897

நிர்மித்த சித்தாதி முனிவரெல்லாம்
நிட்டையை விட்டுமல்லோ நிஷேதமாகி
கர்மிகளா நாமானோ மென்றுகூறி
கலங்கியே சதாசிவமுந் திடுக்கிட்டேங்கி
தர்மமது தந்தமக்கு யில்லையென்று
தகமையுடன் கிலேசமது மிகவுண்டாகி
மர்மமென்ற பிறப்பதுவும் யில்லையென்று
மார்க்கமுடன் சித்தர்களுங் கலங்கினாரே 898

கலங்கினார் சித்துமுனி ரிடிகளெல்லாம்
கண்கொள்ளா துயரமுடன் மனமுமேங்கி
நலங்கவே யவர்பாதம் தொழுதுபோற்றி
நாயகனே யெனைக்காரு மென்றுகூறி
துலங்கவே யெங்களுக்கு கதியுண்டாச்சு
சுந்தரா அபயமென்று முடிவணங்க
அலங்கவே ரிடியாரு மாதரித்து
அன்புடனே காட்சியது கொடுத்தார்பாரே 899

கொடுக்கவே ரிடியாரு மனதுவந்து
கொற்றவர்கள் சித்துமுனி யெல்லோருந்தான்
ஒடுக்கமுட னவரவர்க ளாதீனத்தில்
உத்தமர்கள் சென்றல்லோ தியானத்தோடு
நடுக்கமுடன் நெடுங்காலந் தாமிருந்து
நாதரது விடைபெற்று மோட்சமேகி
இடுக்கமிலா தெந்நாளும் பரலோகத்தில்
இருந்தார்க ளென்றுமேதான் பேருண்டாச்சே. 900

கடம்பவனச்சித்து பெருமையை அகத்தியர் புலத்தியருக்கு கூறல்

ஆச்சப்பா இன்னமொரு முறைமைசொல்வேன்
அப்பனே புலத்தியனே புண்ணியவானே
மூச்சடங்கி மூன்றுயுகந் தன்னிலப்பா
மூதுலகில் நெடுங்கால மிருந்தசித்து
மாச்சலது நேராமல் துவாபரத்தில்
மகிழ்ச்சியுடன் சீஷனொடு தானுமாக
ஏச்சலது நேராமல் துய்யபாலா
என்மகனே யிருந்ததொரு வண்மைகேளே 901

வண்மையாய் புலத்தியனே வலுவுள்ளானே
வளமையுடன் நெடுங்கால மிருந்தசித்து
உண்மையுடன் வடகிரிக்கு மேற்கேயப்பா
உத்தமனே கடம்பவன மொன்றுவுண்டு
திண்மையாய் கடலோரம் கிருஷ்ணதாரன்
தீர்க்கமுடன் பள்ளிகொண்ட யிடந்தானாகும்
நன்மைபெறு திருப்பாலில் கடல்தானாகும்
நாயகனே புலஸ்தியனே நன்றாய்க்கேளே 902

கேளப்பா புலஸ்தியனே கடலோரந்தான்
கெணிதமுடன் மலையோரம் திம்மையுண்டு
சூளப்பா திம்மைக்கு நேரேயப்பா
சூட்சமுடன் சொல்லுகிறேன் தடாகமுண்டு
பாளப்பா யாருந்தான் செல்லாநாடு
பாலகனே ரிஷிதேவ ரிருக்கும்நாடு
ஆளப்பா யொருவருங் கண்டதில்லை
அப்பனே கடம்பவன மென்னலாமே. 903

என்னவே யவ்வனத்தில் சித்துதானும்
எழிலான தவயாகஞ் செய்வதற்கு
நன்னயமாய் அவ்விடத்தில் சென்றுமல்லோ
நாயகனே தடந்தேடி மடங்கள்தேடி

பன்னவே பலபேரு மறியாமற்றான்
பாலகனே சமாதிமுகங் கொள்ளவென்று
மன்னவர்க ளறியாமற் சித்துதாமும்
மானிலத்தி லமர்ந்தாரே மன்னாகேளே 904

மன்னாநான் சொல்லுகிறேன் புலஸ்தியாகேள்
மானிலத்தில் கடம்பவன சித்துதாமும்
தென்னகரில் ராமருக்கு உபதேசங்கள்
செப்பினார் வேணபடி கியானமாற்கம்
நன்னயமாய் இலங்கைக்குப் பதியேகேளு
நாயகமே தாயகமே நண்புள்ளானே
பன்னவே இலங்கைக்கு அழிவுகாலம்
பாலகனே நேருதற்கு காலமாச்சே 905

காலமென்றால் காலமது கலியுகமுமாச்சு
கன்னவனே தென்னவனே கவிவல்லோனே
மூலமது விடுவதற்கு காரணந்தான்
உத்தமனே யுந்தனிட வாழ்க்கையாலே
கோலமுள்ள மங்கையரின் தோஷத்தாலே
கொற்றவனே யுத்தமது நேருமென்று
சீலமுள்ள கடம்பவன சித்துதாமும்
சீறியே உபதேசம் செப்பினாரே. 906

செப்பினார் ராமருக்கு உபதேசங்கள்
சேனமனு விண்ணப்ப மிகவுங்கூறி
ஒப்பவே கடம்பவன சித்துதாமும்
உத்தமற்கு விதிகாச மிகவுஞ்சொல்லி
எப்படியு மிலங்கைபதி அழிவதற்கு
எழிலான காலமது நேர்ந்துதென்று
மெப்பவே உபதேசம் பெற்றுமல்லோ
உண்மையுடன் சமாதிக்கு யேகென்றாரே 907

ஏகவென்று சொல்லுகையில் ராமர்தாமும்
எழிலான ஞானமதுக் குள்ளேயேகி
போகவே சிலகால மரசுசெய்து
பொங்கமுடன் தேகமது அழியாமற்றான்
சாகமுடன் நெடுங்கால மிருக்கவென்று
சற்பனையா யரசுடனே யோகஞ்செய்து
ஆகமத்தின் விதிப்படியே செங்கோல்செய்து
அப்பனே சமாதிமுக மறிந்தார்பாரே. 908

பாரப்பா சமாதிமுகங் காணலாச்சு
பட்சமுள்ள புலஸ்தியனே வருங்காலந்தான்
நேரப்பா நெடுங்காலஞ் செங்கோல்செய்து
நெடிதான யுத்தமது கழிந்தபின்பு
வேரப்பா நாட்குநாள் வாழ்க்கையற்று
நெடுங்காலம் சமாதிமுக மேகலாகி
சீரப்பா கடம்பவன சித்தர்தம்மின்
சிறப்பான கமலமது பணிந்திட்டாரே 909

பணிந்துமே வஞ்சலிகள் மிகவுஞ்செய்து
பாலகனே சித்துமுறை வழியுங்கண்டு
அணியணியாய் சமாதிக்கும் சென்றபேரை
அவனிதனில் கண்டல்லோ மதியம்பூண்டு
துணிவுடனே யாமுந்தான் சமாதிசெல்ல
துப்புரவாய் மூதுலக வாசைவிட்டு
மணிபோன்ற பதாம்புயத்தைக் கரத்தாற்பற்றி
மன்னவரும் சமாதிக்கு உள்ளானாரே. 910

உள்ளபடி மூதுலகில் நெடுங்காலந்தான்
உத்தமருந் தாமிருக்க மனதிலுன்னி
எள்ளளவும் பிசகதுவும் நேராவண்ணம்
எழிலுடனே நடப்பதற்கு வினயங்கெண்டு
கள்ளமில்லா மனதுடனே உபதேசங்கள்
கண்மணியே ராமரவர் தாமடைந்து
கொள்ளமனம் பிரகாச சோதியோடும்
குவலயத்தில் மண்ணுக்குள் சென்றார்தானே 911

தானான புலஸ்தியனே தன்மைவானே
தட்சணா மூர்த்திக்கு யுகந்தபாலா
கோனான ஸ்ரீராமர் சமாதிபக்கல்
கொற்றவனார் செல்லுகிறேன் யென்றேகூறி
பானான பராபரியை மனதிலெண்ணி
பாலகனே யசரீரி வாக்குரைத்தார்
தேனான தேசொளிவைக் கண்டுமேதான்
தேசம்விட்டு மண்மீதில் சென்றார்காணே 912

காணவே ராமரவர் சென்றபின்பு
கைலாச நாதரு மேதுசெய்தார்
பூணவே சீஷவர்க்க மனேகருக்கு
புகழுடனே வசரீரி வாக்குரைத்தார்

வேணபடி பின்னடக்குங் காரியத்தை
வேகமுடன் றாமுரைத்தார் சீஷருக்கு
மாணமருங் கல்வியுள்ள சீஷரெல்லா
மகிமையுடன் தான்கேட்டு மகிழ்பெற்றாரே. 913

பெற்றுமே யவரவர்கள் மனதிலுன்னிப்
பேருலகில் கீர்த்திபெற்ற பூபாலன்றான்
வெற்றியுட னெப்போது யேகுவாரென்
றியல்புடனே வழிபாடு கொண்டாராய்ந்து
முற்றிலுமே வருகைக்கு எதிராக
முறைபாடு கொண்டறிந்து முயன்றசீஷர்
பற்றறுந்த ராமரவர் வருவதெப்போ
வென்றுசொல்லி சீஷரெல்லாம் வழி கொண்டாரே 914

ஸ்ரீ ராமர் வாக்குரைத்தல்

வழியான புலஸ்தியனே வண்மையோனே
வளம்பெரிய ஸ்ரீராமர் வருவாரென்று
அழியாமல் தேகமது திரும்புமென்று
அன்புடனே வருகைக்கு எதிர்கொண்டேங்க
சுழி முனையை உள்ளடக்கி ராமர்தாமும்
சுத்தமுடன் ஞானமென்ற வழியைநோக்கி
பழியான தேகமது இருந்துமென்ன
பாலகனே ஒருலாப மில்லைதானே. 915

தானான தேகமது வருவதில்லை
தாரணியி லொருலாபம் காண்பதில்லை
கோனான கடம்பவன சித்துதாமும்
கொற்றவனா ரெந்தமக்குச் சொன்னநீதி
பானான பரஞ்சுடரை மனதிலுன்னி
பாரினிலே இருப்பதுவு மெத்தநன்று
மானான மண்மீதி லிருப்பேனென்று
மகிழ்ச்சியுட னசரீரி உரைத்தார்தாமே 916

தாமான வசரீரி வாக்கேதென்றால்
தன்மையுள்ள புலஸ்தியனே மச்சகேந்திரா
கோமானாய் நெடுங்கால மரசுசெய்து
குவலயத்தில் செங்கோலும் செலுத்தியேதான்
நாமாக உலகமெலா மொரேகுடைக்கீழ்
நன்மையுட னாண்டிருந்தோ மண்டலத்தில்
சீமானாய் எனதையர் தசரதன்றான்
சிறப்புடனே நெடுங்கால மாண்டார்பாரே 917

பார்க்கவே அறுபதி னாயிரந்தானாண்டு
பாரெலா மொருகுடைக்கீ ழான்டாரல்லோ
ஏர்க்கவே வவர்கண்ட பலந்தாளென்ன
எளிதான பூவுலகி லொன்றுங்காணே
தீர்க்கமுடன் வாழ்க்கையது நீக்கல்நன்று
திடமுடனே தன்மனதி லெண்ணியேதான்
சீர்க்கமல மனோன்மணியாள் பாதம்நண்ணி
சிவனொடு சமாதிமுக மிருப்பேன்காணே 918

காணவே பூமிமுகம் வருவதில்லை
கைலாச நாதர்பத மென்னாளைக்கும்
பூணவே யவர்பதத்தை தியானித்தேதான்
புகழுடனே இருப்பனென்ற அசரீரிதன்னால்
நீணவே வாக்கதுவுந் தாமுரைத்தார்
நீடாழி உலகுபதி சிஷருக்கு
மாணமருங் கல்வியுள்ள பெரியோருக்கும்
வணக்கமுடன் வாக்கதுவு முறைத்தார்பாரே 919

பாரப்பா லங்கையது அழியவில்லை
பாருலகி லங்கைபதி சாகரத்துள்
ஊரப்பா முழுகியது விழலாய்ப்போச்சு
உத்தமரே யிலங்கைபதி தன்னுக்குள்ளே
கூரப்பா ஸ்ரீராம ரிருப்பாரென்று
கொற்றவனே போதுவும் என்னாளைக்கும்
கோரப்பா ஸ்ரீராம ரிருப்பரென்று
குவலயத்தி லுரைப்பரென்று சொன்னார்பாரே 920

பாரேதா னுலகமெலா மிந்தவாக்குப்
பரம்பரியா யென்னாளும் பலிக்கவென்று
ஊரேதான் முழுகியல்லோ கடலுக்குள்ளே
உத்தமரே சலமூடிப் போனதாயும்
கூரேதான் ராமர்முதல் விபூஷணன் தான்
குவலயத்தி லிருப்பதாய் பேருண்டாகும்
தேரேதான் கோபுரங்கள் மாபுரங்கள்
தெரியுமென்று மாணாக்கர் கூறுவாரே 921

கூறுவா ரிப்படியே ராமர்வாக்கு
குவலயத்தில் அசரீரி பொய்யாதப்பா
மாறுபடா தேகமது யழிவதில்லை
மன்னவனார் ராமரவர் வருவதில்லை

ஆறுபுடை சூழ்நகரம் சாகரத்துள்
அப்பனே யிலங்கைபுரி இருக்குதென்று
வீறுபுகழ் கவிவாணர் கட்டுரைத்த
வாக்கதுவு முலகுதனில் மெய்யதாச்சே 922

ஆச்சப்பா ராமரிட வரலாரப்பா
அப்பனே புலஸ்தியனே சுகுணமாரா
மூச்சடங்கிப் போனதொரு தேகம்பின்னால்
மூதுலகில் வருவதில்லை யென்னலாகும்
பாச்சலுட னிவர்காதை மற்றதெல்லாம்
பாடினார் கவிவாணர் புலவர்தாமும்
மாச்சலது நேராது புண்ணியோற்கு
மன்னவனே தென்னவனே மகிழ்வாய்க்கேளே 923

அகஸ்தியர் புலஸ்தியருக்கு நடராஜ சித்துவின் மகத்துவங் கூறல்

கேளப்பா புலஸ்தியனே புண்ணியபாலா
புகழான வையகத்தி னதிசயங்கள்
பாளப்பா போகாது பூமிதன்னில்
பாடிவைத்தார் வெகுகோடி சித்தரெல்லாம்
ஆளப்பா புலஸ்தியனே அதிகாராகேள்
அப்பனே எனதைய ரசுவனியாந்தேவர்
கேளப்பா எந்தனுக்கு சொன்னநீதி
கவனமுடன் யானுரைப்பேன் பண்பாய்கேளே 924

பண்பான அதிசயங்கள் ஏதென்றாக்கால்
பாலகனே கண்மணியே கவிராஜேந்திரா
திண்பான மேருவுக்குக் கீழ்பாகத்தில்
திமிரியென்ற கஸகிரியர் கோட்டையுண்டு
கன்பான தேசமது யாரதென்றால்
கனமான புரூரவன் தேசமப்பா
நண்பான புரூரன்றன் செங்கோல்தன்னை
நவிலுகிறேன் பாலகனே நன்றாய்க்கேளே 925

நன்றான கோட்டையது என்னசொல்வேன்
நாதாக்க ளறியாத கோட்டையப்பா
குன்றான மலையுண்டு குகைதானுண்டு
கொற்றவனே குகையோர மாறுமுண்டு
தென்றிசைக்கு நடுமையாய் மண்டபந்தான்
தேசொளிவின் சின்மயத்தின் போலேதோன்றும்

வென்றிடவே மனோன்மணியா ளிருக்கும்பீடம்
வேதாந்தத் தாயினது பீடமாமே 926

பீடமாம் புரூரன்தனு தேசமப்பா
பெருநாடு வயல்நாடு மலைநாடப்பா
கூடமாம் சித்திரகூட மண்டபந்தான்
குறிப்பான மேடை சிம்மாதினந்தான்
தாடகையாள் தீர்த்தமது தடாகமுண்டு
தையல்நல்லாள் கோட்டைது மதிகனுமுண்டு
மாட மாளிகையுண்டு மணிப்புரந்தான்
மாசற்ற தேசமது சொல்லொண்ணாதே 927

சொல்லவென்றால் செங்கோலின் சீர்பதத்தால்
சுத்தமுடன் நாள்தோறும் பூசைபூண்டு
அல்லதுதா னகற்றி புரூரனப்பா
அப்பதியில் நெடுங்கால மரசுசெய்தார்
புல்லறிவால் தன்மனதைத் தானகற்றிப்
பொங்கமுடன் நிஷ்டையொடு செங்கோல்தன்னை
வெல்லவே ராச்சியத்தை யாண்டிருந்தான்
விட்டகுறை நேர்ந்ததொரு தன்மைபாரே 928

தன்மையாம் புலஸ்தியனே தார்வேந்தாகேள்
தகைமையுட ஞானமென்ற பாலைத்தானும்
முன்னறிந்த பெரியோர்கள் தன்னைக்கொண்டும்
மூதாக்கள் தாய்தந்தை தன்னைக்கொண்டும்
கன்னவனுக் கொப்பான புரூரன்றானும்
காசினியைத் தான்வெறுத்துக் கலைவல்லோனாய்
என்னாளுங் கடவுள்பதம் நண்ணியல்லோ
எழிலான சமாதிமுகம் நண்ணினாரே 929

நண்ணியே யிருக்கின்ற காலந்தன்னில்
நாதாந்த சித்தொளிவும் கண்டாரங்கே
எண்ணியே பலகோடி சிந்தையோடும்
எழிலான மாபுரத்தை யாளும்வேந்தன்
குண்ணியே புரூரன்றன் ராஜவேந்தன்
குறிப்புடனே சித்தரவ ரென்றேயெண்ணி
மண்ணினிட யாசையது வொன்றுங்காணோம்
மகதேவா சித்தர்வந்த தென்னகூத்தோ 930

கூத்தான கூத்தனவ னிவற்கீடுண்டோ
குறைதீர்க்க வந்ததொரு சித்துதானோ

நாத்தமுள்ள தேகமது யிருந்துமென்ன
நடராஜ சித்துதமைக் காணலாச்சு
தோத்தமுட னவர்பாதங் கண்டபோதே
துரைராஜ புரூரன்றான் தலைவணங்கி
ஏத்தமுட னெந்தமக்கு வின்றைக்கல்லோ
எழிலான குறைநீங்கிப் போச்சென்றாரே 931

என்றுமே சித்தர்தமைக் கண்டபோதே
எழிலான வாதினம் விட்டிறங்கி
குன்றின்மேல் தானிருந்த நடராஜர் தம்மைக்
கொற்றவனார் தாங்கண்டு மதியம்பூண்டு
தென்னகரம் ராமரவர் பதவிபோலேதான்
தேஜொளிவு நந்தமக்கு வாய்த்ததென்று
முன்செய்த தவப்பயனோ யென்றேயெண்ணி
முடிவணங்கி யடிபணிந்து தொழுதிட்டாரே. 932

புரூரனுக்கு நடராஜசித்து உபதேசங்கொடுத்தல்

தொழுததொரு புரூரன்றன் ராஜனுக்கு
தோற்றமுடன் நடராஜ சித்துதாமும்
அழுதகுறை யால்மனதை யகற்றிசித்து
அப்பனே காசினிதன் வாழ்க்கையாவும்
பழுதுள்ள வாழ்க்கையது நீர்மேற்காயம்
பாருலகை மறப்பதுவே நீதியாகும்
புழுவான தேகமது மிருந்துமென்ன
புங்கசித்தி கொள்வதுவே காட்சியாமே. 933

காட்சியா மென்றல்லோ சித்தர்கூற
கைலாச மென்றமக்கு யிடமேயாகும்
ஆட்சியுட னெடுங்காலம் சமாதிருந்து
அரசனே யுகமுடியு மளவுமட்டும்
தாட்சியுட னுபதேசம் அடைந்துமல்லோ
தாரணியை மறப்பதுவே சித்தேயாகும்
மாட்சிமையா யென்னாளு மீசர்பாதம்
அன்புடனே சமாதிமுக மிருப்பீர்தானே. 934

தானான நடராஜர் சித்துதாமும்
தன்மையுட னுரைக்கையிலே புரூரன்றானும்
கோனான சித்தொளிவைக் குருவென்றெண்ணிக்
குசலமுடன் மனைவிமக்கள் யாவும்விட்டு

மானான செங்கோலு மரசும்விட்டு
மணிபுரத்தே விட்டல்லோ மகிழ்ச்சிகொண்டு
தேனான தேசொளிவைக் காண்பதெப்போ
தெளிவான சிவபரமென் றேகினாரே 935

ஏகவே புரூரன்றன் ராஜனப்பா
எழிலான ஜெனக்கூட்டம் கோடிமாண்பர்
வேகமுடன் பின்தொடர்ந்து சித்துபேரில்
வேட்டமுடன் துவேஷமது கொண்டாரங்கே
சாகமுடன் நடராஜர் சித்துதாமும்
தண்மையுடன் சுற்றத்தார் பரிசனத்தை
ஊகமுட னவரவற்கு யிதவுகூறி
உத்தமற்கு மனுகொண்டார் ராஜர்தாமே 936

தாமேதான் மாந்தர்களை மிகவும்நோக்கி
தன்மையுடன் றானுரைப்பார் மாண்பருக்கு
போமேதான் மானிடரே மதிகெட்டோரே
பொல்லாத சாபமது நேரும்பாரு
நாமேதா னுரைத்தபடிசெல்கவென்று
நயமுடனே ராஜனவர் யிதவுகூறி
ஆமேதான் மொழிதப்பி நடந்தபேர்க்கு
அடவான சாபமது யெய்தும்பாரே 937

சாபமது நேரிட்டால் சதாகாலந்தான்
சட்டமுடன் கருமத்துக் காளாவேண்டும்
கோப்மது பொல்லாது சித்துசாபம்
குவலயத்தி லொருவரா லாற்றவொண்ணா
சோபமது மிகவுண்டாய் வினைக்காளாக
சோதனைக்கி கர்த்தனுக் காளாவேண்டும்
தூபமுடன் அவர்பாத மஞ்சலித்து
துப்புறவாய் விண்ணப்பங் கேட்கல்நன்றே 938

நன்றான சாபமது எய்யாதப்பா
நலமுடனே ராஜனவர் யிதவுகூற
குன்றான மாந்தரெல்லாம் திடுக்கிட்டேங்கி
குவலயத்தி லவர்பாதம் பணிந்துபோற்றி
தென்றிசைவாழ் கும்பமுனி தமைநினைந்து
தேற்றமுடன் நடராஜர் தமைவணங்கி
வென்றிடவே யாம்செய்த அபசாரத்தை
வேட்டமுடன் பொறுக்கவென்று இதங்கொண்டாரே 939

மகிமை தெரிதல்

இதமுடனே தேவர்கோன் சித்துதம்மை
எழிலாகத் தான்பார்த்து மனுவுகூற
பதம்பெறவே சித்துமுனி ரிடியார்தாமும்
பட்சமுடன் ஞானோப தேசங்கூறி
நிதந்தனக்கும் பூசைநை வேத்தியங்கள்
நீடாழி யுலகுபதி யுள்ளமட்டும்
விதமுடனே புரூரன் சமாதிபக்கல்
விரதமுடன் பூசையது புரியென்றாரே 940

புரியென்று கூறியல்லோ சித்துதாமும்
புகழுடனே இதிகாச வார்த்தையோதி
பரியான சூரியனைப் போற்றிசெய்து
பாங்குபெற சின்மயத்தை மனதிலுன்னி
சரியான சமாதிமுன்னே சாஷ்டாங்கித்து
கற்பனையாய் துதித்துமிக வதீதம்பூண்டு
குறியான அசரீரி பிறக்குமப்பா
கோவேந்தர் மகிமையது தெரியும்பாரே 941

பாரப்பா அவர்பெருமை அறியலாகும்
பாரிலுள்ள நாதாக்கள் சொல்லலாகும்
நேரப்பா அவரவர்கள் நினைத்தவண்ணம்
நேர்மையுட னடக்கையிலே உறுதியாகும்
கூரப்பா மானிடரே குறிப்பாராய்ந்து
குவலயத்தி லவர்பெருமை செப்பலாகும்
ஆரப்பா மதியத்தில் நிலையம்பூண்டு
அப்பனே சமாதிநிலை கொள்ளென்றாரே 942

கொள்ளவே யுந்தமக்கு உளவுசொன்னேன்
கோவேந்தர் மகிமையது பாருபாரு
எள்ளளவு பிசகாது சுற்றத்தாரே
எழிலான சமாதிக்கு மனமுங்கொள்ளும்
தெள்ளமிர்த மானதொருதுய்யவேளே
தேர்வேந்தர் தமையடுத்த மாந்தரேகேள்
உள்ளபடி யாமுறைத்தேனுங்களுக்கு
உத்தமரே படியறிந்து நடப்பீர்காணே 943

நடவென்று சொன்னாரே புலஸ்தியாகேள்
நாதாந்த சித்தொளிவும் நவின்றாரப்பா

தொடர்ந்துமே சித்துபதம் கார்த்தவற்கு
தோராத வஷ்டசித்துக் காணலாகும்
சடமதுவும் ஒருநாளு மழியாதப்பா
சாதனையாய் நெடுங்கால மிருக்கலாகும்
கடந்துமே அவர்பதத்தை நண்ணாதாற்கு
காசினியி லொன்றுமிலை விழல்தான்பாரே 944

அகஸ்தியர் புலஸ்தியருக்கு யினிமைகூறல்

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாரினிலே நாதாக்கள் பட்சம்வேண்டும்
சீரப்பா அவர்பெருமை கடாட்சங்கொண்டால்
சிதாபாச வொளிதனையைக் காணலாகும்
நேரப்பா தவமிருந்து ஞானம்பூண்டு
நெறியுடனே இருந்தவற்கு எல்லாஞ்சித்தி
கூரப்பா யாதொன்றுங் காணாதாற்கு
குவலயத்தில் ஒன்றுமில்லை திண்ணந்தானே 945

திண்ணமாம் புலஸ்தியனே மட்சகேந்திரா
தீர்க்கமுள்ள கண்மணியே கவிவல்லோனே
உண்மையா உந்தனுக்கு ஞானம்வேண்டும்
உத்தமனே அருள்வேண்டும் செபங்கள் வேண்டும்
தண்மையுடன் விசுவாச மறிவுவேண்டும்
சட்டமுட னாசையது மிகவேவண்டும்
கண்மைபெற விரக்கமது கொள்ள வேண்டும்
கைலாச சித்தர்களின் அருள்கொள்வாயே 946

கொள்ளவே பதினெண்பேர் மகிமைவேண்டும்
கொற்றவனே நவகோடி ரிடிகள் தம்மின்
விள்ளவே யவர்களது கிரியைவேண்டும்
விட்டகுறை யிருந்தாக்கால் லபிக்கும்பாரு
தெள்ளமிர்த மானதொரு ஞானப்பாலை
தேற்றமுடன் தாம்கொடுப்பார் முனிவர்தானும்
எள்ளளவும் பிசகதுவும் நேராதப்பா
எழிலான சித்தருட மகிமைதானே. 947

தானான புலத்தியனே தம்பிரானே
தகைமையுள்ள கண்மணியே கவிராஜேந்திரா
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தமக்குச் சொன்னநீதி

பானான பரஞ்சுடரி னருளினாலும்
பாங்கான மனோன்மணியின் கிருபைவேண்டும்
தேனான உபதேசம் குருவும்வேண்டும்
தெகிட்டாத சின்மயத்தின் கடாட்சம்பாரே. 948

பாரென்று யெந்தனுக்குப் பலகாலுந்தான்
பாங்குடனே சொன்னதொரு நீதியாகும்
காரென்று யவர்பதத்தைக் கார்த்தோமானால்
கைலாச நந்தமக்குக் காட்சியாகும்
வேறென்ற யிணையுண்டோ மோட்சவீடு
வேதாந்த தாயாரு மிருக்கும்வீடு
ஆரென்று நினையாதே புலத்தியாகேள்
அப்பனே யாத்தாள்தா னிருக்கும்வீடே 949

(21) பாட்டனில் அகத்தியர் புலத்தியருக்கு திருமூலர் முதற்பாட்டன் மகிமைகூறல்

வீடான புலத்தியனே விந்திரமாரா
விருப்பமுடன் சொல்லுகிறே னாண்மைபாலா
காடான காடதுவும் வடமேற்கப்பா
கானகமோ கூறுதற்கு நாவோயில்லை
தாடாண்மை கொண்டதொரு புலத்தியாகேள்
தாக்கான மேருவுக்கு தென்பாகத்தில்
மாட மாளிகை யில்லாக் கானகந்தான்
மகாவடவி யென்றல்லோ சொல்லலாமே 950

சொல்லவென்றால் மேருவுக்கு வடபாகத்தில்
தோற்றமுடன் சுனையுண்டு மலைதானுண்டு
கொல்லவரு மாளியுடன் சிங்கமுண்டு
கொடூரமுள்ள காட்டானை கரடியுண்டு
அல்லலது யில்லாத யடவியப்பா
ஆஆஆ சித்தர்களு மறியாகாடு
புல்லறிவால் திருமூலர் முதற்பாட்டர்தான்
புகழான யடவிதனைக் கண்டார்காணே. 951

கண்டுமே யவ்வனத்தில் சித்துதாமும்
கருவான மலைதனிலே யாகஞ்செய்து
விண்டுமே யுலகபதி வாசைவிட்டு
வினையகற்றித் தவக்கியான மதியம்பூண்டு
தொண்டுமிக சித்தருக் கெல்லாமோதி
கொற்றவனே யடவிக்கு சென்றுதானும்

பண்டுளவு கிருஷ்ண பூபாலனுக்கு
பார்தனிலே உபதேசஞ் செய்தார்பாரே. 952

செய்துமே மேருகிரி யடவிதன்னில்
செப்பமுடன் தவக்கியான மருளுங்கொண்டு
பையவே உபதேச மிகவும்பூண்டு
பார்தனிலே கைதனையே யூன்றிக்கொண்டு
வையகங்கள் தான்புகழ சித்துதாமும்
வண்மையுடன் தவமிருக்கும் போதிலப்பா
வெய்யபுகழ் மார்க்கண்ட னவ்வனத்தை
விட்டகுறை யிருந்ததினாற் சென்றான்காணே 953

காணவே மார்க்கண்டன் றானுமய்யா
கடிதான காட்டகத்தே செல்லும்போது
ஊணவே யிருகரத்தால் பூமியூன்றி
யுத்தமனார் தானிருக்கும் தவசைக்கண்டு
பாணம்போல் மனந்துடித்துப் பாலன்றானும்
பயந்துமே நடுநடுங்கி யடிபணிந்து
ஆணவங்கள் தானொடுங்கி வையன்றன்னை
அபயமென்று தாள்பணிந்தார் மகிமைபாரே. 954

பார்த்துமே மார்க்கண்டன் பயந்தொடுங்கி
பாங்குடனே சித்துமார் ரிடியைக்கண்டு
ஆர்த்தலுடன் அபயமென்று சாஷ்டாங்கித்து
அப்பனே யென்தேவா யெந்தன்கோவே
சார்த்தகியாழ் வாரையல்லோ யானுங்கண்டேன்
சார்பான சித்தர்களைக் கண்டதில்லை
கார்ப்பதுதான் அபயமென்று மார்க்கண்டன்றான்
கவனமுடன் சித்துதமைக் கண்டார்தாமே 955

கண்டாரே மார்க்கண்டர் சித்துதம்மைக்
கைலாச நாதரவர் யிவர்தானேதான்
அண்டமுனி ராட்சதர்தான் வந்திட்டாரோ
அவனிதனில் தவயாகஞ் செய்வதற்கு
தொண்டுமிகச் செய்வதற்கு மனதிலெண்ணி
தோதமுடன் றன்மனதி லெண்ணங்கொண்டு
சண்டமா ருதம்போல மார்க்கண்டன்றான்
தசகோடி சூரியன்போ லெதிர்நின்றாரே. 956

எதிர்நின்ற மார்க்கண்டர் தம்மைநோக்கி
எழிலான சித்துமகா ரிடியார்தாமும்

கதிரவன்போல் பிரகாசத் தோடுசித்தர்
　　கார்த்து ரட்சிக்கவே மனதுவந்து
மதிபோன்ற மார்க்கண்டன் தம்மைநோக்கி
　　மன்னவனே நீபெற்ற வரந்தானென்ன
பதியைவிட்டுப் பதிவந்த தன்மையாலோ
　　பாலகனே விட்டகுறை வாங்கலாச்சே. 957

ஆச்சப்பா மார்க்கண்டா யுந்தமக்கு
　　அப்பனே நீடாழி யுலகுமட்டும்
மூச்சடங்கி நெடுங்கால மிருப்பதற்கு
　　மூதுலகில் வரமுனக்குத் தருவேனென்று
மாச்சலது நேராமல் மார்க்கண்டற்கு
　　மகதேவ ரானதொரு மூலர்பாட்டன்
வீச்சலுடன் ஞானோப தேசந்தன்னை
　　விருப்பமுடன் போதிக்க வழிகொண்டாரே. 958

வழியான படிமார்க்கம் மார்க்கண்டற்கு
　　மகாதேவர் திருமூலர் முதற்பாட்டன்றான்
பழிபடா தேகமது பாரிலப்பா
　　பான்மைபெற உந்தனுக்குத் தருவேன்யானும்
சுழிமுனையை உள்ளடக்குப் பதுமநாபா
　　சூட்சமென்ற சரீரத்தை அழியாமற்றான்
வழியோடே நெடுங்கால மிருக்கவென்று
　　மகதேவர் சித்துமுனி கூறுவாரே 959

கூறுவார் திருமூலர் பாட்டனப்பா
　　குசலமுடன் மார்க்கண்டன் றந்தமக்கு
மாறுதலை நீக்கியல்லோ கியானபோதம்
　　மன்னவற்கு யோதுகிறார் வளமையோடும்
தேறுதலாய் பதினாறு வாண்டுதானும்
　　தேகமது நிலைநிற்க வரமுங்கொண்டீர்
வேறுடலாய் தேகமது அழிவேயாகும்
　　விட்டகுறை நேராது வினவிப்பாரே 960

வினவியே பார்க்கயிலே மார்க்கண்டன்றான்
　　வினையமுட னாராய்ந்து பார்க்கும்போது
கனவுகண்ட பொருள்தானுங் கைக்குக்கிட்டாக்
　　கதைபோலே யாச்சுதல்லோ வரமும்பொய்யே
தினகரன்போல் சித்தரவர் சொன்னவாக்கு
　　தீர்க்கமுடன் மெய்யாகும் பொய்யேயில்லை

மனமுடனே நம்தமக்கு குறைநேரில்லை
மகாபதவி கிட்டுதற்கு நாளுமாச்சே 961

நாளாச்சு தென்றல்லோ மார்க்கண்டன்றான்
நயமுடனே மகிமைதனை அறிந்துகொண்டு
பாளான தேகமது வீண்போகாமல்
பாட்டனார் திருமூலர் தம்மைநோக்கி
தாளாண்மை பெற்றல்லோ கற்பங்கொண்டு
தகமையுடன் மாயாவின் பிரபஞ்சத்தை
மீளாத வாசைதனை வெறுத்தல்செய்து
விருப்பமுடன் பாட்டன்முன் சென்றார்காணே 962

காணவே திருமூலர் பாட்டரப்பா
காயாதி கற்பமதைத் தான்கொடுத்து
பூணவே மதியம்நிலை தானும்பூண்டு
புங்கசித்தி எட்டுடனே வழியுங்கூறி
ஆணவங்கள் தானொடுங்கி மார்க்கண்டன்றான்
அப்பனே சமாதிக்கு யேகலாகி
சினமது நேராமல் துய்யபாலன்
சிறப்புடனே சமாதிக்குட் செல்வார்பாரே 963

மார்க்கண்டன் சமாதிக்குப் போகும்போது மகுத்துவங்கூறல்

செல்லவே மார்க்கண்டன் சமாதிக்கே
செயலான சிஷவர்க்கம் கோடிமாண்பர்
நல்லவே சமாதிக்கு முன்னேநின்றார்
நாதாந்த மார்க்கண்டர் தம்மைநோக்கி
வெல்லவே சமாதிக்குள் ளடக்கமாகி
வேதாந்தத் தாயினது கிருபையாலே
அல்லலெனு மவனிதனை விட்டுநீங்கி
அப்பனே சமாதிமுகம் சென்றிட்டாரே 964

மார்க்கண்டர் அசரீரி பிறப்பது

இட்டதொரு சமாதிதனில் என்னவென்றால்
எழிலான வாக்கதுவு மென்னவென்றால்
பட்டமரம் துளுத்தாற்போல் வாக்குண்டாச்சு
பாருலகில் எல்லவரும் கேட்டார் தாமும்
அட்டதிசை தான்புகழ சொல்லலுற்றார்
அப்பனே யவனிதனி லொன்றுங்காணேன்
இட்டபடி தப்பாது எந்தனுக்கு
எழிலான நற்பதவி கிடைக்கலாச்சே 965

ஆச்சப்பா மாந்தர்களே யின்னஞ்சொல்வேன்
அவனியிலே மார்க்கண்டன் பெயரும்பெற்றேன்
மூச்சடங்கிப் போகின்ற காயத்துக்கு
மூதுலகி லெண்ணும்பதி னாறதாக
மாச்சலது நேராம லெக்காலந்தான்
மானிலத்தில் வரம்பெற்றேன் முற்பலத்தால்
ஏச்சல்லோ ஏச்சல்லோ எக்காலந்தான்
எழிலான தேகத்தைக் காணேன்பாரே 966

பாரேதான் திருமூலர் பாட்டன்றன்னால்
பாலகரே நெடுங்கால மிருப்பதற்கு
சீரேதான் காயகற்ப முண்டுமல்லோ
சிறப்புடனே தேகமது வழியாமற்றான்
நேரேதான் நாலுயுக மிருப்பதற்கு
நெடிதான வரமதுவும் யானும்பெற்றேன்
காரேதான் சமாதிமுகம் பூசைமாற்கம்
காசினியில் தலைமுறைக ளுள்ளமட்டே 967

மட்டான உங்களுக்கு ஞானோபதேசம்
மகிழ்வுடனே வசீரி வாக்காலாகும்
தீட்டமுட னென்னாளு முந்தமக்கு
தீர்க்கமுள்ள சமாதிக்கு இடமேகாட்டும்
அட்டசித்திக் கிடமாகும் அப்பாகேளும்
அவனியிலே கீர்த்தியுடன் பெயருண்டாகும்
கட்டமென்று பாராமல் புண்ணியோரே
காசினியில் நீங்களெல்லாஞ் சித்தாவீரே 968

சித்தான சித்தேயென்று செப்புவார்கள்
சீருலகில் யாவருமே மெச்சுவார்கள்
குத்தமில்லா தெல்லவருங் கண்டேயேங்கி
குசலமுடன் பதாம்புயத்தைப் போற்றிசெய்து
நித்தியமும் சித்திகொள்வார் நீதியோடும்
நீடாழி உலகமெலா முமைமதிக்கும்
சத்தியவான் என்றுசொல்லி தரணியெல்லாம்
தகமையுடன் என்னாளும் வாழ்த்துவாரே 969

அகஸ்தியர் புலஸ்தியருக்கு கர்மகாண்டங் கூறுவது

வாழ்த்தவே இன்னமொரு வயணங்கேளு
வளம்பெரிய புலத்தியனே வடிவுள்ளானே

நீழ்த்தவே குணக்குன்றே சிங்கவேறே
நீணிலத்தில் சித்தர்களின் கண்ணுள்ளானே
மூழ்கியே மூதுலகம் சாகரத்தால்
முசியாத தென்கோவே தேர்வேந்தேகேள்
மாழ்கியே நில்லாமல் மதிபோகாமல்
மன்னவனே கற்பம்போல் நின்றிடாயே 970

நிற்குகின்ற பரஞ்சுடரே நீதவானே
நிலையறிந்து நீட்சிகொள்ளும் மதியறிந்து
அற்பமென்ற வாழ்வதனை நம்பவேண்டாம்
அய்யனே விளக்கொளியே விண்ணின்மாரா
சொற்பெரிய வடகிரிக்கு மேற்கேயப்பா
சுந்தரனே இந்திரனே சொல்லுவேன்கேள்
புற்பதம்போல் யடவியொன் றுண்டேயப்பா
புகழான வசுவனியார் அடவிதானே 971

தானான அடவியது யாருதென்றால்
தகைமையுள்ள வசுவனியா ரடவியாகும்
கோனான யெனதையர் அடவியாகும்
கொற்றவனார் சமாதிபூண்ட அடவியாகும்
மானான நாதாக்கள் ரிடிகள் தாமும்
மானிலத்தில் காணாத அடவியாகும்
பானான சூரியனும் காணாநாடு
பார்மீதில் ராஜர்களும் காணாநாடே 972

நாடான அடவிதனில் சமாதிக்குள்ளே
நலம்பெரிய நாதாக்கள் வைத்தகாண்டம்
தாடான்மை உள்ளதொரு காண்டமப்பா
தண்மையுள்ள பனிரண்டு காண்டமாகும்
தேடாத பொருள்களெல்லா மதிலேதோயும்
தேற்றமுள்ள பனிரண்டு கர்மகாண்டம்
கோடான கோடிமனு கர்மகாண்டம்
கோரினா ரசுவனியைக் கோரினாரே 973

கோரியகோர் சாத்திரத்தைக் கொடுக்கவில்லை
கொற்றவனார் யெனதைய ரசுவனியாந்தேவர்
மீறியே கேட்டவற்கு நூல்கொடாமல்
மிக்கவே சமாதிமுகம் வைத்தாரல்லோ
தேறியே யவர் தமக்கு நெடுங்காலந்தான்
தேற்றமுடன் தொண்டுசெய்து நூலைப்பெற்றேன்
வீறியதோர் நூலதனை உந்தமக்கு

விருப்பமுடன் உபதேசஞ் செய்குவேனே 974

செய்யவே கர்மகாண்டம் பன்னீராயிரந்தான்
செயலான பாக்கியமு மிதிலேதோயும்
செய்யபுகழ் முப்பிறப்பில் நேர்ந்ததோஷம்
விட்டகுறை நேர்ந்ததொரு தன்மையாவும்
துய்யநல்ல தேகத்தின் பிணியின்கூறும்
துப்புரவாய் முன்செய்த கர்மதோஷம்
பையவே யானுரைப்பேன் பாலாகேளாய்
பாருலகில் நாதாக்கள் கூறாரன்றே 975

கூரான கர்மகாண்டம் போலேயப்பா
குவலயத்தில் நடப்பதுவே நீதியாகும்
சேரநாடு மங்கையரின் தோஷந்தன்னால்
செனிக்குமே முகற்கரும மொன்றேயாகும்
பாரான பிதாவின்றன் மனநோவாலே
லபிக்கும் இரண்டாவது கருமமப்பா
ஆரான மாதாவின் வயிறெரிந்தால்
அப்பனே மூன்றாந்தன் கருமமாமே 976

கருமமாம் மைந்தருக்கு வஞ்சனித்தால்
காசினியில் வெகுபாவம் வினையேகாட்டும்
தருமமது தான்தவிர்த்து யீயவொட்டா
தாரணியில் நாலாந்தன் கருமமாகும்
மருமமது தெரியாமல் சினேகன்றன்னை
மானிலத்தில் வஞ்சனித்தால் கருமமாகும்
பெருமையுடன சினேகிதன்றன் சகாயந்தன்னை
பேருலகில் மறந்தவனுங் கருமிதானே 977

தானாக வன்னமிட்ட புண்ணியோற்கு
தகைமையுடன் அன்னமிட்டால் கருமமெய்தும்
கோனான குருநிந்தை செய்தபேற்கும்
குவலயத்தில் வேந்தர்தமை வஞ்சித்தோர்க்கும்
மானான மனுநீதி வான்கள் தம்மை
மதிப்புற்று நிந்தைமிகச் சொன்னோருக்கும்
பானான பரஞ்சுடரின் கிருபையில்லை
பாலகனே கருமமிது செய்யும்பாரே 978

பாரேதான் புலஸ்தியனே புண்ணியவானே
பார்தனிலே சிசுவதை செய்தபேர்க்கும்
வாரான நாலாந்தன் கருமமாகும்

வாரான நாலாந்தன் கருமமாகும்
        நலம்பெறவே அஞ்சென்று செப்பலாகும்
சூரான தேவதா கோஷ்டிதன்னை
        குசலமுடன் அவகேடு செய்தபேர்க்கு
சீரான நேத்திரமும் தானழிந்து
        சீர்குலைந்து பயித்தியநோய் செனிக்கும்பாரே. 979

செனிக்கவே பாரிலுள்ள மங்கையற்கு
        செவிக்கினிய வார்த்தையது மிகவேகூறி
கனிபோன்ற மங்கையரை மோசஞ்செய்தல்
        கருமக்துக் காறான கருமமாகும்
தனியான பெரியோர்கள் தவசிமார்கள்
        தாரணியில் நாதாக்கள் கூட்டந்தன்னை
தொனியான வாய்மொழியால் துவேஷங்கூறில்
        தோராத கருமமது பலிக்கும்பாரே. 980

பலிக்குமே ராஜாதி துரோகத்தோற்கும்
        பட்சமுடன் நயங்கூறி வஞ்சித்தோற்கும்
கலியான மிடிவந்து தமைக்கெடுத்து
        காசினியில் குஷ்டரோகி யாவார்பாரு
ஒலியதுவும் பாராமல் உலகுதன்னில்
        உத்தமனே குருடனென்ற பெயர்வகித்து
புலிபோன்ற காலனுக்கு வாளனாகி
        புவிதனிலே எட்டுக்குள் சாவான்றானே. 981

உள்ளான கருமத்துக் காளுமாவான்
        உத்தமனே சகோதரந் தனைவஞ்சித்து
கள்ளமன துடன்பெரியோர் தேடிவைத்த
        கனமான திரவியத்தை அடைந்தபேற்கும்
கொள்ளைநோய் தானமைந்து குவலயத்தில்
        குட்டமுடன் இடிவிழுந்து ரோகனாகி
மெள்ளவே வொன்பதாந்தன் கருமத்துக்கு
        மேதினியில் ஆளாவா னுண்மையாமே 982

உண்மையாம் சுற்றத்தார் உறவின்மார்
        உகமையுடன் கண்டறிந்து மனங்காணாமல்
வன்மையுடன் நயம்பேசி குறவுகூறி
        நடிப்புடனே புறமகற்றி பரிகாசித்தல்
வண்மையுள்ள பெருவயிறு கவுசைக்கட்டி
        மண்டலத்தில் சனிப்பதுவும் பத்தாங்கர்மம்

திண்மையுடன் ஜெகதீசர் பலதெய்வத்தை
தீர்க்கமுட னேசுவதை கர்மங்காணே 983

ஏசுவது பதினோறாங் கர்மமாகும்
எழிலான தேவதா திரவியங்கள்
காசுடைய தனமெலாங் கொள்ளைகொண்டோர்
கர்மத்துக் காளாவார் பனிரண்டுமாகும்
மாசுபடா புண்ணியனே அனேகமுண்டு
மானிலத்தில் கூறுவதற்கு நாவோயில்லை
மீசுரமாம் பனிரண்டு காண்டமாக
மேதினியில் சொல்லிவைத்த நூலுமாமே. 984

நூலான காண்டமது கர்மகாண்டம்
நுணுக்கமுடன் எனதைய ரசுவனியாந்தேவர்
மாலாக எந்தமக்கு கர்மகாண்டம்
மதிப்புடனே பாடிவைத்த பெருநூலாகும்
காலான நூலுக்குப் பெருநூலில்லை
கண்மணியே இந்நூல்தான் பெருநூலாகும்
பாலான நூலதுதான் கர்மகாண்டம்
பாடினார் அசுவனியாந் தேவர்காணே. 985

காணவே லோகத்து மாந்தருக்கு
கருத்துடனே சுகதுக்க மறிவதற்கும்
ஆணவங்கள் மிஞ்சியல்லோ கோபத்தாலே
அவரவற்கு நேருகின்ற புலப்பம்யாவும்
தோணவே யறிவதற்கு கர்மகாண்டம்
தோற்றமுடன் பாடிவைத்தார் கர்மகாண்டம்
நீணவே யுந்தமக்கு உபதேசித்தேன்
நீடாழி உலகுபதி உள்ளமட்டே. 986

அகஸ்தியர் புலஸ்தியருக்கு சித்தர்கள் மகிமை கூறல்

மட்டான புலஸ்தியனே மணிவல்லோனே
மானிலத்தில் சித்தர்களுக் குகந்தமாரா
திட்டமுட னிதுகால மெடுத்துரைத்த
தீர்க்கமுள்ள உபதேச மிருக்கட்டப்பா
பட்டம்போல் பேர்படை ·பதினெண்சித்தர்
பாரிலுள்ள மகிமைதனைக் கூறுவேன்யான்
அட்டதிசை தான்புகழ மகத்துவங்கள்
அப்பனே வரலாறாய் வகுப்பேன்பாரே. 987

வகுப்புடனே சிலசித்தர் நல்லோரப்பா
வளம்பெரிய மகுத்துவமோ கூறொண்ணாது
தொகுப்புடனே யவர்களது இதிகாசத்தை
துப்புரவாய் நொடிக்குள்ளே அறியலாகும்
பகுத்தறிய வவர்களது நடக்கைதன்னால்
பாரினிலே வெகுமாண்பர் காணமாட்டார்
மிகுப்புடனே விட்டகுறை இருந்தால்மட்டும்
மிக்கபுக ழாதினங் கிட்டும்பாரே. 988

பாரப்பா சிலசித்தர் மகிமைசொல்வேன்
பாலகனே புலஸ்தியர் பகரக்கேண்மோ
நேரப்பா தவமுறுதி காணவென்றால்
நெடுங்காலஞ் சென்றுமே காணமாட்டார்
ஆரப்பா வவருடைய மனதிருந்தால்
அப்பனே நொடிக்குள்ளே காணலாகும்
சீரப்பா நல்லோர்கள் பொல்லாருண்டு
சிறப்புடனே மனதுவந்தால் காணலாமே. 989

காணலாஞ் சிலசித்தர் மகிமையென்றால்
காசினியில் பித்தன்போல் திரிவார்பாரு
பூணவே யவர்மனதைக் காணமாட்டார்
புகழான உலகுதனில் பித்தனென்பார்
ஊணவே காரியமாம் பித்தர்தன்னை
உலகத்தில் யாரறியப் போறாரப்பா
மாணமரும் பித்தனென்ற சித்துதம்மை
மானிலத்தில் கண்டவனே புத்திவானே. 990

புத்தியுள்ள புலஸ்தியனே இன்னஞ்சொல்வேன்
புகழான சித்தர்களின் மகுத்துவங்கள்
சத்தியவான் போலிருப்பார் சிலதுசித்தர்
சட்டமுடன் அசாத்தியமாம் வார்த்தைகூறுவார்
நித்தியமும் திரிகால போசனங்கள்
நீதியுட னுண்டல்லோ யிழிவுகூறி
பத்தியுள்ள குருபோல பகட்டுசொல்வார்
பாரினிலே பண்பான சித்தர்தானே. 991

தானான சித்தர்களின் மகுத்துவங்கள்
சாற்றுகிறேன் புலஸ்தியனே தயவுள்ளானே

கோனான வரசன்போல் குருவர்க்கம்போல்
கொற்றவனே நாதாந்த சித்துபோலும்
தேனான மனோன்மணியைக் கண்டோன்போலும்
தேசொளிவின் சின்மயத்தைக் கடந்தோன்போலும்
பானான பரஞ்சுடரை யானேகண்டேன்
பார்தனிலே யார்கண்டா ரென்பார்காணே. 992

என்பாரே சிலசித்தர் இன்னஞ்சொல்வேன்
எழிலான பிரமலபி கடந்தோன்போலும்
தென்பாகப் புலித்தோலி னாசனங்கள்
தேகமதில் தானணிந்து ரிஷிகள்போலும்
அன்புடனே வாசார வார்த்தைகூறி
அஷ்டமா சித்திதனைக் கடந்தேனென்று
துன்பமது தானகற்றித் துறந்தோர்போலும்
துப்புரவாய் மகிமையது கூறுவாரே 993

கூறுவார் புலஸ்தியனே குணமுள்ளானே
குவலயத்தின் சித்தர்களின் மார்க்கங்கேளாய்
ஆறுதலங் கடந்ததொரு சித்தன்போலும்
அப்பனே மதுபான மருந்தார்போலும்
சீறுடைய கோபமது இல்லான்போலும்
சிதாபாசக் களையதனைப் பற்றினோன்போல்
வீறுதமி ழகத்தியன்போல் நாமங்கொண்டு
வித்தகனே யுனைமயக்கி யாட்கொள்வாரே. 994

கொள்ளவே வருவார்கள் கோடிசித்தர்
கொற்றவனே சித்தருட மார்க்கமெல்லாம்
விள்ளவே இன்னம்வெகு பாடுரைப்பேன்
விழியில்லான் சித்தன்போல் பசப்புகூறி
உள்ளபடி நெடுங்கால மிருந்தசித்தாய்
உத்தமனே உந்தனிட மிதவுகூறி
கள்ளமிலா மனதுடனே ஞானமோதி
கருத்திலா வஞ்சமிட்டுக் கொல்லுவாரே 995

கொல்லவே நயமுடனே இதிகாசங்கள்
கூறியே சன்மார்க்கன் போலவே தான்
மெல்லவே வேதைமுக மறிந்தோன்போலும்
வேதாந்தத் தத்துவங்கள் எழிலாய்க்கூறி

தொல்லுலகில் வாதமென்ன பெரிதாயென்று
தோராம லுந்தனிட வித்தைதன்னை
சொல்லவே முரைதானெப் படிதானென்று
தோற்றமுடன் தான்கேட்பார் திண்ணமாமே 996

திண்ணமாம் சிலசித்தர் வழியேதென்றால்
தீர்க்கமுடன் முறைபாடை யறிந்தானென்று
நண்ணமுடன் பாஷாணம் வைப்புதன்னை
நலமுடனே உயிர்தனையே மாய்க்கவென்று
பண்ணவே சத்துருவாம் பயனைப்போலும்
பட்சமுடன் கதைபேசி கறுவிக்கொண்டு
வண்ணமுடன் மித்திரரா இருப்பாரப்பா
வையகத்தில் சிலசித்தர் வழக்கம்பாரே 997

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பகருகிறேன் சித்தருட மார்க்கந்தன்னை
ஆரப்பா அறிவார்க ளவர்கள்போக்கு
அப்பனே புத்தியுள்ளான் அறிவான்பாரு
நேரப்பா கபடுண்டாய் இருப்பார்பாரு
நேர்மையுடன் வஞ்சகங்கள் மெத்தவுண்டு
கூரப்பா நல்லவர்போல் இருந்துகொண்டு
குடிகெடுப்பார் சித்தர்முனி யென்னலாமே 998

என்னவே முறைபாடு குணபாடெல்லாம்
எழிலுடனே தாமறிந்து கற்றவன்போல்
பன்னவே இதிகாச வார்த்தையோடு
பட்சமுடன் கூடிருந்து உறவுகொண்டு
துன்னவே யுந்தனிட நூல்களெல்லாம்
துறையோடே தான்பறித்து போவார்பாரு
உன்னிதமா யுந்தனுக்கு வையல்தந்து
உத்தமனே யேகுவதும் முண்மையாமே 999

அகஸ்தியர் புலஸ்தியருக்கு காண்டப்பெருமை கூறுவது

உண்மையாம் புலஸ்தியனே மச்சகேந்திரா
ஒகோகோ நாதாக்கள் மகிமையென்ன
திண்மையா யவரவர்கள் செய்தநூலில்
தீர்க்கமுள்ள நூலதுபோல் கோடாகோடி
வண்மையுடன் சாகரமாஞ் சொல்லொண்ணாது
வகுத்திட்டா ரவரவர்கள்மனம்போல்போக்கு

கண்மையாய் இந்நூலில் மறைப்பேயில்லை
கருவறிந்த புலஸ்தியனே கழறக்கேண்மோ 1000

கேட்கவே பந்நீரா யிரத்திலப்பா
கணமுடன் யாமுரைத்த வண்ணம்யாவும்
நீட்கமுடன் கூறுதற்கு நாவோயில்லை
நிஷ்களங்க மானதொரு பெருநூலப்பா
தாட்டிகமாய் இந்நூல்போ லொருநூலுந்தான்
தாரணியில் நாதாக்கள் கூறவில்லை
மீட்கவென்றால் ஞான சாகரத்தையெல்லாம்
மிக்கமனு நீதியுட னுரைப்பேன்பாரே 1001

உரைத்தேனே பெருநூலா மிந்நூல்தன்னில்
உத்தமனே தவத்துக்கு உறுதிசொன்னேன்
திரைகடலாஞ் சத்த சாகரமுமப்பா
தீர்க்கமுடன் இந்நூலி லடக்கமாகும்
புரையளவு நேராது புண்யபாலா
புங்கசித்தி எட்டதனைக் காணலாகும்
சுரைபடர்ந்த கொடியதுபோ லக்கோயில்லை
சூட்சாதி சூட்சமெல்லாங் காண்பாய்தானே 1002

தானான வசுவனியா ரெந்தன்தேவர்
தாரணியில் எந்தனுக்கு சொன்னநீதி
கோனான எனதையர் வாக்குபொய்க்காது
கொற்றவனே யானறிந்த மட்டுமேதான்
பானான பரஞ்சுடரை மனதிலெண்ணி
பாலித்தேன் உந்தமக்கு உபதேசங்கள்
தோனான மனோன்மணியாள் கிருபையாலும்
தேஜொளிவின் சின்மயத்தால் பாடினேனே. 1003

பாடினேன் நாலுயுக மாந்தருக்கும்
பரிவான சித்தர்முனி ரிடிகளுக்கும்
தேடியே உடல்பொருள்க ளாவியெல்லாம்
தேற்றமுடன் இந்நூலில் பதித்தேன்யானும்
வாடியே போகாமல் மனதுவந்து
வளமையுடன் கண்டறிந்து உளவாராய்ந்து
நீடியே நெடுங்காலம் சமாதிதன்னில்
நீட்சியுடன் இந்நூலை பதனம்பண்ணே. 1004

பண்ணியே கருமிகெட்டும் பாவிகட்டும்
பார்தனிலே நூலீய்ந்தால் பாவமெய்தும்

நண்ணியே நற்குணத்தோர் சான்றோருக்கு
நலமான நூல்கொடுத்தால் புண்யமாகும்
எண்ணியே சமாதிமுகம் வைத்துப்போற்றி
எழிலான வஞ்சலிகள் மிகவேசெய்து
மண்ணதனில் நெடுங்கால மிருந்துமேதான்
மனோன்மணியாள் பதாம்புயத்தை போற்றல்நன்றே
1005

அகஸ்தியர் காவியம் பன்னீராயிரம்

இரண்டாவது காண்டம்

முற்றிற்று.

உ

அகஸ்திய மகாமுனிவர் அருளிய

12000

என்னும் பெருநூல் காவியம்

இரண்டாம் காண்டத்தில்....

அகஸ்திய மகாமுனிவர் தமது பெருநூல் காவியமாகிய இந்த நூலின் இரண்டாவது காண்டத்தில் பல அற்புதமான விஷயங்களைக் கூறியிருக்கிறார்.

இரண்டான காண்டமது யின்னூலுக்குள்
எழிலான பஞ்சபூத மிதிலடக்கம்
திரண்டதொரு காவியந்தானி ரண்டுக்குள்ளே
திரளான தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
முரண்டதொரு சத்துருக்கள் மையின்மார்க்கம்
மூதுலகில் நாதாக்கள் மறைப்புமார்க்கம்
விரண்டதொரு செந்தூர பற்பமார்க்கம்
விருப்பமுடன் பாடிவைத்த பெருநூலாமே

என்று அகத்தியர் பெருமான் இரண்டாவது கண்டத்தைப் பற்றிக் கூறுகிறார்.

இதில் மனோன்மணி தியானம், மயேஸ்வரர் பூஜை முதலான ஞானமடைவதற்குக் கற்றுணர வேண்டிய நூல்களைப் பற்றி 44வது பாடலில் கூறுகிறார், 51வது பாடல் முதல் ஒரு அற்புதமான எளிய காயகற்ப முறையைக் கூறுகிறார்.

ஒரு சேர் செங்கடுக்காயை ஒருசேர் பாதரசத்தில் உடைத்துப் போட்டு மலைத் தேனில் ஊறவைத்துப் பூமிப்புடமாக பூமிக்குள் புதைத்து வைத்து மூன்று மண்டல காலம் 144 நாள் சென்று எடுத்துப் பார்த்தால், கடுக்காயும் சூதமும் சேர்ந்து மெழுகு ஆகியிருக்கும். இதை உட்கொள்ள நரை திரை மாறி உடல் கல்தூண் போலாகிவிடும் என்கிறார்.

இப்படி ஓர் அற்புதமான காயகற்ப. மருந்தை வேறு யாரும் கூறவில்லை.

பிராணாயாமம், யோகநிலை, தவநிலைகளைப் பற்றி 73வது பாடல் முதல் கூறிவரும் அகத்திய மாமுனிவர்.

அன்றான சிவராசவேடம் பூண்டு
அப்பனே காவி காஷாயம் பூண்டு
குன்றான மலைமீதில் சென்றேனென்றும்
கோடானகோடி தவம் செய்தேனென்றும்
வென்றான பவக்கடலைக் கடந்தேனென்றும்
விருப்பமற சமுசாரம் மற்றேனென்றும்
சென்றுமே காட்டகத்தின் நிலையில் நின்று
சேர்த்தாரே கோடிபொருள் வயிற்றுக்காமே.

வயிற்றுப் பிழைப்புக்காக காஷாய வேடம் போடும் வேஷதாரிகளுக்கு நல்ல கதி கிடைக்குமா? ஒருக்காலும் கிடைக்காது. ஆனால் இவர்களிடம் மதிமயங்கி, பொருள்களைப் பறி கொடுத்து ஏமாந்து போகும் இல்லறத்தார்களுக்காகப் பரிதாபப்படுகிறார். போலி வேடதாரிகளை நம்பாதீர்கள் என்று மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறார்.

90வது பாடல் முதல் அஷ்ட கர்மத்தைப் பற்றிக் கூறத் தொடங்கிய அகத்தியர் பெருமான் வசியம் ஒன்றைப் பற்றி மட்டுமே கூறுகிறார். ஆசன விதி, காவி காஷாயம் உடுத்துபவர்க்கான நெறிமுறைகள். காசி யாத்திரை செல்வதற்கான விதிமுறைகள். சங்கமர்களாக- ஆண்டி பரதேசிகளாக வாழ்வோர் அனுஷ்டிக்க வேண்டிய விதிமுறைகள் இப்படி ஒழுக்க நெறிகளைப் பற்றி விரிவாகக் கூறியபின்

224வதுபாடல் முதல் பொதிகை மலையின் அதிசயத்தைக் கூறத் தொடங்குகிறார். ஒரு பிணத்தை மலையின் மேல் தூக்கிக் கொண்டு போனால் அங்குள்ள சித்தர்கள் உயிரூட்டும் மூலிகைகளால் அதைப் பிழைக்க வைத்து அனுப்பி விடுவார்கள் என்கிறார். கருநெல்லி போன்ற கற்ப மூலிகைகள் அநேகம் அம்மலைமேல் இருப்பதகக் கூறுகிறார்.

மலையின் அடிவாரத்தில் சுப்பிரமணியர் கோயில் இருப்பதாகவும் கோயில் வாசலில் மகிடாவிசூரனும் மேற்குத் திசையில் பத்மாதி சூரனும் வடதிசையில் வடபத்திரகாளியும் தென் திசையில் மாரனும் காவல் இருக்கிறார்கள் என்கிறார்.

கோபுர வாசலில் செப்பேடுகள் பதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் வரலாறுகள் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. அங்கு ஞானமிர்தத் தடாகத்தில் மூழ்கி எழுவதற்காக சித்தர்கள் போய்க்கொண்டும் வந்து கொண்டுமிருப்பார்கள். ஆனால் எல்லோருக்கும் அவர்களுடைய

தரிசனம் கிடைக்காது. பூர்வ ஜென்ம புண்ணிய பலன் உள்ளவர்களுக்குத் தான் தரிசன பாக்கியம் கிடைக்கும் என்று கூறுகிறார்.

அகஸ்தியர் மலையில் தட்சிணாமூர்த்தி திருமந்திர நூலைக் கண்டு புலஸ்தியர் அதிசயிக்கிறார். (தட்சிணா மூர்த்தி மெய்ஞானம் திருமந்திரம் 1500-தாமரை வெளியீடு கிடைக்கும்) அந்த நூலின் பெருமையை அகஸ்திய முனிவர் கூறுகிறார்.

249வது பாடல் முதல் புசுண்ட மகாமுனிவர் உட்கொண்ட ஆனந்த கற்பத்தைப் பற்றி அகஸ்தியர் கூறுகிறார்.

கோரக்கர் மூலி, தும்பல் பூண்டு, நிழல் வணங்கி, தொட்டால் சிணுங்கி, தும்பை, சிறியா நங்கை, திகைப்பூடு, மலைதாங்கி, மலை வேம்பு. நிலவேம்பு, கருவேம்பு, நல்வேம்பு, இருவகைக் கோரைகள், இருவகை கௌதாரிப் பூண்டு, இருவகை தும்பைப் பூண்டு, இருவகை விளா, இருவகைப் பசளை, இருவகை முருங்கை, மூவகை வேலி, இருவகைச் சாரை, இருவகைச் சூரை, ஐந்து வகை மணி, காளி இரண்டு, கண்ணி ஐந்து,நங்கை மூன்று, ஆவாரை ஐந்து, ஊமத்தை மூன்று வகை, கிலுப்பை இரண்டு வகை, வந்தி, கரத்தை, அலரி இரண்டு வகைகள், அகத்தி ஐந்து வகை, நந்தி இரண்டு வகை, வேளை நான்கு வகை,

கள்ளி எட்டு வகை, முள்ளி நாலு வகை, கூந்தல் மூன்று வகை, தாழை மூன்று வகை, தகரை இரண்டு வகை, தாமரை ஐந்து வகை, தொட்டி இரண்டு வகை, மல்லி பத்து வகை இவற்றையெல்லாம் சூரிய வெப்பத்தில் காயப்போட்டு, கல்லுரவில் இடித்துச் சூரணம் செய்து கொண்டு.

சுக்கு	ஒருபலம்	மிளகு	இரண்டுபலம்
விளங்கம்	,,		
மூலம்	,,		
அரத்தை	,,		
ரோசனை	,,		

பூமி சர்க்கரைக் கிழங்கு, பரங்கிப்பட்டை, லவங்கம், லவங்கப்பட்டை, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, குரோசானி ஓமம், வால்மிளகு, ஓமம், வசம்பு, மிளகுதாளி, கச்சோலம், அதிவிடையம், தான்றிக்காய், நெல்லிக்காய், கொடிவேலி, கடுக்காய்ப்பூ, வால்மிளகு, ஏலம், நஞ்சீரகம், காட்டுச் சீரகம், தேசாவரம். தக்கோலம், பேரறத்தை

மாசிக்காய் இந்தச் சரக்கெல்லாம் வகைக்கு கால் பலம் வீதம் எடுத்துக் கொண்டு எல்லாவற்றையும் நெருப்பில் வாட்டிச் சூரணம் செய்து கொள்ளவும்.

இரண்டு வகைச் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து கோரக்கர் மூலிகையைக் கியாழம் செய்து அதனுடன் பசும்பால் சேர்த்துக் கொதிக்க வைத்து சூரணங்களைக் கூட்டி சூரணத்துக்கு இரு மடங்கு சர்க்கரை சேர்த்துப் பாகு பதம் வரும்போது பசுவின் நெய்யும் தேனும் சேர்த்து மெழுகு பதமாகக் கிண்டி, ஒரு பலம் குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம் மூன்று சரக்கும் வகைக்குக் கால்பலம் சேர்த்துத் தாளியை இறக்கி வைத்து கணபதிக்கும் மனோன்மணிக்கும் பூஜை செய்து களஞ்சி அளவு வீதம் உட்கொள்ளக் கூற்றனுக்கு இடமில்லாமற் போகிறது என்கிறார்.

பாடல் எண் 285 முதல் தென் பொதிகையில் காணப்படும் அதிசயங்களைப் பற்றி மேலும் கூறும் அகத்தியர் பெருமானார் அங்குள்ள சூதக்கிணறு பற்றியும் அதன் வேதையாக்கும் தன்மையால் பொன் அம்பரால் வெள்ளி, செம்பு முதலிய உலோகங்கள் பொன் ஆவதையும் கூறுகிறார்.

301 மிருதார் சிங்கியைக் கட்டு ஆகச்செய்வது, ஆறு வகைச் செயநீர்கள் தயாரிப்பது, சிங்கியை ஆறு வகை செயநீரால் அரைத்துப் பத்து முறை கோழிப்புடம் போடப் பற்பமாகும் என்றும் செம்பை உருக்கும்போது இந்தப் பற்பத்தை கிராசம் கொடுக்க சிங்கி பொன்னாகும் என்றும் கூறுகிறார்.

309 கெந்தகத்தைச் செம்பு செய்து அந்தச் செம்பினுள் செய்யப்பட்ட குவளையில் சூதத்தை வைத்து உருக்க மணியாகும். அந்தச் சூதமணியைச் செந்தூரம் செய்து மற்ற உலோகங்களுடன் கொடுக்க அவை தங்கமாகும் என்கிறார்.

332 தாமிரச் செந்தூரத்தால் உண்டாகும் வேதை கூறப் படுகிறது.

341 முதல் 349 வரை ஆறாதார திராவகம் செய்யும் முறை கூறப்படுகிறது.

371 முதல் 375 வரை அக்காலத்தில் வழக்கிலிருந்த பல வகைப் போர்க் கருவிகளைப் பற்றி விவரமாகக் கூறுவது வியப்பூட்டும் செய்தி. அப்படிப்பட்ட ஆயுதங்களை இக்காலத்தில் கண்காட்சிகளில் கூடப்

பார்க்க முடியாது எனலாம்.

384 வது பாடல் சட்டைமுனி கற்பம் பற்றிக் கூறுகிறார்.

398 பாடல் முதல் திருமந்திரம் பற்றி கூறும் அகத்தியர் பெருமான்-

ஒண்ணாது திருமந்திர மறியவென்றால்
உத்தமனே தேகநிலை அறியவேண்டும்
வண்ணமுடன் காயாதி கொள்ளவேண்டும்
வளமான மூப்புதிரை அகற்றவேண்டும்
எண்ணரிய நற்பொருளை அறியவேண்டும்
ஏகாந்த உட்பொருளைக் காணவேண்டும்
திண்ணமுடன் சிதாபாசங்களை அறுத்து
சிக்கறுத்து வேரறுத்துத் தெளிவில் நில்லே - *411*

என்று கூறுகிறார்.

மேலும் தென்பொதிகை மலையில் ஓர் நாள் மூலி, இரண்டு நாள் மூலி, வார மூலி, பட்ச மூலி, திங்கள் மூலி, இரண்டு திங்கள் மூலி, ஆறு திங்கள் மூலி, ஒராண்டு மூலி, ஈராண்டு மூலி என்று நூறாண்டு மூலி வரை இருப்பதாகவும் அவற்றைத் தின்பவர்களுக்கு மூலியில், குறிப்பிடும் காலம் வரை பசி இராதெனவும் சித்தர்கள் இந்த மூலிகைகளை உண்டு பசி, தூக்கம், ஆயாசம் இன்றி ஆண்டுகள் கணக்காகத் தவம் செய்யவும் சமாதி நிலையில் இருக்கவும் வலுப் பெற்றனர் என்றும் கூறுகிறார்.

520 தென்பொதிகை மலையின் வடபாகத்தில் மலைஓரத்தில் ஒரு குத்துக்கல் கண்டதாகவும் அதுபடிகம்போல் பிரகாசம் உடையதாக இருக்கக் கண்டு பிரமித்தாகவும் கூறுகிறார். அங்கிருந்த முனிவர் மலைமேல் வைரம் எடுக்கும் முறை பற்றிக் கூறுகிறார்.

526 மலைப் பாறைகளிலேயே உயர்ந்த ரத்தினங்கள் விளைகின்றன. ஆனால் அவை லபிதம் உள்ளவர்களின் கண்களுக்கு மட்டும் தான் தெரியும். ஒரு பாறையின் மேல் ரத்தினக்கல் இருப்பதாகத் தெரிந்தால் அந்த இடத்தைக் குறித்துக் கொள்ள வேண்டும். நல்ல குதிரை ஒன்று தயார் செய்து கொண்டு அவ்விடத்துக்குச் செல்ல வேண்டும். பாறையின் மேல் ஐங்கோலத் தைலத்தைத் தடவிவிட்டு குதிரை மேல் ஏறி வெகு தூரம் போய்விட வேண்டும். பாறை காரம் ஏறி வெடிக்கும்.எப்படி வெடிக்கும்?

அகஸ்தியர் கூறுகிறார்,

529. செல்லவே அசுவது போகுமுன்னே
செயலான பாறையது காரமேறி
வெல்லவே அண்டரண்டந் தத்தளிக்க
வேதாந்தத் தாயின்மனம் திடுக்கிட்டேங்க
புல்லவே பாறையது சத்தத்தோடு
பூவுலகம் அதிர்ந்திடவே புகைகொண்டேறி
கல்லதுவும் தான்தெறித்துக் காதமப்பா
கடுகளவு மாண்பர்களைக் கொல்லும்பாரே

என்று கூறுகிறார்.

வெடித்துச்சிதறுகிற பாறையில் கடுகளவு பாறை கூட (துப்பாக்கிக் குண்டு போல் மனிதர் உடலில் பாய்ந்து) கொன்று விடுமாம்.

530 பாறை வெடித்து அடங்கிய பின் சற்றுநேரத்திற்குப் பிறகு நீ அங்கே சென்றால் உடைந்து சிதறிக்கிடக்கும் பாறைக் கற்களின் இடையே வைரக் கற்களையும் காண்பாய். அதைப் பார்த்தாலே உன் துன்பங்கள் பறந்து போய் விடும் என்கிறார்.

531 பாறைகளுக்குள் விளையும் வைரங்களின் பிரகாசத்தைச் சொல்ல முடியாது. இந்த வைரங்களை சாதாரண மனிதர்கள் பார்த்ததில்லை. போகரிஷி பார்த்திருக்கிறார் என்று கூறுகிறார்.

541 புலஸ்தியர் தமது குருவான அகஸ்திய முனிவரைப் பார்த்து மண்ணிலுள்ள திரவியங்களைச் சொன்னீர்கள்: அதுபோதும் இனி எனக்கு சரிதை கிரிகை யோகமார்க்கத்தையும் காயகற்ப மார்க்கத்தையும், ஞானம் என்ற பொருளை அடையும் மார்க்கத்தையும் மோட்சம் என்ற மேலான வீடு காண்பதற்கு வழியையும் உபதேசம் செய்வீர்களாக என்று கேட்கிறார்.

551 சிவசுப்பிரமணியர் உபதேசித்த சுத்த ஞானத்தை மனதுவந்து உபதேசிக்க வேண்டும்.

552 அப்படித் தாங்கள் உபதேசித்தால் நானும் சூரிய சந்திரர்கள் உள்ளவரை நன்றி மறவாதவனாய் இருப்பேன். பூலோகமே தலை கீழாக மாறி விட்டாலும், அரசர்கள் செங்கோல் முறை தவறினாலும் நான் மாறமாட்டேன். இது பாதி மதியணிந்த அரன்மேல் ஆணை. ஆகாசவாணியாம் மனோன்மணியாள் மேல் ஆணை. இந்த பூலோகமே

அழிந்து போனாலும், பாற்படல் தலை கீழாகக் கவிழ்ந்தாலும், நான் நன்றி மறவேன். இது வடிவேலை உடைய முருகன்மேல் ஆணை. சித்தர்கள் பதினெண்மர்மேல் ஆணை. நவகோடி ரிஷிகள் மேல் ஆணை. கல்லால மரத்தின் கீழ் வீற்றிருக்கும் கணபதியின் மேல் ஆணை. ஆதிசேடன் மேல் ஆணை. அவன் மேல் துயிலும் ஆதிநாராயணன் மேல் ஆணை. எனக்கு ஞானப் பாலாமுர்தம் தந்து கடைத்தேற்றுங்கள் என்று விண்ணப்பம் செய்கிறார் புலஸ்தியர்.

556 அகஸ்தியர் மனமகிழ்ந்து ஞான சாகரத்தை அளிப்பதாகக் கூறுகிறார். சம்சார சாகரத்தைக் கடந்து கட்டுக்களை அறுத்தெறிந்து விட்டு, மனதில் கவலை இல்லாதவனாக, பவக் கடலைத் தாண்டி, மனைவி மக்கள் சுற்றம் என்ற பாசங்களையும் அதனால் ஏற்படும் துன்பங்களையும் கடந்து மனதில் இன்ப நிலை கண்டவனாய்.

558 சமாதி நிலையை அறியவேண்டும்.வீண் புரளிகளில் ஈடுபடக் கூடாது. கர்ம வித்தைகளை விலக்க வேண்டும். தன் மனதை அறிய வேண்டும். உலக ஆசைகள் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்பவற்றை விலக்கி மவுன நிலை காண வேண்டும்.

560 குரு அளிக்கும் ஞானப்பாலே உண்மையான பானமாகும். அதுவே மனோன்மணியாள் பானம். பராபரத்தின் பானம். அது பூலோகத்தில் கோடியில் ஒருவனுக்குத்தான் கிட்டும்.

561 ஆனால் பானத்தை அடைந்தோம் என்றும் உண்மையான தொண்டரென்றும் முனிவரென்று சித்துரிஷியென்றும் வேஷம் போட்டுக் கெண்டு திரிபவர்கள் உண்டு. இவர்கள் சிற்றின்ப ஆசையால் பிள்ளை குட்டிகளைப் பெற்று உலகத்தின் ஜனத்தொகையையே அதிகமாக்கி விட்டார்கள்.

571 கர்மேந்திரியங்களைக் கட்டுப் படுத்தி மவுனநிலை கொண்டு ஆக்கினேய நிலையிலிருந்து கலைகள் மாறி சமாதி நிலை காணவே முயல வேண்டும்.

572 ஆக்கினேயம் தோன்றும்போது மூலட்டானத்தை நோக்கி விசுத்தியிலே இருந்து அனாகதத்தை மேலே பூட்டி கும்பகத்தின் வழி காணும் போது ரேசக பூரகமும் சிவந்த கண்களையுடைய திருமாலின் உருவமும் தோன்றும்.

573 மனக் கண்களுக்கு சுடரொளி தோன்றும். வாசி மேல் நோக்கி ஓடாது. மண்ணாலான சரீரம் சமாதிக்கு இடம் காட்டும். சமாதி

பூண்டால் உடல் கல்தூண் போல் ஆகும். இவ்வாறு யோக நெறியில் செல்லும் காலத்தில் உலகத்தின் மகிமையெல்லாம் தெரியும்.

577 யோக மார்க்கத்தில் செல்லும்போது சூது பொய் கொலை களவு வஞ்சனைகள் யாவும் நீக்க வேண்டும். யோக நிலையில் வாசியை நிறுத்தி உச்சிநிலை கரத்தை ஊன்றி நேர்மையுடன் பூமிக்குக் கீழ் மேலாக சூத்திரமாம் வாசி பூட்டி அங்கென்று நீட்டும்போது கபாடவாசல் திறக்கும். அதன் வழியிலே ஓம் காரம் தோயும், ஓம் கார சப்தத்திலே சிகாரம் மிகவும் மிஞ்சி ரீங்காரம் அதில் பாய்ந்து சுவாசத்தில் தீப் பொறி பறக்கும்.

580 சின்மயத்தின் ஒளியைக் கண்டு விட்டால் பிராணாயம் முழுமையடைந்ததாகும். ஆறுதலங்களிலும் பிராணன் நடப்பதைக் காண முடியும். பஞ்ச பூதங்களின் ஒழுக்கத்தால் உன் மனதுக்குள்ளேயே நீ காசி என்ற க்ஷேத்திரத்தைக் காண முடியும்.

583 மனம் புத்தி சித்தா காசம் என்ற போத வழியிலே சித்தர்கள் நாதப் பாலை உண்டார்கள். பஞ்சகர்த்தாக்கள் ஆடுகின்ற கூத்தெல்லாம் சிவத்துள் ஒடுக்கம் என்பதைக் கண்டார்கள்.

584 நந்திதேவர் முதலான பலர் இந்நிலையைக் கண்டார்கள். ஆனால் உண்மையான சமாதி நிலையை அடைய முடியாமல் பொறி கலங்கி வாசியோகம் முற்றுப் பெறாது பொறி வெடித்துப் புலம்பியவர்களும் அநேகம்பேர்.

593 லபிதம் உடையவர்களுக்குத்தான் வாசி கிட்டும் அது உனக்கும் கிடைக்கும் என்று அகஸ்திய முனிவர் கூறுகிறார்.

598 அடுத்த படியாக சிதம்பர சக்கரத்தையும் அதில் அட்சரங்களை மாறல் செய்யும் முறையையும் விளக்குகிறார்.

603 பிரணவத்தின் மகிமையால் அட்டமாசித்துகளும் பெறலாம். நிஷ்டையில் சூழ்ந்திருக்கும் சமயத்தில் காளியைக் காணவும் முடியும். சித்தர்கள் முனிவர்கள் ரிஷிகள் எல்லோரும் அட்சரங்களாகிய உயிரின் துணையால் சமாதியிலிருந்து, தவம் யாகம் செய்து எல்லையற்ற பரவெளியாகிய கேசரத்தில் நிற்கும் வாய்ப்பைப் பெற்றார்கள்.

607 சடாட்சரத்தை ஓதிய தன்மையால் ரெளவும் நெளவும் சேர்ந்தால் டாகினி வசியமாவாள். கிலியும் மலியும் கூடினால் சித்தர்கள் வசியமாவார்கள். இலியும் கிலியும் கூடினால் சகல மாந்தர்களும்

வசியமாவார்கள். அட்சரத்தை உச்சாடிப்பதால் சகல முனிகளும் வசியமாகும்.

608 சித்தர்கள் தம்மிடம் வந்தால் அவர்களை எப்படி உபசரிக்க வேண்டும் என்பதைச் சில பாடல்களில் கூறி வரும் அகஸ்திய மாமுனிவர் உடலை அழியாது காப்பாற்றக் கூடியதும் உயர்ந்தவர்களான நாதாக்கள் உண்ணுவதுமான ஆனந்த கற்பத்தைக் கூறுகிறார்.

616 கோரக்கர் மூலி, கருஞ்சாரை, சூரியனார் காந்தி, கரு நாபி, பூவந்தி, பஞ்சாங்க மூலி சமூலம், பொன் ஊமத்தை, பொன் ஆவாரை, கொடி வேலி, மருதோன்றி, இவையெல்லாம் வகைக்குப் பத்துப்பலம்.

618 செஞ்சோறா, உருவி இரண்டும், காஞ்சோறி, முருங்கை, புரசை, கரிசலாங்கண்ணி, முள்ளி, அழுகண்ணி எழுத்தாணிப் பூண்டு, செந்தொட்டி, கருந்துளசி, கொடி வேலி, கருவேலி, கவிழ்தும்பை, செந்தும்பை, கருநொச்சி, சிற்றாமுட்டி, செங்கழுநீர், கருவிளா, வில்வம், சித்திரமூலி, பாலாடை, நீர்மேல் நெருப்பு, நீர்ப்பூலா, செவ்வள்ளி, முசுமுசுக்கை, கலப்பை.

செங்கழுநீர், வரமுள்ளி, விராலி, துத்தி, எட்டி, கோரை, அல்லி, செவ்வல்லி, தாமரை, கொல்லி மலையிலிருக்கும் பசளை, பல்லிப் பூண்டு,சகுனி, ஆமணக்கு, சிறுமல்லி, கடம்பை, திகைப் பூண்டு, மலைமேற் படர்ந்திருக்கும் கும்பமூலி, அண்ணெரிந்தான் பூண்டு, மலைதாங்கி, தழுதாழை, தக்காளி இந்த வகை மூலிகைகள் எல்லாம் வகைக்குப் பத்துப் பலம் எடுத்துச் சேர்த்து இடித்து பிழிந்து ரசம் வாங்கி ஒரு கலயத்தில் எடுத்துக் கொண்டு.

626 கருஞ்சீரகம், அதிமதுரம், ஏலம், கிராம்பு, வசுவாசி, கார்போகம், செவ்வியம், ஓமம், சாதிக்காய், குரோசானி ஓமம், நற்சீரம், வால்மிளகு, சாதிபத்திரி, சிறுநாகம், மிளகு, சுக்கு, திப்பிலி, தான்றி, நெல்லி, கடுக்காய், மாசிக்காய், கிராம்பு, கருவாப்பட்டை, தக்கோலம், முத்தம், கோஷ்டம், பரங்கி, கசகசா, குங்குமம், வாலுளுவை, இம்புரா, உச்சி, துளசி விதை, சூரை விதை, செவ்வாலின் வித்து, அத்திவித்து, வாய் விளங்கம், ஓமம், தாளிசம், கருந்துளசி வித்து, நாய்க் கடுகு, தேசாவரம், கொத்துமல்லி, சாரம் வித்து, குட்டி மாதுளையின் வித்து, ஆதண்டை வித்து, கருங்காலி வித்து, சாரை வித்து, சோனை வித்து, பூசணி விதை, முள்ளி வித்து, கக்கரி வித்து, சுண்டை வித்து, ஊமத்தங்காய் வித்து, திராட்சம் வித்து, கடம்ப வித்து, காட்டுமிதி

பாகல் வித்து, நறு வெளியான் வித்து, தாமரை வித்து.

634 வெள்ளைக் குன்றி வித்து, சண்பகத்தின் வித்து, முந்திரிகை வித்து, பாவட்டை வித்து, நீர் முள்ளி வித்த, பலா மரத்தின் வித்து, மிளகரணை வித்து, பாற் சோறா வித்து இவையாவும் வகைக்கு ஒருபலம் விதம் எடுத்து வறுத்துப் பொடித்துச் சூரணம் செய்து முன் சொன்ன சாற்றில் கலந்து

635 சூரணத்தைப் போல் இருமடங்கு சீனி சேர்த்து அடுப்பேற்றிப் பசுவின் பாலும் நெய்யும் கலந்து கிண்டி மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

637 அதனுடன் தேன் சேர்த்து நெல் ஆவிப் புடத்தில் பதினைந்து நாள் வைத்திருந்து எடுத்துப் பத்திரப் படுத்திக் கொள்ளவும். இந்த லேகியத்தைச் சித்தர்களுக்குக் கெடுத்தால் அவர்கள் மிகவும் மகிழ்ந்து உபதேசம் செய்வார்கள்.

646 தாளகத்தைக் கற் சுண்ணத்தில் பொதிந்து வைத்து முக்கள்ளிப் பாலால் சுருக்குத் தாக்க தாளகம் மடிந்து மெழுகு ஆகும்.

647 அதற்குச் சரிக்குச்சரி கண்டார் (துரிசு) சேர்த்து ஆறுவகை செயநீரால் அரைத்து தாளகத்துக்கு அங்கியாகப் பூட்டிகற்சுண்ணத்தால் ஏழு சீலை செய்து வெயிலில் உலர்த்திப் புற்று மண்ணால் சீலைசெய்து ஐம்பது எருவால் புடம் போட தாளகம் கட்டிப் போகும்.

650 தாளகம் சத்தானால் வாதவித்தை கை வந்த மாதிரியாகும். அது உருகி கரிவங்கம் போல் ஆகும். வங்கச் சத்தால் வேதை உண்டாகும். வங்கச் சத்தை நாகத்திற் கிடையே கூட்டி, ரசத்தைச் சுத்தி செய்து வங்கத்தின் எடைக்குச் சமஎடை கூட்டினால் சூதம் புட்டுப்போல் ஆகும்.

653 முதல் ஆறுவகை செயநீர்கள் தயாரிக்கும் முறையைக் கூறுகிறார்.

656 முதல் தாளகச் சத்தைச் செந்தூரம் செய்யும்முறை கூறுகிறார்.

664 வெள்ளி நூறு பங்குக்கு ஒன்று கொடுக்க நல்ல தங்கம் கிடைக்கும் என்கிறார்.

669 செம்பில் நூற்றுக் கொன்று கொடுத்தாலும் தங்கமாகும். இந்தத் தங்கம் சுயமாக விளைந்த தங்கம் போலவே இருக்கும்.

671 பித்தளையில் நூற்றுக்கொன்று கொடுத்தாலும் தங்கமாகும். பசுந்தங்கமான இது உப்புக்கும் காவிக்கும் நிறம் மாறாது.

672 இந்தச் செந்தூரத்தைத் திரிகடுகு சூரணத்தில் குன்றிமணி எடை வீதம் உட்கொண்டு வர உடம்பில் உள்ள நோய்களெல்லாம் போய் உடல் கல்தூண் போல் ஆகும்.

675 முன் யுகங்களிலே கோடிக் கணக்கான சித்தர்களிருந்தார்கள். காயாதி கற்பம் உண்டு காயத்தைச் சித்தி செய்து கொண்டு விண்ணுலகத்தை மறந்தவர்களாக மலைகளிலும் குகைகளிலும் மூன்று யுக காலம் வாழ்ந்தார்கள்.

677 கிரேதா யுகத்தில் பிருங்கிரிஷி தவயாகம் செய்தபடி மூன்று யுக காலம் வாழ்ந்தார். பிருங்கியின் சீடரான சுயமக்கினி சித்தும் நெடுங்காலம் இருந்தார்.

684 சித்தர்கள் நெடுங்காலம் வாழ்ந்த வரலாற்றை அகஸ்திய மாமுனிவர் கூற புலஸ்தியர் மறு பிறப்பின் வரலாற்றைத் தமக்குக் கூறும்படிக் கேட்கிறார்.

686 அகஸ்திய மாமுனிவர் கூறுகிறார். உலகத்தில் பிறந்து இறந்து போனவர்கள் மறுபடியும் பிறப்பதில்லை. உலகத்தில் இருக்கும் பொழுதே காயகற்பம் கொண்டு நெடுங் காலம் உயிரோடிருந்து சமாதிக்குச் செல்வார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு சமாதியிலிருந்து வெளியே வருவார்கள். இதைத்தான் சித்தர்கள் மறு பிறப்பு என்று சொல்கிறார்கள்

689 இப்படிச் சமாதிக்குப் போவதும் வருவதுமாக வெகு காலம் வாழ்வார்கள். இதைத் தவிர வேறு பிறப்பு என்பது கிடையாது. செத்துப் போனவர்கள் உலகத்தில் மறுபடியும் பிறப்பதில்லை மறு பிறவி என்ற வார்த்தை நித்தியம் என்று அறைவதற்கு இடமே இல்லை.

695 என்னுடைய இந்தக் கருத்தை மற்ற சித்தர்களிடம் கூறியபோது மற்ற சித்தர்களெல்லாம் மிகவும் கோபம் கொண்டு நான் சிதாபாசப் பொருளை மறைத்து விட்டேனென்றும் இதிகாசப் புராணங்கள் எல்லாம் ஒப்புக் கொண்டுள்ள ஒரு விஷயத்தை கபடமான எண்ணத்தினால் நான் மறுக்கிறேன் என்றும் கூறி வாதாடினார்கள்.

698 அவரவர் மனம் போலே அநேக நூல்களைப் பாடி வைத்தார்கள். ஆனால் அவர்களெல்லாம் எங்கே? யாருமே இன்று

உயிரோடில்லை. எல்லோருமே மடிந்து மறைந்துபோய் விட்டார்கள்.

700 பொய்யான இந்த ஜென்மம் ஒருக்காலும் பூமியின் மேல் நிலைத்திராது. சிறை கொண்ட ராவணனும் மடிந்து போனான். வெகு கோடி மன்னர்கள் மாண்டு போனார்கள்.

708 ஞானத்தைப் பற்றிச் சித்தர்கள் கோடிக்கணக்காகப் படி வைத்துள்ளார்கள். மனிதன் ஆடுகிற ஆட்டமெல்லாம் பஞ்சபூதங்களின் ஆட்டம், பஞ்ச பூதங்கள் ஒடுங்கி விட்டால் எல்லாம் போச்சு பஞ்ச பூதங்களைச் சார்ந்து ஆறாதாரங்களை உணர்ந்து, மூச்சை அடக்கி பிரணவத்தை உள்ளே அடங்கச் செய்து மூலாதாரப் பொருளை முடிமேல்கொண்டு யோகம் கண்டு, மவுன நிலை பற்றி சமாதி பதம் கண்டவனே பரம ஞானியாவான்.

713 ஞானப்பாலை உண்டு பரமருடைய பாதத்தைப் பற்றி நின்றால் மோட்சம் உண்டு.

727 வது பாடல் முதல் ஞான கற்பம் கூறுகிறார். திருப்பாற் கடலின் வட பாகத்தில் வனத்தில் பனி நிறைந்திருக்கும் மேகங்கள் திரண்டு சிவபெருமான் போல் காட்சியளிக்கும். மேகத்தின் மேல் பனி வந்து மோதுவதால் மோகத்தில் உள்ள தண்ணீர் கட்டியாகி ஆலங்கட்டியாகும்.

730 இந்த பனிமுகத்தில் உதிர்ந்த பூ- நீர் உரைந்த பனி-மழையா லங்கட்டி இதை வாரிதியின் கட்டி என்றும் கார் மேகத்திலுதித்த நீர் என்றும், இமம் என்றும்,பனி என்றும், வேரில்லா மரம் என்றும் மேகத் தின் வித்தென்றும் பலவிதமாகக் கூறுவார்கள்.

742 இந்த ஆலங் கட்டி ஐந்து சேர். லவணம் ஐந்துசேர், காந்தம் அரைப் பங்கு சேர்த்து சிப்பிச் செயநீரால் நான்கு சாமம் அரைத்தால் லவணச் (உப்பு) செயநீராகும். இந்தச் செயநீரில் காந்தத்தை உருக்கித் தோய்க்க காந்தம் சவளையாகி ஈயம் போல் ஆகிவிடும்.

744 இந்த ஈயத்துடன் கெந்தி சம பங்கு சேர்த்து,சூதம் கால் பங்கும், காரம் அரைப் பங்கும் சேர்த்துமுன் சொன்ன செய நீரால் அரைத்து வட்டுப் பண்ணி சூரிய வெப்பத்தில் காய வைத்து கோழிப்புடம் போடவும். இதே மாதிரி மறுபடியும் மறுபடியும் பத்து முறை புடம் போடச் செந்தூர மாகும்.

746 இந்தச் செந்தூரத்தைக் கல்வத்திலிட்டு அதன் எடைக்கு எடை தங்கம் சேர்த்து முன் சொன்ன செயநீரால் நாலு சாமம் அரைத்து சூரிய வெப்பத்தில் காய வைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்யவும். ஏழுசீலை செய்து வாலூகா யந்திரத்தில் ஏற்றும் போது, மண் பாண்டத்தில் மேலும் கீழும் கடல் உப்பு போட்டு நடுவில் மருந்து வைத்து மேலே மூடிச் சீலை மண் செய்து எட்டு சாமம் தீயெரிக்கவும். முருக்கம்பூ நிறத்தில் செந்தூரம் கிடைக்கும்.

748 மறுபடியும் அந்தச் செந்தூரத்தை குழிக்கல்லி லிட்டு செயநீரால் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டி லிட்டுச் சீலைசெய்து வாலுகா யந்திரத்தில் எட்டுச் சாமம் தீ எரிக்கவும். செந்தூரம் பூவைப் போல் பூத்து நிற்கும். சமாதியில் இருக்கும் காலத்தில் இந்தச் செந்தூரத்தை குன்றியளவு வீதம் ஒரு மண்டல காலம் உட் கொண்டவர்க்கு எல்லாம் சித்தியாகும். உடல் சட்டை தள்ளி சிவந்து மின்னும். பிரம்ம தேவரைப் போல் நெடுங்காலம் இருக்கலாம்.

779 எத்தனை கற்றாலும் கேட்டாலும், தவம், செய்தாலும்,

பானான பரலோகங் காண்பதற்கு
பரமகுரு வில்லாம லொன்றுங்காணே

என்று ஒரு குரு பிரானுடைய அருளைப் பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

மேலும் சிற்சொரூப சிதாபாச ரிஷியார், பிரம்ம முனி, வேதவியாசரின் அற்புதம், செனமேசெயராசன் வரலாறு. ஜெயமுனியின் வரலாறு. ஜெயமுனியார் பாடிய எண்ணிறந்த நூல்கள் பிருங்கி மகரிஷியின் மகத்துவம், சோதி மகரிஷியின் பெருமை முதலியவற்றையும் கூறுகிறார்.

768 முதல் குரு வணக்கமும் தெய்வ வணக்கமும் வேண்டும். உலகில் உள்ள கோயில் குளங்கள் சாதி முறை வழிபாட்டு முறைகள் அநேகம் உண்டு. உலக நியதி அறிந்து பெரியோர்களை வணங்கா விட்டால் சித்தர்கள் குற்றம் கூறுவார்கள். கோபித்துச் சாபமும் கொடுப்பார்கள். சித்தர்களை வணங்கினால் உனக்கு ஞானப் பாலை ஊட்டி, இறை ஒளி காணவும் சிற்பரத்தை அறியவும் வழி காட்டுவார்கள்.

780 முதல் நவகோடி ரிஷிகள் செய்த யாகத்தைப் பற்றிக் கூறுகிறார்.

நவகோணம் தன்னில் வடபாகம் மேற் பாகத்தில் கடலோரத்தில் சூரிய சந்திரர்கள் கூட நுழைய முடியாத ஒரு அடர்ந்த கானகத்தில், ஒரு ரிஷி தவம் செய்து கொண்டிருந்தார். அது கிரேதாயுகம். அப்போது ஒரு மகா பிரளயம் உண்டாயிற்று. உலகெல்லாம் நீரில் மூழ்கி வெள்ளக் காடாயிற்று முனிவர் தம்பன யோகத்தால் அந்த வெள்ளத்தின் மேல் குடுக்கைபோல் மிதந்து கொண்டிருந்தார்.

பிரளய வெள்ளம் வடிந்தது. முனிவர் பூமியின்மேல் அமர்ந்தார். ஆனால் அவருடைய யோகம் கலையவில்லை. அந்த இடத்தின்மேல் கொஞ்சம் கொஞ்சமாக மண் படிந்து மூடத் தொடங்கியது. நாளுக்கு நாள் மண் மேடு வளர்ந்து கொண்டே போயிற்று.

783 ஒருநாள் ரிஷிக்கு நினைவு வந்தது. உலகத்தைக் காண வேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. மண்ணுக் குள்ளிருந்து குரல் கொடுத்தார்.

784 அங்கு வசித்த மக்கள் திடுக்கிட்டார்கள். சத்தம் வந்த இடத்தை நோக்கி ஓடினார்கள். மண்ணைத் தோண்டினார்கள். சுரங்கம் போல் தோண்டிக் கொண்டு போய், ஜோதி மயமாக விளங்கிய ரிஷியைக் கண்டு திகைத்தார்கள். ஆச்சரியம் மேலிட்டவர்களாய் பூமியின்மேல் நெடுங்கிடையாக விழுந்து வணங்கினார்கள்.

788 ரிஷி அவர்களைப் பார்த்து நான் சமாதியில் அமர்ந்த பிறகு நெடுங்காலமாகியிருக்க வேண்டும். இது என்னயுகம்? இதற்கு முன் எத்தனை யுகங்கள் கழிந்தன. சூரிய சந்திரர்கள் திசைமாறிப் போய் விட்டார்களா? வேறு என்னென்ன அற்புதங்கள் நிகழ்ந்தன என்று கேட்டார்.

கூடியிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. உத்தேசமாக நாலு பிரளயம், பதினாறுயுகம் கழிந்திருக்கலாமென்று கூறினார்கள். இத்தனை காலம் இருந்து என்ன பயன்? பிறவியே மாயாத்துன்பம், சமாதியில் இருப்பதே நன்று என்று கருதி அம்மக்களுக்கு ஞானோபதேசம் கூறி விடைபெற்று மறுபடியும் சமாதிக்குச் சென்று விட்டார்.

797 முதல் பிரம்மமுனி செய்த தவத்தைப் பற்றிக் கூறுகிறார். கிரேதா யுகத்திலே பிரம்மமுனி என்பவர் மூச்சை அடக்கித் தலை கீழாய் நின்றபடி கடுமையான தவம் செய்தார். அப்படிப்பட்ட தவம் செய்தவர்கள் யாருமே இருக்க முடியாது. தவவலிமையால் அவருடைய

உடல் சோதிமயமாகப் பிரகாசித்தது. அப்படியே சோதியோடு சோதி மயமாகக் கலந்து விட்டார்.

805 முதல் வேதவியாசர் பற்றிக் கூறுகிறார். வேதவியாசர் உலகத்தில் உள்ள சித்தர்கள் நற்கதி அடைவதற்காகப் பலகோடி சாத்திரங்கள் செய்து வைத்தார். இந்தப் பூவுலகத்தின் மேல் நடந்ததையெல்லாம் பகுத்துரைத்தார். ஆகமங்கள், கலைக் ஞானங்கள் அறுபத்து நான்கு, இதிகாச புராணங்கள், வழிபாடு முறைகள், விரதங்கள் நியம நிட்டைகள் எல்லாம் கூறினார். சாதி பேதங்களை வகுத்து சாதிக்குத் தக்கபடி நீதிகளையும் விரத நியமங்களையும் வகுத்தார். கோயில் விழாக்கள், பூஜை வழிபாடுகளையும் முறைப் படுத்தினார். பண்டிகைகளையும் ஆசார பேதங்களையும், வனபூசை, சிவ பூசை முறைகளையும் உபதேசித்தார்.

830 வடகிழக்கு மூலைக்கு மேற்கே ஒரு கோட்டை இருக்கிறது. சுனை, உதகம், சுரங்கப் பாதை எல்லாம் அங்கே உண்டு. அங்கே சிச்சிலியால் என்ற ஜாதியார் வசிக்கிறார்கள். அவர்களிலே ஒரு ரிஷி. சன்னாசி என்று பெயர். அவர் தவம் செய்து கொண்டிருக்கும் கோலம் கண்டு ஒரு இளம் பெண் காதல் வசப்பட்டாள். அவர்களுக்கு ஜெனமே ஜெயன் பிறந்தான்.

832 குழந்தை பிறந்த பின் அப்பெண் தன் ஜனங்கள் வசிக்குமிடத்திற்குச் சென்று அக்குழந்தையை வளர்ப்பதையே தன் வாழ்வின் லட்சியமாகக் கருதி சந்நியாசியைப் போல் வாழ்ந்து வந்தாள். அவள் இறந்த பின் ஜெனமே ஜெயன் தன் தந்தையான ரிஷியாரைத் தேடிக் கொண்டு வந்து அவர் பாதத்தில் சரணடைந்தான். புராண சங்கிரங்களையும் இதிகாசப் பொருள்கள் யாவையும் தன்தந்தையிடம் கற்றுணர்ந்தான். குரு அருளால் தனக்கு மனைவியாகப் போகிறவளை தியானத்தில் கண்டு, அவளைச் சிறையெடுத்து மணந்து கொண்டு இல்லறத்தில் ஈடுபட்டான். அவர்களுக்கு ஜெயமுனி பிறந்தார்.

841 இந்த ஜெயமுனி மனிதர்களிலே மாணிக்கம் போன்றவன். மகாதேவர் பாதத்தை மறவாத உத்தமன். அவன் குளிகை செய்து பூண்டு கொண்டு அதன் வலிமையால் நெடுந்தூரம் வான மார்க்கமாகச் சென்று மேருவுக்கு வடபாகத்தில் மலை மீதில் அமர்ந்து யாகம் செய்து கொண்டிருந்தான்.

843 அப்போது ஒரு அதிசயம் நடந்தது. ஒரு பன்றியானது மூன்று

வருஷ காலம் கர்ப்பத்தை தாங்கிக் கொண்டிருந்தது. குட்டி போட்டது அப்புறம். பன்றிக்குப் பிறந்ததோ யானைக்குட்டி. ஜெயமுனி அதைப் பார்த்தார்.

849 உடனே அந்த யானைக்குட்டி அவர் பாதங்களில் பணிந்து "என் தேவா, குருவே சாமி, மூச்சடங்கி மூவாண்டு வயிற்றில் தங்கி மூதுலகில் அவதரித்தேன். எனக்கு வரம் தந்து இந்த மிருக ஜென்மம் ஈடேற உபதேசம் செய்ய வேண்டும்" என்று கேட்டது.

850 ஜெயமுனிவர் மனமிரங்கி அந்த யானைக்குட்டிக்கு உபதேசம் கொடுத்து முத்தியடையச் செய்தார்.

855 இந்த ஜெயமுனிவர் உலக நன்மைக்காக அநேக நூல்களைச் செய்து வைத்தார். காவியம் ஆயிரம், சாகரம் ஆயிரத்தைந் நூறு, சூத்திரம் எண்ணூறு, முன்னூறில் நான்கு கண்டம், பற்பம் இரண்டு காண்டம், கற்பம் இரு நூறு, கருக்கிடை இருநூறு, குருக்கிடை இருநூறு, பெருநூல் எண்ணூறு நான்கு அறுநூறு இரண்டு, நூறு பாக்களை உடைய நூல்கள் நான்கு, ஆயிரத்தி ஒரு பாடலை உடைய நூல் ஒன்று. நொண்டி முன்னூறு பலதிரட்டு நானூறு, பள்ளு பத்து நூறு, சித்து நூறு, லகிரி இரண்டு பத்து இரு நூறு, சிதம்பரக்கோவை இரு நூறு, தருக்கள் இரு நூறு, குண்டல கவசம் நூறு, சிவயோகம் நூறு, குழம்பு ஒன்று பத்து நூறு, சிந்தாமணி ஆயிரத்து ஒன்று, அம்பர வித்தை நூறு, யம கண்டம் இரு நூறு, விகடம் நூறு, வழலை பதினாறு, தவயோகம் நூறு, ஜெயகண்டி ஐநூறு, எண்ணெய் பதினாறு, மூலி பதினாறு, சிவ ராஜயோகம் பத்து, அண்டக்கல் முப்பு, தருவு பதினாறு, சடாட்சரம் இரண்டு பத்து, மை மூன்று பத்து, அஞ்சனம் ஆறுபத்து, ஏம வித்தை இருநூறு, சிலம்பு வித்தை ஐம்பது, கோகரண வித்தை நூறு, சூது வித்தை இருபத்தைந்து, கருமானம் ஐம்பத் தொன்று, பட்சணியும் யட்சணியும், நூறு, திரு மந்திரார்த்தம் மூல மந்திரம் நூறு, டமரகம் ஐம்பது, கும்மி நூறு, கலிவெண்பா இருநூறு, சுத்தஞானம் நூற்றிருபது, நாடி பதினாயிரம், சருமகாண்டம் எண்ணூறாயிரம், குருநூல் ஆயிரம், சிதம்பரம் நூறு, பனுவல் முன்னூறு கக்கிஷம் ஐம்பது சிமிழ்வித்தை எண்பது, மோடி நூறு ஜாலம் நூறு, மூலிகை அறு நூறு, இன்னும் அநேகம் சாத்திரங்களையும் இயற்றி வைத்தார்.

866 முதல் பிரிங்கு மகரிஷியின் பெருமை பற்றிக் கூறுகிறார், சில ரிஷிகள் கூடி வனத்தின் வழியாகச் சென்றுகொண்டிருந்த போது

ஒரு புற்றைக் கண்டு திகைத்து நின்றார்கள். அதில் வழி காண முடியாததால் ரிஷிகள் தம் வழியே போகத் தொடங்கினார்கள். சிறிது தூரம் சென்றவுடன் அவர்களுக்கு வழி மறந்து போய் விட்டது. எவ் வழிச் செல்வது என்று தெரியாமல் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு நிற்கையில் - புற்றினுள் தவம் செய்து கொண்டிருந்த பிரிங்கு மகரிஷி மூச்சுவிட்டார்.

அவர் மூச்சு விட்டவுடன் அவருடைய தேகம் இருளடைந்த கானகத்தில் ஒளி மயமாய் வெட்ட வெளியில் தோன்றியது, உடனே ரிஷிகள் எல்லோரும் மெய் மறந்து விழுந்து வணங்கித் துதித்தார்கள், அந்த பிருங்கி மகரிஷியின் பெருமையைச் சொல்வதற்கு ஆதிசேடனாலும் முடியாது.

876 இன்னொருவர் சோதி மகரிஷி. மேருவுக்குத் தெற்கில் ஆறு குளம் ஓடைகளுக்கருகில் எண்ணூறு யோசனை விஸ்தாரம் உள்ள ஒரு மண்டபம் ஆயிரங்கால் மண்டபம் அதில் இருக்கிறது. அந்த மண்டபத்திற்குள் செல்லும் வழியில் முதல் படிக்கட்டில் வைரக்கல் தூண்களும், இரண்டாவது படியில் முத்துக்கல் தூண்களும், மூன்றாவது படியில் பச்சைக்கல் தூண்களும், நான்காவது படியில் கெம்புக்கல் தூண்களும், ஐந்தாவது படியில் பவழக் கல் தூண்களும் இருக்கின்றன. அந்த மண்டபத்தில் சோதி மகரிஷி என்பவர் தலை கீழாக நின்று தவம் செய்து கொண்டிருக்கிறார். அவருடைய மகிமை பற்றிக் கூற யாராலும் முடியாது.

883 ஒரு தடவை சித்தர்கள் எல்லோரும் அவரைக்காண்பதற்குச் சென்றார்கள்.அப்போது சோதி மகாமுனிவர் ஒரு அட்சரத்தை ஓத- வந்த சித்தர்கள் எல்லோரும் ஆகாயத்தில் ஒரு யோசனை தூரத்திற்கப்பால் தள்ளப்பட்டு அந்தரத்தில் பட்டம் போல் பறக்கத் தொடங்கி விட்டார்கள். சோதி மகா முனிவர் மற்றொரு அட்சரத்தை ஓத ரிஷிகள் எல்லோரும் அவரவர் ஸ்தானங்களை அடைந்தார்கள். சோதி மகாரிஷி அவர்களுக்கு அபாயம் கொடுத்த காயகற்பம் கொடுத்து காப்பாற்றினார்.

893 சோதி முனியார் கற்பம் மருந்தல்ல, மூலிகை அல்ல. உபரசச் சரக்குகளும் அல்ல. அட்சர கற்பம்தான் அது! அதைச் சித்தர்களும் அறிந்ததில்லை - மற்றவை நூலில் காண்க!